
தமிழ்நாடு அரசு

# அரசியல் அறிவியல்



## மேல்நிலை முதலாம் ஆண்டு

## தொகுதி – II

தமிழ்நாடு அரசு விலையில்லாப் பாடநூல் வழங்கும் திட்டத்தின் கீழ் வெளியிடப்பட்டது

## பள்ளிக் கல்வித்துறை

தீண்டாமை மனிதநேயமற்ற செயலும் பெருங்குற்றமும் ஆகும்

11th Std Political Science Tamil Medium Vol-2_Chapter 0_Introduction_Updated.indd 1 29-09-2018 12:39:18

தமிழ்நாடு அரசு

முதல்பதிப்பு - *2018*

(புதிய பாடத்திட்டத்தின் கீழ்
வெளியிடப்பட்ட நூல்)


விற்பனைக்கு அன்று


## பாடநூல் உருவாக்கமும் தொகுப்பும்

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி
மற்றும் பயிற்சி நிறுவனம்



© SCERT 2018



## நூல் அச்சாக்கம்

தமிழ்நாடு பாடநூல் மற்றும்
கல்வியியல் பணிகள் கழகம்

www.textbooksonline.tn.nic.in





11th Std Political Science Tamil Medium Vol-2_Chapter 0_Introduction_Updated.indd 2 29-09-2018 12:39:18

## பொருளடக்கம்


| தலைப்பு | பொருளடக்கம் | பக்கம் |
| --- | --- | --- |
| அலகு : 8<br>அரசியல் கொள்கைகள் – பகுதி I | 8.1 தாராளவாதம்<br>8.2 பொதுவுடைமைவாதம்<br>8.3 சமதர்மவாதம்<br>8.4 தேசியவாதம்<br>8.5 பாசிசம்<br>8.6 நாசிசம் | 1 |
| அலகு : 9<br>அரசியல் கொள்கைகள் – பகுதி II | 9.1 அமைப்பெதிர்வாதம்<br>9.2 பெண்ணியம்<br>9.3 சமுதாயவாதம்<br>9.4 பின்நவீனத்துவம்<br>9.5 சுற்றுச்சூழலியம் | 39 |
| அலகு : 10<br>பொதுக்கருத்து மற்றும் கட்சி முறை | 10.1 பொதுக்கருத்தினை வரையறுத்தல்<br>10.2 ஓர் உண்மையான பொதுக்கருத்தை உருவாக்குவதற்குத் தடையாக இருப்பவை<br>10.3 அரசியல் கட்சிகளின் வரையறை<br>10.4 அரசியல் கட்சிகளின் பணிகள்<br>10.5 மக்களாட்சியில் அரசியல் கட்சிகளின் பங்கு<br>10.6 நவீன கட்சி முறை<br>10.7 மக்களாட்சியில் அரசியல் கட்சிகளின் பங்கு | 63 |
| அலகு : 11<br>தேர்தல் மற்றும் பிரதிநிதித்துவம் | 11.1. வாக்குரிமை மற்றும் பிரதிநிதித்துவத்தின் பொருள் மற்றும் தன்மை<br>11.2 பிரதிநிதித்துவத்தின் வகைகள் / தொகுதிகளுக்கான இடஒதுக்கீடு<br>11.3 சுதந்திரமான மற்றும் நேர்மையான தேர்தல்கள்<br>11.4 இந்திய தேர்தல் ஆணையம்<br>11.5 தேர்தல் சீர்திருத்தங்கள், கட்சித்தாவல் தடைச் சட்டம்<br>11.6 அரசின் நிதியுதவியுடனான தேர்தல்கள்<br>11.7 அரசியலில் இளைஞர்களின் பங்கு | 85 |


PLVP4V
மின்னூல்

PM5K6I
மதிப்பீடு

B146_11_PSCI_TM
இணைய வளங்கள்


| | | |
|---|---|---|
| **அலகு :12**<br>**உள்ளாட்சி அரசாங்கங்கள்** | 12.1 உள்ளாட்சி அரசாங்கத்தின் பொருள், தன்மை மற்றும் முக்கியத்துவம்<br>12.2 உள்ளாட்சி அரசாங்கங்களின் வகைகள்<br>12.3 பல்வேறு நாடுகளில் உள்ளாட்சி அரசாங்கங்கள்<br>12.4 இந்தியாவில் உள்ளாட்சி அரசாங்கங்களின் தோற்றம் மற்றும் வளர்ச்சி<br>12.5 73-வது அரசமைப்பு சட்ட திருத்தம் – அமலாக்கம் மற்றும் அதன் விளைவுகள்<br>12.6 74-வது அரசமைப்பு சட்ட திருத்தம் – அமலாக்கம் மற்றும் அதன் விளைவுகள்<br>12.7 தமிழகத்தில் உள்ளாட்சி அமைப்புகள்<br>12.8 தற்கால பிரச்சனைகள் | 113 |
| **அலகு :13**<br>**சமூக நீதி** | 13.1 சமூகநீதி என்றால் என்ன?<br>13.2 சமத்துவம் நிலவ சமூக நீதி அவசியம்<br>13.3 நியாயமான விநியோகம்<br>13.4 பகிர்ந்தளிக்கும் நீதி, மற்றும் தண்டிக்கும் நீதி<br>13.5 ஜான் ரால்சின் நீதி கோட்பாடு<br>13.6 சமூக, பண்பாட்டு சமத்துவம்<br>13.7 பாகுபாடு – சமூக அடிப்படைக் கோட்பாடு<br>13.8 உறுதிப்படுத்தும் நடவடிக்கை<br>13.9 சென்னை மாகாணத்தில் சமூகநீதி | 140 |
| **அலகு :14**<br>**தமிழகத்தில் அரசியல் வளர்ச்சி** | 14.1 தமிழக அரசியல் வரலாறு<br>14.2. திராவிட இயக்கத்தின் தோற்றம்<br>14.3. நீதிக் கட்சி<br>14.4. நீதிக் கட்சியின் பங்களிப்பு<br>14.5 பெரியார் ஈ.வெ.ராமசாமி<br>14.6 சுயமரியாதை இயக்கம்<br>14.7. இந்தி எதிர்ப்பு போராட்டம்<br>14.8 திராவிட இயக்கம்: இரண்டாம் உலகப்போர் காலத்திலும் அதன் பின்னரும்<br>14.9. ராஜாஜி ஆட்சி (1952-54)<br>14.10 காமராஜ் காலம் (1954-1963)<br>14.10. தமிழ்நாட்டில் சுதந்திரத்திற்கு பிறகு திராவிட ஆட்சி | 168 |
| **அலகு :15**<br>**தமிழக அரசியல் சிந்தனைகள்** | 15.1 வரலாற்றுப் பின்னனி<br>15.2 பண்டைய அரசியல் சிந்தனைகள்<br>15.3 தேசியவாதம்<br>15.4 பொதுவுடைமை<br>15.5 திராவிடக்கொள்கைவாதம் | 187 |


**பாடநூலில் உள்ள விரைவு குறியீட்டைப் (QR Code) பயன்படுத்துவோம்! எப்படி?**

- உங்கள் திறன்பேசியில், கூகுள் playstore /ஆப்பிள் app store கொண்டு QR Code ஸ்கேனர் செயலியை இலவசமாகப் பதிவிறக்கம் செய்து நிறுவிக்கொள்க.
- செயலியைத் திறந்தவுடன், ஸ்கேன் செய்யும் பொத்தானை அழுத்தித் திரையில் தோன்றும் கேமராவை QR Code-இன் அருகில் கொண்டு செல்லவும்.
- ஸ்கேன் செய்வதன் மூலம் திரையில் தோன்றும் உரலியைச் (URL) சொடுக்க, அதன் விளக்கப் பக்கத்திற்குச் செல்லும்.

அலகு
8


# அரசியல் கொள்கைகள் – பகுதி I



PMEG86

## அறிமுகம்

அரசியல், பொருளாதாரம், சமூகம் குறித்த ஒருங்கிணைந்த எண்ணங்களின் தொகுப்பை கொள்கை என்று அழைக்கிறோம். கொள்கைகள் அரசியல் அறிவியல் பாடத்தின் இதயம் மற்றும் ஆத்மாவாக கருதப்படுகின்றன. அரசின் தன்மை, தோற்றம், அரசிற்கும், சமுதாயத்திற்கும் உள்ள தொடர்பு, அரசாங்கத்தின் வகைகள், அதிகாரத்தின் அடித்தளம், அரசு அதிகாரத்தின் வரம்பு போன்றவற்றை அரசியல் கொள்கைகள் விவாதிக்கின்றன. பல்வேறு கொள்கைகள் நமது பாடத்தில் உள்ளன.



## கற்றலின் நோக்கங்கள்

- எதிர்மறைத் தாராளவாதம், நேர்மறைத் தாராளவாதம் மற்றும் புதியத் தாராளவாதம் ஆகியவற்றின் பொருள் மற்றும் தன்மைகளை புரிந்து கொள்ளுதல்.
- தாராளவாதத்தின் சிந்தனையாளர்களையும் தலைவர்களையும் கண்டு கொள்ளுதல்.
- காரல் மார்க்சின் காலத்திற்கு பின் வந்த பொதுவுடைமைவாதம் சிந்தனையாளர்களை, கருத்துக்களை அறிந்து கொள்ளுதல்.
- சமதர்ம கொள்கையில் பல விதமான உட்பிரிவுகளின் சாரத்தை அறிதல் மற்றும் சமதர்மவாதத்தை பொதுவுடைமைவாதத்துடன் ஒப்பிடுதல்.
- தேசியத்தின் பொருள், தோற்றம், கோட்பாடுகள், உள்நாட்டு, வெளிநாட்டு சவால்கள் ஆகியவற்றைக் காண்பது.
- இந்திய தேசியத்தின் உருவாக்க காரணிகளை ஆய்வு செய்தல்.
- பாசிசத்தின் தோற்றம், பொருள் மற்றும் அடிப்படை தன்மைகளை பற்றி அறிதல்.

## 8.1 தாராளவாதம்

நவீன அரசியல் கோட்பாட்டில் மிக முக்கிய கொள்கையாக உள்ளது. இது 17–ஆம் நூற்றாண்டில் தோன்றியது. சம கால உலகில் பெருமளவில் உலக நாடுகளால் தாராளவாதம் பின்பற்றப்படுகிறது. இலத்தீன் மொழியில் "Liber" என்றால் விடுதலை என்று பொருளாகும். தாராளவாதத்தின் ஆங்கிலச் சொல்லான "Liberlism" இலத்தீன் மொழிச் சொல்லில் இருந்து தோன்றியது. 19–ஆம் நூற்றாண்டில் ஸ்பெயின் நாட்டில் அரசியல் அமைப்பை ஆதரித்தவர்கள் இச்சொல்லைப் பயன்படுத்தினார்கள். மேற்கத்திய நாடுகளான அமெரிக்கா, இங்கிலாந்து, கனடா, ஜெர்மனி உள்ளிட்ட நாடுகள் தாராளவாதத்தை அரசியலிலும், பொருளாதாரத்திலும் பின்பற்றுகின்றன.




11th Std Political Science Tamil Medium Vol-2_Chapter 8_25-09-2018.indd 1 29-09-2018 12:39:54

தாராளவாதம் வரலாற்றில் மூன்று வகைகளாகக் காணப்படுகின்றது. முதலாவதாக 1930–ஆம் வரையில் இது எதிர்மறைத் தாராளவாதம் என அழைக்கப்பட்டது. இரண்டாவதாக, உலகப் பொருளாதார மந்த நிலைக்குப் பின் நேர்மறைத் தாராளவாதம் என அழைக்கப்பட்டது. மூன்றாவதாக, 1970–களுக்குப் பின்னர் இது சமகாலத் தாராளக் கொள்கை என அழைக்கப்படுகிறது.

### அ) எதிர்மறைத் தாராளவாதம்

எதிர்மறைத் தாராளவாதம் பாரம்பரிய தாராளவாதம், *Laissez Faire* (பிரெஞ்சு மொழியில்) என்றும் அழைக்கப்படுகிறது. ஜான் லாக் என்ற அரசியல் சிந்தனையாளர் 'சிவில் அரசாங்கத்தின் இரண்டு ஒப்பந்தங்கள்' (*Two Treaties of Civil Government*) என்ற தனது நூலில் எதிர்மறைத் தாராளவாதத்தை எடுத்துரைத்தார்.




ஜான் லாக், பாரம்பரியத் தாராளவாதத்தின் தந்தை. உயிர், விடுதலை, தனிச் சொத்துகள் சமஉரிமை.

தாமஸ் பெயின், மாண்டெஸ்கோ, பெந்தம் ஆகியோரும் எதிர்மறைத் தாராளவாதத்தை ஆதரித்தனர். பொருளாதாரப் பாடத்தில் ஆதம் ஸ்மித் 'தேசங்களின் செல்வங்களை பற்றிய ஓர் ஆய்வு' (*An Inquiry Into the Nature and Causes of Wealth of Nations*) என்ற தனது நூலில் எதிர்மறைத் தாராளவாதத்தை ஆதரித்தார்.

### எதிர்மறைத் தாராளவாதத்தின் சாரம்

எதிர்மறைத் தாராளவாதம் மனிதனைப் பகுத்தறிவு உள்ள, திறமையான, சுதந்திரமான தன்மைகளை உடையவன் என்று கூறுகிறது. எல்லா மனிதர்களும் சமமானவர்கள். ஒவ்வொரு மனிதனும் தனது தேவையை அறிந்து இருக்கிறான். சமூகம் என்பது தனிமனிதர்களின் கூட்டமைப்பு ஆகும். மனிதனின் வாழ்க்கையில் தலையிடுவதற்கு அரசிற்கோ, சமூகத்திற்கோ அதிகாரம் இல்லை.

அரசு ஒரு அவசியமான தீமை ஆகும். சட்டம் ஒழுங்கை பராமரிப்பதற்கு அரசு தேவைப்படுகிறது. இருந்தபோதிலும், அரசு ஒருதீமையாகும். ஏனென்றால் அது மனிதனின் சுதந்திரத்தைப் பறிக்கக் கூடும்.

அரசு எதிர்மறை அரசு ஆகும். ஏனென்றால் முன்னேற்றத் திட்டங்களை அது கொண்டு வரக் கூடாது. அரசை *Laissez Faire* அரசு என்று அழைக்கிறோம். பிரெஞ்சு மொழியில் இதனுடைய பொருள், தனியே விடு என்பதாகும். அதாவது அரசு மனிதனை சுதந்திரமாக விட்டு விட வேண்டும். அவனது நடவடிக்கைகளை கட்டுப்படுத்தக் கூடாது. சட்ட ஒழுங்கைப் பராமரிப்பது, சட்டப்பூர்வமாக உருவான ஒப்பந்தங்களை அமல்படுத்துவது அரசின் பணிகள் ஆகும்.





பொருளாதாரத்தில் எதிர்மறைத் தாராளவாதம் தேவை மற்றும் வழங்கலின்



11th Std Political Science Tamil Medium Vol-2_Chapter 8_25-09-2018.indd 2
29-09-2018 12:39:55

அடிப்படையில் இயங்கும். சந்தை பொருளாதார நடவடிக்கைளை அரசு கட்டுப்படுத்தக் கூடாது. அரசானது கிரிக்கெட் விளையாட்டின் நடுவரை போன்றது. விளையாட்டில் நடுவர் பங்கேற்கமாட்டார். வீரர்கள் விதிகளுக்குட்பட்டு விளையாடுகிறார்களா என்று கண்காணிப்பார். அதைப்போல அரசு சந்தையை கண்காணிக்க வேண்டும். சந்தையின் நடவடிக்கைகளில் தலையிடக்கூடாது.




எதிர்மறைத் தாராளவாதம் இயற்கை உரிமைகள் கோட்பாட்டை ஆதரிக்கின்றது. இயற்கை அன்னை மனிதனை படைத்து அவனது முன்னேற்றத்திற்காக உரிமைகளை வழங்கியுள்ளது. இந்த இயற்கை உரிமைகளை பறிக்கும் அதிகாரம் அரசுக்கு இல்லை.

மூன்று இயற்கை உரிமைகள் மனிதனுக்கு இன்றியமையாதவை ஆகும்.

1) வாழ்க்கை உரிமை
2) சுதந்திர உரிமை
3) சொத்துரிமை

இவைகள் மனிதனுக்கு அவசியமானவைகள் ஆகும். சொத்துரிமை எதிர்மறை தாராளவாதத்தின் மிக முக்கிய உரிமை ஆகும். சொத்துக்களை வாங்கவும், விற்கவும், அனுபவிக்கவும் மனிதனுக்கு உள்ள உரிமையை அரசு கட்டுப்படுத்தக் கூடாது.

### ஆ) நேர்மறைத் தாராளவாதம்

20-ஆம் நூற்றாண்டில் எதிர்மறைத் தாராளவாதம் நேர்மறைத் தாராளவாதமாக மாற்றப்பட்டது. எதிர்மறைத் தாராளவாதம் மேற்கத்திய நாடுகளின் வளத்தைப் பெருக்கியது. ஆனால் சாதாரண மக்களுக்கு கடுமையான துன்பங்களை அளித்தது. மக்களிடையே விரும்பத்தகாத ஏற்றத் தாழ்வுகள், நகரங்களில் பெருகி வந்த ஆரோக்கியமற்ற குடிசைப் பகுதிகள், தொழிலாளர்களை சுரண்டுவது போன்ற துன்பங்கள் மக்களை வாட்டியது. ஜான் ரஸ்கின் போன்ற மனித நேய சிந்தனையாளர்கள் எதிர்மறைத் தாராளவாதத்தை விமர்சித்தனர்.

இரண்டு காரணிகளால் தாராளவாதம், நேர்மறைத் தாராளவாதமாக மாறியது. அவைகள் 1) மக்களாட்சி 2) மார்க்சியம் ஆகும். 19-ஆம் நூற்றாண்டில் மக்களாட்சி மேற்கத்திய நாடுகளில் பரவியது. மக்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட்டது. மக்கள் எதிர்மறைத் தாராளவாத கொள்கையை மாற்ற வேண்டும் என்று அழுத்தம் கொடுத்தார்கள். மேலும் புரட்சிகர சிந்தனையாளர் காரல் மார்க்ஸ் தனது பொதுவுடைமைவாதம் சிந்தனையை எடுத்துரைத்தார். மார்க்சியமும் மக்களாட்சியும் கொடுத்த அழுத்தத்தால் எதிர்மறைத் தாராளவாத கொள்கை நேர்மறைத் தாராளவாத கொள்கையாக மாறியது.

உலக பொருளாதார மந்த நிலை மேற்கத்திய நாடுகளை 1928-முதல் பாதித்தது. அமெரிக்காவின் அதிபரான பிராங்கிளின் ரூஸ்வெல்ட் பொருளாதார மந்த நிலையில் இருந்து அமெரிக்காவை மீட்டெடுப்பதற்காக "New Deal" என்று அழைக்கப்படும் புதிய ஒப்பந்தத்தை அமல்படுத்தினார். அவருடைய பொருளாதார ஆலோசகரான ஜே.எம்.கீன் நேர்மறைத் தாராளவாதத்தை அமல்படுத்த ஆலோசனை வழங்கினார். டி.எச்.கிரின், ஹரால்டு லஸ்கி, எல்.டி.ஹார்டு ஹவுஸ் ஆகியோரும் நேர்மறைத் தாராளவாத கொள்கையை ஆதரித்தனர்.



நேர்மறைத் தாராளவாத கொள்கை சமூக நலஅரசு என்ற புதிய சிந்தனையை உருவாக்கியது. அரசானது மக்களின் நலனுக்கான ஒரு கருவி ஆகும். மக்களுக்கு சேவை ஆற்றுவதே அரசின் முக்கிய பணி ஆகும். கல்விக் கூடங்கள், தொழிற்சாலைகள், மருத்துவமனைகள் அடிப்படை கூட்டமைப்பு வசதிகள் ஆகியவற்றை உருவாக்குவது அரசின் முக்கிய கடமையாகும். அரசும் என்பது சமூக மக்களாட்சி அரசு ஆகும். நேர்மறை தாராளவாதம், சமூக நலனுக்கும் மக்களாட்சிக்கும் முக்கியத்துவம் கொடுக்கிறது.

**உங்களுக்குத் தெரியுமா?**

பிராங்கிளின் ரூஸ்வெல்ட் மிக நீண்ட காலங்கள் அமெரிக்காவின் அதிபராக இருந்தவர். அமெரிக்காவின் முன்னேற்றத்திற்கு அருமையாக பணியாற்றினார். பொருளாதார மந்த நிலையில் இருந்து தனது புதிய ஒப்பந்த திட்டத்தின் மூலம் அமெரிக்காவை மீட்டெடுத்தார். கோடிக்கணக்கான மக்கள் இன்றைக்கும் அவரால் ஊக்குவிக்கப்படுகின்றனர். அவர் போலியோ நோயினால் கடுமையாக பாதிக்கப்பட்டவர் ஆவார். அமெரிக்காவின் அதிபர் தேர்தலில் 1932–ஆம் ஆண்டு போட்டியிட்டு வெற்றி பெற்றார். மக்களிடையே வாக்குகளை சேகரிப்பதற்காக அவர் உணர்ச்சிகரமாக பேசினார். சக்கர நாற்காலியில் வரும் நான் மீண்டும் அமெரிக்காவை முன்னேற்றம் என்னும் சக்கரத்தில் அமர்த்துவேன் என்று கூறினார். வாழ்க்கையில் இன்னல்களை சமாளித்து வெற்றிச் சிகரங்களை தொடுவது எப்படி என்பதற்கு இலக்கணமாக ரூஸ்வெல்ட் இன்றைக்கும் விளங்குகிறார்.




மக்களின் உரிமைகளை சமூக நலத்திற்காக அரசு கட்டுப்படுத்தலாம். மக்கள் நலஉரிமை கோட்பாட்டை நேர்மறைத் தாராளவாதம் ஆதரிக்கின்றது. உரிமைகள் இருந்தால் கடமைகளும் இருக்கும். விடுதலை என்பது நேர்மறையானது ஆகும். எதிர்மறைத் தாராளவாதம் அரசிடம் இருந்து மனிதனுக்கு விடுதலை கோரியது. நேர்மறைத் தாராளவாதம் அரசின் மூலமாக மனிதனுக்கு விடுதலை கோருகிறது. அரசின் மக்கள் நல நடவடிக்கைகள் தான் மனிதனுக்கு விடுதலையைக் கொடுக்கும்.

அரசு பொருளாதாரத்தை ஒழுங்குபடுத்த வேண்டும். மக்களை எதிர்பாராத பொருளாதார ஏற்றம் மற்றும் மந்த நிலைகளில் இருந்து அரசு காப்பாற்ற வேண்டும். மக்கள் நல திட்டங்களுக்காக முற்போக்கான வரி விதிப்பை மேற்கொள்ளலாம். வங்கிகளை தேசியமயமாக்குதல், தொழில்களை பொதுத்துறை நிறுவனங்களுக்கு ஒதுக்குதல் மற்றும் குறைந்தபட்ச ஊதியம் ஆகிய நடவடிக்கைகள் மூலம் மக்கள் நலஅரசு கொண்டு வரலாம்.



11th Std Political Science Tamil Medium Vol-2_Chapter 8_25-09-2018.indd 4 29-09-2018 12:39:56

## செயல்பாடு

**சுய தற்சோதனை**

உனது வாழ்க்கையில் சந்தித்த அரசின் முக்கிய பணிகளை கண்டறியவும். அரசாங்கம் உனக்கு பல பணிகளை செய்துள்ளது. சமூக நலஅரசினால் நீ பயன்பெற்ற பணிகளை பட்டியலிடுக.

நேர்மறைத் தாராளவாதம் 1930–களில் இருந்து மேற்கத்திய மக்களாட்சி நாடுகளில் பின்பற்றப்பட்டது. ஆனால் மெல்ல மெல்ல தத்துவ ஞானிகளும், அரசியல் தலைவர்களும் நேர்மறைத் தாராளவாதத்தை விமர்சிக்க ஆரம்பித்தனர். பொருளாதாரத்தில் அரசு தலையிடுவதால் பல பிரச்சினைகள் தோன்றுகின்றன என குற்றம் சாட்டப்பட்டது. பொருளாதார திறமையின்மை, குறைந்து போன உற்பத்தி திறன், ஊழல், பொருளாதார மந்த நிலை, பறிபோன மக்கள் உரிமைகள் போன்ற தீமைகளுக்காக நேர்மறைத் தாராளவாதம் விமர்சிக்கப்பட்டது.

## செயல்பாடு

தாராளவாதத்திற்கு ஜே.எஸ்.மில். ஆற்றிய பங்கை விவாதிக்கவும்.

### இ) சமகாலத் தாராளவாதம் (புதியத் தாராளவாதம்)

தற்போதைய தாராளவாதம் சமகாலத்திய தாராளவாதம் என்று அழைக்கப்படுகிறது மேற்கத்திய நாடுகளில் 1970–இல் தொடங்கி உலகம் முழுவதும் தற்போது பரவி வருகிறது. அமெரிக்காவின் குடியரசுத் தலைவராக இருந்த ரொனால்டு ரீகன் அந்நாட்டில் சமகாலத்திய தாராளவாதத்தை கொண்டு வந்தார்.

சமூகம் என்று ஒன்று கிடையாது. தனி ஆண்கள், பெண்கள் மற்றும் குடும்பங்கள் மட்டுமே உள்ளன.

**– மார்கரெட் தாட்சர்**



பல அரசியல் அறிஞர்கள் சமகாலத் தாராளவாதத்தை ஆதரித்துள்ளனர். பிரெட்ரிக் ஹேயக். ஆல்பெர்ட் ஜே.நாக், மில்டன் ஃபிரிட்மென், எம்.ஒக்ஸாட், காரல் பாப்பர், நாஸிக் போன்றவர்கள் முக்கியமான ஆதரவாளர்கள் ஆவர்.

## செயல்பாடு


எந்த வகைத் தாராளவாதத்தை 1991–இல் கொண்டு வரப்பட்ட புதிய பொருளாதார சீர்திருத்தங்களுக்குப் பிறகு இந்தியா பின்பற்றுகிறது?

சம காலத்திய தாராளவாத கொள்கை, பழைய எதிர்மறைத் தாராளவாத கொள்கையை 20–ஆம் மற்றும் 21–ஆம் நூற்றாண்டுகளில் மீண்டும் அமல்படுத்துகிறது. தனிமனிதனின் முக்கியத்துவத்தையும் மதிப்பையும் இது ஆதரிக்கின்றது. தனிப்பட்ட சுயாட்சி கருத்து சமகாலத் தாராளவாதத்தின் முக்கிய சிந்தனை ஆகும். இதன்படி, ஒவ்வொரு மனிதனும் தனது வாழ்க்கையில் விரும்பியதை செய்யும் விடுதலை உரிமையை பெற்றிருக்க வேண்டும். அரசானது சட்ட ஒழுங்கை மட்டுமே பாராமரிக்க வேண்டும். நாசிக் என்ற சிந்தனையாளர் "குறைந்த அதிகார அரசு எழுச்சியுட்டுகிறது, சரியானதும் ஆகும்" என்று முழங்கினார். மற்றொரு சிந்தனையாளர் எம்.ஒக்ஸாட் "அரசாங்கம் அமைதியை மட்டுமே கண்காணிக்கிறது" என்று கூறினார்.

**இந்த உலகில் மக்களை சமமாக பார்ப்பதற்கும், மக்களை சமமாக ஆக்குவதற்கும் மிக பெரிய வித்தியாசம் உள்ளது.**

**– பிரெட்ரிக் ஹேயக்**





**சமூகம் விடுதலையை விட சமத்துவத்தை ஆதரித்தால் இரண்டையுமே அதனால் பெற முடியாது. மாறாக சமத்துவத்தைவிட விடுதலையை நாடினால் இரண்டையுமே அது பெரும் அளவில் பெறும்.**

**–மில்டன் ஃபிரிட்மென்**




11th Std Political Science Tamil Medium Vol-2_Chapter 8_25-09-2018.indd 5 29-09-2018 12:39:56

இங்கிலாந்தின் முதல் பெண் பிரதமரான மார்க்ரெட் தாட்சர், சமகால தாராளவாதத்தை ஆதரித்தார். சோவியத் ரஷ்யாவின் கடைசி அதிபரான மைக்கேல் கோர்பசேவ் மறுசீரமைப்பு மற்றும் (கிளாஸ்நாஸ்ட்) வெளிப்படைத்தன்மை ஆகியவைகள் மூலம் சோவியத்ரஷ்யாவில்சமகாலதாராளவாதத்தை அமல்படுத்தினார்.

மற்றொரு சிந்தனையாளர் எம்.ஒக்.ஸாட் "அரசாங்கம் அமைதியை மட்டுமே கவனிக்கிறது" என்று கூறினார்.

## செயல்பாடு

காரல் பாப்பர் பிளாட்டோவை பற்றி கூறியதை நீ முதல் பாடப்பகுதியில் படித்த பிளாட்டோவின் தத்துவஞானி கருத்துடன் ஒப்பிட்டு பார்க்கவும்.





ஆல்பெர்ட் ஜேநாக் தனது புத்தகத்திற்கு "அரசு, நமது எதிரி" என்று பெயர் சூட்டினார்.

**உங்களுக்குத் தெரியுமா?**

காரல் பாப்பர், பிளாட்டோவை வெளிப்படையான சமூகத்தின் முதல் எதிரி என்று 'Open Society and its Enemies' என்ற தனது நூலில் விமர்சித்தார்.

முன்னேற்றம், சமூக நலன் என்ற பெயரில் அரசின் அதிகாரங்கள் அதிகரித்தால் மனிதனின் தனி நபர் உரிமைகள் பறிபோகிவிடும் என்று சமகால தாராளவாதம் வாதிடுகின்றது.




## கொள்கையின் முடிவு

சில அரசியல் சிந்தனையாளர்களும், அரசியல் சமூகவியலாளர்களும் 1950-களில் கொள்கையின் முடிவு என்ற கருத்தை கொண்டு வந்தனர்.

டேனியல் பெல் "கொள்கையின் முடிவு", என்ற நூலை எழுதினார். அவரும், அரசியல் சமூகவியலாளரான மார்டின் லிப்செட்டும் இக்கருத்தை ஆதரித்தனர்.



கொள்கையின் முடிவு

**– டேனியல் பெல்**

சமூக நல அரசு அல்லது தாராள மக்களாட்சி அரசு தோன்றியதால் மனிதனின் அரசியல் பொருளாதார தேடுதல் முடிவுக்கு வந்துள்ளது. மனித வாழ்க்கை நன்றாக இருக்க வேண்டும் என்றால் மக்கள் நலஅரசு, அதிகார பரவல், கலப்பு பொருளாதாரம் மற்றும் போட்டி அரசியல் கட்சிகள் அமைப்பு ஆகியவைகள் பின்பற்றப்பட வேண்டும். மேற்கத்திய நாடுகள் இந்த அருமையான சமூக அரசியல் தன்மைகளை பெற்றுள்ளன. ஆகவே, தாராளவாதத்திற்கும், பொதுவுடைமைக்குமான போட்டி முடிவு பெற்றது. மக்களாட்சி தான் உன்னதமான ஆட்சி முறை ஆகும். மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கும் நல்ல ஆட்சியை வழங்குவதற்கும் மக்களாட்சி பொருத்தமானது என்று பாராட்டுகிறார்கள்.



11th Std Political Science Tamil Medium Vol-2_Chapter 8_25-09-2018.indd 6 29-09-2018 12:39:57

ஆனால் "புதிய இடது சாரிகள்" என்ற சிந்தனையாளர்கள் கொள்கை முடிவு கருத்தை நிராகரிக்கின்றனர். இவர்கள் பொதுவுடைமையில் சில மாற்றங்கள் செய்து அதனை அமல்படுத்த வேண்டும் என்று கூறுகிறார்கள். சீரமைக்கப்பட்ட பொதுவுடைமைவாதம் தாராள மக்களாட்சியை விட சிறப்பானது என்று இவர்கள் கூறுகிறார்கள்.

மேலும் சில சிந்தனையளார்கள், கொள்கையின் முடிவை விட தாராளவாதத்தின் பொருள் வேட்கையை முடிவுக்கு கொண்டு வர வேண்டும் என்று கூறுகிறார்கள்.

### வராலாற்றின் முடிவு

அமெரிக்கா அரசியல் சிந்தனையாளர் பிரான்சிஸ் புக்கியோமோ "வரலாற்றின் முடிவும் கடைசி மனிதனும்" என்ற நூலை எழுதினார். பனிப்போர் முடிவடைந்ததால் வரலாறே முடிவடைந்தது என்று அவர் கூறினார். மனிதனின் வரலாறே சரியான அரசியல் சமூக பொருளாதார முறையை பெறுவதற்கான மனிதனின் தேடுதல் ஆகும். பனிப்போருக்கு பின் தாராளவாதம் பொதுவுடைமையை வெற்றி கண்டுள்ளது.தாராள அரசும்,பொருளாதாரமும் உருவான பின் மனிதனின் வரலாற்றுத் தேடுதல் முடிவுக்கு வருகின்றது என்று புக்கியோமா கூறினார்.




வரலாற்றின் முடிவு என்ற கருத்தை பல அறிஞர்கள் ஏற்கவில்லை. ஜாக் டெரிடா என்ற அறிஞர் தாராள மக்களாட்சி உன்னதமானது என்ற கருத்தை மறுக்கிறார். வன்முறை, ஏற்றத்தாழ்வு, ஒதுக்குதல், பஞ்சம் மற்றும் பொருளாதார ஒடுக்குமுறை தாராள மக்களாட்சி விட வேற எந்த அமைப்பிலும் மனித இனம் காணவில்லை என்று கூறினார்.

**விவாதம்**



இன்றைய அரசியல் நாளைய வரலாறு என்று கூறும்பொழுது வரலாறு முடிந்தது என்று சொல்ல முடியுமா?

### நாகரிகங்களின் மோதல்

அமெரிக்கா அரசியல் அறிஞரான சாமுவேல் ஹண்டிங்டன் நாகரிகங்களின் மோதல் என்ற கோட்பாட்டை வரலாற்றின் முடிவு என்ற கருத்துக்கு எதிராக கொண்டு வந்தார். பனிப்போர் முடிவடைந்ததால் எல்லா போர்களும் முடிவடைந்தன என்று கூற முடியாது. தற்போது உலகத்தில் ஒரு புதிய போர் அல்லது மோதல் தோன்றியுள்ளது. உலகின் மிக பெரிய நாகரிகங்களான மேற்கத்திய நாகரிகமும், இஸ்லாமிய நாகரிகமும் தற்பொழுது மோதுகின்றன. இந்த நாகரிகப் போரில் இதர உலக நாகரிகங்களும் வருங்காலத்தில் பங்கேற்கும். நாகரிகப் போர் வருங்கால வரலாற்றை தீர்மானிக்கும் என்று அவர் கூறினார். நாகரிகப் போர் வருங்கால வரலாற்றை தீர்மானிக்கும் என்று அவர் கூறினார்.

**விவாதம்**



அன்புள்ள மாணவர்களே, தற்பொழுது உங்களுக்கு புரிந்திருக்கும். தாராளவாதம், எதிர்மறைத் தாராளவாதம், நேர்மறைத் தாராளவாதம், சமகாலத் தாராளவாதம் என்று மூன்று பிரிவுகளாக உள்ளது. உங்கள் வகுப்பை மூன்று குழுக்களாக பிரித்து தாராளவாதத்தின் பெயர்களை சூட்டுங்கள். எந்த தாராளவாதம் சரியானது என்று வகுப்பில் விவாதிக்கவும்.

### இந்தியாவும் புதியத் தாராளவாதமும்

நமது நாட்டில் 1991–ஆம் ஆண்டு புதிய பொருளாதார சீர்திருத்தங்கள் கொண்டுவரப்பட்டன. தனியார்மயமாதல், தாராளமயமாதல் மற்றும் உலகமயமாதல் முக்கியத்துவம் பெற்றுள்ளன. பொருளாதார சமூக நடவடிக்கைகளில் இருந்து அரசு தற்போது பின்வாங்கியுள்ளது. "குறைவான அரசாங்கம்



11th Std Political Science Tamil Medium Vol-2_Chapter 8_25-09-2018.indd 7 29-09-2018 12:39:57

சிறந்த ஆட்சி" என்ற முழக்கம் இந்திய அரசை வழிநடத்தி வருகிறது. புதிய தாராளவாதத்தால் ஐந்தாண்டு திட்டங்கள் மாற்றப்பட்டுள்ளன. ஆரம்பத்தில் திட்டக் கொள்கைக்கு பதிலாக குறியீட்டு திட்டமிடல் கொண்டு வரப்பட்டது. தற்பொழுது திட்டக்குழு கலைக்கப்பட்டு நிதி ஆயோக் (National Institution for Transforming India, NITI Aayog) உருவாக்கப்பட்டுள்ளது.

## 8.2 பொதுவுடைமைவாதம் (Communism)

### விளாடிமர் லெனின்



புரட்சிகர சிந்தனையாளராகிய லெனின், 1917ஆம் ஆண்டு ரஷ்யாவில் அக்டோபர் புரட்சியை நடத்தினார். இது பொதுவுடைமைவாத புரட்சி ஆகும். லெனின் USSR என்ற சோவியத் சோசியலிஸ்ட் குடியரசுகள் யூனியன் ("Union of Soviet Socialist Republics") என்ற நாட்டையும் உருவாக்கினார்.

உங்களுக்குத் தெரியுமா?



விளாடிமர் லெனின் 1924-ஆம் ஆண்டு இயற்கைஎய்தினார். அவருடைய உடல் இரஷ்யாவின் தலைநகரான மாஸ்கோவில் இன்றுவரை பதனிடப்பட்டு வைக்கப்பட்டுள்ளது. அவருடைய பூத உடல் இரசாயன பொருள்கள் மூலமாக பாதுகாக்கப்பட்டு வருகிறது. ஆரம்பத்தில், உடல் பாதுகாப்புக்கான செலவை அரசே ஏற்றுக்கொண்டது. 1991-ஆம் ஆண்டு லெனின் உருவாக்கிய நாடான USSR உடைந்த பிறகு பொதுமக்களின் நன்கொடையால் உடல் பாதுகாக்கப் படுகிறது. அவருடைய பூத உடலை, அவருடைய அன்னையின் கல்லறைக்கு அருகில் அடக்கம் செய்யவேண்டும் என்று சிலர் கோருகின்றனர்.

### பொதுவுடைமைவாத கட்சி

பொதுவுடைமைவாத கட்சி கோட்பாட்டை லெனின் உருவாக்கினார். "செய்ய வேண்டியது என்ன?" (What is to be done?) என்ற தனது நூலில் பொதுவுடைமைவாத கட்சியைப் பற்றி விளக்கினார். பொதுவுடைமைவாத கட்சி பாட்டாளி வர்க்கப் புரட்சியின் கருவியாக செயல்படும்.

கட்சியின் கிளைகள் ஒவ்வொரு தொழிற்சாலையிலும் உருவாக வேண்டும். கட்சியின் உறுப்பினர்கள் புரட்சிகர மார்க்சியத்தை புரிந்திருக்க வேண்டும். உறுப்பினர்கள் கடமை, தியாகம், கட்டுப்பாடு, கடின உழைப்பு ஆகிய குணங்களைப் பெற்றிருக்க வேண்டும். பொதுவுடைமைவாதப் புரட்சிக்காக மக்களைத் தயார்ப்படுத்த வேண்டும். பாட்டாளி வர்க்கப் புரட்சியின் முன்னணியில் பொதுவுடைமைவாதம் கட்சி செயல்படும்.


அமைப்பு ரீதியாக ஒரு புதிய கோட்பாட்டை பொதுவுடைமைவாத கட்சிக்கு லெனின் வழங்குகிறார்.இதற்குமக்களாட்சிமத்தியத்துவம் என்பது பெயராகும். பொதுவுடைமைவாத கட்சிக்கு இரண்டு அமைப்பு கோட்பாடுகள் உள்ளன. ஒன்று, மக்களாட்சி, இரண்டாவது மத்தியில் அதிகார குவிப்பு. பொதுவுடைமைவாத கட்சியின் கீழ்நிலையில் உள்ள கிளைகள் தங்களுக்கு மேல் நிலையில் உள்ள கட்சி கிளைகளை மக்களாட்சி அடிப்படையில் தேர்ந்தெடுக்க வேண்டும். கிராமப்புற கிளைகள் பொதுவுடைமைவாத கட்சியின் மாவட்ட கிளையைத் தேர்ந்தெடுக்க வேண்டும். மாவட்ட கிளைகள் மாநில கிளையைத் தேர்ந்தெடுக்க வேண்டும். பொதுவுடைமைவாத கட்சியின் மாநில கிளைகள் மத்திய கிளையைத் தேர்ந்தெடுக்க வேண்டும். மத்தியக் கிளை பாலிட்பிரோவை தேர்ந்தெடுக்க வேண்டும். பாலிட்பிரோ பொது செயலாளரை தேர்ந்தெடுக்க வேண்டும். இதுவே மக்களாட்சி கோட்பாடாகும்.

அதிகார குவியல் அதாவது அதிகார மத்தியத்துவம் பொதுவுடைமைவாத கட்சியில் காணப்படுகிறது. மேல்நிலையில் உள்ள கட்சி கிளைகள் சொல்வதை கீழ்நிலையில் உள்ள



11th Std Political Science Tamil Medium Vol-2_Chapter 8_25-09-2018.indd 8 29-09-2018 12:39:57

கட்சி கிளைகள் கண்டிப்பாக கேட்க வேண்டும். கட்சியின் மத்திய கிளையின் முடிவுகளை மாநிலக் கிளைகள் கேட்க வேண்டும். மாநிலக் கிளையின் முடிவுகளை மாவட்டக் கிளைகள் கேட்க வேண்டும். மாவட்டக் கிளையின் முடிவுகளை கிராமக் கிளைகள் கேட்க வேண்டும். இதுதான் மத்தியத்துவம் அல்லது அதிகாரக் குவியல் கோட்பாடு ஆகும். லெனின், மக்களாட்சி மத்தியத்துவக் கோட்பாட்டின்படி, பொதுவுடைமைவாத கட்சியில் கீழ் கிளைகளில் இருந்து மேல் கிளைகளுக்கு மக்களாட்சியும், மேல் கிளைகளில் இருந்து கீழ் கிளைகளுக்கு அதிகாரக் குவியலும் அமைப்பு ரீதியாக காணப்படுகிறது.




### ஏகாதிபத்தியம்

ஐரோப்பிய நாடுகள், ஆசிய, ஆப்பிரிக்க நாடுகளை இராணுவ பலம் மூலம் அடிமையாக்கி சுரண்டிய முறையே ஏகாதிபத்தியம் ஆகும். லெனின், "ஏகாதிபத்தியம்; "முதலாளித்துவத்தின் உச்சக்கட்டம்" (Imperialism: The Highest Stage of Captalism) என்ற தனது நூலில் ஏகாதிபத்தியத்திற்கும்,முதலாளித்துவத்திற்கும் உள்ள தொடர்பை விவரிக்கின்றார். முதலாளித்துவம் தன்னைத் தானே அழித்துக் கொள்ளும்என்று காரல்மார்க்ஸ்கூறியுள்ளார். ஆனால் அது நடக்கவில்லை. அதற்கு காரணம் ஏகாதிபத்தியம் ஆகும்.

ஏகாதிபத்தியத்தின் மூலமாக ஆசிய, ஆப்பிரிக்க நாடுகளை அடிமைப்படுத்தி அவைகளின் செல்வங்களை கொள்ளை அடித்து தங்கள் நாடுகளுக்கு முதலாளித்துவம் எடுத்துச் சென்றது. கொள்ளையடித்ததில் ஒரு பகுதியை தங்கள் நாட்டின் தொழிலாளிகளுக்கு முதலாளித்துவம் வழங்கியது. இவ்வாறு தான் முதலாளித்துவம் தன்னைக் காப்பாற்றிக் கொண்டது. உலகில் இரண்டு வகை புரட்சிகள் நடைபெற வேண்டும். முதலாவதாக ஆசிய, ஆப்பிரிக்க நாடுகள் ஏகாதிபத்திய மேற்கத்திய நாடுகளுக்கு எதிராக புரட்சி செய்ய வேண்டும். இரண்டாவதாக மேற்கத்திய நாடுகளில் உள்ள தொழிலாளிகள் முதலாளித்துவ சுரண்டலுக்கு எதிராக புரட்சி செய்ய வேண்டும். இந்த இரண்டு புரட்சிகள் மூலமாக ஏகாதிபத்தியமும், முதலாளித்துவமும் அழிக்கப்படும். சமத்துவம், சகோதரத்துவம் அடிப்படையில் சர்வதேச அளவிலும் மேலை நாடுகளிலும் பொதுவுடைமைவாத சமுதாயம் மலரும் என்று லெனின் கூறினார்.

### ஜோசப் ஸ்டாலின்




லெனினுடைய காலத்திற்கு பின் சோவியத் ரஷ்யாவின் தலைவராகவும் பொதுவுடைமைவாத கட்சியின் பொது செயலாளராகவும் ஜோசப் ஸ்டாலின்இருந்தார்."ஒருநாட்டில்சமதர்மவாதம்" என்ற புதிய கருத்தை மார்க்சியத்தில் உருவாக்கினார். பொதுவுடைமைவாத கோட்பாட்டாளரான நிகோலை புக்காரின் இக்கருத்தை முதலில் தோற்றுவித்தார்.

மார்க்சியம் தேசியவாதத்தை நிராகரித்தது, சர்வதேசவாதத்தை ஆதரித்தது. காரல் மார்க்ஸ் தேசியவாதத்தை முதலாளிகளின் கருத்து என்று விவரித்தார். பாட்டாளி வர்க்க புரட்சி மூலமாக உலக சமுதாயத்தை உருவாக்குவது காரல் மார்க்சின் அடிப்படை நோக்கமாகும்."தொழிலாளிகளுக்கு சொந்த நாடு இல்லை" என்று கூறினார். லெனின் அவர்களும் இக்கருத்தை ஆதரித்தார்.



11th Std Political Science Tamil Medium Vol-2_Chapter 8_25-09-2018.indd 9 29-09-2018 12:39:58


ரஷ்யாவின் 1917–ஆம் ஆண்டு அக்டோபர் புரட்சி உலகப் புரட்சிக்கு வழிவகுக்கும் என்று லெனின் கூறினார்.

ஆனால் ஒரு நாட்டில் சமதர்மவாதம் என்ற கருத்தின் மூலம் ஸ்டாலின் பெரிய மாற்றுக் கருத்தை முன் வைக்கின்றார். "ஐரோப்பிய ஐக்கிய நாடுகளுக்கான முழக்கம்" என்ற உரையின் மூலம் லெனினே இக்கருத்தை வலியுறுத்தினார் என்று ஸ்டாலின் கூறினார். ரஷ்யாவில் மட்டுமே சமதர்மவாதம் இருந்தால் தற்பொழுது போதும், உலக நாடுகளுக்கு சமதர்ம புரட்சியை ஏற்றுமதி செய்யத் தேவையில்லை என்பது தான் இக்கோட்பாட்டின் அடிப்படை கருத்தாகும். சோவியத் ரஷ்யாவின் பொதுவுடைமைவாத முதலாளித்துவ எதிரிகளால் சூழப்பட்டு இருக்கிறது. சோவியத் ரஷ்யாவின் பொதுவுடைமைவாத தற்பொழுது காப்பாற்றுவது தான் முக்கிய கடமையாகும் என்று ஸ்டாலின் கூறினார். சோவியத் ரஷ்யாவும் சர்வதேச பொதுவுடைமைவாத நிறுவனமும் ஸ்டாலினின் கொள்கையை ஏற்றுக்கொண்டன.

லியோன் ட்ராட்ஸ்கி ஸ்டாலினின் சமதர்மத்தை நிராகரித்தார். நிரந்தர உலகப் புரட்சி, காரல் மார்க்ஸ் கூறியதை போல வேண்டும் என்றார். சோவியத் ரஷ்யா தனது பொதுவுடைமைவாத உலக நாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய வேண்டும். இல்லாவிட்டால் அந்த நாட்டிலேயே பொதுவுடைமைவாத மறைந்து விடும் என்று ட்ராட்ஸ்கி எச்சரித்தார்.

### மாவோ

பொதுவுடைமைவாதத்தின் மிகப்பெரிய கொள்கைவாதிகளில் ஒருவராக மாவோ உள்ளார். அவர் சீன பொதுவுடைமைவாத கட்சியைத் தோற்றுவித்து 1949–ஆம் ஆண்டு பொதுவுடைமைவாத புரட்சியை நிகழ்த்தினார்.




### பொதுவுடைமைவாதம் சீனமயமாதல்

பொதுவுடைமைவாத கொள்கையில் சீனாவின் சூழ்நிலைக்கு ஏற்றவாறு சில மாறுதல்களை மாவோ கொண்டு வந்தார். இதற்கு பொதுவுடைமைவாத சீனமயமாதல் என்பது பெயராகும்.

### விவசாயிகள் தலைமையில் புரட்சி

காரல் மார்க்ஸ் தொழிற்சாலைகள் நிறைந்த, தொழிலாளர்கள் நிறைந்த, மேற்கு ஐரோப்பிய நாடுகளில்தான் பொதுவுடைமைப் புரட்சிக்கு சாத்தியம் இருந்ததாகக் கூறினார். புரட்சியை தொழிலாளர்கள்தான் நடத்துவார்கள் என நம்பினார். ஆனால் 1940–களில் சீன ஒரு பின்தங்கிய விவசாய நாடு ஆகும்.தொழிற்சாலைகளோ,தொழிலாளிகளோ அதிகம் இல்லை. மாவோ விவசாயிகளை ஒருங்கிணைத்து வெற்றிகரமாக பொதுவுடைமைவாத புரட்சியை நடத்தினார். சீனாவில் மாவோவின் வெற்றி விவசாய நாடுகளான ஆப்பிரிக்க, ஆசிய நாடுகளுக்கு ஊக்கத்தை வழங்கியது.

### மக்கள் முன்னணி

லெனின், பொதுவுடைமைவாத கட்சியின் முன்னணியில் தொழிலாளர்கள் இருக்க வேண்டும் என்றார். மாவோ புரட்சியின் முன்னணியில் மக்கள் இருக்க வேண்டும் என்று கூறினார். பொதுவுடைமைவாத கட்சியின் கொள்கையிலும், போராட்டத்திலும் மக்கள் முக்கிய அங்கமாக இருப்பார்கள். "மக்களிடம் இருந்து மக்களுக்காக" என்பது மாவோவின் பொதுவுடைமைவாத கட்சியின் வழிகாட்டுக் கோட்பாடாக இருந்தது.

### மக்கள் போர், கொரில்லா போர்

சுரண்டலுக்கு எதிரான பொதுவுடைமைப் புரட்சியில், மக்களுக்கு முக்கியத்துவத்தை மாவோ வலியுறுத்துகிறார். பல கோடிகணக்கான மக்களை நேரடியாக போரில் ஈடுபடுத்த மாவோ வாதிட்டார். ஏகாதிபத்தியமும், நிலப்பிரபுக்கள் முறையும் மக்களின் எதிரிகள் என்று கூறினார். கிராமப்புற விவசாயிகளை ஒருங்கிணைத்து நகரங்களை கைப்பற்ற வேண்டும் என்பது மாவோவின் உத்தி ஆகும்.

மாவோ கொரில்லா போர் முறையைப் பின்பற்றினார். இந்த உத்தியில் மூன்று கட்டங்கள் உள்ளன. முதல் நிலையில், பொதுவுடைமைவாத தொண்டர்கள் பிரச்சாரம் மூலம் மக்களை கவர்வார்கள். இரண்டாம் நிலையில், பொதுவுடைமைவாத கட்சியினர் இராணுவ மற்றும் அரசாங்க நிறுவனங்கள் மீது தாக்குதல் நடத்துவார்கள். மூன்றாம் கட்டத்தில், ஒரு வழக்கமான இராணுவமாக மாறி பொதுவுடைமைவாத கட்சி கிராமங்களையும், நகரங்களையும் வெற்றி கொள்ளும். தேவைக்குத் தகுந்தவாறு இந்த மூன்று நிலைகளை பொதுவுடைமைவாத கட்சி பின்பற்றலாம்.

### நூறு மலர்கள் மலரட்டும்

1950-களில் நூறு மலர்கள் மலரட்டும் இயக்கம் சீனாவில் நடைபெற்றது. "நூறு மலர்கள் மலரட்டும், நூறு வகையான சிந்தனைகள் போட்டியிடட்டும்" என்று மாவோ கூறினார்.

கருத்துச்சுதந்திரம் மக்களுக்கு வழங்கப்பட்டது. நல்ல புதிய கருத்துகள், பழைய, தேவையற்ற கருத்துக்களைத் தோற்கடிக்கும் என மாவோ கூறினார். தொடக்கத்தில் பொதுவுடைமைவாத அரசாங்கம் இந்த இயக்கத்தை நடத்தியது. பின்னர், பொதுவுடைமைவாத கட்சிக்கு எதிராக கருத்துக்கள் தோன்றியதால் இந்த இயக்கம் கைவிடப்பட்டது.

**நூறு மலர்கள் மலரட்டும்**



**நூறு மலர்கள் மலரட்டும், நூறு கருத்துக்கள் போட்டியிடட்டும்.**

**பொருள் எல்லோருக்கும் சிந்திக்கும் சுதந்திரம் வழங்கப்பட வேண்டும். 1956-ஆம் ஆண்டு மாவோ இதனை அமல்படுத்தினார். சீன மக்களின் ஆலோசனை, கருத்துக்கள் பொதுவுடைமை கட்சிக்கு வேண்டும் என்று அவர் கூறினார்.**

**பண்டைய கால சீன சிந்தனையாளர் கன்ஃபுசியஸ் தனது கவிதையில் இந்த வாசகத்தை தோற்றுவித்தார்**

### கலாச்சாரப் புரட்சி

மாவோ பாட்டாளி வர்க்க கலாச்சார புரட்சியை 1965-66ஆம் ஆண்டு அமல்படுத்தினார். பழைய கருத்துக்கள், பழைய பழக்கங்கள், பழைய கலாச்சாரம், பழைய வழக்கங்கள் ஆகிய "நான்கு 'பழையவைகள்' நீக்கத்திற்காக இப்புரட்சியைக் கொண்டு வந்தார். பொதுவுடைமைவாத கட்சி அரசாங்கம், இராணுவம், கலாச்சாரத்தில் தேவையில்லா கருத்துகள் புகுந்துவிட்டன. அவைகளை அகற்றி பொதுவுடைமையைக் காக்க வேண்டும் என்பதுதான் நோக்கமாகும். தொழில்மயம் ஆக்குவதையும், நிலம் மற்றும் தொழில் கூட்டுவாதத்தையும் அமல் படுத்தி விரைவாக சீனாவை சமதர்ம அமைப்பாக மாற்றமாவோ முயற்சித்தார். ஆனால் துரதிஷ்டவசமாக அவரது நடவடிக்கைகள் கொடிய பஞ்சத்தைக் கொண்டுவந்தது. பொதுவுடைமைவாத அரசை காப்பாற்ற, பொதுவுடைமையின் எதிரிகளை வீழ்த்துவதற்கு சிவப்பு காவலர்கள் உருவாக்கப்பட்டனர்.

உங்களுக்குத் தெரியுமா?

**கலாச்சாரப் புரட்சி**



1960 களில்

மாவோ தனது அதிகாரத்தை பலப்படுத்துவதற்காக புதிய புரட்சிகர இயக்கத்தைத் தொடங்கினார். மாணவர்கள், விவசாயிகள், இராணுவ வீரர்கள் ஆகியோரைக் கொண்டு சிவப்பு காவலர்களை உருவக்கினார்.

### புதிய மக்கள் ஆட்சி

மாவோ புதிய மக்களாட்சி என்ற கொள்கையைக் கொண்டு வந்தார். அரசு ஏழைகளை சுரண்டும் பணக்காரர்களின் ஆயுதம் என்ற மார்க்ஸிய கருத்தை மாவோ



11th Std Political Science Tamil Medium Vol-2_Chapter 8_25-09-2018.indd 11 29-09-2018 12:39:58

சிறிது மாற்றியமைத்தார். விவசாயிகள், தொழிலாளிகள், சிறிய முதலாளிகள், தேசிய முதலாளிகள் என்ற நான்கு வர்க்கங்களுக்காக புதிய மக்களாட்சியை உருவாக்கினார். புதிய மக்களாட்சிக்கு மக்கள் மக்களாட்சி சர்வாதிகாரம் என்ற பெயரையும் அவர் சூட்டினார், இம்முறையில் தொழிலாளிகளுக்கும், விவசாயிகளுக்கும் முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. சிறிய முதலாளிகளும், பெரிய முதலாளிகளும் அரசின் இளைய பங்குதாரர்களாக கருதப்பட்டனர். இந்த நான்கு வகை வர்க்கங்களுக்கும் அரசு மக்களாட்சியாக செயல்பட்டது. மற்ற வர்க்கங்கள் அரசின் எதிரிகளாக கருதப்பட்டனர். அவர்களை 'ஏகாதிபத்தியத்தை இயக்கும் நாய்கள்' என்று மாவோ கடுமையாக வர்ணித்தார்.



**'பூனை கருப்பா, சிவப்பா என்பது முக்கியமல்ல, அது எலியை பிடித்தால் போதும்'.**
**– டெங் ஜியாபெங்**

இருபத்தியோராவது நூற்றாண்டில் கூட மாவோயிசம் பல மாற்றங்களுடன் சீனாவில் பின்பற்றப்படுகிறது. சீனாவின் தேசிய தலைவரான டெங் ஜியாபெங் 1978 ஆம் ஆண்டிற்கு பிறகு சீனப் பொருளாதாரத்தில் பெரிய மாற்றங்களைக் கொண்டுவந்தார். தாராளமயமாதல் சீனப்பொருளாதாரத்தில் முன்னுக்கு கொண்டுவரப்பட்டது. இருந்தபோதிலும் அரசியலில் சீன பொதுவுடைமைவாத கட்சி எல்லையற்ற ஆதிக்கத்தை தொடர்ந்து பெற்றிருக்கிறது.

### ஆண்டனியோ கிராம்சி

இத்தாலிய மார்க்சியவாதியான கிராம்சி மேலாதிக்கம் என்ற புதுக்கருத்து மூலம் முதலாளித்துவ அரசின் செயல்பாடுகளை விவரித்தார். மேலாதிக்கம் என்றால் அறிவுசார், தார்மீக தலைமை என்பது பொருளாகும். அரசு மக்களுடைய ஆதரவை தனக்கு சாதகமாக அறிவுசார் தார்மீக தலைமையின் மூலம் உருவாக்குகின்றது. பிரச்சாரத்தின் மூலம் தனக்கு ஆதரவாகப் பொய் எழுச்சி மற்றும் விழிப்புணர்வை உருவாக்குகிறது.

அரசின் எண்ணங்கள், நோக்கங்கள் மக்களின் மனதில் திரும்பத்திரும்ப பதியப்படுகின்றன. மக்களின் மனதை மயக்க முடியாத போதுதான வன்முறையை அரசு பயன்படுத்துகிறது. முதலாளித்துவ அரசை வீழ்த்துவதற்கு உயிரோட்டமான அறிவு ஜீவிகளும் பொதுவுடைமைவாத கட்சியும் சேர்ந்து பணியாற்ற வேண்டும். அறிவு ஜீவிகள் அரசைப்பற்றி யோசித்து எவ்வாறு அதை தோற்கடிப்பது என்று கூறுவார்கள். பொதுவுடைமைவாத கட்சி அதன் பின் புரட்சியை நடத்தி பொதுவுடைமையை நிறுவும் என்று கிராம்ஸி கூறினார்.



**எல்லா மனிதர்களும் அறிவு ஜீவிகளே ஆனால் சமூகத்தில் அறிவு ஜீவிகளின் பணியை எல்லோரும் செய்வது இல்லை.**
**–ஆண்டனியோ கிராம்ஸி**

**செயல்பாடு**

ஆண்டனியோ கிராம்ஸி சமூகத்தில் அறிவு ஜீவிகளின் பணியை பற்றி விளக்கி உள்ளார். இதனை வகுப்பில் விவாதிக்கவும்.

### புது மார்க்சியம்

ஜெர்மனியில் உள்ள பிராங்பர்ட் சமூக ஆய்வு நிறுவனத்தின் தத்துவஞானிகள் புது மார்க்சியம் அல்லது விமர்சன கோட்பாடு என்பதை உருவாக்கினர்.

இவர்கள் அனைவரும் ஆதிக்கத்தையும் சுரண்டலையும் எதிர்த்தவர்கள் ஆவார்கள். ஆதிக்கத்தின் வேர்களை புரிந்துகொள்ள முயற்சித்தவர்கள் ஆவார்கள். புரட்சிகர மாற்றத்திற்காக மக்களின் உண்மை விழிப்புணர்வைத் தட்டியெழுப்பினார்கள். ஆதிக்கம் சார்ந்த சமூக கலாச்சார தன்மைகளை



11th Std Political Science Tamil Medium Vol-2_Chapter 8_25-09-2018.indd 12 29-09-2018 12:39:58

## உரையாடல்



**ஆசிரியர்** : அன்பு மாணவர்களே, U.S.S.R. என்று கேள்விப்பட்டு உள்ளீர்களா?

**மாணவன் 1** : ஆமாம் ஐயா, செய்தித்தாள்களில் பலமுறை நான் படித்துள்ளேன்

**ஆசிரியர்** : அதனுடைய விரிவாக்கம் என்ன?

**மாணவன் 2** : ஐயா, U.S.S.R. என்றால் யூனியன் ஆ:ஃப் சோவியத் சோசலிஸ்ட் ரிபப்லிக்ஸ் என்பது அதனுடைய விரிவாக்கம் ஆகும்.

**ஆசிரியர்** : உன்னுடைய பதில் சரியானது ஆகும். அது உலகிலேயே மிகப் பெரிய அரசாக இருந்தது. பொதுவுடைமை தத்துவத்தை பிரதிபலித்தது.

**மாணவன் 3** : ஐயா, அந்த நாட்டிற்கு என்ன ஏற்பட்டது? தற்போது அதனை பற்றி ஏன் நாம் எதையும் கேள்விப்படுவது இல்லை?

**ஆசிரியர்** : அருமை மாணவர்களே, அந்நாடு தற்போது உலகில் இல்லை. 1991–ஆம் ஆண்டு அது உடைந்து போனது. உலகத்தில் இருந்து மறைந்து போனது.

**மாணவன் 1** : ஐயா, ஏன், எவ்வாறு அந்நாடு உடைந்து போனது?

**ஆசிரியர்** : அந்த பொதுவுடைமை நாடு உடைந்து போனதிற்கு பல காரணங்கள் உள்ளன. தீர்க்க முடியாத பொருளாதார பிரச்சனை அந்நாட்டை பாதித்தது. அரசியலில் மக்களுக்கு உரிமைகள் வழங்கப்படவில்லை. அந்நாட்டின் இராணுவ செலவுகள் எல்லை மீறி போயின. அமெரிக்காவிற்கும் அந்நாட்டிற்கும் இடையிலான பனிப்போர் அதனுடைய பொருளாதார சக்தியை சிதைத்தது.

**மாணவன் 2** : ஐயா, அந்த பெரிய நாடு உடைந்து போனால் உலகமே அதிர்ந்து இருக்கும். அந்த நாட்டின் சரிவும், மறைவும் எவ்வாறு உலகத்தை பாதித்தது?

**ஆசிரியர்** : ஆம், எனது அருமை மாணவனே அந்நாட்டின் மறைவு குறுகிய மற்றும் நீண்டகால தாக்கத்தை உருவாக்கியது. ரஷ்யாவில் மக்களாட்சியை கொண்டு வந்தது உலகப் பனிப்போருக்கு முடிவு கட்டியது. அணு ஆயுத போர் ஆபத்தை அகற்றியது. அந்நாட்டின் மறைவால் 15 புதிய குடியரசு நாடுகள் தோன்றின. இது போன்ற நல்ல மாற்றங்கள் அந்நாட்டின் மறைவால் கிட்டின.

**மாணவன் 3** : ஐயா, அந்நாட்டின் மறைவால் எதிர்மறையான விளைவுகள் ஏற்பட்டனவா?

**ஆசிரியர்** : ஆம். பல எதிர்மறை விளைவுகள் உருவாயின. (எ.கா.) பொதுவுடைமைவாதம், மனித குலத்திற்கான நம்பிக்கை கொள்கை என்ற முயற்சியில் வீழ்ச்சி அடைந்தது. அந்த நாட்டின் மறைவால் தோன்றிய புதிய நாடுகளுக்கிடையில் பிரச்சனைகள் எழுந்தன. உலகம் ஒரு நாட்டின் ஆதிக்கத்தின் கீழ் வந்தது. (அமெரிக்காவின் ஆதிக்கம்) தேசங்களிடையே ரஷ்யா தனது உயர்ந்த இடத்தை இழந்தது. இந்தியா தனது பாரம்பரிய நட்பு நாடான சோவியத் யூனியனை இழந்தது.



11th Std Political Science Tamil Medium Vol-2_Chapter 8_25-09-2018.indd 13 29-09-2018 12:39:58

எதிர்த்து கேள்வி கேட்க வேண்டும் என்று கூறினார்கள். இவர்களுடைய கருத்துகள் மக்களின் விடுதலைக்கான கருத்துகளாகவும், ஆதிக்கத்திற்கு எதிர்ப்பு கலாச்சாரமாகவும் இருந்தன.

**செயல்பாடு**

பொதுவுடைமையின் பல சிந்தனையாளர்களை தற்பொழுது மாணவர்கள் படித்துள்ளார்கள். காரல் மார்க்சின் அரசில்லா சமூகம் சாத்தியமானதா என்று விளக்கம் கூறவும்.

### கருவி மார்க்சிசம்

ரால்ஃப் மிலிபன்ட், கருவி மாக்ஸிசம் எனும் கருத்தை வலியுறுத்தினார். அரசை இவர் கருவியாக பார்க்கிறார். பணக்காரர்களும் அரசாங்கத்தின் அதிகாரிகளும் ஒரே சமூக வர்க்கத்தில் இருந்து தோன்றுகிறார்கள். அரசு அதிகாரிகள் பணக்காரர்களின் சொந்தக்காரர்களாக உள்ளனர். இந்த தனிப்பட்ட உறவினால் அரசு பணக்காரர்களுக்கு சாதகமாக செயல்படுகிறது. பணக்காரர்கள் ஏழைகளை சுரண்டுவதற்கும் மேலாதிக்கம் செய்வதற்கும் அரசானது துணை போகிறது என்று ரால்ஃப் மிலிபன்ட் கூறினார்.

**உங்களுக்குத் தெரியுமா?**

கிராம்சி நவீன அரசியல் சிந்தனையாளர்களில் மிகுந்த சிந்திக்கும் திறன் கொண்ட ஒருவராவார். இத்தாலியின் பாசிச அரசாங்கம் அவரைச் சிறையில் அடைத்தது. 20 ஆண்டுகளுக்கு இவரது மூளையின் செயல்பாட்டை நிறுத்தி வைக்க வேண்டும் என்று நீதிமன்றம் ஆணையிட்டது. சிறையில் கையில் கிடைத்த காகிதத்தில் தனது கருத்துக்களை கிராம்சி எழுதினார். பின்னர் சிறையில் இருந்து அந்த குறிப்புகள் வெளி உலகத்திற்கு கடத்தி வரப்பட்டன. ஆகவே அவரது புத்தகத்திற்கு 'சிறைச் சாலை குறிப்பேடுகள்' (Prision Notebooks) எனப் பெயரிடப்பட்டது.

### கட்டுமான மார்க்சிசம்

பிரான்சு நாட்டின் தத்துவ ஞானியான அல்துசர், போலன்ட்ஸ்சாஸ் கட்டுமான மார்க்சியம் என்ற கருத்தை 1970களில் வலியுறுத்தினர். இவர்கள் கருவி மார்க்சிய கருத்தை நிராகரித்தனர். அல்துசருக்கும். மிலிபேன்ட் அவருக்கும் இடையே நீண்ட விவாதம் நடந்தது. அதிகாரிகளுக்கும், பணக்காரர்களுக்கும் இடையிலான தனிப்பட்ட உறவு முக்கியம் இல்லை. அதிகாரிகளின் தனிப்பட்ட சமூக உறவுகள் அரசின் தன்மையை பாதிப்பது இல்லை. அரசு எப்பொழுதுமே பணக்காரர்களால், ஏழைகளை சுரண்டும் கருவியாக செயல்படும் என்று கட்டுமான மார்க்சிசம் கூறுகிறது.

### லூயி அல்துசர்

மார்க்சியத்தின் அரசு கோட்பாட்டில் புதிய கருத்துகளை இவர் கொண்டு வந்தார். முதலாளித்துவ அரசு ஏழைகளை அடக்குவதற்கு 2 வகையான கருவிகளை பயன்படுத்துகிறது.

1. கொள்கை அரசு கருவிகள்
2. அடக்குமுறை அரசு கருவிகள்

கொள்கை அரசு கருவிகளில் குடும்பம், பள்ளிகள், கல்லூரிகள், ஊடகங்கள் போன்றவைகள் அடங்கும். அரசானது, கொள்கை கருவிகள் மூலமாக பிரச்சாரங்களைச் செய்து, மக்களின் மனதை மயக்கி தனது நலனுக்கு தகுந்தவாறு மாற்றுகிறது.

அடக்குமுறை அரசு கருவிகளில் காவல்துறை, இராணுவம் போன்றவைகள் அடங்கும். அரசானது, கொள்கை அரசு கருவிகளால் செயல்பட முடியாவிட்டால், அடக்குமுறை அரசு கருவிகளை பயன்படுத்தும். வன்முறை, மிரட்டல் போன்ற நடவடிக்கைகளை பயன்படுத்தி மக்களை அடக்கும் என்று அல்துசர் கூறினார்.


11th Std Political Science Tamil Medium Vol-2_Chapter 8_25-09-2018.indd 14 29-09-2018 12:39:58






**விவாதம்**

சோவியத் யூனியன் 1991-ல் உடைந்து போனதால், பொதுவுடைமை கொள்கையின் புகழ் பாதிக்கப்பட்டுள்ளது. வகுப்பில் பொதுவுடைமையின் எதிர்காலம் என்ற ஒரு குழு விவாதத்தை மாணவர்கள் நடத்தவும்.

## 8.3 சமதர்மவாதம்

சமதர்மவாதம் செல்வங்கள் அனைத்தும் பொதுச் சொத்துக்களாக இருக்க வேண்டும். தனிச் சொத்து உரிமைக்கு கட்டுப்பாடுகள் விதிக்க வேண்டும் என்று கூறுகின்றது. தாராள வாதத்திற்கு எதிரான கோட்பாடு சமதர்ம கொள்கை ஆகும். பல வகையான சமதர்ம வாதங்கள் உள்ளன. மக்களாட்சி சமதர்ம வாதம், ஃபேபியன் சமதர்மவாதம், பரிணாம சமதர்மவாதம், கில்டு சமதர்மவாதம் என்பவைகள் முக்கியமானவைகள் ஆகும். பல நேரங்களில் சமதர்மவாதமும் பொதுவுடைமைவாதத்தையும் ஒரே பொருள் கொண்டவைகள் போல அழைக்கப்படுகின்றன. ஆனால் காரல் மார்க்ஸ் இரண்டையும் வேறுபடுத்தினார். தனது பொதுவுடைமையை அறிவியல் சமதர்மவாதம் என்றும் இதர சமதர்மவாதங்களை கற்பனை சமதர்மவாதம் என்றும் வர்ணித்தார்.

### 1. கற்பனை சமதர்மவாதம்

பல அரசியல் அறிஞர்கள் 19ம் நூற்றாண்டில் தாராளவாதத்தின் எதிர்மறை விளைவுகளை தாக்கி பேசினார். உழைக்கும் வர்க்கத்தின் நலன்களை காப்பாற்ற வேண்டும் என்றனர். இராபர்ட் ஓவன் என்பவர் மனித நேயம் உள்ள தொழில் அதிபர் ஆவார். அவர் கூட்டுறவு முறையில் தனது தொழிற்சாலைகளை நடத்தினார். தொழிலாளிகளை நன்கு கவனித்துக் கொண்டார். தொழிற்சாலைகளின் மேலாண்மையில் தொழிலாளிகளையும் சேர்த்துக் கொண்டார். தொழிலில் வரும் இலாபத்தில் தொழிலாளிகளுக்கும் பங்கு வழங்கினார். தூய சைமன் என்பவர் பிரான்சு நாட்டை சேர்ந்த தொழில் அதிபர் மற்றும் அறிஞர் ஆவார். திறமையான பொருளாதாரத்திற்கு தொழிலாளிகளின் நலன்களை முதலாளிகள் பாதுகாக்க வேண்டும் என்றார்.



சார்லஸ் ஃபுரியர் என்ற அறிஞர் தொழிலாளர்களின் அமைப்புகள் உருவாக வேண்டும் என்றார். அந்த அமைப்புகளுக்கு ஃபலான்ஜீஸ் (Phalanges) என்று பெயரிட்டார். இவர் முதலாளிகள் மனசாட்சியுடன், தொழிலாளர்களுடன் நடந்து கொள்ள வேண்டும் என்றார்.

மேற்கண்ட மூன்று அறிஞர்களும் சமதர்மவாதத்தை ஆதரித்தனர். காரல் மார்க்ஸ் இவர்களின் தொழிலாளர்களுக்கான கரிசனத்தை பாராட்டினார். ஆனால் இவர்களின் கருத்துக்கள் ஆழமற்றவை, அறிவியல் பூர்வமாக இல்லை என்று விமர்சித்தார். ஆகவே இவர்களின் சமதர்மவாதக் கருத்துக்களை கற்பனை சமதர்மவாதம் என்று பெயரிட்டார்.

### 2. மக்களாட்சி சமதர்மவாதம்

விடுதலையும் சமத்துவத்தையும் அடைவதற்கு மக்களாட்சியும் சமதர்மவாதமும் தேவை என்று மக்களாட்சி சமதர்மவாதம் வாதிடுகின்றது. இது தனது அரசு கோட்பாட்டில் பொதுவுடைமையில் இருந்து வேறுபடுகின்றது. அரசு சுரண்டலின் கருவி கிடையாது. அரசு மக்களின் நலன் காக்கும் கருவியாகும். அரசு முதலாளிகள் கைப்பாவை இல்லை. சமூக



11th Std Political Science Tamil Medium Vol-2_Chapter 8_25-09-2018.indd 15 29-09-2018 12:39:59

நலனை காக்கும் தன்மை அரசிடம் உள்ளது. அரசு மக்களாட்சி அடிப்படையில் இருக்க வேண்டும். சமூகத்தில் உள்ள எல்லா வர்க்கங்களுக்கும் பொதுவானது அரசு ஆகும்.

சமூக மாற்றங்கள் அமைதியான முறையில் மெல்ல மெல்ல வரவேண்டும். மக்களாட்சி சமதர்மவாதம் வாக்குப் பெட்டி சமதர்மவாதம் என்றும் அழைக்கப்படுகிறது. மக்கள் தங்களின் ஓட்டுகள் மூலம், தேர்தல் பாதை மூலம் மாற்றங்களை கொண்டு வரமுடியும். புரட்சியும் வன்முறையும் தேவையில்லை என்று மக்களாட்சி சமதர்மவாதம் கூறுகின்றது. தனி சொத்துக்களை முற்றிலும் அகற்ற வேண்டாம். சமூக நலனுக்காக தனி சொத்துரிமை மீது கட்டுப்பாடுகளை விதிக்கலாம். தனி சொத்துரிமையை அழிக்க வேண்டியது இல்லை என்று மக்களாட்சி சமதர்ம வாதம் கூறுகின்றது.

### 3. ஃபேபியன் சமதர்மவாதம்


இது இங்கிலாந்து நாட்டின் சமதர்ம வாதம் ஆகும். ஃபேபியன் குழுவால் 1884 முதல் இவ்வகை சமதர்மவாதம் ஆதரிக்கப்பட்டு வந்தது. பண்டையகால ரோமானிய ஜெனரல் 'ஃபேபியஸ்' பெயரால் இது அழைக்கப்படுகின்றது. 'காத்திரு, சரியான நேரத்தில் தீவிரமாக தாக்கு' என்பது ஃபேபியஸ் அவர்களின் இராணுவ உத்தியாகும்.

சிட்னி வெப், H.G.வெல்ஸ் உள்ளிட்டோர் ஃபேபியன் சமதர்மவாதத்தை கொண்டு வந்தனர். ஆங்கில எழுத்தாளர் பெர்னார்ட் ஷா ஃபேபியன் சமதர்மவாதத்தின் தலை சிறந்த அறிஞர் ஆவார்.

ஃபேபியன் சமதர்மவாதம் முதலாளித்துவத்தை கடுமையாக எதிர்த்தது. எதிர்மறைத் தாராளவாதத்தை விமர்சித்தது. அரசியலையும் பொருளாதாரத்தையும் மாற்றி அமைக்க வேண்டும் என்று கூறியது. மக்களாட்சி அரசை ஃபேபியன் சமதர்மவாதம் ஆதரித்தது. அரசிற்கு இரண்டு தன்மைகள் உள்ளன. ஒன்று அதனுடைய அதிகாரங்கள் பரவலாக்கப்பட்டு இருக்க வேண்டும். இரண்டாவதாக நிபுணர்களிடம் அதிகாரம் இருக்க வேண்டும். அரசை நாம் அகற்ற வேண்டாம். அதனை இந்த இரண்டு தன்மைகள் அடிப்படையில் மாற்றினால் போதும் என்று ஃபேபியன் சமதர்மவாதம் கூறியது.




**ஃபேபியன் சமதர்மத்தின் பொன்மொழி "தாக்கும் பொழுது நான் கடுமையாக தாக்குவேன்" என்பதாகும்.**



**"புரட்சிகள் கொடுங்கோலாட்சியின் கொடுமையை குறைக்க வில்லை. இன்னொரு கொடுங்கோலனிடம் தான் ஆட்சியை ஒப்படைத்துள்ளன."**

-ஜார்ஜ் பெர்னார்ட் ஷா

**உங்களுக்குத் தெரியுமா?**

இந்தியாவில் முதல் பிரதமர் ஜவஹர்லால் நேரு ஃபேபியன் சமதர்ம வாதத்தின் ஆதரவாளர் ஆவார்.

ஃபேபியன் சமதர்மவாதம் மக்களாட்சியும் சமதர்மமும் மிகவும் நெருங்கிய கோட்பாடுகள் ஆகும். இரண்டு கொள்கைகளும் நீதியையும் சமத்துவத்தையும் மிகவும் ஆதரித்தன.

ஃபேபியன் சமதர்மவாதம் தனி சொத்துரிமையை அழிக்க வேண்டும் எனக் கூறவில்லை. சமூக நலனுக்காக தனி சொத்துரிமை மீது கட்டுப்பாடுகள் விதிக்க வேண்டும் என்று கூறியது.

ஃபேபியன் சமதர்மவாதம் பொதுவுடைமைவாத கொள்கையின் புரட்சியை



11th Std Political Science Tamil Medium Vol-2_Chapter 8_25-09-2018.indd 16 29-09-2018 12:39:59

எதிர்த்தது. வன்முறை மாற்றம் தராது. அமைதியான முறையில் பேச்சு வார்த்தைகள் மூலம் மாற்றம் வர வேண்டும் என்று கூறியது.

### 4. பரிணாம சமதர்மவாதம்

ஜெர்மன் சமதர்ம மக்களாட்சி கட்சியின் தலைவரான இலசல் (Lassalle) பரிணாம சமதர்ம வாதத்தை ஆதரித்தார். ஜெர்மனியில் 1875–ஆம் ஆண்டு வந்த கோட்டா திட்டம் (Gothe Programme) பரிணாம சமதர்மவாதத்தை வளர்த்தது எட்வர்ட் பெர்ன்ஸ்டன் "பரிணாம சமதர்ம வாதம்"(Evolutionary Socialism) என்ற நூலை எழுதினார். இத்தாலியின் அன்சில், பிரான்சின் ஜாரஸ் என்று பல அறிஞர்கள் பரிணாம சமதர்மவாதத்தை ஆதரித்தனர்.

மாற்றங்கள் பரிணாமத்தின் மூலம் மெல்ல மெல்ல வரவேண்டும். வன்முறை மூலம் வரக்கூடாது. புரட்சி மூலம் மாற்றங்கள் வரவேண்டிய அவசியம் இல்லை என்று பரிணாம சமதர்மவாதம் கூறுகின்றது. மேலும் மனித வாழ்க்கையை பொருளாதார காரணிகள் மட்டும் தீர்மானிப்பது கிடையாது. இதர காரணிகளும் மனித வாழ்வை நிர்ணயிக்கின்றன. பரிணாம சமதர்மவாதமும் மக்களாட்சி சமதர்மவாதமும் நெருங்கிய தொடர்பு உடையவைகள் ஆகும். மார்க்சியம் பரிணாமசமதர்மவாதத்தைதரகர் கண்ணோட்ட சமதர்மவாதம் என்று விமர்சித்தது.



**பரிணாம சமதர்மவாதம்**

**– எட்வர்ட் பெர்ன்ஸ்டன்**

### கில்டு சமதர்மவாதம்

20 ஆம் நூற்றாண்டின் ஆரம்ப காலத்தில் இங்கிலாந்தில் கில்டு சமதர்ம வாதம் தோன்றியது. தேசிய கில்டுகள் அமைப்பின் தலைவரான G.D.H. கோல் கில்டு சமதர்மவாதத்தை ஆதரித்தார். அவர் கில்டு சமதர்மவாதம்: பொருளாதார மீட்புக்கான திட்டம்₹₹ (Guild Socialism; A Plan for Economic Recovery) என்ற நூலை எழுதினார். தொழிளார்களை சுரண்டுவதால் முதாலாளித்துவத்தை விமர்சித்து கில்டு சமதர்மவாதம் தோன்றியது.

**கில்ட் சமதர்ம வாதம்:**
**பொருளாதார மீட்புக்கான திட்டம்**

**– G.D.H. கோல்**



இடைக்கால வரலாற்றில் ஐரோப்பாவில் ஒரு குறிப்பிட்ட தொழிலில் உள்ள நிபுணர்கள் சேர்ந்து உருவாக்கிய சங்கம் தான் கில்டு ஆகும். அத்தொழிலில் உள்ளவர்கள் பரஸ்பர ஒத்துழைப்புடன் வாழ்வதற்கு கில்டுகள் உதவின. கில்டு சமதர்மவாதம் ஐரோப்பாவின் இடைக்கால கில்டுகளையும் நவீன தொழிற்சங்கங்களையும் இணைக்கின்றது. கில்டுகள் தான் ஆட்சி செய்ய வேண்டும். தொழிலில் ஈடுப்பட்டுள்ள நிபுணர்கள் தான் அதன் பிரதிநிதியாக செயல் பட வேண்டும். கில்டுகள் இணைந்து தல, மாவட்ட, மாநில, மத்திய ஆட்சி குழுக்களை உருவாக்கி நாட்டை நிர்வகிக்க வேண்டும். முக்கியமான அதிகாரங்கள் கில்டுகளிடமே இருக்க வேண்டும்.


கில்டு சமதர்மவாதம் அரசை அழிக்க வேண்டும் என்று கூறவில்லை. ஒரு சில பணிகளை மட்டுமே அரசு செய்யவேண்டும். கல்வி மற்றும் சுகாதாரப் பணிகளை மட்டுமே அரசு செய்யவேண்டும். மாற்றங்கள், புரட்சி மற்றும் வன்முறை மூலமாக வரக்கூடாது. அமைதியான மக்களாட்சி முறையில் மட்டுமே மாற்றம் வரவேண்டும் என்பது கில்டு சமதர்ம வாதத்தின் முக்கிய கொள்கையாகும்.

ஆனால் விமர்சகர்கள் கில்டு சமதர்ம வாதத்தை நடைமுறைக்கு சாத்தியம் இல்லாதது என்று விமர்சிக்கின்றனர். அரசை ஒரு சாதாரண கில்டு என கருதுவது அரசின் சிறப்பு தன்மையை சிதைத்து விடும். அரசின் சக்தியை, அதிகாரத்தை கில்டு சமதர்மவாதம் குறைத்து மதிப்பிட்டுள்ளது. கில்டு சமதர்மவாதத்தின்



11th Std Political Science Tamil Medium Vol-2_Chapter 8_25-09-2018.indd 17 29-09-2018 12:39:59

அதிகாரம் இல்லாத அரசினால் சட்டம் ஒழுங்கை பாதுகாக்க முடியாது. போர்கள் மற்றும் கிளர்ச்சிகளில் இருந்து மக்களை காப்பாற்ற முடியாது என்று எதிர்ப்பாளர்கள் விமர்சிக்கின்றனர்.




| வேறுபாடுகள் | |
|---|---|
| **பொதுவுடைமைவாதம்** | **சமதர்மவாதம்** |
| புரட்சி மாற்றத்தின் மருத்துவச்சி ஆகும். பேறு காலத்தில் அன்னையரிடம் இருந்து மருத்துவச்சி குழந்தையை உலகிற்கு எடுத்து வருகிறாள். புரட்சி மாற்றத்தின் மூலம் புதிய சமூகத்தை உலகிற்கு கொண்டு வருகிறது. | பரிணாம மாற்றங்களே நன்மையை தருகின்றன. நீடித்து நிற்கின்றன. புரட்சி தேவையில்லை. |
| பணக்கார வர்க்கம் ஏழை வர்க்கத்தை சுரண்டுவதற்கான கருவி தான் அரசாகும். ஆகவே நாம் அரசை அழிக்க வேண்டும். | அரசை நாம் அழிக்கக் கூடாது அரசை மக்களாட்சி மற்றும் மக்கள் நலன் அடிப்படையில் மாற்றி அமைக்க வேண்டும். |
| வர்க்கம் போராட்டம் மனித வரலாற்றில் மாற்றத்தின் அடிப்படை சக்தி. | வன்முறையான வர்க்கப் போராட்டம் தேவையில்லை. |
| தனி சொத்துரிமை அழிக்கப்பட வேண்டும். | தனி சொத்துரிமை மாற்றப்பட வேண்டும். சமூக நலனுக்காக சொத்துரிமை மீது கட்டுப்பாடுகளை விதிக்க வேண்டும். |
| வரலாற்று பொருள் முதல் வாதம் வரலாற்றை விளக்கும். பொருளாதாரம் தான் மனிதனை இயக்குகிறது. | வரலாற்று பொருள் முதல் வாதம் மட்டுமே மனித வரலாற்றை விளக்காது. கலாச்சாரம், மதம், அரசியல் போன்ற காரணிகளும் மனித வரலாற்றை தீர்மானிக்கன்றன. |



11th Std Political Science Tamil Medium Vol-2_Chapter 8_25-09-2018.indd 18 29-09-2018 12:40:00

**செயல்பாடு**

**திட்ட அறிக்கை**

மார்க்சியத்தின் சிந்தனையாளர்கள், தலைவர்கள் பற்றி ஒரு திட்ட அறிக்கை தயாரிக்கவும்.

### இந்தியாவின் சமதர்மவாதம்

"சமதர்மவாத வகையான சமுதாயம்" என்பது தான் இந்தியாவின் சமதர்மவாதம் ஆகும். 1950-களில் இந்திய அரசு இதனை கொண்டு வந்தது. மத, இன, மொழி, ஜாதி வேறுபாடின்றி அனைவருக்கும் அடிப்படை தேவைகள் பூர்த்தி செய்வதும் ஏழ்மை, கல்லாமை ஆகியவற்றை அகற்றுவதும் இந்தியாவின் சமதர்மவாதம் ஆகும். 1950 ஆம் ஆண்டு பாராளுமன்றம் தனது தீர்மானத்தின் மூலம் திட்டக் குழுவை அமைத்தது. 1951 ஆம் ஆண்டு முதல் ஐந்தாண்டு திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டன. நாம் பொதுத் துறையும் தனியார் துறையும் செயல்படும் கலப்பு பொருளாதாரத்தைப் பின்பற்றினோம். பொருளாதாரத்தில் பொதுத் துறை நிறுவனங்களுக்கு முக்கியத்துவம் இந்தியா தந்தது.

மேலும் 42-வது அரசமைப்பு திருத்தச் சட்டம் சமதர்மவாதத்தை அரசமைப்பின் முகவுரையில் சேர்த்தது. 44-வது அரசமைப்பு திருத்தச் சட்டம் சொத்துரிமையை அடிப்படை உரிமைகள் பகுதியில் இருநது நீக்கி சாதாரண சட்ட உரிமையாக அரசமைப்பின் 12-ஆம் பகுதியில் வைத்தது. அரசமைப்பின் நான்காவது பகுதியில் வேலை உரிமை, சிலர் இடத்தில் செல்வங்கள் குவியாமை, போன்ற சமதர்மவாத கருத்துக்கள் இடம் பெற்றுள்ளன. சுதந்திரம் முதல் 1991-ஆம் ஆண்டு வரை இந்தியா சமதர்மவாத கருத்துக்களை பின்பற்றியது.

## 8.4 தேசியவாதம்

### பொருள், தோற்றம் மற்றும் பரவல்

ஒரு நாட்டின் மேல் மக்களுக்கு உள்ள பாசம், அன்பு, விசுவாசம் போன்ற உணர்வுகளை தேசியவாதம் என்று கூறுகிறோம். மக்களிடையே குறிப்பிட்ட நிலப்பரப்பிற்கும், மொழிக்கும் அல்லது மொழிகளுக்கும், விழுமியங்களுக்கும், பாரம்பரியத்திற்கும் பாசம் காட்டுவதே தேசியவாதம் ஆகும். மக்களின் விசுவாசம் எல்லா குழுக்களை விடவும் தேசத்திற்கு முதன்மையாக இருக்க வேண்டும். ஏர்னஸ்ட் கெல்னெர் "தேசமும் தேசியவாதமும்" (Nations and Nationalism) என்ற நூலை எழுதினார். "தேசியவாதம் என்பது அரசியல் தளமும், தேசத் தளமும் ஒரே மாதிரியாக இருக்க வேண்டும் என்று முதன்மையாக வலியுறுத்தும் அரசியல் கொள்கை" என்று அவர் கூறினார்.

தேசியவாதம் ஒரு நவீன கருத்தாகும். நவீன காலத்தில் ஐரோப்பாவில் தோன்றியது. இங்கிலாந்தில் முதன்முதலில் தோன்றியது. பிரான்சு, ஜெர்மனி போன்ற நாடுகளில் பிரெஞ்சு புரட்சிக்கு பின்னர் பரவியது. வடஅமெரிக்க காலனிகள் ஐரோப்பாவிற்கு எதிராக தங்களது தேசியவாதத்தை உருவாக்கின. ஆசிய ஆப்பிரிக்க நாடுகள் பின் காலனிஆதிக்கத் தேசியவாதம் என்ற புதுவகை தேசியவாதத்தை உருவாக்கின. பல காரனிகள் தேசியவாதம் உலகம் முழுவதும் பரவுவதற்கு வழிவகுத்தன. முதலாளித்துவம், பிரெஞ்சுப் புரட்சி, தொழில் புரட்சி, உலகப் போர்கள் மற்றும் காலனி ஆதிக்கம் போன்றவைகள் தேசியவாதத்தை வளர்த்தன.

### தேசியவாதம் கோட்பாடுகள்

தேசியவாதத்தைப் பற்றி பல கோட்பாடுகள் உள்ளன.

அ) ஆதிகால தேசியவாத கோட்பாடு

ஆ) சமூக உயிரியல் தேசியவாத கோட்பாடு

இ) சமூகத் தொடர்பு தேசியவாத கோட்பாடு

ஈ) மார்க்சிய தேசியவாத கோட்பாடு

உ) பின் கொள்கை தேசியவாத கோட்பாடு

மேற்கண்ட கோட்பாடுகளை நிரந்தரக் கோட்பாடுகள் மற்றும் நவீன கோட்பாடுகள் எனப் பிரிக்கலாம். முதல் இரண்டுக் கோட்பாடுகள் நிரந்தரக் கோட்பாடுகளாகும். கடைசி மூன்று கோட்பாடுகள் நவீன



11th Std Political Science Tamil Medium Vol-2_Chapter 8_25-09-2018.indd 19 29-09-2018 12:40:00

கோட்பாடுகளாகவும் கருதப்படுகின்றன.

### அ) ஆதிகால தேசியவாத கோட்பாடு

ஆதிகாலத்தில் இருந்து ஓர் இடத்தில் வாழ்ந்து வரும் மக்கள் தங்களுக்குள்ளே உருவாக்கிக் கொள்ளும் பாச உணர்வே தேசியவாதம் ஆகும். மொழி, மதம், பகுதி, இனம் போன்ற காரணிகளின் அடிப்படையில் ஆதிகாலம் முதல் இணைந்து வசிப்பதால் தேசிய உணர்வு இங்கு வளர்கிறது. அவர்கள் இன உணர்வையும், விசுவாசத்தையும் பெற்று இருக்கிறார்கள். தங்களது சமூக நடவடிக்கைகளில் தினந்தோறும் தனிப்பட்ட முறையில் போட்டிகள் இருந்தாலும், பொது வாழ்வில் இன உணர்வுகள் அடிப்படையில் செயல்படுகின்றனர். இன தேசியவாதம் என்ற கொள்கையை இக்கோட்பாடு ஆதரிக்கின்றது.

### ஆ) சமூக உயிரியல் தேசியவாத கோட்பாடு


ஒரு தாய் வழியில் வந்தவர்கள் இடையே காணப்படும் பாச உணர்வே தேசியவாதம் என்று இக்கோட்பாடு குறிப்பிடுகின்றது. மக்கள் அனைவரும் ஒரு வம்சத்தை சேர்ந்தவர்கள். தேசமே ஒரு விரிவான குடும்பம் ஆகும். தேசியவாதம் என்பது பகுத்தறிவையும் பெற்று இருக்கின்றது. உணர்வுப் பூர்வமாகவும் உள்ளது. இது "பழங்கால மனதையும் நவீன தொழில் நுட்பத்தையும்" கொண்டுள்ளது. தங்கள் சமூகத்தின் வேர்களைக் கண்டறிய வரலாற்றில் தேசியவாதம் பயணிக்கின்றது. ஆனால் அருகில் வசிக்கும் இனக் குழுக்களிடம் பழகும் பொழுது தற்காலத்தில் செயல்படுகின்றது. தம் மக்களிடையே இனப் பாசத்தை காட்டுகின்றது. இதர மக்களிடையே இன வெறுப்பை தேசியவாதம் விதைக்கின்றது.

### இ) பின் கொள்கை தேசியவாத கோட்பாடு

இக்கோட்பாட்டை பல்வேறு அறிஞர்கள் ஆதரித்து உள்ளனர். அந்தோணி கிடன்ஸ், மைக்கல் மான், பால் பிராஸ் ஆகியோர் முக்கிய ஆதரவாளர்கள் ஆவர். அரசு தான் தேசியவாதத்தை கொண்டு வந்தது என்று இக்கோட்பாட்டாளர்கள் கூறுகின்றனர். தேசங்களும், தேசிய உணர்வுகளும் இடைக்கால வரலாற்றில் இருந்த போதிலும், நவீன அரசு வந்த பிறகுதான் தேசியவாதம் முழுமையாக வளர்ந்தது என்று இவர்கள் கூறுகிறார்கள். அந்தோணி கிடன்ஸ் பிரெஞ்சு புரட்சியால்தான் ஐரோப்பிய நாடுகளில் தேசியவாதம் உருவானது என கூறுகிறார்..

மைக்கல் மான் சமூக சக்திக்கு நான்கு ஆதாரங்கள் உள்ளன என கூறினார். அவைகள் 1) கொள்கை சக்தி, (2) பொருளாதார சக்தி, (3) இராணுவ சக்தி, (4) அரசியல் சக்தி. இந்த நான்கு சக்திகளும் வரலாற்றில் ஒன்று சேர்ந்து தேசியவாதத்தை உருவாக்கின என்று கூறினார். கொள்கை சக்தி காரணி 16-ஆவது நூற்றாண்டில் இங்கிலாந்தில் தேசியவாதத்தை உருவாக்கியது. பொருளாதார சக்தி பின்னர் மேற்கு ஐரோப்பா முழுவதும் தேசங்களையும் தேசியவாதத்தையும் உருவாக்கியது. பின்னர், இராணுவ சக்தியும், அரசியல் சக்தியும் தேசியவாதத்தையும் வளர்ச்சிப் பெற வைத்தன.

**சமூக சக்தி மற்றும் தேசியத்தின் ஆதாரங்கள்**




பின் கொள்கை தேசியக் கோட்பாட்டார்களிடையே பல வேறுபாடுகள் உள்ளன. ஆனால் எல்லோரும் நவீன அரசும்,



11th Std Political Science Tamil Medium Vol-2_Chapter 8_25-09-2018.indd 20 29-09-2018 12:40:00

வர்த்தக முதலாளித்துவமும் தேசியவாதத்தை வளர்த்தன என்று கூறுவதில் ஒற்றுமையுடன் உள்ளனர்.

### ஈ) சமூகத் தொடர்பு தேசியவாத கோட்பாடு

காரல் டியூட்ச், பெனிடிக்ட் ஆண்டர்சன் தகவல் தொடர்பு தேசியவாத கோட்பாட்டை பிரபலப்படுத்தினார்கள். டியூட்ச் தேசத்தை இவ்வாறு விளக்கினார். "மற்றவர்களை விட தங்களுடைய குழு உறுப்பினர்களுடன் திறமையாகவும், உணர்வுப் பூர்வமாகும் தகவலை பகிர்ந்துகொள்ளும் மக்கள் குழுவே தேசம்". அவர் பொருளாதாரம், வரலாறு, மக்கள் தொகையியல் ஆகிய பாடங்களைப் படித்து ஒரு முடிவிற்கு வருகிறார். தேசம் மற்றும் தேசியவாதம் தோற்றத்தில் தகவல் தொடர்புதான் பெற்றோராக பங்காற்றியுள்ளது. மக்களிடையே உள்நாட்டு தகவல் தொடர்பு தார்மீக மற்றும் அரசியல் அடையாளத்தை உருவாக்கி தேசியவாதத்தை வளர்த்தது.

தேசியமும் சமுக தகவல் தொடர்பும்



பெனிடிக்ட் ஆண்டர்சன் தேசத்தை கற்பனை சமுதாயம் என்றும், தேசியவாதத்தை கற்பனை சமுதாயத்தின் உயிர் சக்தி என்றும் கூறினார். அவர் 'கற்பனை சமூகங்கள்' (Imagined Communities) என்ற நூலை எழுதினார். தேசம் என்பது மனிதனின் எண்ணத்தில், கற்பனையில் இருக்கின்றது. ஒரு தேசத்தின் உறுப்பினர்கள், எல்லா உறுப்பினர்களுடன் பேசுவதில்லை, பார்ப்பதில்லை. இருந்தபோதிலும் எல்லோரையும் தம்முடைய மக்களாக பார்க்கிறார்கள். கிரிக்கெட் விளையாடும் போது மைதானத்திலும், தொலைக்காட்சி முன்பும் அமர்ந்திருக்கும் கோடிகணக்கான மக்கள் தங்கள் தேசிய அணி வெற்றி பெற்றால் ஆனந்தம் கொள்கிறார்கள். தங்கள் தேசிய அணி தோல்வியுற்றால் தாங்களே தோற்றதாக வருத்தப்படுகிறார்கள். பல நாடுகளில், மறைந்த பெயர் தெரியாத ராணுவ வீரரின் கல்லறை உள்ளது. இங்கு புதைக்கப்பட்ட வீரரின் பெயர் தெரியாவிட்டாலும் அந்த கல்லறை மீது மக்கள் மரியாதை செலுத்துகிறார்கள்.

### கிரிக்கெட் விளையாட்டு பார்வையாளர்கள்





"மிகச்சிறிய நாட்டில் கூட ஒருவரையொருவர் மக்கள் தெரிந்திருப்பதில்லை, சந்திப்பதில்லை, கேள்விப்படுவதில்லை. இருந்தபொழுதிலும் ஒவ்வொருவருடைய எண்ணத்திலும் சமூகத்தின் நினைவுகள் இருக்கின்றன. சமூகங்களை உண்மை – பொய் என்று வேறுபடுத்த வேண்டியதில்லை. எவ்வாறு மக்கள் எண்ணத்தில், மனதில் நினைக்கப்பட்டு இருக்கின்றன என்பதுதான் முக்கியம்."



**பெனடிக்ட் ஆண்டர்சன்**

ஆண்டர்சன் முதலாளித்துவமும், அச்சகமும் தேசியவாதம் தோன்றுவதற்கு முக்கிய பங்கை ஆற்றின என்று கூறினார். அச்சகம் கண்டுபிடிக்க பட்டவுடன் பல ஆயிரக்கணக்கான நூல்கள் ஆங்கிலம், பிரெஞ்சு, ஜெர்மன் மொழிகளில் அச்சு அடிக்கப்பட்டு விற்கப்பட்டன. இப்புத்தகங்களை மக்கள் திரும்ப திரும்ப படிப்பதால் ஒரே மாதிரியான எண்ணங்கள் மக்கள் மனதில் விதைக்கப்பட்டன. நாம்




எல்லாம் ஒரே சமூகம் என்ற உணர்வு பிறந்தது. முதலாளித்துவமும் கற்பனை சமூகத்தை ஊக்கப்படுத்தியது. முதலாளிகள் இலாபத்தை மனதில் வைத்து, நூல்களை அச்சிட்டு அதிகம் விற்பனை செய்தார்கள். ஆகவே அச்சக முதலாளித்துவம் (அச்சகமும் முதலாளித்துவமும்) இணைந்து கற்பனை சமூகத்தை உருவாக்கி தேசியவாதத்தை வளர்த்தன.

### உ) மார்க்சிய தேசியவாத கோட்பாடு

மார்க்சியம் தேசியவாதத்தை முதலாளித்துவத்தின் குழந்தையாக கருதுகின்றது. ஏழைகளை சுரண்டுவதற்காக பணக்காரர்கள் தேசியவாதத்தை உருவாக்கியுள்ளார்கள் என்று இக்கோட்பாடு கூறுகின்றது. முதாலளித்துவ வர்க்கம் தனியார் சொத்துக்களைக் கொண்டுள்ளதோடு ஏழைகளின் உழைப்பை சுரண்டுகிறது. முதலாளித்துவ வர்க்கம் தேசியவாதத்தை தொழிலாளி வர்க்கத்தின் உணர்சிகளை ஊக்கப்படுத்தி தனது சொந்த நலனுக்காக பயன்படுத்தியது. "தேசியவாத உணர்வு சுரண்டலை சட்டபூர்வமாக ஆக்குவதற்கும் நீடிக்க வைப்பதற்கும் பணக்காரர்களால் உருவாக்கப்பட்ட உணர்வாகும்". காரல் மார்க்ஸ் "பாட்டாளிகளுக்கு தந்தைநாடு இல்லை" என்று கூறினார். ஆகவே தான் கம்யூனிஸ்ட் மெனிபெஸ்டோ என்ற தனது நூலில் 'உலக தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள், புரட்சி செய்து புதியதோர் உலகத்தை உருவாக்குங்கள்' என்று கூறினார். காரல் மார்க்ஸ் தேசியவாதத்தை நிராகரித்தார்.




சர்வதேசிவாதத்தை ஆதரித்தார்.

மைக்கல் எக்டர், டாம் நரின் ஆகியோரும் தேசியவாதத்தை மார்க்சிய வழியில் ஆய்வு செய்தனர்.

### இந்திய தேசியவாதம்

இந்திய தேசியவாதம் 19–ஆம் நூற்றாண்டில் இரண்டாம் பகுதியில் தோன்றியது. மதம், மொழி, பகுதி, இன வேறுபாடுகளை கடந்து இந்தியர்கள் தேசிய உணர்வைப் பெற்றனர். இரண்டு வகையான காரணிகள் இந்திய தேசியவாதத்தை வளர்த்தன. அவைகள் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் காரணிகள் ஆகும்.

உள்நாட்டுக்காரணிகளை பொருத்தமட்டில் பல நூற்றாண்டுகளாக நாம் இந்தியர் என்ற உணர்வு மக்கள் மனதில் மலர்ந்து வந்துள்ளது. அரசியல் பிளவுகளைத் தாண்டி கலாச்சார ரீதியாக மக்கள் அனைவரும் ஒற்றுமையுடன் வாழ்ந்துள்ளனர். பண்டைகாலம் முதலே 'வேற்றுமையில் ஒற்றுமை' என்ற கருத்து இந்திய பாரம்பரியத்தில் தழைத்து வந்துள்ளது. நவீன இந்திய தேசியவாதம் விதைகள் பல நூற்றாண்டு கால கலாச்சார பூமியில் வளர்ந்து வந்துள்ளது.

வெளிக்காரணிகளைப் பொருத்தமட்டில் ஆங்கிலேய காலனி ஆதிக்கம் தேசியவாதத்தைத்


11th Std Political Science Tamil Medium Vol-2_Chapter 8_25-09-2018.indd 22 29-09-2018 12:40:00

*தட்டி எழுப்பியது. முக்கிய காரணிகள் கீழ்க்கண்டவைகளாகும்.*

1. காலனி ஆதிக்கம், அரசியல், நிர்வாக, பொருளாதார, தகவல் தொடர்பு ஒருங்கிணைப்பை இந்தியாவில் உருவாக்கியது. அரசியலிலும், நிர்வாகத்திலும் ஏழுநூறுக்கும் மேற்பட்ட இந்திய அரசுகளை காலனியாதிக்கம் ஒருங்கிணைத்தது. முன்னர், இந்தியா கிராமப் பொருளாதாரத்தைப் பின்பற்றியது. ஆங்கிலேயர் ஆட்சி நவீன பொருளாதாரத்தைக் கொண்டு வந்து பொருளாதார ரீதியாக இந்தியாவை ஒருங்கிணைத்தது. இரயில்கள், தந்தி, சீரான அஞ்சல் முறை ஆகியவைகளை அறிமுகப்படுத்தி தகவல் தொடர்புத் துறையில் இந்தியாவை ஒருங்கிணைத்தது. ஆகவே தேசியவாதம் வளர்வதற்கான சூழல் தோன்றியது.

2. காலனியாதிக்கம் மேற்கத்திய கல்வியை இந்தியாவில் அறிமுகப்படுத்தியது. நாம் நவீன அரசியல் கருத்துக்களான விடுதலை, சமத்துவம், இறையாண்மை போன்ற கருத்துக்களை அறிந்து கொண்டோம். இந்திய தாய்திருநாடு இக்கருத்துக்களை பெறவேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது.

3. ஆங்கில மொழி இந்தியாவின் தொடர்பு மொழியாக காலனி ஆதிக்கத்தால் பயன்படுத்தப்பட்டது. ஆயிரக்கணக்கான மொழிகளை நாம் பேசுவதால் தொடர்பு கொள்வதில் சிரமம் இருந்தது. ஆங்கிலப் பயன்பாட்டால் தேசியவாதிகள் இந்தியா முழுவதையும் ஒருங்கிணைத்து தேசியவாதத்தை வளர்த்தனர்.

4. 19ஆம் நூற்றாண்டில் இந்தியாவில் பல்வேறு சமய சமூக சீர்திருத்த இயக்கங்கள் தோன்றின. இராஜா ராம் மோகன்ராயின் 'பிரம்ம சமாஜமும்' மகாராஷ்ட்ராவின் "பிரார்த்தனசமாஜமும்" முக்கியமானவைகள் ஆகும். இந்தியாவில் மறுமலர்ச்சி மற்றும் மாற்றங்களை இவைகள் கொண்டுவந்தன. இந்திய சமூகத்தின் தீமைகளான சதி, சாதி முறை மற்றும் தீண்டாமையை இவை எதிர்த்தன. பழங்கால இந்தியாவின் நல்ல தன்மைகளை மீண்டும் தழைக்க இவை வழிவகுத்தன.

5. ஆங்கிலேய ஆட்சியாளர்களின் இனவெறியும் இந்திய தேசியவாதத்தை வளர்த்தது. ஆங்கிலேயர்களின் வெள்ளை மனிதனின் கடமை / சுமை என்ற கருத்து நிறவெறியைக் காட்டியது. வெள்ளையர்கள்தான் இந்த உலகில் வளர்ச்சியிலும் நாகரிகத்திலும் முன்னணியில் உள்ளவர்கள். இந்தியர்களுக்கு நாகரிகத்தை வழங்கவே வெள்ளையர்கள் ஆட்சி நடைபெறுகிறது என்று வெள்ளை மனிதனின் கடமை அல்லது சுமைக் கருத்துக் கூறியது. இதன் மூலம் வெள்ளையர்களின் நிறவெறி இந்தியர்களுக்குப் புரிந்தது. இதை எதிர்த்து இந்திய தேசியவாதம் வளர்ந்தது.

6. ஆங்கிலேய கவர்னர் ஜெனரலான லிட்டன் பிரபுவின் தலைக்கன ஆட்சியும் இந்திய தேசியவாதத்தை வளர்த்தது. இவர், இந்திய பத்திரிக்கைகள் மீது தேவையற்ற தடைகளை விதித்தார். இங்கிலாந்தில் இருந்து இந்தியாவிற்குப் பொருட்களை இறக்குமதி செய்வதற்கு ஆர்வம் காட்டினார். இந்தியப் பொருட்களை ஏற்றுமதி செய்வதற்கு முட்டுகட்டைப் போட்டார். இலட்சக்கணக்கான மக்கள் பஞ்சத்தால் வாடியபோதிலும் நிவாரண முயற்சிகளை அவர் மேற்கொள்ளவில்லை. ஆப்கானிஸ்தானுடன் தேவையில்லாமல் போர் தொடுத்ததால், பல ஆயிரக்கணக்கான இந்திய ராணுவ வீரர்கள் மாண்டு போயினர். இக்காரணிகளால் இந்திய தேசியவாதம் வளர்ந்தது.

7. ரிப்பன் பிரபு ஒரு தலை சிறந்த ஆங்கிலேய கவர்னர் ஜெனரல் ஆவார். அவரது ஆட்சியில் இல்பர்ட் என்ற ஆட்சிக் குழுவின் சட்ட உறுப்பினர் ஒரு மசோதாவை அறிமுகப்படுத்தினர். ஐரோப்பியர்கள் சம்பந்தப்பட்ட வழக்குகளை இந்திய நீதிபதிகள் விசாரிக்கலாம் என்று இம் மசோதா கூறியது. இனவெறி பிடித்த

ஐரோப்பியர்கள் இந்திய நீதிபதிகளுக்கு இந்த அதிகாரம் வழங்கப்படக்கூடாது என்று அழுத்தம் கொடுத்தனர். இவர்களின் எதிர்ப்பால் ரிப்பன் பிரபுவும் இந்த மசோதாவை கைவிட்டார். இந்தியத் தலைவர்கள் இப்பிரச்சனையின் மூலம் ஐரோப்பிய இனவெறியை உணர்ந்தனர். மேலும் மக்கள் விரும்பாத அரசாங்கத் திட்டங்களை எதிர்ப்பதன் மூலமும், போராட்டங்கள் மூலமும் திரும்ப பெற வைக்கலாம் என்ற அரசியல் வித்தையை இந்திய தலைவர்கள் உணர்ந்து கொண்டனர்.

மேற்கண்ட காரணிகளால் 19–ஆம் நூற்றாண்டில் இந்திய தேசியவாதம் வளர்ந்தது.

### தேசியத்திற்கு எதிரான சவால்கள்

சமகாலத்தில் தேசியவாதம் பல்வேறு சவால்களை சந்திகின்றது. சில சவால்கள் தேசத்திற்கு உள்ளேயும், சில சவால்கள் தேசத்திற்கு வெளியேயும் தோன்றுகின்றன, செயல்படுகின்றன. இவைகளில் பிரிவினை வாதமும், உலகமயமாதலும் முக்கியமானவைகளாகும்.




'போக்கிரிகளின் கடைசி புகலிடமே தேசியவாதம்.'

**– வின்ஸ்டன் சர்ச்சில்**

**செயல்பாடு**

வேற்றுமையில் ஒற்றுமைதான் இந்திய தேசியத்தின் அடித்தளம். ஏன் என்பதை விவாதிக்கவும்?






11th Std Political Science Tamil Medium Vol-2_Chapter 8_25-09-2018.indd 24 29-09-2018 12:40:01

### உள்நாட்டுக் காரணிகள்

### பிரிவினைவாதம்

தேசியவாதம் மிக முக்கிய எதிரி பிரிவினைவாதம் ஆகும். உள்தேசிய வாதம் என்றும் இது அழைக்கப்படுகிறது. கனடா நாட்டில் குயூபக் போராட்டம், பாகிஸ்தானில் பலுசிஸ்தான் இயக்கம், சீனாவில் உய்கர் இயக்கம், ஸ்பெயினின் கடலன் இயக்கம் ஆகிய முக்கிய பிரிவின வாத இயக்கங்கள் உலகில் காணப்படுகின்றன.

நிகழ் ஆய்வு

**உய்கர் பிரிவினைவாதம்**

*சின்ஜியாங் சீனாவின் வடமேற்கு எல்லைப்புற மாகாணம் ஆகும். சீன மொழியில் சின்ஜியாங் என்றால் புது எல்லை என்பது பொருளாகும். இங்கு வசிக்கும் பூர்வகுடி மக்கள் உய்கர் முஸ்லிம்கள் ஆவர். சீன அரசாங்கம் தங்களுக்கு எதிரான அரசியல் பொருளாதார பாகுபாட்டைக் பின்பற்றுவதாக இம்மக்கள் குற்றம் சாட்டுகின்றனர். சீன பெரும்பான்மை மக்களான ஹன்ஸ் இன மக்கள் உய்கர் மாநிலத்தில் குடியேறிவருகின்றனர். பூர்வகுடிகளின் அளவு குறைந்து வருகின்றது. இம்மாநிலத்தில் மொத்த மக்கள் தொகையில் 6 சதவீதமாக இருந்த ஹன்ஸ் மக்கள் தற்பொழுது 40 சதவீதமாக அதிகரித்துவிட்டனர். மேலும் மத ரீதியாகவும் சீன அரசாங்கம் தங்களுக்கு எதிராக செயல்படுகிறது என்று பூர்வகுடி மக்கள் கூறுகின்றனர். தாடி வளர்க்கக்கூடாது, வாகனங்களில் பயணம் செய்யும் பெண்கள் பர்தா அணியக்கூடாது என்று அரசாங்கம் மதத்திற்கு எதிரான நடவடிக்கைகளை திணிப்பதாக மக்கள் கூறுகின்றனர். இந்த பிரிவினைவாதத்திற்கு எதிராக சீன அரசாங்கம் கடுமையான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது.*

### வெளிநாட்டுக் காரணிகள்

பல வெளிநாட்டுக் காரணிகளும் தேசியத்திற்கு எதிராக உள்ளன. உலகமயமாகுதல் ஒரு முக்கிய காரணியாகும். பொருளாதாரம், வர்த்தகம், தொழில் நுட்பம், கலாச்சாரம் மற்றும் அமைப்புகள் ஆகியவற்றில்

**செயல்பாடு**

***பிரிவினைவாத இயக்கங்கள்***

*மாணவர்களே தற்பொழுது பிரிவினை வாத இயக்கங்களைப்பற்றி தெரிந்திருப்பீர்கள். உலகில் பல்வேறு பகுதிகளில் இயங்கக் கூடிய பிரிவினைவாத இயக்கங்களைப் பட்டியலிடுங்கள். ஒரு உலக வரைபடத்தை எடுத்து பல்வேறு நிறங்களில் அவைகளை குறிக்கவும்.*

அதிகரித்து வரும் ஒருங்கிணைப்புகளுக்கு உலகமயமாகுதல் என்பது பொருளாகும். உலகமயமாகுதல் நாடுகளுக்கு இடையிலான தடைகளை உடைத்து வருகின்றது. பொருளாதார ரீதியாக, பெரிய தொழில் நிறுவனங்கள் நாடுகளை கடந்து செயல்படுகின்றன, செல்வாக்கைப் பெற்றுள்ளன.

### உலகமயமாதல்




உலக வர்த்தக நிறுவனம் உலகமயமாதலை வளர்க்கிறது. 'தடைகள் இல்லா வர்த்தகம்' என்பது இதன் இலட்சியமாகும். இது பல்வேறு ஒப்பந்தங்களை 1995 முதல் உருவாக்கி சர்வதேச வர்த்தகத்தில் இருந்த தடைகளை நீக்கியுள்ளது. வர்த்தகத் தடைகள்தான் முன்பு தேசியவாதம் வேர்களாக இருந்தன.

உலகம் முழுவதும் படித்த திறமையான மக்கள் நாடு விட்டு நாடு குடிபெயர்ந்துள்ளனர்.



11th Std Political Science Tamil Medium Vol-2_Chapter 8_25-09-2018.indd 25 29-09-2018 12:40:01

முக்கியமாக ஆசிய, ஆப்பிரிக்கா நாடுகளில் இருந்து மேற்கத்திய நாடுகளுக்கு குடிபெயர்ந்துள்ளனர். இந்தியா மற்றும் சீனாவில் இருந்து அமெரிக்காவிற்கு பல்லாயிரக்கணக்கான படித்த இளைஞர்கள் குடிபெயர்ந்துள்ளனர்.

சர்வதேச மண்டல அமைப்புகளும் தேசியவாதத்தை பாதித்துள்ளன. ஐரோப்பிய யூனியன் 27 ஐரோப்பிய நாடுகளை ஒன்றிணைத்துள்ளது. இந்த நாடுகளின் தேசியவாதம் வலுவிழந்துள்ளது. ஐரோப்பிய கண்டம் தேசியவாதம் தொட்டில் என்ற நிலையில் இருந்து உலகளாவியத்தின் ஒளிவிளக்கு என்று மாறியுள்ளது.

ஐக்கிய நாடுகளின் வளர்ச்சியும் தேசியவாதம் பிடிப்பைத் தளர்த்தியுள்ளது. தேசியவாதம் மறைந்து உலக அரசாங்கம் தோன்றுவதற்கு தற்பொழுது வாய்ப்புகள் பெருகியுள்ளது.

தீவிரவாதக் கொள்கைகள் தேசியவாதத்தை பலவீனப்படுத்தியுள்ளன. எடுத்துக்காட்டாக, தூய இஸ்லாம் என்ற முழக்கத்துடன் இஸ்லாமிய அரசு சிரியா, ஈராக் ஆகிய நாடுகளில் கலீஃபா முறையை 2014-இல் கொண்டு வந்தது. தேசியவாதத்தை அது நிராகரித்தது. இஸ்லாமிய மக்கள் அனைவரும் கலீஃபா ஆட்சிமுறையில் இருக்க வேண்டும் என்று கூறியது.

சுற்றுசூழல் சீர்கேடுகள் தேசியவாதத்தை பாதிக்கின்றன. பருவநிலை மாற்றம், அமில மழை, ஓசோன் அழிதல் போன்ற சீர்கேடுகள் நாடுகளை கடந்து பாதிப்புகளை உருவாக்குகின்றன. உலக சுற்றுச்சூழலைப் பாதுகாப்பது உலக மக்களின் கடமையாகும். எனவேதான் பல உலக மாநாடுகள் நடத்தப்பட்டன.

தகவல் தொடர்பும், தொழில்நுட்பமும் தேசியவாதத்தைப் பாதித்துள்ளன. வளைதளம், அலைபேசி, சமூக ஊடகங்கள் பல சமயங்களில் தேசியவாதத்தைப் பாதிக்கின்றன, உலகமயமாதலை ஊக்குவிக்கின்றன.

இருந்தபோதிலும் 21-ஆம் நூற்றாண்டிலும் தேசியவாதம் வலுவாக உள்ளது. தேசியவாதம் மறையும் காலம் கண்ணுக்கு எட்டிய தூரம் வரையில் இல்லை. சர்வதேச நடவடிக்கைகளை இன்றைக்கும் தேசியமும்,தேசநலன்களும்தீர்மானிக்கின்றன. ஐரோப்பிய யூனியனிலிருந்து இங்கிலாந்து வெளியேறிவதும், பாரிஸ் பருவநிலை (United Nations Framework Conference on Climate Change) ஒப்பந்தத்திலிருந்து அமெரிக்கா வெளியேறியதும் இதற்கு சான்றுகளாகும்.





**விவாதம்**

ஐரோப்பிய யூனியனிலிருந்து இங்கிலாந்து வெளியேறுவதற்கான (BREXIT) நிகழ்வைப்பற்றி விவாதிக்கவும்

## 8.5 பாசிசம்

பெனிடோ முசோலினி பாசிசம் என்ற சர்வாதிகார கட்சி, இயக்கம் மற்றும் கொள்கையைத் தோற்றுவித்தார். பாசிசம் மூலம் இத்தாலியை 20 ஆண்டுகளுக்கு மேல் அவர் ஆட்சி செய்தார். இத்தாலி மொழியில் "பாசி" என்றால் தண்டுகளின் மூட்டை என்பது பொருளாகும். அந்நாட்டின் பண்டையகால வரலாற்றில் ரோமானிய ஆட்சியாளர்களின் சின்னமாக "பாசி" இருந்தது. "தண்டுகளின் மூட்டை" ஒற்றுமை மற்றும் வலிமையைக் குறிக்கிறது. முசோலினி தனது தொண்டர்களின் உணர்வுகளை தட்டி எழுப்புவதற்காக தனது கட்சிக்கு இந்த பெயரை வைத்தார்.


உலகப் போருக்கு பின் இத்தாலியில் நிலவியசமூகபொருளாதாரபிரச்சனைகள்தான் பாசிசம் தோன்றுவதற்கு முக்கிய காரணங்களாக இருந்தன. முதல் உலகபோரின் முடிவில் வெற்றி பெற்ற கூட்டணியில் இத்தாலி இருந்த போதிலும் எந்த வித பலனும் அதற்கு கிட்டவில்லை, ஏமாற்றமே எஞ்சியது. வேலை இல்லாமை, விலை உயர்வு, அரசியல் குழப்பங்கள் மற்றும் பொருளாதாரப் பின்னடைவு ஆகிய பிரச்சனைகளில் இத்தாலி சிக்கி இருந்தது.

இத்தாலியின் எல்லா வகை பிரிவினரும் போரினால் பாதிக்கப்பட்டிருந்தனர். பெனிடோ முசோலினி தனது பேச்சாற்றலால் பாதிக்கப்பட்ட மக்களை பாசிசக் கட்சிக்கு இழுத்தார். அவர் 1922-ஆம் ஆண்டு தலை நகரில் "ரோம் அணிவகுப்பு" என்பதை நடத்தினார். முசோலினியின் செல்வாக்கை கண்டு அஞ்சிய ஆட்சியாளர்கள் தேசிய பாசிச கட்சியிடம் ஆட்சியை ஒப்படைத்தனர்.

**உங்களுக்குத் தெரியுமா?**

ஆர்.எம்.மேக்கைவர் பாசிசத்தை கீழ், நடு வர்க்கங்களின் இயக்கம் என்று வர்ணித்தார்.

**தேசிய பாசிச கட்சி**




### அடிப்படை கொள்கைத் தன்மைகள்

பாசிசம் தீவிர தேசியவாதத்தை வலியுறுத்தியது. இத்தாலி தான் உலகில் தலை சிறந்த நாடு என கூறியது. இதர நாடுகள் மற்றும் மக்களிடம் பாசிசம் வெறுப்பைக் காட்டியது. கொள்கையிலும் நடவடிக்கையிலும் பாசிசம் ஏகாதிபத்தியத்தை பின்பற்றியது. அது மேற்கொண்ட காலனியாதிக்க நடவடிக்கைகள் ஆப்பிரிக்காவை பாதித்தன. இரண்டாம் உலகப் போருக்கு வழிவகுத்தன. ஜேவானி ஜேன்டிலா என்ற பாசிச கொள்கைவாதி "பாசிச கொள்கை"(Doctrine of Fascism) என்ற நூலை எழுதினார். பாசிச அரசு என்றால் அதிகாரத்தையும் பேரரசையும் விரும்பும் கொள்கை என்று கூறினார். பேரரசு என்றால் நிலம், இராணுவம் அல்லது வர்த்தகம் சம்பந்தப்பட்டது அல்ல. அது தார்மீகம் சம்மந்தப்பட்டது. பாசிச பேரரசு உலக நாடுகளை வெல்ல வேண்டும். பாசிச அரசு இத்தாலியின் வரலாற்றில் மூன்றாவது ரோமப் பேரரசு ஆகும். பண்டையகால ரோமானியப் பேரரசு, மறுமலர்ச்சி ரோமானிய ஆதிக்கம் ஆகியவைகளுக்கு அடுத்தபடியாக பாசிசம் உள்ளது.



11th Std Political Science Tamil Medium Vol-2_Chapter 8_25-09-2018.indd 27 29-09-2018 12:40:01

பாசிசம் போரையும், போர் குணத்தையும் தீவிரமாக பாராட்டியது. "பெண்ணுக்குத் தாய்மை முக்கியம் ஆணுக்குப் போர் முக்கியம்" என்று முசோலினி கூறினார். பாசிசம் அமைதியை கோழைத்தனம் என்று வர்ணித்தது. பெண்களை 'தேசத்தின் இனப்பெருக்காளர்கள்' என்று பாராட்டியது.

பாசிசம் குறைவான அதிகார அரசை நிராகரித்தது. ஆர்வத்துடன் சர்வதிகாரத்தையும் கொடுங்கோல் ஆட்சியையும் ஆதரித்தது. "அரசுக்கு உள்ளே எல்லாம், அரசுக்கு வெளியே எதுவுமில்லை, அரசுக்கு எதிராக எதுவும் இல்லை" என்பது முசோலினியின் முழக்கமாகும். புதிய சமூகத்தை படைப்பதற்கு அரசுக்கு அதிகாரம் வழங்கப்பட்டது. குடிமக்களின் சிந்தனை மற்றும் நடவடிக்கைகளை அரசு நிர்ணயித்தது. இத்தாலியை உலக வல்லரசாக மாற்றுவதற்கும் மக்களை தைரியமானவர்களாக ஆக்குவதற்கும் பாசிசம் முயன்றது.

பொதுவுடைமைவாதத்தை ஜென்ம விரோதியாக பாசிசம் ஒடுக்கியது. இத்தாலியின் பொதுவுடைமைவாதத்தின் சிந்தனையாளரான அண்டனியோ கிராம்சி பாசிசத்தால் சிறையில் அடைக்கப்பட்டார். பாசிசம் பொதுவுடைமைவாதத்தின் கட்சி, நூல்கள் ஆகியவற்றைத் தடை செய்தது. பொதுவுடைமைவாத அரசு, சமூக வர்க்கம், புரட்சி போன்ற கருத்துக்களை பாசிசம் நிராகரித்தது. சமூகம் வர்க்கங்களால் பொதுவுடைமைவாதம் கூறியது போல் பிளவுபடவில்லை. சமூகம் ஒற்றுமையாகத்தான் உள்ளது என பாசிசம் கூறியது.

**உங்களுக்குத் தெரியுமா?**

பாசிச கொள்கை, மக்களாட்சி, சமதர்மவாதம் மற்றும் பொதுவுடைமைவாதத்திற்கு எதிராக தோன்றியது. மக்களாட்சியும், சமதர்மவாதமும் நவீன காலத்தின் முற்போக்கு சிந்தனையை பிரதிபலித்தன. பாசிசம் இதற்கு எதிராக செயல்பட்டது.

> பாசிசம் தொழில்சார் அரசு கொள்கை என்று அழைக்கப்பட வேண்டும். தொழில் நிறுவனங்களும் அரசின் அதிகாரமும் பாசிசத்தில் இணைந்துள்ளன.
>
> -பெனிடோ முசோலினி

பாசிசம் தொழில்சார் அரசு கோட்பாட்டை ஆதரித்தது. ஒவ்வொரு தொழிலும், வர்த்தகமும், வேலையும் தொழில் சார்ந்த அமைப்பை பெற்றிக்க வேண்டும். அந்த தொழிலில் ஈடுபட்டுள்ள முதாலாளிகளுக்கும், தொழிலாளர்களுக்கும் இடையில் உள்ள பிரச்சனைகளை அந்தந்த தொழில் அமைப்புகள் தீர்க்க வேண்டும். தேசத்தின் நலன்களுக்கும், நோக்கங்களுக்கும் எல்லோரும் முன்னுரிமை கொடுக்க வேண்டும். தொழிலாளர்கள் வேலை புறக்கணிப்பில் ஈடுபடக்கூடாது. பாசிச அரசு தொழிலாளர்களுக்கான ஊதியத்தை மிகவும் குறைவாக நிர்ணயித்தது. தொழில்சார் நிறுவனங்கள் ஊழல் மற்றும் திறமையின்மையால் பாதிக்கப்பட்டன. பாசிச பொருளாதாரத்தின் முதுகெலும்பான தொழில்சார் அரசு தொழிலாளர்களின் உரிமைகளை மிதித்தது.

### விமர்சனம்

பாசிசம் மனித வரலாற்றில் வந்த மிக மோசமான சர்வாதிகாரம் ஆகும். அது சந்தர்ப்பவாதத்தை பின்பற்றியது. அறிவு ரீதியாக நேர்மை இல்லாமல் இருந்தது. பாசிசமும், நாசிசமும் மனித குலத்தின் மீது அளவற்ற அழிவை இரண்டாம் உலகப் போரில் திணித்தன. நாசிசத்தை விட பாசிசம் கொள்கை ரீதியாக வலுவாக இருந்ததால் 21–ஆம் நூற்றாண்டிலும் கொடுங்கோல் ஆட்சியாளர்களையும் அரசுகளையும் விமர்சிப்பதற்கு பாசிசம் என்ற சொல் பயன்படுத்தப்படுகிறது.

## 8.6 நாசிசம்

அடால்ஃப் ஹிட்லர் நாசிசம் என்ற சர்வாதிகார கொள்கையைத் தோற்றுவித்தார். ஜெர்மனி நாட்டை இரண்டு உலகப்

## செயல்பாடு

### உலகமயமாதலைப் புரிந்து கொள்ளுதல்

### உலகமயமாதல் என்றால் என்ன?

அரசியல் மூலமாக நடத்தப்பட்டாலும் உலகமயமாதல் அடிப்படையில் ஒரு பொருளாதார போக்கு ஆகும். இது பல ஆழமான கலாச்சார, சமூகத் தாக்கங்களை கொண்டுள்ளது. உலகமயமாதல் தகவல் தொழில்நுட்ப கண்டுபிடிப்புகளால் மிகவும் வேகமாக மாறி வருகிறது. உலகமயமாதலில் இரண்டு போக்குகள் காணப்படுகின்றன.

❖ கட்டமைப்பை சரிசெய்தல் ❖ வர்த்தகத் தாராளமயம்

### கட்டமைப்பை சரிசெய்தல்

அரசாங்ககள் புதிய தாராள கொள்கைகளை அமுல் படுத்தி சந்தைப் பொருளாதாரத்தை ஒழுங்கு படுத்துவதில் இருந்து தங்களை விடுவித்துக் கொண்டன. எடுத்துகாட்டாக உணவுப் பொருட்களின் விலைக்கட்டுபாடுகளையும், மானியங்களையும் அரசாங்கள் கைவிடத் தொடங்கின. சுகாதாரம், கல்வி, நீர்வளத் துறைகளை தனியாரிடம் ஒப்படைத்தன. முன்னேறி வரும் நாடுகளில் ஆரம்ப கல்வி மீது கட்டணங்கள் விதிக்கப்பட்டன. இதனால் பெண் கல்வி மிகவும் பாதிக்கப்பட்டது. கட்டமைப்பு சரி செய்தல் கொள்கை அமெரிக்காவிலும் இங்கிலாந்திலும் 1980 களில் இருந்து ஆர்வமுடன் அமுல்படுத்தப்பட்டு வருகிறது. உலக வங்கியும் சர்வதேச நாணய நிதியமும் வளர்ச்சி அடைந்து வரும் நாடுகள் மீது புதிய தாராளவாதக் கொள்கைகளை திணிக்கின்றன. முன்னேற்ற நிதி உதவி வேண்டுமென்றால் புதிய தாராளவாதப் பொருளாதாரத்தையும் அரசியலையும் வளர்ச்சி அடைந்து வரும் நாடுகள் கடைபிடிக்க வேண்டும் என்று உலக வங்கியும் சர்வதேச நாணய நிதியமும் வற்புறுத்துகின்றன.




### வர்த்தகத் தாராளமயம்

சர்வதேச வர்த்தகத்தில் இறக்குமதி வரிகள் நீக்கம், ஏற்றுமதி சார்ந்த உற்பத்திக்கு முக்கியதுவம் வழங்குதல் போன்ற நடவடிக்கைகளை நாடுகள் பின்பற்றுகின்றன. சில நிபுணர்கள் இறக்குமதி வரி நீக்கத்தால் வளர்ச்சி அடைந்து வரும் நாடுகள் பொருளாதார இழப்பை சந்திக்கின்றன என்று கூறுகிறார்கள். பொதுநலனுக்காக அரசாங்கம் செலவழிக்கும் நிதியும் வெகுவாக குறைந்துள்ளது. உலக வர்த்தக நிறுவனம்(World Trade Organization) 1995-ஆம் ஆண்டில் தோன்றிய பிறகு உலகமயமாதல் வேகம் எடுத்துள்ளது. உலக வர்த்தக நிறுவனம், அமெரிக்கா, இங்கிலாந்து, உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் ஆகியவைகளால் வர்த்தகத் தாராளமயமாதலை பின்பற்றுமாறு தெற்கு நாடுகள்(ஆசிய, ஆப்பிரிக்க நாடுகள்) நிர்பந்திக்கப்படுகின்றன.


**நன்றி: பெண்கள் உரிமைகள், ஜெரால்டின் டெர்ரி, ப்ளூட்டோ பிரஸ், ஆக்ஸ்ஃபாக்ஸ், பால்கிரேவ் மாக்மில்லன், பெர்ன்வுட் பதிப்பகம்.**

***Courtesy: Women's Rights, Geraldine Terry, Pluto Press, Oxfax, Palgrave Macmillan, Fernwood Publishing.***



11th Std Political Science Tamil Medium Vol-2_Chapter 8_25-09-2018.indd 29 29-09-2018 12:40:02

போர்களுக்கு இடையில் நாசிசம் மூலமாக ஹிட்லர் ஆட்சி செய்தார். நாசிக் கட்சியின் அதிகாரப் பூர்வ பெயர் 'தேசிய சமதர்ம ஜெர்மானிய தொழிலாளர்கள் கட்சி' என்பதாகும். 1920ஆம் ஆண்டு தீவிர 25 அம்சத் திட்டதின் மூலமாக நாசி கட்சியை ஹிட்லர் தோற்றுவித்தார். பெரிய தொழிற்சாலைகளை தேசியமயமாக்குதல், போர்க்கால இலாபங்களைப் பறித்தல், கந்துவட்டியிலிருந்து மக்களை விடுவித்தல் போன்ற திட்டங்களை நாசிசக்கட்சி ஆதரித்தது. தனது பேச்சாற்றல் மூலம் ஜெர்மனியின் அனைத்து வகுப்பினரையும் நாசிக் கொள்கைகளுக்கு ஹிட்லர் கவர்ந்திழுத்தார். 'ஒவ்வொரு வயிறுக்கும் உணவு, ஒவ்வொரு உடலுக்கும் ஆடை, ஒவ்வொரு கைக்கும் வேலை, எல்லோருக்கும் எல்லாம்' என்பது ஹிட்லரின் அணுகுமுறையாக இருந்தது. இரத்தம் சிந்தாமல் அரசியல் சாசன, நாடாளுமன்ற வழிமுறைகளைத் தந்திரமாகப் பயன்படுத்தி 1933–ஆம் ஆண்டு ஹிட்லர் பதவிக்கு வந்தார்.





### தோற்றத்தின் காரணம்

ஜெர்மனியில் நாசிசத்தின் தோற்றத்திற்கு முக்கிய காரணமாக முதலாம் உலகப் போருக்குப் பின் பாரிஸ் நகரத்தில் கையெழுத்திடப்பட்ட '1919 வெர்செயில்ஸ் ஒப்பந்தம்' இருந்தது. ஹிட்லர் ஜெர்மனிக்கு இழைக்கப்பட்ட அரசியல், பொருளாதார, இராணுவ அவமானங்களை உணர்ச்சிப் பூர்வமாகப் பேசி மக்களைக் கவர்ந்தார். அவர் எழுதிய புத்தகத்தின் பெயர் 'எனது போராட்டம்' (மெயின் கேம்ப்) ஆகும்.

### அடிப்படைத் தன்மைகள்

நாசிசம் கொடுங்கோல் ஆட்சியை ஆதரித்தது. ஜெர்மானிய சிந்தனையாளரான பிரெட்ரிக் ஹெகல் என்பவர் உருவாக்கிய முழுக்கமான 'அரசு பூமியில் கடவுளின் அணிவகுப்பு' என்பது நாசிசத்தின் ஆணிவேராக இருந்தது. அரசிற்கு மக்கள் முழுமையாக அடிபணிய வேண்டும் என்றும் நாசிசம் வலியுறுத்தியது.

நாசிசம் போர்க்குணமுள்ள கொள்கையாகும். ஹிட்லர், 'போர் நிரந்தரமானது, போர் உலகளாவியலானது, போர்தான் வாழ்க்கை, போர்தான் எல்லாவற்றின் தொடக்கம்' என்று சூளுரைத்தார். நாசிசத்தின் இந்த போர்க்குணம் இரண்டாம் உலகப் போருக்கு வழிவகுத்தது.

நாசிசத்தின் மிக முக்கியமான, பிரச்சனைக்குரிய நம்பிக்கை அதனுடைய இனவெறிக் கொள்கையாகும். அது ஆரிய இன மேன்மையையும் தூய்மையையும் வலியுறுத்தியது. ஆரிய இனத்தை உலகின் முதல் இனமாக, மனித குலத்தின் முதலாளியாக அது கருதியது. ஜெர்மனிக்கு அருகில் வசிக்கக்கூடிய ஸ்லாவ் மற்றும் யூத இனங்களை அது வெறுத்தது. ஆரிய இனத்தின் தூய்மையைக் காப்பாற்றுவதற்காக 1934–ஆம் ஆண்டு நுரம்பர்க் சட்டங்களை நாசிசம் தோற்றுவித்தது. ஆரிய மக்களுக்கும் இதர இன மக்களுக்கும் இடையிலான திருமணங்களை அது தடை செய்தது.

### சித்திரவதை முகாம்கள்



### யூதர்களின் பேரழிவு





11th Std Political Science Tamil Medium Vol-2_Chapter 8_25-09-2018.indd 30 29-09-2018 12:40:02

நாசிசம் யூதர்களுக்கு எதிரான வன்முறையை கட்டவிழ்த்து விட்டது. ஜெர்மானிய தேசத்தின் தோல்விக்கு யூதர்கள்தான் காரணம் என்று நாசிசம் கூறியது. ஜெர்மனிய மக்களின் குருதியை உறிஞ்சி யூதர்கள் வாழ்வதாக அவர்களை வெறுத்தது. சித்திரவதை முகாம்களில் அடைக்கப்பட்டு இலட்சக்கணக்கான யூதர்கள் கொல்லப்பட்டனர். இதனை யூதர்களின் பேரழிவு என்று யூதமக்கள் அனுசரிக்கிறார்கள்.

நாசிசம் ஜெர்மனியின் எல்லைகளை பரப்ப விரும்பியது. இதர நாடுகளை ஜெர்மனியின் காலனிகளாக அடிமையாக்க முயற்சித்தது. ஜெர்மனியின் மக்களை காலனி நாடுகளில் குடியேற்ற முயற்சித்தது. இங்கிலாந்தை விட மிகப்பெரிய காலனியாதிக்க சக்தியாக ஜெர்மனி வரவேண்டுமென்று நாசிசம் முயன்றது. நாசிசம் இதர கொள்கைகளான பொதுவுடைமைவாதம், தாராளவாதம், மற்றும் சர்வதேசவாதம் ஆகியவற்றை வெறுத்தது. இவைகளைப் பின்பற்றும் சோவியத் யூனியன், அமெரிக்கா மற்றும் பிற தேசங்களையும் அது எதிர்த்தது.

## செயல்பாடு

### படம் பார்ப்பது

அருமை மாணவர்களே, நாசிசம் இனப்படுகொலை செய்தது தற்போது உங்களுக்கு தெரியும். நாசிசத்தின் கொடுமைகளைப் பற்றி பல படங்கள் எடுக்கப்பட்டுள்ளன. 'சின்ட்லர்ஸ் லிஸ்ட்' என்ற படம் பல ஆஸ்கார் விருதுகளைப் பெற்றது. நாசிக் கொடுமைகளைக் கருத்தாகக் கொண்டுள்ளது.இப்படத்தை மாணவர்கள் அனைவரும் பார்க்க வேண்டும்.




நாசிசம் நாயகன் வழிபாட்டை ஆதரித்தது. 'ஹிட்லர்தான் ஜெர்மனி, ஜெர்மனிதான் ஹிட்லர்' என்ற கருத்தை மக்களிடையே திணித்தது. மக்கள் அனைவரும் சமம் என்ற கருத்தை அது நிராகரித்தது. ஹிட்லர் ஜெர்மானிய மொழியில் Fuehrer, அதாவது தலைவர் என அழைக்கப்பட்டார். ஜெர்மனி நாடே தலைவர் நாடு என்று அழைக்கப்பட்டது.

நாசிசம் பகுத்தறிவு வாதத்தை கடுமையாக எதிர்த்தது. மக்களுடைய உணர்வுகளுக்கும் உணர்ச்சிகளுக்கும் முக்கியத்துவம் கொடுத்தது. ஒரு கட்சி ஆட்சிமுறையை அது ஆதரித்தது. நாசி கட்சியைத் தவிர மற்ற அனைத்து கட்சிகளும் ஒடுக்கப்பட்டன. நாசிச கட்சியின் அமைப்பு படிநிலைக் கோட்பாட்டின் படி உருவாக்கப்பட்டது. கட்சியின் அதிகாரங்கள் அனைத்தும் ஹிட்லரிடமே குவிக்கப்பட்டன.

சுருக்கமாகக் கூறின், நாசிசம் சர்வாதிகார, இனவாத, பகுத்தறிவிற்கு எதிரான கொள்கையாகும். இரண்டாம் உலகப் போரில் ஜெர்மனியின் தோல்வியும் ஹிட்லரின் தற்கொலையும், நாசிச கொள்கையையும் கட்சியையும் கலைத்தன. இரண்டாம் உலக போருக்குப் பின் மக்களாட்சியும் கட்சிப் போட்டிகள் முறையும் ஜெர்மனியில் வேரூன்றியதால் நாசிசம் மீண்டும் வளரவில்லை.



11th Std Political Science Tamil Medium Vol-2_Chapter 8_25-09-2018.indd 31 29-09-2018 12:40:02

## பாடச்சுருக்கம்

மூன்று வகையான தாராளவாதங்களை அரசியல் கோட்பாட்டில் நாம் காணலாம். அவைகள் 1. எதிர்மறைத் தாராளவாதம், 2. நேர்மறைத் தாராளவாதம் 3. சமகாலத் தாராளவாதம் ஆகும். எதிர்மறைத் தாராளவாதம் அரசை ஒரு தேவையான தீமை என்று வர்ணிக்கின்றது. சட்டம், ஒழுங்கை பராமரிக்கும், சட்டபூர்வமான ஒப்பந்தங்களை அமல்படுத்தும் அதிகாரங்களை மட்டுமே அரசு பெற்றிருக்கின்றது. நேர்மறைத் தாராளவாதம் சமூக நல அரசை ஆதரிக்கின்றது. மக்களின் நலனுக்காக அரசு செயல்பட வேண்டும் என்று கூறுகின்றது. சமகாலத் தாராளவாதம் 19-ஆம் நூற்றாண்டின் எதிர்மறைத் தாராளவாதத்தை தற்பொழுது மீண்டும் ஆதரிக்கின்றது. குறைந்த அதிகார அரசு என்ற கருத்தை இது வலியுறுத்துகிறது.

லெனின் மார்க்சிசத்திற்கு இரண்டு முக்கிய பங்களிப்புகளை வழங்கினார். ஒன்று பொதுவுடைமைவாத கட்சி, இரண்டாவது ஏகாதிபத்தியம் முதலாளித்துவத்தின் உச்சக் கட்டம் என்ற விளக்கம். பொதுவுடைமை கட்சி மக்களாட்சி மத்தியத்துவம் அடிப்படையில் அமைக்கப்பட்டிருக்கும்.பொதுவுடைமைவாத கட்சி புரட்சியின் முன்னனியில் இருக்கும் என்று லெனின் கூறினார்.

ஸ்டாலின் ஒரு நாட்டில் சமதர்மவாதம் அல்லது சமதர்மவாதம் என்ற புது கருத்தை கொண்டு வந்தார். மாவோ மேற்கு ஐரோப்பிய பொதுவுடைமையை ஆசிய நாடான சீனாவிற்கு சாதகமாக மாற்றியமைத்தார். விவசாயிகள் தலைமையிலான புரட்சியை நடத்தி மக்களாட்சி ஜனநாயக சர்வதிகாரத்தை நிறுவினார்.

பல வகையான சமதர்மவாதங்கள் நமது அரசியல் அறிவியலில் உள்ளன. மக்களாட்சி சமதர்மவாதம், பரிணாம சமதர்மவாதம், ஃபேபியன் சமதர்மவாதம் போன்ற வகைகள் உள்ளன. மார்க்சியத்தில் இருந்து சமதர்மவாதம் வேறுபட்டு நிற்கிறது. மக்களாட்சி குணத்தை பெற்று சமூக நல பணிகளை செய்வதால் அரசு தேவையானது என்று சமதர்மவாதம் கூறுகின்றது. மாற்றங்கள் பரிணாம வளர்ச்சி மூலம் மெல்ல மெல்ல தோன்ற வேண்டுமென்று சமதர்மவாதம் கூறுகின்றது

தேசியவாதம் உலக நாடுகளின் அரசியலில் சில நூற்றாண்டுகளாக ஆதிக்கம் செலுத்தி வருகிறது. தங்கள் நாட்டின் மீது மக்கள் கொண்டிருக்கும் நேசமும், பாசமும் தேசியமாகும். ஆதி காலம் முதல் இணைந்து வாழ்தல், ஒரே வம்ச வழியில் வருதல், தகவல் தொடர்பு, முதலாளித்துவம், வர்க்க சுரண்டல், நவீன அரசின் தோற்றமும் ஆதிக்கமும் தேசிய வாதத்தை உருவாக்குவதாக பல கோட்பாடுகள் கூறுகின்றனர். உள்நாட்டிலும், வெளிநாட்டிம் செயல்படும் பல்வேறு சோதனைகளையும் சவால்களையும் சமாளித்து தேசியவாதம் வலுவான அரசியல் கோட்பாடாக உள்ளது.

பாசிசமும், நாசிசமும் நெருங்கிய தொடர்பு கொண்ட கொள்கைகள் ஆகும். சர்வதிகாரம், தீவிர தேசியவாதம்,நாயகன் வழிபாடு, காலனி ஆதிக்கம், போர் தாகம் ஆகிய தன்மைகளை இக்கொள்கைகள் பெற்றிருக்கின்றன. உலகில் உள்ள பெரும்பான்மையான மக்கள் பாசிசத்தையும், நாசிசத்தையும் வெறுக்கின்றனர்.



11th Std Political Science Tamil Medium Vol-2_Chapter 8_25-09-2018.indd 32 29-09-2018 12:40:02

## அருஞ்சொற்பொருள்

**சுதந்திரமாக விடு (Laissez Faire):** பிரெஞ்சு மொழி சொல் ஆகும். சுதந்திரமாக விடு என்பது இதன் பொருளாகும். வாழ்க்கையை விரும்பிய படி அமைத்துகொள்ள அரசு மனிதனை சுதந்திரமாக விட வேண்டும்.

**சந்தை பொருளாதாரம் :** தேவை மற்றும் வழங்கல் அடிப்படையில் இயங்கும் பொருளாதாரம்.

**சமூக நலஅரசு :** சமூக நல திட்டங்களை அமல்படுத்தும் அரசு

**சீரமைப்பு (Perestroika):** ரஷ்ய மொழி சொல் ஆகும். சீரமைப்பு என்பது இதன் பொருள் ஆகும். சோவியத் ரஷ்யாவின் அதிபர் மைக்கல் கோர்பசேவ் பொருளாதாரத்தை சீரமைக்க கொண்டு வந்த திட்டம் இது ஆகும்.

**வெளிப்படைத்தன்மை (Glasnost):** ரஷ்ய மொழி சொல் ஆகும், வெளிப்படைத்தன்மை என்பது இதன் பொருளாகும். மக்களுக்கான அரசியல் உரிமைகளை சோவியத் ரஷ்யாவின் அதிபர் மைக்கல் கோர்பசேவ் இத்திட்டத்தின் மூலம் கொண்டு வந்தார்.

**புதிய ஒப்பந்தம் (New Deal) :** புதிய ஒப்பந்தம் என்பது இதன் பொருளாகும். உலக பொருளாதார மந்த நிலையில் இருந்து அமெரிக்காவின் பொருளாதாரத்தை மீட்டெடுக்க அதிபர் பிராங்ளின் ரூஸ்வெல்ட் இதனை அறிமுப்படுத்தினார்.

**மக்களாட்சி மத்தியத்துவம் :** இது, பொதுவுடைமைவாத கட்சியின் அமைப்பு கோட்பாடு ஆகும். லெனின் மக்களாட்சி மத்தியத்துவத்தை கொண்டு வந்தார். மக்களாட்சியும் அதிகார குவியலும் இணைந்து இங்கு காணப்படுகிறது.

**பொதுவுடைமைவாதம் சீனமயமாதல் :** ஐரோப்பிய கண்டத்தின் பொதுவுடைமைவாத கொள்கையை சீனாவிற்குத் தகுந்தவாறு மாற்றி அமைத்தல்.

**மேலாதிக்கம் :** கிராம்சி என்பவர் மேலாதிக்கம் எனும் கருத்தைக் கொண்டு வந்தார். அரசு தார்மீகம், அறிவு மூலமாக மக்கள் மீது ஆதிக்கம் செலுத்தி மயக்குகிறது என்பது இதன் பொருளாகும்.

**கற்பனை சமதர்மவாதம் :** காரல் மார்க்ஸின் காலத்திற்கு முன்பு இருந்த்த சமதர்மவாத்த்தை கற்பனை சமதர்மவாதம் என காரல் மார்க்ஸ் வர்ணித்தார்.

**ஃபேபியன் சமதர்மவாதம் :** பண்டை கால ரோமானிய ஜென்ரலின் பெயரால் ஆரம்பிக்கப்பட்ட சமதர்மவாதம் ஃபேபியன் சமதர்மவாதம் ஆகும். சரியான நேரம் வரும் வரை பொறுத்திருந்து இயங்குவது இதன் கொள்கையாகும்,

**புதிய மக்களாட்சி :** மாவோ புதிய மக்களாட்சி கருத்தை அறிமுகப்படுத்தினார். விவசாயிகள், தொழிலாளிகள், சிறிய முதலாளிகள், பெரிய முதலாளிகள் ஆகியோர்களுக்கான ஆட்சியே புதிய மக்களாட்சி ஆகும்.

**ஆதிகால உறவு வாதம் :** ஒரு குறிப்பிட்ட மொழி, இன மற்றும் பகுதி மக்கள் ஆதி காலத்தில் இருந்து இணைந்து வாழ்வதால் தேசியவாதம் தோன்றயது என்று இக்கொள்கை கூறுகிறது.

**கற்பனை சமூகங்கள் :** பெனடிக்ட் ஆண்டர்சன், 'தேசம் என்பது மக்களின் கற்பனையில், மனதில் இயங்கும் சமூகம்' என கூறினார்.

**தொழிலாளர் (Proletariat):** காரல் மார்க்ஸ் தொழிலாளர்களை குறிப்பதற்காக பிரஞ்சு மொழிச் சொல்லை பயன்படுத்தினார்.

**U.S.S.R :** "யூனியன் ஆஃப் சோவியத் சோசியலிஸ்ட் ரீபப்ளிக்" என்பது இதன்

விரிவாக்கமாகும், இப்பொதுவுடைமைவாத நாடு 1991–ஆம் ஆண்டு மறைந்தது.

**BREXIT :** ஐரோப்பிய யூனியனில் இருந்து இங்கிலாந்து வெளியேறுவதற்கான நிகழ்சி. (Britain Exit)

**உலகமயமாதல் :** பொருளாதார, வர்த்தக, தொழில் நுட்ப தளங்களில் உலகம் ஒன்றினைவது உலகமயமாதல் எனப்படும்.

**பாசிசம் :** இத்தாலிய மொழியில் 'பாசி' என்றால் 'தண்டுகளின் மூட்டை' என்று பொருளாகும். ஒற்றுமை மற்றும் வலிமையை இது குறிக்கின்றது.

**சித்திரவதை முகாம்கள் :** யூத இன மக்களை நாசிச தலைவர் அடால்ஃப் ஹிட்லர் அடைத்து கொடுமை படுத்திய இடங்களே சித்திரவதை முகாம்கள் என்று அழைக்கப்படுகின்றன.

## மதிப்பிடுதல்

### I. சரியான பதிலை தேர்வு செய்யவும்

1. அரசு ஒரு அவசியமான தீமை என்று கருதிய கொள்கை எது?

   a) எதிர்மறைத் தாராளவாதம் b) நேர்மறைத் தாராளவாதம்

   c) மார்க்சியம் d) அதிகாரம் இல்லா கொள்கை

2. நேர்மறைத் தாராளவாதம் அரசை எவ்வகையான கருவியாக கருதியது?

   a) சட்ட ஒழுங்கு b) சுரண்டல்

   c) சமூக நலன் d) புரட்சி

3. புதியத் தாராளவாதத்தை ஆதரித்தவர்கள்

   a) நாக் b) நாசிக்

   c) பிரெட்ரிக் ஹேயக் d) மேற்கண்ட எல்லோரும்

4. மேலாதிக்கம் என்ற கருத்தை வலியுறுத்தியவர் யார்?

   a) காரல் மார்க்ஸ் b) லெனின்

   c) ஆண்டனியோ கிராம்சி d) மாவோ சேதுங்

PMNC9T

5. பொதுவுடைமைவாத கட்சி பொதுவுடைமைவாத புரட்சியின் முன்னணியில் இருந்து செயல்பட வேண்டும் என்று கூறியவர் யார்?

a) காரல் மார்க்ஸ் b) லெனின்

c) மாவோ d) ஸ்டாலின்

6. பொதுவுடைமைவாத கொள்கைக்கு மாவோ வழங்கிய மிக முக்கிய பங்கு

a) பொதுவுடைமைவாதம் சீனமயமாதல் b) வரலாற்று பொருள் முதல் வாதம்

c) உபரி மதிப்பு d) மேற்கண்ட எதுவும் இல்லை

7. சரியாக பொருத்துக

| | | |
|---|---|---|
| 1. பெர்னாட் ஷா | - | a) கற்பனை சமதர்மவாதம் |
| 2. இராபர்ட் ஓவன் | - | b)பரிணாமவளர்ச்சிசமதர்மவாதம் |
| 3. எட்வர்ட் பெர்ன்ஸ்டென் | - | c) கில்டு சமதர்மவாதம் |
| 4. G.D.H.கோல் | - | d) ஃபேபியன் சமதர்மவாதம் |

a) 1-A, 2-B, 3-C, 4-D b) 1-D, 2-A, 3-B, 4-Cs

c) 1-A, 2-D, 3-C, 4-B d) 1-C, 2-B, 3-D, 4-A

8. ஃபேபியன் சமதர்மவாதம் எவருடைய பெயரால் உருவாக்கப்பட்டது?

a) ரோமானிய ஜெனரல் b) ரஷ்யன் ஜெனரல்

c) ஆங்கிலேய ஜெனரல் d) இந்தியன் ஜெனரல்

9. கில்டு சமதர்மவாதம் கீழ்கண்டவற்றில் எதை வலியுறுத்தியது?

a) நவீனமாக்கப்பட்ட இடைக்கால கில்டு அமைப்பு b) கல்வி போன்ற பணிகளை செய்யும் அரசு

c) அமைதியான வழியில் மாற்றம் d) மேற்கண்ட எல்லாம்

10. கீழ்க்கண்டவர்களில் பொதுவுடைமைவாத சிந்தனையை ஆதரிக்காதவர் யார்?

a) காரல் பாப்பர் b) காரல் மார்க்ஸ்

c) லுயி அல்துசர் d) ஆண்டனியோ கிராம்சி

11. கீழ்க்கண்டவற்றில் இந்திய வகையான சமதர்மவாதம் எது?

a) சிண்டிகலிசம் b) ஃபேபியன் சமதர்மவாதம்

c) சமதர்ம வடிவ சமுதாயம் d) கில்டு சமதர்மவாதம்



11th Std Political Science Tamil Medium Vol-2_Chapter 8_25-09-2018.indd 35 29-09-2018 12:40:02

12. தேசியவாதத்தை "கற்பனை சமூகங்கள்" என்று வர்ணித்தவர் யார்?

a) காரல் டியுட்ஸ்ச்   b) பெனடிக்ட் ஆண்டெர்சன்

c) மைக்கல் மான்   d) அந்தோணி கிடன்ஸ்

13. "பாட்டாளிக்கு தந்தை நாடு என்று ஒன்று இல்லை" என கூறியவர் யார்?

a) பெனடிக்ட் ஆண்டெர்சன்   b) காரல் டியுட்ஸ்ச்

c) அரிஸ்டாடில்   d) காரல் மார்க்ஸ்

14. "எனது போராட்டம்" என்ற நுலை எழுதியவர் யார்?

a) காரல் மார்க்ஸ்   b) பிளாட்டோ

c) அடால்ஃப் ஹிட்லர்   d) ஆடம் ஸ்மித்

15. நாசிசம் எதை ஆதரித்தது?

a) ஆரிய இன உயர்வு   b) தேசிய சமத்துவம்

c) யூத இன உயர்வு   d) ஐரோப்பிய உயர்வு

16. **கூற்று(A):** கிராம்சி மேலாதிக்கத்தை ஆதரிக்கிறார்
**காரணம் (R):** முன்னேறிய நாடுகள் வளர்ந்து வரும் நாடுகள் மீது ஆதிக்கத்தை செலுத்தலாம்.

மேற்கூறிய இரண்டு வாக்கியங்களுள் ஒன்று கூற்றாகவும் (கூ) மற்றொன்று காரணமாகவும் (கா) உள்ளது. இந்த சூழலில் கீழ்க் கண்டவைகளுள் எது சரியானது என்று கூறுக.

அ) கூற்று (கூ) காரணம் (கா) இரண்டுமே சரி, கூற்றுக்கான சரியான விளக்கமாக காரணம் உள்ளது.

ஆ) கூற்று மற்றும் காரணம் இரண்டுமே சரி ஆனால் கூற்றுக்கான சரியான விளக்கமாக காரணம் இல்லை.

இ) கூற்று சரி ஆனால் காரணம் தவறு

ஈ) கூற்று தவறு ஆனால் காரணம் சரி.

## II. கீழ்க்கண்ட கேள்விகளுக்கு மிகவும் சுருக்கமாக பதில் எழுதுக

17. வரலாற்றின் முடிவு என்றால் என்ன?
18. மக்களாட்சி மத்தியத்துவம் என்பதை விளக்குக.
19. புது மார்க்சியம் பற்றி சிறு விளக்கம் தருக.
20. புதுத் தாராளவாதத்தை தங்கள் நாடுகளில் அமல்படுத்திய தலைவர்களை கூறுக?
21. கருவி மார்க்சியம் என்றால் என்ன?
22. தேசியவாதம் ஆரம்ப கால அடையாளங்களால் உருவானதா?
23. கொள்கை அரசுக் கருவிகள் என்பதை விளக்குக.



11th Std Political Science Tamil Medium Vol-2_Chapter 8_25-09-2018.indd 36 29-09-2018 12:40:02

## III. கீழ்க்கண்ட கேள்விகளுக்கு சுருக்கமாக பதில் எழுதுக

24. நேர்மறைத் தாராளவாதத்தில் அரசின் பணிகளை விளக்குக.
25. கிராம்சியின் மேலாதிக்கம் என்ற கருத்தை நீ எவ்வாறு புரிந்து கொண்டுள்ளாய்?
26. பொதுவுடைமைவாதத்திற்கு லெனின் ஆற்றிய பங்கை பற்றி விரிவான விளக்கம் தருக.s
27. பொதுவுடைமையும் சமதர்மவாதத்தையும் ஒப்பிடுக.
28. கற்பனை சமூகங்களில் இருந்து தேசியவாதம் தோன்றியது என்பதை ஆய்வு செய்க.
29. அமைதி, சமத்துவம், மக்களாட்சி உள்ள உலகத்திற்கு பாசிசமும் நாசிசமும் எதிரிகள் என்ற கூற்றை பற்றி விமர்சிக்கவும்.
30. இந்திய தேசியவாதம் தோற்றத்திற்கான காரணிகளை பட்டியலிடுக.

## IV. கீழ்க்கண்ட வினாக்களுக்கு விரிவாக பதில் வழங்கவும்

31. சமகாலத் தாராளவாதத்தை ஆய்வு செய்யவும்.
32. மாவோவின் கொள்கையின் முக்கிய தன்மைகளை விவரிக்கவும்.
33. ஃபேபியன் சமதர்மவாதத்தின் சிறப்புத் தன்மைகளை விவரிக்கவும்.
34. தேசியவாதம் பற்றிய கோட்பாடுகளைப் பற்றி விரிவாக எழுதவும்.
35. பாசிச கொள்கையின் கூறுகளை விவரிக்கவும்.

### மேற்கோள் நூல்கள்


1. Anderson, B. (1983) Imagined Communities: Reflections on the Origins and Spread of Nationalism. London: Verso
2. Gauba, O.P. (2009) An Introduction to Political Theory, New Delhi: Macmillan Publishers India Ltd.
3. Heywood, Andrew(2003) Political Ideologies: An Introduction, London: Macmillan
4. IGNOU Political Science Study Materials, B.A and M.A
5. Rajeev Bhargava & Ashok Acharya (Ed) (2016) Political theory: An Introduction, New Delhi: Thomson press.
6. Ramasamy, Sushila (2009) “Political Theory – Ideas and Concepts, Chennai: Macmillan India Ltd.




11th Std Political Science Tamil Medium Vol-2_Chapter 8_25-09-2018.indd 37 29-09-2018 12:40:02

## ICT CORNER

### அலகு–8 அரசியல் கொள்கைகள் – பகுதி I

இந்த செயல்பாட்டின் மூலமாக வேறுபட்ட தத்துவங்கக்கள் மற்றும் தத்துவவாதிகளைப்பற்றி கற்றுக்கொள்ளலாம்



### அரசியல் கொள்கைகள்

**படிகள்**


*படி 1:* கீழ்க்காணும் உரலி / விரைவுக் குறியீட்டைப் பயன்படுத்தி "histropedia" பக்கத்திற்குச் செல்க.

*படி 2:* செயல்பாட்டின் சாளரத்தில் histropedia முகப்பு பக்கம் தோன்றும் வலது பக்கத்தில் உள்ள search ஐ சொடுக்கி communism என தட்டச்சு செய்க.

*படி 3:* இத்தத்துவத்தின் காலக்கோட்டினை ஆரம்ப காலத்திலிருந்து இன்றைய காலகட்டம் வரை உள்ள இத்தத்துவம் (communism) பற்றிய விவரங்களை காண்பிக்கும்.

*படி 4:* முழுதும் தேடி வேறுபட்ட தத்துவங்கக்கள் மற்றும் தத்துவவாதிகளைப்பற்றி வெவ்வேறு வருடங்களை சொடுக்கி அக்காலக்கட்டத்தில் உள்ள புரிந்து கற்றுக்கொள்ளலாம். மேலும் இணைப்புகள் மூலம் ஒவ்வொரு தத்துவத்தினை பற்றி அறியலாம்.

படி 1



படி 3



படி 2



படி 4



**உரலி :**

*படங்கள் அடையாளத்திற்கு மட்டும்.

இப்பக்கத்திற்கு தேவைப்பட்டால் Flash Player or Java Script ஐ அனுமதிக்கவும்

http://www.histropedia.com/


B146_11_PSCI_TM



11th Std Political Science Tamil Medium Vol-2_Chapter 8_25-09-2018.indd 38 29-09-2018 12:40:06

அலகு 9

# அரசியல் கொள்கைகள் – பகுதி II



## அறிமுகம்

நாம் முந்தைய பாடத்தில் சில அரசியல் கொள்கைகளைப் படித்தோம். இதர கொள்கைகளைத் தற்பொழுது காண்போம். அரசியல் கொள்கைகள் பகுதி மிகவும் வளமானது ஆகும். பல்வேறு கொள்கைகள் செழித்து வளர்கின்றன. கடந்து 40 ஆண்டுகளாக பல புதிய கொள்கைகளும் தோன்றியுள்ளன.

PHX8BG



## கற்றலின் நோக்கங்கள்

- அமைப்பெதிர்வாதம் கொள்கையின் பொருள், தன்மைகள், வகைகள் மற்றும் சிந்தனையாளர்களைப் புரிந்து கொள்ளுதல்.
- பெண்ணியத்தின் பொருள் தோற்றம் மற்றும் வகைகளை அறிந்து கொள்ளுதல்.
- பெண்கள் முன்னேற்றத்திற்கு இந்திய அரசு எடுத்துள்ள நடவடிக்கைகளை அறிதல்.
- சமுதாயவாதத்தின் தோற்றம், சிந்தனையாளர்கள் மற்றும் முக்கியத் தன்மைகளைப் பற்றிய தெளிவைப் பெறுதல். மனிதன், சமூகம், உரிமைகள், நீதி ஆகியவற்றைப் பற்றி சமுதாய வாதம் கூறியதை ஆய்வு செய்தல்.
- பின் நவீனத்துவ கொள்கையின் பொருள், சிந்தனையாளர்களைப் படித்தல். உண்மைகள், தனித்தன்மை, அடையாள அரசியல் ஆகியவற்றைக் குறித்து பின் நவீனத்துவத்தின் கருத்துக்களை ஆய்தல்.
- ஆழச் சூழலியல், மேலோட்டமான சூழலியல், சூழலிய அரசியல் கோட்பாடுகள் ஆகியவற்றின் அடிப்படைக் கருத்துகளை புரிந்து கொள்ளுதல்.
- இந்தியாவின் முக்கியமான சுற்றுச் சூழல் இயக்கங்களை அறிந்து கொள்ளுதல்.

## 9.1 அமைப்பெதிர்வாதம் (*Anarchism*)

மனிதனுடைய அடிப்படை குணமாகிய பரஸ்பர ஒத்துழைப்புடன் சுய ஆட்சி முறையை வலியுறுத்தும் அரசியல் கொள்கைக்கு 'அமைப்பெதிர்வாதம்' என்பது பெயராகும். இந்த தத்துவத்தின் ஆங்கிலப் பெயர் 'ANARCHISM' கிரேக்க மொழி சொல்லான ANARCHOS-இல் இருந்து தோன்றியது. அமைப்பெதிர்வாதம் என்பதுதான் இதன் பொருளாகும். பியரிஜோசப் பிரௌதான் இலாபத்தை திருட்டு என வர்ணித்தார். இத்தத்துவத்தை முதன் முதலில் ஆதரித்தவர்களில், பியரிஜோசப் பிரௌதான் முக்கியமானவர் ஆவார்.



இரஷ்யாவின் சிந்தனையாளரான கிரோபோட்கின், ஃபிரான்ஸ் நாட்டின் அமைதி சிந்தனையாளரான லியோ டால்ஸ்டாய் ஆகியோர் இக்கொள்கையை ஆதரித்தனர்.

எல்லா வகையான அதிகாரங்களையும் அகற்ற வேண்டும் மனிதர்களை, அரசு, தனி சொத்துரிமை, மதம் ஆகியவைகளின் பிடியில் இருந்து விடுவிக்க வேண்டும். மனிதரின் பரஸ்பர ஒத்துழைப்பு குண அடிப்படையில் புதிய முறையை படைக்க வேண்டும் என்று அதிகாரம் இல்லா கொள்கை கூறுகிறது.

அமைப்பெதிர்வாதம் அரசை ஒரு தேவையற்ற தீமையாக கருதுகின்றது. மக்களின் உரிமையை பாதித்து தார்மீக முன்னேற்றத்தைத் தடுப்பதால் அரசு ஒரு தீமையாகும். அரசினால் எந்த பயனும் இல்லை. அது தேவையற்ற ஒன்றாகும். எந்த பணியையும் அது செய்யாததால் அதனை உடனே அழிக்க வேண்டும் என்று இக்கோட்பாடு கூறுகின்றது.

**அமைப்பெதிர்**

எல்லா வகையான அதிகாரங்களும் தேவையற்றது, விரும்பத்தகாதது. ஆகவே மனிதர்கள் மற்றும் குழுக்களின் ஒருங்கிணைப்பால் பரஸ்பர ஒத்துழைப்புடன் புதியதோர் சமுதாயத்தை படைக்க வேண்டும்.

அமைப்பெதிர் குழப்பமாகாது அமைப்பெதிர் அராஜகம் ஆகாது.




அமைப்பெதிர் சுய உரிமை கோட்பாட்டின்படி வாழ்க்கையை மேற்கொள்வதாகும்.

அமைப்பெதிர் ஆதரவாளர்கள் எவ்வித விதிவிலக்கும் இல்லாமல் அதிகார அத்துமீறல்களை எதிர்ப்பவர்கள் ஆவர்.

**செயல்பாடு**

எதிர்மறைத் தாராளவாதம் அரசைத் தேவையுள்ள தீமை என்றது. ஆனால் அமைப்பெதிர்வாதம் அரசை தேவையற்ற தீமை என்று கூறுகிறது. இரண்டையும் ஒப்பிட்டு விவாதிக்கவும்.

அமைப்பெதிர்வாதம் குழப்பத்தையும் ஒற்றுமையின்மையையும் உருவாக்கவில்லை. இது ஒழுங்கு மற்றும் ஒற்றுமையை கொண்டுவர முயற்சிக்கின்றது. மனிதர்கள் இயற்கையாகவே கூட்டுறவு சிந்தனை கொண்டவர்கள் ஆவர். பரஸ்பர ஒத்துழைப்பை உடையவர்கள் ஆவர். அரசு என்பது ஒரு செயற்கையான அமைப்பு ஆகும். மனிதனின் ஒத்துழைப்பு குணத்தை அது அழிக்கின்றது. மனிதனின் சுதந்திரத்தையும் உரிமைகளையும் பாதிக்கின்றது. ஆகவே அமைப்பெதிர்வாதம் அரசை அழித்துவிட்டு சுய விருப்பம் அடிப்படையில் ஒத்துழைப்பை ஆணி வேராக கொண்ட புதிய சமுதாயத்தை படைக்க வேண்டும் என்று கூறுகின்றது. ஒவ்வொரு ஆணும் பெண்ணும் மகிழ்ச்சியுடன் பொது வாழ்க்கையில் பங்கேற்பார்கள்.

**செயல்பாடு**

**பரஸ்பர ஒத்துழைப்பு வாழ்க்கை செயல் விளக்கம்**

அமைப்பெதிர்வாதம் மனிதர்களின் பரஸ்பர ஒத்துழைப்புடன் உள்ள வாழ்வை ஆதரிக்கின்றது. ஆகவே மாணவ மாணவிகளே, உங்களுடைய வகுப்பில் பரஸ்பர ஒத்துழைப்பு அமைப்பை உருவாக்குங்கள். யாருடைய நிர்பந்தமும் இல்லாமல் நாம் சேர்ந்து வாழ முடியும் என்பதை நிரூபித்துக் காட்டுங்கள். வகுப்பறையில், பள்ளியில் நடைபெறும் அன்றாட வேலைகளை (கரும் பலகையைத் துடைத்து வைத்தல், வகுப்பறையைப் பெருக்கி வைத்தல், குடிநீரைக் கொண்டு வந்து வைத்தல்) இந்த அமைப்பின் மூலம் செய்து காட்டலாம்.

அமைப்பெதிர்வாதம் ஆட்சி இல்லா சமூகத்தை ஆதரிக்கவில்லை. ஆட்சியாளர்கள் இல்லா சமூகத்தைத்தான் ஆதரிக்கின்றது.

அமைப்பெதிர்வாதம் சுய உரிமை மற்றும் சுய நிர்ணயம் ஆகிய கோட்பாடுகளை ஆதரிக்கின்றது. ஒவ்வொரு மனிதனும் தனது வாழ்க்கையை அமைத்துக்கொள்ளும் சுய நிர்ணய உரிமையை பெற்றிருக்கிறான். அதைப் போலவே ஒவ்வொரு ஆணும் பெண்ணும் தனது உடல் மற்றும் உயிர் மீது உரிமை பெற்று இருக்கிறார்கள். அரசு இந்த இரண்டு கோட்பாடுகளையும் மீறுவதால் நாம் அதை அகற்ற வேண்டும்

அமைப்பெதிர்வாதம் அரசை மட்டும் அல்ல, குடும்பம், மதம் ஆகிய சமூக அமைப்புகளையும் எதிர்க்கின்றது. சில தத்துவ ஞானிகள் தனி சொத்துரிமையை எதிர்க்கின்றனர்.

அரசை ஒழிக்க வேண்டும் என்று மார்க்சிசம் கூறுவது போலவே அமைப்பெதிர்வாதம் கூறுகின்றது. இருந்தபோதிலும் மார்க்ஸியத்திற்கும் அமைப்பெதிர்வாதத்திற்கும் வேறுபாடுகள் உள்ளன. அமைப்பெதிர்வாதம் அரசை உடனே அழிக்க வேண்டும் என கூறுகின்றது. ஆனால் மார்க்சியம் சமதர்மவாத சமூகம் தோன்றிய பிறகு தானாகவே அரசு உதிர்ந்து போய்விடும் என்று கூறுகின்றது.




ஜெரார்ட் கசேய் 21-ஆம் நூற்றாண்டில் அமைப்பெதிர்வாதத்தை ஆதரித்தார். அரசை அவர் குற்றவாளி நிறுவனம் என்று வர்ணித்தார். அரசு இல்லா சமூகங்களைப் புதிதாக உருவாக்க வேண்டும் என்று கூறினார்.

பல வகையான அமைப்பெதிர்வாதம் உட்பிரிவுகள் உள்ளன. தத்துவ அமைப்பெதிர்வாதம், சமதர்ம அமைப்பெதிர்வாதம், புரட்சிகர அமைப்பெதிர்வாதம், புதுத் தாராளவாத அமைப்பெதிர்வாதம் என்று பல உட்பிரிவுகளைக் கொண்டுள்ளன. இவற்றிடையே பல வேறுபாடுகள் உள்ளன. இவை பெரும்பாலும் அரசை அகற்ற வேண்டும் என்று கூறுகின்றன. ஆனால் புதுத் தாராளவாத அமைப்பெதிர்வாதம் கோட்பாடு, அரசை அகற்ற வேண்டாம், அதனுடைய அதிகாரத்தை குறைத்தால் போதும் என்கின்றது.

பல்வேறு, தத்துவ ஞானிகள் அமைப்பெதிர்வாதக் கொள்கையை விமர்சிக்கிறார்கள். மனிதனின் இயற்கை குணத்திற்கு எதிரானது என்று கூறுகிறார்கள். அதனுடைய கருத்துக்கள் ஆழமற்றவை என்றும் விமர்சிக்கிறார்கள். மனிதனுடைய சுயநல குணத்தை அவர்கள் பார்க்கத் தவறிவிட்டார்கள். எல்லா மனிதர்களும் பரஸ்பர ஒத்துழைப்புடன் இருக்கின்றனர் என்று கூற முடியாது. சந்தர்ப்பங்களால் ஈர்க்கப்பட்டு சுயநலமாக அவர்கள் செயல்படலாம். அரசு இல்லா சமுதாயம் பல பிரச்சனைகளை தோற்றுவிக்கும். பயங்கரவாதம், வலைதளக் குற்றங்கள், சுற்றுசூழல் மாசுபாடு ஆகியவைகள் மனிதகுலத்தை வாட்டி வதைக்கக்கூடும். அரசு இல்லாவிட்டால் தீவிரவாத குழுக்கள் அணு ஆயுதங்களைக் கைப்பற்றி உலகத்தையே அழித்துவிடுவார்கள்.

**செயல்பாடு**

காந்தி அடிகளின் அரசு இல்லா சமூகம் என்ற இலட்சியம் ஒரு வகையான அமைப்பெதிர்வாதமா? அரசு இல்லா சமூகத்தை பற்றி காந்தி அடிகள் என்ன கூறினார்?

## 9.2 பெண்ணியம்



பெண்களும் மனிதர்களே என்ற தீவிர கருத்துக்குப் பெயர் தான் பெண்ணியம்

ஆணிற்கும், பெண்ணிற்கும் உள்ள சமத்துவத்தையும் முழு மனிதத்துவத்தையும் கண்டு கொள்பவர் தான் பெண்ணியவாதி ஆவார்.

-குளேரிஸ்டீபன்

பெண்களின் முன்னேற்றத்திற்காக பாடுபடக்கூடிய இயக்கங்களுக்கும் கொள்கைக்கும் பெண்ணியம் என்பது பெயர் ஆகும். ஆண், பெண் சமத்துவத்தை பெண்ணியம் ஆதரிக்கின்றது. நவீன அரசியல் கோட்பாட்டியலில் 19-ஆம் நூற்றாண்டின் இறுதியில் பெண்ணியம் தோன்றியது. அறிவியல் ரீதியாக ஆணும் பெண்ணும் சமம் என்று நிரூபிக்கப்பட்டதால் பெண்ணியம் தோன்றியது.

பல்வேறு பெண்ணிய கொள்கைப் பள்ளிகள், அரசியல் அறிவியலில் காணப்படுகின்றன.

1. தாராளவாதப் பெண்ணியம்
2. மார்க்சியவாதப் பெண்ணியம்
3. தீவிரவாதப் பெண்ணியம்
4. சுற்றுச்சூழல் பெண்ணியம்
5. பின் காலனியப் பெண்ணியம்




### 1. தாராளவாதப் பெண்ணியம்

முதல் கட்ட பெண்ணியமானது 19-ஆம் நூற்றாண்டில் தோன்றியது. ஆண்களுக்கு நிகரான அரசியல் உரிமைகளைப் பெண்களுக்கும் கோரியது. பெண்கள் அடிமையாக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு வாக்குரிமை உள்ளிட்ட அரசியல் உரிமைகள் வழங்கப்பட்டால் பெண்களை ஆண்களுக்கு நிகராக முன்னேற்ற முடியும். அரசு ஆணையும், பெண்ணையும் சமமாக பார்க்கும் ஒரு கருவியாகும். இயற்கையாகவே பெண்களுக்கு எதிரானது அரசு கிடையாது. தாராளவாதப் பெண்ணியம் மேற்கத்திய மக்களாட்சி நாடுகளில் பெண்களுக்கு சமமான வாக்குரிமை பெற்றுத்தந்து மிகப்பெரிய சாதனை செய்தது.

### 2. மார்க்சியவாதப் பெண்ணியம்

மனிதர்களிடையே சொத்துரிமை தோன்றியதால் தான் பெண்கள் அடிமையாக்கப்பட்டனர். மனித வரலாற்றின் இரண்டாவது காலகட்டமாகிய பண்டைய கால அடிமை முறையில் தான் தனிசொத்துகள் தோன்றின. காரல் மார்க்சின் நண்பரான பிரெட்ரிக் ஏங்கல்ஸ் "குடும்பம், தனி சொத்துகள் மற்றும் அரசின் தோற்றம்" என்ற நூலை எழுதினார். தனிசொத்துகள் தோன்றிய பிறகு ஆண்கள் ஆதிக்கம் செலுத்தினர், பெண்கள் அடிமைப்படுத்தப்பட்டனர் என்று அவர் கூறினார். பொதுவுடைமைவாத புரட்சி வர வேண்டும், புரட்சி மூலம் தொழிலாளர்களும் விடுதலை பெறுவார்கள், பெண் இனமும் விடுதலை பெறும், ஆண்களிடம் தனிசொத்துகள் இருக்காது, செல்வங்கள் எல்லாம் எல்லோருக்கும் பொதுவாக இருக்கும் என்று கூறினார்.

### 3. தீவிரவாதப் பெண்ணியம்

பெண்களுக்கும் ஆண்களுக்கும் இடையில் எந்தவித ஏற்றத்தாழ்வும் கிடையாது. பெண்கள் ஆண்களால் சுரண்டப்படுகிறார்கள், ஏமாற்றப்படுகிறார்கள் என்று தீவிரப் பெண்ணியம் கூறுகிறது.



**"பெண் என்பவர் பிறப்பது கிடையாது, உருவாக்கப்படுகிறார்"**

**– சைமன் டி பீவர்**



11th Std Political Science Tamil Medium Vol-2_Chapter 9_25_09_2018.indd 42 29-09-2018 12:40:44

சைமன் டி பீவர் "இரண்டாவது பாலினம்" என்ற நூலை எழுதினார். "பெண்கள் பிறப்பது கிடையாது, உருவாக்கப்படுகிறார்கள்" என்ற கருத்தை இவர் வலியுறுத்தனார். பிறக்கும் பொழுது ஆணும், பெண்ணும் சமமான திறமைகளேயே பெற்றிருக்கின்றனர். ஆணாதிக்க சமுதாயமும், கலாச்சாரமும் பிரச்சாரங்கள் மூலம் பெண்களை அடிமைப்படுத்துகிறது.

ஆணாதிக்கம் இயற்கைக்கும், நீதிக்கும் எதிராகப் பெண்களை அடிமைப்படுத்துகிறது. உலக முழுவதும் பல்வேறு கலாச்சாரங்கள் பெண்களுக்குப் பலவகையான மதிப்பை வழங்குவது இக்கருத்துக்கு சாட்சி ஆகும்.

கரோல் ஹானிஸ்க் புகழ்பெற்ற பெண்ணியவாதி ஆவார். "தனிப்பட்ட வாழ்விலும் அரசியல்" (The Personal is Political) என்று முழங்கினார். ஆண்கள் பெண்களை அடிமைப்படுத்துவதை இம்முழக்கம் மூலம் விளக்கினார். மனிதர்களின் வாழ்க்கையை இரண்டு தளங்களில் ஆண்கள் பிரித்திருக்கிறார்கள். தனிவாழ்க்கை மற்றும் பொது வாழ்க்கை. தனிவாழ்க்கை குடும்பம் சம்பந்தப்பட்டதாகும். இங்கு அன்பும், பாசமும் நிறைந்திருக்கும் போட்டி, பொறாமை இருக்காது.

குடும்பத் தளத்தில் பெண்கள் வசிக்கிறார்கள், இங்கு அரசியல் கிடையாது, மாறாக பொது வாழ்க்கையில் போட்டி, பொறாமை நிறைந்திருக்கும். ஆண்கள் இதில் பங்கேற்கிறார்கள். அரசியல் மற்றும் அதிகாரப் போட்டியில் ஆண்கள் ஈடுபடுகின்றனர். இக்கருத்துக்களை கரோல் ஹானிஸ்க் நிராகரிக்கின்றார். பொது வாழ்வில் மட்டுமல்ல தனிப்பட்ட வாழ்விலும் போட்டி, பொறாமைகள் உள்ளன. கணவன், மனைவி உறவுகளில் கூட அதிகாரம், போட்டி, இருக்கலாம். தனிப்பட்ட குடும்ப வாழ்க்கையில் பெண்கள் அடிமைப்படுத்தப்படுகிறார்கள். தனிப்பட்ட குடும்ப வாழ்க்கையிலும் அரசியல், அதிகாரத்தை பற்றி பேச வேண்டும். ஆண்களுக்கு இணையான அதிகாரத்தை பெண்கள் பெற வேண்டும். ஆகவே தனிப்பட்ட வாழ்விலும் அரசியல் உள்ளது என்று அவர் கூறினர்.



"தனிநபர் வாழ்வென்பதும் அரசியலே"

- கரோல் ஹானிஸ்க்

## செயல்பாடு

**படைப்பாற்றல்**

மனித குலத்தின் ஒரு பாதியாகப் பெண்கள் உள்ளனர். அவர்களின் பாதுகாப்பும் முன்னேற்றமும் மிகவும் முக்கியமானது ஆகும்.

அன்புள்ள மாணவ, மாணவிகளே. நீங்கள் ஒவ்வொருவரும் நன்கு யோசித்து பெண்களின் பாதுகாப்பிற்கான பரிந்துரைகளை உருவாக்குங்கள். பெண்கள் தாயாக, சகோதரியாக, வகுப்புத் தோழியாக மற்றும் அறிமுகம் இல்லாதவராக இருக்கும் பொழுது அவர்களின் பாதுகாப்பை எவ்வாறு உறுதி செய்யலாம் என்று பரிந்துரையுங்கள்.

### 4. சுற்றுச்சூழல் பெண்ணியம்

இச்சிந்தனை இயற்கையுடன் இணைந்த பெண்ணியக் கருத்தைக் கூறுகிறது. பெண்ணியமும், சூழலியமும் இக்கருத்தில் இணைந்துள்ளன. இயற்கையையும், பெண்களையும் ஆணாதிக்கும் ஏமாற்றுகிறது, சீரழிக்கிறது என்று இக்கோட்பாடு கூறுகிறது.



"நாம் பெண்கள் தலைமையில் புவியில் அமைதியான வருங்காலத்தைப் பெறுவோம் அல்லது நமக்கு வருங்காலம் என்ற ஒன்றே இல்லாமல் போகும்"..

– வந்தனா சிவா



11th Std Political Science Tamil Medium Vol-2_Chapter 9_25_09_2018.indd 43 29-09-2018 12:40:44

இரண்டு வகையான சுற்றுசூழல் பெண்ணிய கருத்துகள் உள்ளன. ஒன்று தீவிரப் பெண்ணியம், இரண்டாவது, கலாச்சாரப் பெண்ணியம். தீவிரப் பெண்ணியம் ஆணாதிக்கத்தை அழித்தால் தான் இயற்கையையும், பெண்களையும் காப்பாற்ற முடியும் என்று கூறுகிறது.

கலாச்சாரப் பெண்ணியம் உணவு தயாரிப்பதிலும், இனத்தைப் பெருக்குவதிலும் பெண்கள் இயற்கைக்கு நெருக்கமானவர்கள் என்று கூறுகிறது. இயற்கை சீரழிவால் ஆண்களை விடப் பெண்களே அதிகம் பாதிக்கப்படுகின்றனர். மனித வாழ்க்கையில் வேலைப் பங்கீடு முறையால் இயற்கை சீரழியும் பொழுது பெண்களுக்குத்தான் அதிக இன்னல்கள் தோன்றுகின்றன. இயற்கையையும் பெண்களையும் பாதுகாக்க வேண்டும்.

### 5. பின் காலனியப் பெண்ணியம்

பின் காலனி ஆதிக்கப் பெண்ணியம் 1980 களில் ஆசிய, ஆப்பிரிக்க நாடுகளில் இயக்கமாகவும், தத்துவமாகவும் தோன்றியது. ஆட்ர லார்டு என்ற பெண்ணியவாதி பின் காலனி ஆதிக்கப் பெண்ணியத்தை தோற்றுவித்தார். "நிபுணரின் கருவிகள் நிபுணரின் வீட்டை ஒருபோதும் உடைக்காது" (The Mater's Tools Will Never Dismantle the Master's House) என்ற முக்கிய நூலை எழுதினார். காயத்திரி எஸ்பிவாக், சந்தரா தல்பதே மொகந்தி, எதல் க்ராலி ஆகியோர் பின் காலனி ஆதிக்கப் பெண்ணிய வாதிகள் ஆவர்.

ஆட்ரலார்டு கூறினார். " எல்லா பெண்களும் ஒரே மாதிரியான அடக்குமுறையால் பாதிக்கப்படுகிறார்கள் எள்று கூறக்கூடாது. அவ்வாறு நினைத்தால் ஆணாதிக்கத்தின் பல வகையான தன்மைகளை நாம் பார்க்கத் தவறிவிடுவோம். எவ்வாறு ஆணாதிக்க கருவிகள் பயன்படுத்தப்படுகிறது என்ற விழிப்புணர்வு இல்லாமல் பெண்கள் இருப்பார்கள். வெள்ளைக்கார ஆணாதிக்கத்தில் ஆப்பிரிக்க, அமெரிக்கப் பெண்ணாக நான் சந்தித்த சோதனைகள், அனுபவங்கள் தவறாக சித்தரிக்கப்படுகின்றன, சிறுமைப்படுத்தப்படுகின்றன."



பெண்ணியம் குறுக்கீடு மற்றும் சேர்க்காமல் இருப்பது பயனற்றது

பின் காலனி ஆதிக்கப் பெண்ணியம் மேற்கத்தியப் பெண்ணிய இயக்கங்களின் கருத்துகளை எதிர்க்கிறது. அவர்களின் அனுபவங்களை உலகம் முழுவதும் உள்ள பெண்களின் அனுபவம் என்று சித்தரிப்பதை இது எதிர்க்கிறது, உலகம் முழுவதும் பெண்கள் ஒரே மாதிரியாக இருப்பதில்லை. வர்க்கம், இனம், மதம், நாடு போன்ற காரணிகளால் பெண்களிடையே பல வேறுபாடுகள் உள்ளன. மேற்கத்தியப் பெண்ணிய கருத்துக்கள் உலகின் பிற பகுதிகளில் உள்ள பெண்களின் நிலையைப் பிரதிபலிப்பதில்லை. ஆசிய, ஆப்பிரிக்க பெண்கள் மேற்கத்தியக் காலனி ஆதிக்கத்தால் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளனர். மேற்கத்தியப் பெண்ணியவாதிகள் காலனி ஆதிக்கதாக்கத்தை சந்திக்காததால் அதனை கவனிக்க தவறுகிறார்கள். ஆப்பிரிக்கக் கண்டத்ததின் பெண்கள் இனவாதம், அடிமை முறை, கட்டாய குடியேற்றம் போன்ற சோதனைகளை சந்தித்தனர். மேற்கத்தியப் பெண்கள் இவைகளைச் சந்திக்கவில்லை. மேற்கத்தியப் பெண்ணியவாதம் தங்களை படித்த, அரசியல் விழிப்புணர்வு உள்ள, நவீன சக்தி பெற்ற பெண்களாகக் கருதுகிறது. ஆசிய, ஆப்பிரிக்க பெண்களை அதிகாரமில்லாத, விழிப்புணர்வு இல்லாத, செயலற்ற இனமாகக் கருதுகிறது. இது ஒரு தவறான அணுகுமுறையாகும். ஆசிய, ஆப்பிரிக்கப்

பெண்கள் காலனி ஆதிக்கம், ஆணாதிக்கம் என்ற இரண்டு சுரண்டல் சக்திகளால் பாதிக்கப்பட்டுள்ளனர். இவ்வாறு பின் காலனியப் பெண்ணியம் மேற்கத்திய காலனி ஆதிக்கத்தை விமர்ச்சிக்கின்றது. மேலும் ஆசிய, ஆப்பிரிக்க நாடுகளின் அரசியல் சிந்தனைகளில் பெண்கள் சந்திக்கும் தனிப்பட்ட பிரச்சனைகள் பற்றி கவனம் செலுத்துவது இல்லை என்றும், பின் காலனியப் பெண்ணியம் கூறுகிறது.




### இந்திய அரசும் மகளிர் அதிகாரம் ஏற்றலும்

பெண்ணியம் மட்டும் அல்ல சமீபத்தில் நமது அரசியல் அறிவியல் பாடத்தில் தோன்றிய கோட்பாடுகளெல்லாம் ஆண், பெண் சமத்துவத்தையும் பெண்கள் சக்தி ஏற்றத்தையும் ஆதரிக்கின்றன. இந்திய அரசும் பெண்களின் முன்னேற்றத்திற்காக முக்கிய திட்டங்களை அமல்படுத்தியுள்ளது. 73-வது மற்றும் 74-வது அரசியல் சாசன திருத்தச் சட்டங்கள் கிராம, நகர சுய ஆட்சி அமைப்புகளில் மூன்றில் ஒரு பங்கு இடங்களை பெண்களுக்கு ஒதுக்கியுள்ளன. கடந்த இருபது ஆண்டுகளாக அமலில் இருக்கும் மகளிர் இட ஒதுக்கீடு பெண்களுக்கு முன்னேற்றத்தையும் அரசியல் சக்திகளையும் வழங்கியுள்ளது. உச்ச நீதிமன்றம் "விஷாகா வழிமுறைகள்" என்ற பாதுகாப்பினை தனது தீர்ப்பின் மூலம் பெண்களுக்கு வழங்கியுள்ளது. பணியிடங்களில் பெண்களுக்கு எதிரான பாலின தொந்தரவுகளை தடுப்பதற்கு விஷாகா வழிமுறைகள் முயற்சிக்கின்றன. பாராளுமன்றம் பணியிடங்களில் பெண்களுக்கு எதிரான பாலின தொந்தரவுகளை தடை செய்து சட்டம் இயற்றி உள்ளது. அகப் புகார் குழு மற்றும் தல புகார் குழு ஆகியவைகள் பணியிடங்களில் உருவாக்கப்பட வேண்டும் என்று இச்சட்டம் கூறுகிறது. முன்பாக பாராளுமன்றம் 2005-ஆம் ஆண்டு குடும்ப வன்முறை பெண்கள் பாதுகாப்புச் சட்டத்தை இயற்றியது.

முடிவாக பாலின சமத்துவம் மனித குலத்தின் பாதி அளவாக இருக்கின்ற பெண்களின் முன்னேற்றத்திற்கு வழிவகுக்கும். பெண்ணியம் இதற்கு முயற்சிகின்றது.

**விவாதம்**



நாடாளுமன்றத்திலும் சட்ட மன்றத்திலும் பெண்களுக்கு இட ஒதுக்கீடு வேண்டும் என்று பல ஆண்டுகளாகப் கோரப்படுகிறது. மூன்றில் ஒரு பங்கு இடங்கள் பெண்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்பது இந்த கோரிக்கையின் முக்கிய சாரமாகும். நாடாளுமன்றத்திலும், சட்டமன்றத்திலும் மகளிர் இட ஒதுக்கீடு கோரி வகுப்பில் விவாதம் செய்க.






11th Std Political Science Tamil Medium Vol-2_Chapter 9_25_09_2018.indd 45 29-09-2018 12:40:44


### 9.3 சமுதாயவாதம்

சமுதாயவாதம் ஓர் அரசியல் கோட்பாடாக 1980 – களில் தோன்றியது. மைக்கேல் சாண்டர் என்னும் அறிஞர் "தாராள வாதமும் நீதியின் எல்லைகளும்" (Liberalism and the Limits of Justice) என்ற நூலை எழுதினார். அந்நூலில் புதுத் தாராளவாதத்தையும் ஜான் ராவ்ஸ் அவர்களின் நீதி கோட்பாட்டையும் அவர் விமர்சித்தார்.

1840–களில் ஆங்கிலேய அறிஞரான குட்வின் பார்மி Communitarian (சமூகவாதி) என்ற சொல்லை உருவாக்கினார். இருந்தபோதிலும் சமூதாய வாதம் 20–ஆம் நூற்றாண்டின் இறுதியில் முழு வடிவம் பெற்றது.


சமுதாயவாதம், தாராளவாதத்தையும் மார்க்கிசியத்தையும் எதிர்த்து தோன்றியது. சமுதாயவாதம், தாராளவாதத்தையும் மார்க்சியத்தையும் எதிர்த்து தோன்றியது. சமுதாயவாதமானது, தாராளவாதம் தனி நபர்களுக்கு அதிக, தேவையற்ற முக்கியத்துவம் வழங்குவதாக குற்றம் சாட்டியது. சமுதாய வாதம் மார்க்சியித்தையும் வகுப்புவாதம் என நிராகரித்தது. தாராளவாதம் உலகில் பெரும் பகுதிகளில் பின்பற்றப்பட்டதால் சமுதாய வாதம் அதனை அதிகமாக விமர்சித்தது.

**சமுதாய சமூகம் என்றால் என்ன?**




**உங்களுக்குத் தெரியுமா?**

இராபர்ட் டி. புட்னம் என்ற அறிஞர் சமுதாய வாதம் தோன்றுவதில் முக்கிய பங்காற்றினார். பௌலிங் எனப்படும் விளையாட்டை புட்னம் ஆய்வு செய்தார். பல ஆண்டுகளுக்கு முன்பு பெரும்பான்மையான அமெரிக்கர்கள் பௌலிங் விளையாடினார்கள். தங்களிடையே சமூக தொடர்புகள், அறிவு, திறமைகள் ஆகியவற்றை வளர்த்துக் கொள்வதற்கு பௌலிங் விளையாட்டை பயன்படுத்திக் கொண்டனர்.




நாளடைவில் தொலைக்காட்சி, வலைத்தளம் போன்ற புதிய வசதிகள், பொழுதுப் போக்கு கருவிகள் தோன்றின. அதிகமாக இந்த புதிய தொழில்நுட்ப பொழுதுப்போக்குகளில் மக்கள் ஆர்வம் செலுத்தினர். பௌலிங் விளையாட்டு மக்களிடையே செல்வாக்கை இழந்தது. மக்களின் சமூக நடவடிக்கைகள், தொடர்புகள் மறையத் தொடங்கின. காலப் போக்கில் அரசியல் ஆர்வமும் மக்களிடையே குறைந்தது. மக்களாட்சியின் வலிமையை குறைக்கும் வகையில் மக்களின் அரசியல் ஆர்வமின்மை பெரிதானது. மக்களாட்சி வலுவாக இருக்க வேண்டும் என்றால் மக்களிடையிலான சமூகத் தொடர்புகள் அதிகமாக வேண்டும்.



11th Std Political Science Tamil Medium Vol-2_Chapter 9_25_09_2018.indd 46 29-09-2018 12:40:45

### சமுதாயத்தின் முக்கியத்துவம்

சமுதாயவாதம் மனிதன் வெற்றிடத்தில் பிறப்பதில்லை என வாதிடுகின்றது. மனிதன் ஒரு கலாச்சார, சமூக விலங்கு ஆகும். மனிதன் குறிப்பிட்ட சமுதாயத்தில் கலாச்சாரத்தில் பிறக்கின்றான். மனிதனுடைய நம்பிக்கை, நடத்தை, திறன்கள், திறமைகள், அணுகுமுறைகள் எல்லாம் அவனுடைய சமுதாயத்தால் உருவாக்கப்படுகின்றன. ஒவ்வொரு நபரும் சமுதாயம் வழங்கும் வாய்ப்புகளை பயன்படுத்தி வாழ்கிறார்கள். மனிதன் அணுவைப் போல தனியாக வசிப்பதில்லை. சமுதாயத்துடன் பின்னி பிணைந்து வாழ்கிறான். மனிதன் சமுதாயத்திலிருந்து முற்றிலும் சுதந்திரமாக தடையில்லாமல் இயங்குவதில்லை(Not unencumbered Self). மாறாக அவன் சமுதாயத்தில் வேரூன்றி இருக்கிறான் (Situated Self).

**செயல்பாடு**

**சுய பரிசோதனை**

ஒவ்வொரு மனிதனும் தான் பிறந்த, வாழும் சமுதாயத்தினால் உருவாக்கப்படுகிறான். தமிழ்நாட்டில் பிறந்து, வாழ்வதால் நீங்களும் குறிப்பிட்ட திறன்கள், பழக்க வழக்கங்கள், திறமைகள் போன்றவற்றை பெற்றுள்ளீர்கள். மாணவ, மாணவிகள் ஒவ்வொருவரும் தமிழ் நாட்டில் பிறந்து வசிப்பதால் கற்றுக் கொண்ட திறமைகள் மற்றும் பழக்க வழக்கங்கள் ஆகியவற்றை பட்டியலிடுக. பின் வகுப்பில் தாக்கல் செய்க.

எடுத்துக்காட்டாக, தமிழ்நாட்டில் பிறக்கும், வசிக்கும் குழந்தை தமிழ் மொழியில் சரளமாக பேசுகின்றது. ஜப்பானில் பிறந்து, வசிக்கும் குழந்தை ஜப்பானிய மொழியில் சரளமாக உரையாடுகின்றது. கணினித் தொழில்நுட்பம் நிறைந்த நாட்டில் வாழும் மனிதர் கணினி நிபுணராக உருவாகிறார். அதே சமயத்தில் தகவல் தொழில்நுட்பம் முன்னேறாத நாடுகளில் வசிக்கும் நபர் அத்துறையில் நிபுணராக பெரும்பாலும் இருப்பதில்லை.




### அரசுக் கோட்பாடு

பொது நலனை மேம்படுத்தும் கருவியே அரசு என்று சமுதாயவாதம் கூறுகின்றது. பொது நலன் என்ற கருத்து எல்லா சமுதாயத்திலும் உள்ளது. ஒவ்வொரு சமுதாயமும் நோக்கங்கள், இலச்சியங்கள், நடவடிக்கைகளை எல்லோருடைய அடிப்படை முன்னேற்றத்திற்காக உருவாக்குகின்றன. பொது நலனை மேம்படுத்துவதற்காக இவைகள் தோற்றுவிக்கப்படுகின்றன. அரசு பொது நலனை நிறைவேற்றும் முயற்சிகளில் ஈடுபடுகின்றது. பொது நலனை சிதைக்கும் நடவடிக்கைகளை அது தடை செய்கின்றது. மேலும் சமுதாயவாதம் மக்களாட்சி அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசை ஆதரிக்கின்றது. சமுதாயத்தின் கோரிக்கைகளுக்குச் செவி சாய்க்கும், சமுதாயத்தின் மீது பொறுப்புணர்வு கொண்ட அரசு தான் நல்ல அரசு என்று சமுதாயவாதம் கூறுகின்றது.

### உரிமைகள் கோட்பாடு

உரிமைகளும் கடமைகளும் நெருங்கிய தொடர்புடையவை என்று சமுதாயவாதம் கூறுகின்றது. தாராளவாதத்தின் தனிநபர் சுய ஆட்சி மற்றும் உரிமைகள் மீது கொண்டுள்ள அளவு கடந்த பற்றை சமுதாயவாதம் விமர்சிக்கின்றது. மாறாகச் சமுதாயத்தின் நலன் தான் முக்கியமாகும் என்று கூறுகிறது.



11th Std Political Science Tamil Medium Vol-2_Chapter 9_25_09_2018.indd 47 29-09-2018 12:40:45


சமூக, பொது நலனுக்காகத் தனி நபர் உரிமைகளைக் கட்டுப்படுத்தலாம் என சமுதாயவாதம் வாதிடுகிறது. ஒவ்வொரு மனிதனும் தனது நலன் பற்றிய சிந்தனையைப் பெற்றிருக்கலாம், ஆனால் பொது நலன் என்ற கருத்துக்கு அடிபணிந்து இயங்க வேண்டும்.

'நேர்மறை உரிமைகள்' என்ற புதிய கருத்தை சமுதாயவாதம் ஆதரிக்கின்றது. அரசு மானியத்துடன் கல்வி, வீடு வசதி, பாதுகாப்பான சுற்றுச்சூழல், எல்லோருக்கும் சுகாதாரம் போன்ற உரிமைகளை சமுதாயத்தில் உள்ள அனைவருக்கும் வழங்குவது அரசின் கடமையாகும்.

**செயல்பாடு**

**உறுப்பினர் ஆகவும்**

உன்னுடைய பகுதியில் பல சமுதாய நிறுவனங்கள் செயல்படுகின்றன. இளைஞர் நற்பணிமன்றம் ஒரு நல்ல எடுத்துக்காட்டு ஆகும். இதுபோன்ற சங்கங்களுக்குச் சென்று மாணவர்கள் தங்களை உறுப்பினராக்கிக் கொள்ள வேண்டும். இவைகளின் செயல்பாடுகளை கூர்ந்து கவனிக்கவும். அவைகளில் பங்கேற்கவும். சாதி, மத அடையாளம் இல்லாத இவ்வமைப்புகளில் காணப்படும் நடவடிக்கைகளையும் செயல்பாடுகளையும் பற்றி ஆய்வு செய்து அறிக்கை தயாரிக்கவும்.




### நீதிக் கருத்து

சமுதாயவாதம் ஜான் ராவ்ஸின் நீதிக் கோட்பாட்டை நிராகரிக்கின்றது. நீதி என்பது உலகளாவியது. ஏனென்றால் அது மனிதனில் பகுத்தறிவில் உருவாகிறது என்ற ஜான் ராவ்ஸின் கருத்தை சமுதாயவாதம் ஏற்கவில்லை. உலகம் முழுவதும் பொருந்தக் கூடிய நீதிக் கோட்பாடு என்று ஒன்று இல்லை. ஒவ்வொரு சமுதாயமும் தனக்கென நீதிக் கோட்பாட்டை உருவாக்கிக் கொண்டுள்ளது. சமுதாயத்திற்கு சமுதாயம் நீதிக் கோட்பாடு மாறுபடும் என்று சமுதாயவாதம் கூறுகின்றது.

சுருக்கமாக கூறினால், சமுதாயவாதம் மனிதனின் வாழ்க்கையில் சமுதாயம் இன்றியமையாதது என வாதிடுகின்றது. சமுதாயத்தில் 'பொருத்தப்பட்ட மற்றும் அமைக்கப்பட்ட மனிதன்' (Situated and Embedded Man) என்ற கருத்து சமுதாயவாதத்தின் ஆணி வேராக உள்ளது. அரசு மக்களுக்கு நேர்மறை உரிமைகளை வழங்கிப் பொதுநலனை மேம்படுத்த வேண்டும், பாதுகாக்க வேண்டும். ஆனால் சமுதாயவாதம் வருங்காலத்தில் சமூக அல்லது கூட்டு சர்வாதிகாரத்திற்கு வழிவகுக்கும் எனக்கூறி தாராளவாதம் எதிர் விமர்சனம் செய்கிறது.

### 9.4 பின்நவீனத்துவம்

நவீனத்துவத்தை எதிர்த்துத் தோன்றிய ஒருங்கிணைந்த சில கருத்துக்களைப் பின் நவீனத்துவம் என அழைக்கின்றோம். பிரட்ரிக் நீட்சே, ஜாக் டெரிடா, ஃபுகோ, லியோடார்ட் ஆகியோர் பின் நவீனத்துவத்தை ஆதரித்தனர்.

நவீனத்துவம் அரசியல் கோட்பாட்டில் 200 ஆண்டுகளுக்கும் மேலாக ஆதிக்கம் செலுத்தி வந்தது. பகுத்தறிவு, பிரபஞ்சத்துவம், ஒற்றைக் காரணி உலக விளக்கமுறை ஆகிய கோட்பாடுகள் நவீனத்துவத்தின் முதுகெலும்பாக இருக்கின்றன. இக்கோட்பாடுகளை பின்நவீனத்துவம் நிராகரிக்கின்றது. மாற்றுச் சிந்தனைகளை வழங்குகின்றது. மேற்கத்திய அரசியல் கோட்பாட்டில் சில ஆண்டுகளுக்கு முன்பு பின் நவீனத்துவம் தோன்றி வளர்ந்துள்ளது



**கடவுள் இறந்துவிட்டார், அவரை நாம் கொன்று விட்டோம்.**
**– பிரட்ரிக் நீட்சே**

பிரட்ரிக் நீட்சே, பின் நவீனத்துவத்தின் தந்தையாகக் கருதப்படுகிறார். "கடவுள் இறந்துவிட்டார்" என்பது அவருடைய புகழ்பெற்ற கூற்று ஆகும்.

மனித வாழ்க்கையை விளக்குவதற்காகன உன்னத காரணியைத் தேடும் முயற்சியை மனிதர்கள் கைவிட வேண்டும். மனித வாழ்க்கையை விளக்குவது என்பது அவர்களது சக்திக்கு அப்பாற்ப்பட்டது ஆகும்.

நவீனத்துவம் உலகளாவியமுறை, ஒற்றைக்காரணி உலகவிளக்கமுறை ஆகியவற்றை ஆதரிக்கின்றது. பின் நவீனத்துவம் இவைகளை நிராகரிக்கின்றது. ஒரு காரணி மூலம் இந்த உலகத்தை நம்மால் விளக்க முடியாது. ஒரு உன்னத உண்மை அல்லது காரணி உலகத்தை இயக்குகிறது என நாம் கூற முடியாது. நமது வாழ்க்கை, பல பாகங்களைக் கொண்டது. ஒரு காரணியால் அதனை விளக்க முடியாது. காரல் மார்க்ஸ், பிரட்ரிக் ஹெகல் போன்ற தத்துவஞானிகள் கூறியது ஏற்புடையது அல்ல. காரல் மார்க்ஸ் மனித வாழ்க்கையின் அடிப்படைக் காரணி பொருளாதாரம் என்றார். தனிச்சொத்துரிமையை நீக்கி விட்டால் உலகப் பிரச்சனைகளை தீர்த்து விடலாம் என்று மார்க்ஸ் கூறினார்.

ஜெர்மானிய சிந்தனையாளரான பிரடிர்க் ஹெகல் உலக ஆன்மாவின் உருவாக்கமே உலகம் என்று கூறினார். உலகத்தை ஆன்மா மூலமாக விவரித்தார். பின்நவீனத்துவம் இது தவறு என்று கூறுகிறது. உலகை விளக்குவதற்கு ஒரு காரணி போதாது, பல காரணிகளால் தான் உலகத்தை விளக்க முடியும். கலாச்சாரம், மொழி, மதம், அரசியல் பொருளாதாரம் உள்ளிட்ட பல காரணிகளின் உதவியுடன் தான் உலகத்தை விளக்க முடியும்.

உண்மை ஒருமையில் இருப்பதில்லை, பன்மையில் இருக்கின்றது. எந்த ஒரு விஷயத்திலும் உண்மை என்ற ஒன்று இல்லை, உண்மைகள் தான் உள்ளன. எடுத்துக்காட்டாக, ஒரு தலைவரையோ, வரலாற்று நிகழ்ச்சியையோ நாம் கூறலாம். ஒவ்வொரு தலைவரைப் பற்றியும் பலவித கருத்துக்கள் உள்ளன. ஒரு சிலர் அந்தத் தலைவரை தீர்க்கத்தரிசி என்பர்.




இன்னும் சிலர் அவரை வார்த்தை ஜாலம் மட்டுமே உள்ளவர் என்பர். ஒரே தலைவர் நல்லவர், கெட்டவர், தூயவர், சுயநலவாதி என பலநிலைகளில் விமர்சிக்கப்படுகிறார். பார்பவர் கண்களில் தான் உண்மை இருக்கின்றது. கருப்பு மற்றும் வெள்ளை என்று இரண்டு நிறங்களில் தான் உலகம் உள்ளது எனக்கூற முடியாது. ஒரு கோட்டில் கருப்பும், வெள்ளையும் இரண்டு கடைசி புள்ளிகள் என்றால், இரண்டிற்கும் இடையில் இதர பல நிறங்கள் உள்ளன. இதுபோலத் தான் மனித வாழ்க்கையும் உலகில் உள்ளது.

> உலகில் உண்மைகள் என்று எதுவும் கிடையாது. விளக்கங்கள் மட்டுமே உள்ளன.
>
> \- பிரட்ரிக் நீட்சே

> **பின்நவீனத்துவம் பொதுவான உண்மை கிடையாது. என்னுடைய, உன்னுடைய உண்மைகள் மட்டுமே உள்ளன.**
>
> **கடந்த காலம் கிடையாது, எதிர்காலம் கிடையாது. நிகழ்காலம் மட்டுமே உள்ளது.**
>
> **அடிப்படைப் பொருளோ, நோக்கமோ கிடையாது. என்னுடைய பொருளும், நோக்கமும் மட்டுமே.**

ஜாக் டெரிடா என்பவர் ஒரு பிரான்சு நாட்டின் தத்துவ ஞானி ஆவார். இவர் பின் நவீனத்துவத்தை ஆதரித்தார். தகர்ப்பமைப்பு



11th Std Political Science Tamil Medium Vol-2_Chapter 9_25_09_2018.indd 49 29-09-2018 12:40:46

அல்லது கட்டுடைத்தல் என்ற அணுகுமுறையை உரைகளின் பொருளைப் புரிந்து கொள்வதற்கு அவர் உருவாக்கினார்.

ஒவ்வொரு உரையிலும், பல பொருள்கள் உள்ளன. மனிதனுடைய மொழி இன்னும் வளர்ச்சி அடையவில்லை. ஆகவே எழுத்தாளர்கள் தங்கள் எல்லாக் கருத்துக்களையும் உரைமூலம் புரியவைக்க முடியாது. உரையைப் படிப்பவர்கள் தங்களின் புரிதலுக்குத் தகுந்தவாறு உரையின் பொருளை உருவாக்குகிறார்கள். ஒரே உரையில் பல பொருள்கள் உள்ளன. தகர்ப்பமைப்பின் மூலமாகத்தான் உரையைப் புரிந்து கொள்ள முடியும்



**தகர்ப்பமைப்பு என்றால் என்ன?**

"வாசிப்பதற்கும், விளக்குவதற்கும், எழுதுவதற்கும் ஆன விதிகள்".

**ஜாக் டெரிடா**

நவீனத்துவத்தின் உலகளாவிய முறையைப் பின்நவீனத்துவம் நிராகரிக்கின்றது. அதற்கு மாறாக தனித்துவத்தை அது ஆதரிக்கின்றது. ஒரு முழு அமைப்பை விட, அதுனுடைய பகுதிகளே முக்கியம் என்று கூறுகின்றது. எடுத்துக்காட்டாக, நவீனத்துவம் உலகம் முழுவதற்கான உரிமைகள் கோட்பாட்டை ஆதரித்தது. பின்நவீனத்துவம் இதனை மறுக்கின்றது. பெண்கள், பழங்குடி மக்கள் போன்ற வஞ்சிக்கப்பட்ட, தனித்துவமான குழுக்களின், மக்களின் உரிமைகளுக்கு முக்கியத்துவம் தருகின்றது.

நவீனத்துவம் அமைப்பு ரீதியான மாற்றங்களுக்கு முக்கியத்துவம் தருகின்றது. பின்நவீனத்துவம் குறிப்பிட்ட சமூகக் குழுக்களின் மாற்றத்திற்கும், வளர்ச்சிக்கும் முக்கியத்துவம் வழங்குகின்றது.

## செயல்பாடு

**உண்மைகளைச் சேகரித்தல்.**

அருமை மாணவ, மாணவிகளே, விளக்கங்களைப் பொறுத்துதான் உண்மை நிலை உள்ளது என்பதை நீங்கள் தற்பொழுது அறிந்திருப்பீர்.

உங்களது வகுப்பை நான்கு குழுக்களாகப் பிரிக்கவும், ஒரு முக்கியமான தலைவரைத் தேர்வு செய்யவும். வெவ்வேறான பார்வைகள், குழுக்கள் மற்றும் கொள்கைகள் எவ்வாறு அந்த தலைவரின் தலைமைப் பண்பு, சிந்தனைகள் மற்றும் பங்களிப்பை பார்க்கின்றனர் என்று செய்திகளைச் சேகரிக்கவும்.

அரசியல் அல்லது வரலாறு அல்லது சர்வதேச அரசியல் போன்றவற்றில் உள்ள ஒரு முக்கிய நிகழ்வை எடுத்துக் கொள்ளவும். அதனைப் பற்றிய பலவிதமான விளக்கங்களை மாணவர்கள் சேகரிக்கவும்.

பின்நவீனத்துவம் அடையாள அரசியலை ஆதரிக்கின்றது. குறிப்பிட்ட நலிவடைந்த எளிமையான சமூகக குழுக்கள் ஆதிக்க முறைக்கு எதிராக தங்களது ஜாதி, இனம், பாலினம் அடிப்படையில் ஒருங்கிணைந்து மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு அடையாள அரசியல் என்பது பெயராகும். இந்த குழுக்களின் உறுப்பினர்கள் தங்களை பாசத்துடன் "நாம்" என்று அழைக்கிறார்கள். இவர்கள் எதிர்க்கும் குழுக்களின் உறுப்பினர்களை "அவர்கள்" என்று அழைக்கிறார்கள். குறிப்பிட்ட அடையாளம், இடம் சார்ந்த மக்களின் சக்தி ஏற்றலுக்கு அடையாள அரசியல் முயற்சிக்கின்றது.

பின்நவீனத்துவத்தை பல்வேறு சிந்தனையாளர்களும், அறிஞர்களும் விமர்சித்து உள்ளனர். ஆலன் கிர்பி என்ற பிரிட்டானிய கலாச்சார விமர்சகர் பின்

நவீனத்துவம் முடிந்துவிட்டது என்று கூறினார். ஏனென்றால், பின் நவீனத்துவத்தின் கலாச்சார காலம் முடிந்து எண்மின் (Digital) நவீனத்துவம் உருவாகி உள்ளது என்று ஆலன் கிர்பி கூறினார்.




அமெரிக்காவில் கருப்பு இன மக்கள் போராட்டம்.


## 9.5 சுற்றுச்சூழலியம்

நவீன அறிவியல் மற்றும் தொழில் நுட்பம் கொண்டு வந்த முன்னேற்றம் நமது பூமியின் சுற்றுச்சூழலை அழித்து வருகிறது. ஓசோன் அழிதல், பருவ நிலை மாற்றம், அமில மழை போன்ற சுற்றுச்சூழல் பிரச்சனைகள் நம்மை அச்சுறுத்துகின்றன. இயற்கையை அழிக்கும், முன்னேற்றத்திற்கு எதிரான இயக்கம் மற்றும் கொள்கைக்கு சுற்றுச்சூழலியம் என்பது பெயராகும். அகண்ட பிரபஞ்சத்தில் பூமியில் மட்டுமே நாம் வசிக்க முடியும். ஆகவே, பூமியைக் காப்பாற்றுவது அவசியமாகிறது.










**உங்களுக்குத் தெரியுமா?**

எல்லோருடைய தேவைகளையும் இயற்கையால் பூர்த்திச் செய்ய முடியும். ஒருவருடைய பேராசையையும் அதனால் பூர்த்தி செய்ய முடியாது. – மகாத்மா காந்தி

## ஆழச் சூழலியல் மற்றும் மேலோட்டமான சூழலியல்

### தத்துவ விவாதம்


மனிதனுக்கும், சூழலுக்கும், வளர்ச்சிக்கும், சூழ்நிலைக்கும் இடையில் உள்ள தொடர்புகளைப் பற்றி விரிவான விவாதம் உள்ளது. ஆழச் சூழலியல் – மேலோட்டமான சூழலியல் என்ற விவாதம் உள்ளது.

### மேலோட்டமான சூழலியல்

மனிதனை முன்னிறுத்தி, பயனுள்ள கருவியாக இயற்கையை அணுகும் கொள்கைக்கு மேலோட்டமான சூழலியல் என்பது பெயராகும். அமெரிக்கத் தத்துவ ஞானியான அந்தோணி வெஸ்டன் இக்கோட்பாட்டைத் தீவிரமாக ஆதரித்தார்.

மனிதனுக்கு இந்த உலகில் முதன்மையான இடத்தை இக்கோட்பாடு வழங்குகிறது. இயற்கை மனித நலனுக்காக உருவாக்கப்பட்டுள்ளது. எல்லா உயிர்களும் இயற்கைச் செல்வங்களும் மனித வாழ்விற்காக உள்ளன.

### மனித முன்னிறுத்தல் (Anthroprocentricism)




சுற்றுச்சூழல் பிரச்சனைகளுக்கு தொழில் நுட்பத் தீர்வுகளை இக்கோட்பாடு ஆதரிக்கின்றது. இயற்கை மாசுபடுவதைத் தடுப்பதற்கு மாற்று எரிசக்திகளை உருவாக்க வேண்டும். இவ்வணுகுமுறை மூன்று கருத்துகளை(R-களை) ஆதரிக்கின்றது. அவை i) பயன்பாட்டைக் குறைத்தல் (Reduce), ii) மறுபயன்பாடு (Reuse), iii) மறுசுழற்சி (Recycle) ஆகியவைகளாகும். இயற்கைச் செல்வங்களை சிக்கனமாக மறுசுழற்சி அடிப்படையில் பயன்படுத்த வேண்டும்.

**பயன்பாட்டைக் குறைத்தல் (Reduce)**
**மறுபயன்பாடு (Reuse)**
**மறுசுழற்சி (Recycle)**



### ஆழச் சூழலியல்

நார்வே நாட்டின் இயற்கைத் தத்துவ ஞானியான ஆர்ன் நேயஸ்(Arne Naess) 1973 ஆம் ஆண்டு இக்கருத்தை உருவாக்கினார். மகாத்மா காந்தி, ரஸேல் கார்ஸன் ஆகியோரிடமிருந்து இவர் ஊக்கம் பெற்றார். புவிக்கோள் மூன்று அங்கங்களைப் பெற்று இருக்கின்றது. அவைகள் i) மனிதர்கள், ii) மற்ற உயரினங்கள், iii) உயிரற்ற பொருட்களும் விசைகளும் ஆகும். பூமியில் வாழும் கோடிக்கணக்கான உயிர்களில் மனித இனமும் ஒன்று. மனித இனத்தை முன்னிறுத்துவதை நாம் கைவிட வேண்டும்.




மனிதர் அல்லா உயிரினங்களுக்கும் அடிப்படை மதிப்பு, அடையாளம் ஆகியவை உள்ளன. எல்லா உயரினங்களும் சமமான முக்கியத்துவத்தை (Bio Centric Equality) பெற்றிருக்கின்றன. இயற்கையை கவனத்துடன் பயன்படுத்தி மனிதர்கள் வாழ வேண்டும். பல்லுயிர்களைப் பாதுகாக்க வேண்டும். பேராசையால் மனித இனம் பல உயிர்களை அழித்து வருகிறது. உடனடியாக மக்கள் தொகையை இப்பூமியில் கட்டுப்படுத்த வேண்டும். மக்கள் தொகைப் பெருக்கம் சுற்றுச்சூழலை அழிக்கின்றது.

> **"மனிதர்கள் சுற்றுச்சூழலின் பகுதிகளாவர். வெற்றியாளர்கள் கிடையாது"**
>
> **-ஆல்டோ லெபோல்ட்**



11th Std Political Science Tamil Medium Vol-2_Chapter 9_25_09_2018.indd 52 29-09-2018 12:40:46

சுற்றுச்சூழல் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு நாம் நமது தொழல் நுட்பத் தத்துவம், பொருளாதாரம், அரசியல் ஆகியவற்றை உடனடியாக மாற்ற வேண்டும். மனிதர்கள் "இயற்கையான நபர்கள்" ஆவர். நமது நுகர்வுக் கலாச்சாரத்தை மாற்ற வேண்டும். நமது "சூழலியல் தடம்" குறைக்கப்பட வேண்டும். இயற்கையை மிகவும் சிக்கனமாக பயன்படுத்த வேண்டும். சுற்றுச்சூழல் மீது மனிதர்களின் தாக்கத்தை ஆழமாக, தத்துவமாக விவாதிப்பதால் இந்தக் கொள்கைக்கு ஆழச்சூழலியல் எனப் பெயரிடப்பட்டது.

**புவி நமக்குச் சொந்தமானது கிடையாது. நாம் தான் புவிக்கு சொந்தமானவர்கள்.**

**ஆழச் சூழலியல் – மேலோட்டமான சூழலியல் கருத்து முரண்பாடுகள்**

| ஆழச் சுழலியலின் எட்டு முக்கிய கருத்துகளின் சுருக்கம் | மேலோட்டமான சுழலியலின் எட்டு முக்கிய கருத்துகளின் சுருக்கம் |
|---|---|
| 1. புவியில் உள்ள எல்லா உயிரினங்களும் அடிப்படை மதிப்பை பெற்று இருக்கின்றன. | 1. புவியில் உள்ள அனைத் உயிரினங்களும் மனிதனின் தேவைக்காக உள்ளன. |
| 2. இவ்வுலகில் உள்ள எல்லா உயிரினங்களும் (சிறியவையோ, பெரியவையோ) புவியின் சிறப்பு தன்மைக்கு முக்கிய பங்கை ஆற்றுகின்றன. | 2. சிறிய உயிரினங்களை விட மனிதன் போன்ற பெரிய உயிரினங்கள்தான் முக்கியமானவைகள் ஆகும். |
| 3. மனிதர்கள் தங்களது அடிப்படை தேவைக்கு மட்டுமே மற்ற உயிரினங்களைப் பயன்படுத்த வேண்டும். | 3. மனிதர்கள் எல்லா இயற்கை வளங்களையும், உயிரினங்களையும் தங்களது பொருளாதார நலனுக்காக பயன்படுத்தலாம். |
| 4. உலகில் மனித மக்கள் தொகையை குறைப்பது மற்ற உயிரினங்களின் நலனுக்கு நல்லது ஆகும். | 4. மனித மக்கள் தொகை கட்டுப்பாடு இன்றி வளரலாம். |
| 5. உலகில் மனிதனின் தலையீடு அதிகமாகவும், மோசமாகவும் உள்ளது. | 5. தொழில் நுட்ப வளர்ச்சி எல்லா சிக்கல்களையும் நீக்கும். |
| 6. பொருளாதாரம், தொழில்நுட்பம், கொள்கை ஆகிய துறைகளில் மனிதனின் கொள்கைகள் உடனடியாக, தீவிரமாக மாற்றப்பட வேண்டும். | 6. பொருளியல் வாதமும், நுகர் கலாச்சாரமும் மனித சமுகத்தை ஆள வேண்டும். |
| 7. வாழ்க்கையின் நிலையை விட வாழ்க்கை தரம் முக்கியமானது. | 7. மனிதனின் வாழ்க்கை நிலை உயர்ந்து கொண்டே இருக்க வேண்டும். |
| 8. மேற்கண்ட உண்மைகளை உணர்ந்த அனைவரும் மாற்றத்தை கொண்டு வர முயற்சிக்க வேண்டும். | 8. சுற்றுச்சூழல் பிரச்சனைகளை நிபுணர்களிடம் விட்டுவிட வேண்டும். அவர்கள் தீர்வுகளை வழங்குவார்கள். மற்றவர்கள் சூழலியப் பிரச்சனைகளில் தலையிட கூடாது. |


### சூழலியலும் அரசியல் கோட்பாடும்

ஆண்ட்ரு ஹேவுட் என்ற புகழ் பெற்ற அரசியல் அறிஞர் அரசியல் கோட்பாட்டியலில் சூழலியலை மூன்று வகையாக பிரித்தார்.

(அ) சமூகச் சூழலியல்

(ஆ) நவீனச் சூழலியல்

(இ) ஆழச் சூழலியல்




### (அ) சமூகச் சூழலியல்

அமெரிக்க தத்துவ ஞானி முரே புக்சின் சமூக சூழலியல் என்ற கருத்தை உருவாக்கினார். சமூக சூழலியலில் மூன்று வித அணுகுமுறைகள் உள்ளன.

1. சூழலிய சமதர்மவாதம்
2. சூழலிய அமைப்பெதிர்வாதம்
3. சூழலியப் பெண்ணியம்

### 1. சூழலிய சமதர்மவாதம்

யூடால்ப் பரோ சூழலிய சோசலிசத்தை 'சிவப்பில் இருந்து பசுமைக்கு' (From Red to Green) என்ற நூலில் விவரித்தார். முதலாளித்துவத்தை இயற்கையின் எதிரியாக இந்த அணுகுமுறை பார்க்கின்றது. நுகர் கலாச்சாரத்தின் மூலமாக முதலாளித்துவம் இயற்கையை சீரழித்துவிட்டது. கட்டுபாடு இல்லாத சொத்துரிமை புவிக் கோளின் நலத்தையும் வளத்தையும் கெடுத்துவிட்டது. அரசியலில் புதிய அணுகுமுறை வேண்டும். சமதர்மவாதமும், சூழலியிலும் ஒன்று சேர வேண்டும். சமதர்மவாதம் மட்டுமே சுற்றுச்சூழலைக் காப்பாற்றும். அரசுக்குச் சமதர்மவாத திசையையும், தன்மையையும் வழங்கி இயற்கையைக் காப்பாற்ற வேண்டும்.

### 2. சூழலிய அமைப்பெதிர்வாதம்

முரே புக்சின் இந்த அணுகுமுறையை ஆதரித்தார். அதிகாரம் சூழலியலின் எதிரி என்று கூறினார். அரசு, மதம், குடும்பம் போன்ற போர்வையில் அதிகாரம் மனிதர்களை வாட்டிவதைக்கின்றது. மனிதனுடைய பரஸ்பர ஒத்துழைப்பு உணர்வை அதிகாரம் தடை செய்துள்ளது. இயற்கையாகவே மனிதன் பரஸ்பர ஒத்துழைப்புடன் வாழ்பவன் ஆவான். ஆகவே அதிகாரத்தை நீக்கி விட்டு பரஸ்பர ஒத்துழைப்புடன் புதியதோர் சமூகத்தை உருவாக்கி மனிதனையும் இயற்கையையும் காப்பாற்ற வேண்டும்.

### 3. சூழலியப் பெண்ணியம்

கரோலின் மெர்சன்ட 'இயற்கையின் மரணம்' (The Death of Nature) என்ற நூலில் சூழலியப் பெண்ணியத்தை விவரித்தார். ஆணாதிக்கம் இயற்கையின் எதிரியாகும். பெண்ணியம் இயற்கையின் தோழி ஆகும். ஆணாதிக்கம் பெண்கள் மீது மட்டும் அல்ல, இயற்கையின் மீதும் ஆணின் ஆதிக்கத்தை உருவாக்குகின்றது. பெண்களையும், இயற்கையையும் பயன்பாட்டு பொருளாக பாவிக்கின்றது. பெண்களுக்கும் இயற்கைக்கும் உள்ள அடையாளம், மதிப்பு, உயிர் தன்மை ஆகியவற்றை ஆணாதிக்கம் மதிப்பதில்லை. ஆகவே பாலினச் சமத்துவம் மற்றும் இயற்கை சார்ந்த புதிய அரசியலை நாம் உருவாக்க வேண்டும்.

### (ஆ) நவீனச் சூழலியல்

மேலோட்டமான சூழலியல் அரசியல் அறிவியலில் நவீன சூழலியலாக அழைக்கப்படுகிறது. தாராளவாதத்திற்கும், இயற்கைக்கும் இடையில் சுற்றுச்சூழலைக்

காப்பதற்காக தாராளவாதத்தைத் சிறிது திருத்தி அமைக்க வேண்டும் என்று நவீன சூழலியல் கூறுகின்றது. "அறிவொளி மனித முன்னிறுத்தல்" என்ற கருத்தை ஆதரிக்கின்றது. அதாவது இந்த புவியின் எதிர்காலத்தையும் மனித குலத்தின் எதிர்காலத்தையும் மனதில் வைத்து மனிதன் செயல்பட வேண்டும். "தலைமுறைகளுக்கு இடையிலான நீதி" என்ற கருத்தையும் நவீனச் சூழலியல் ஆதரிக்கின்றது. அதாவது இந்த புவியை வருங்கால தலைமுறைகளிடம் இருந்து கடனாகப் பெற்று உள்ளோம். ஆகவே புவியை பாதுகாத்து வருங்காலத்தில் அவர்களிடம் ஒப்படைக்க வேண்டும். "நிலையான முன்னேற்றம்" என்ற கருத்தையும் நவீனச் சூழலியல் ஆதரிக்கின்றது. சீக்கிரமாக பணக்காரர் ஆக வேண்டும் என்பதை விட நிதானமாக பணக்காரர் ஆக வேண்டும். இதற்காக இயற்கையை நிதானமாக பயன்படுத்த வேண்டும் என்று நவீனச் சூழலியல் கூறுகின்றது.




நவீனச் சூழலியல் ஒற்றை தன்மை தத்துவம் கிடையாது. மாறாகப் பன்முகத் தன்மை உடையது ஆகும். சில நவீன சூழலியல் ஆதரவாளர்கள் இயற்கையை காப்பாற்றுவதற்காக "பசுமை சர்வ அதிகார அரசை" உருவாக்க வேண்டும் என்று கூறுகின்றனர். மேலும் சிலர் "பசுமை முதலாளித்துவம்" வேண்டும் என்று கூறுகிறார்கள். பெரும்பான்மையான நவீனச் சூழலியல் ஆதரவாளர்கள் இயற்கையை காப்பாற்றுவதற்கும், நமது தேவையை பூர்த்தி செய்வதற்கும் சந்தை பொருளாதாரத்தை அரசு ஒழுங்கு படுத்த வேண்டும் என்று கூறுகிறார்கள்.

### (இ) ஆழச் சூழலியல்

இயற்கைக்கு சாதகமான புது அரசியல் திட்டம் மற்றும் அரசியல் அனுகுமுறையை ஆழச் சூழலியல் வலியுறுத்துகிறது. அரசியலுக்கும், இயற்கைக்கும் இடையிலான உறவில் அடிப்படை மாற்றத்தை உருவாக்க வேண்டும். மனிதர்கள், பிற உயிரினங்கள் மற்றும் உயரற்ற பொருட்கள் ஆகியவைகளிடையே உள்ள தொடர்பை மதிக்கும், புரிந்துகொள்ளும், காப்பாற்றும் அரசியல் வேண்டும்.

**செயல்பாடு**

**தன்னுணர்வேற்றம்**

மாணவ, மாணவிகளே, உங்களுடைய கிராமம், நகரம், மாநகரம் மற்றும் இதர பகுதிகள் ஆகியவற்றைக் கூர்ந்து நோக்குங்கள். தன்னார்வ நிறுவனங்களும், உன்னத வழிகாட்டிகளும் சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்காக அர்ப்பணிப்புடன் செயல்படுவதை காணலாம். அவர்களுடன் நீங்களும் இணைந்து பணியாற்றுங்கள், உங்கள் பள்ளியில் பசுமைக் குழுக்களை உருவாக்குங்கள். மரம் நடுதல், குளத்தைத் தூர்வாருதல், அடிபட்ட விலங்குகளுக்கு சிகிச்சை அளித்தல் போன்ற சுற்றுச்சூழல் சார்ந்த நடவடிக்கைகளில் ஈடுபடுங்கள்.

### இந்தியாவின் சுற்றுச்சூழல் இயக்கங்கள்

நவீன முன்னேற்றம் இயற்கையைச் சீரழிப்பதால் பல்வேறு எதிர்ப்பு போராட்டங்கள் உலகம் முழுவதும் தோன்றியுள்ளன. நமது நாட்டிலும் சூழலையும் பல்லுயிர் அமைப்பையும் காப்பாற்றுவதற்காகப் பல சுற்றுச்சூழல் பாதுகாப்பு இயக்கங்கள் தோன்றின. அவைகளில் முக்கியமான நான்கு இயங்கங்களை நாம் இங்கு காணலாம்.

அ. பீஸ்நவ் இயக்கம்

ஆ. சிப்கோ இயக்கம்

இ. அப்பிக்கோ இயக்கம்

ஈ. அமைதி பள்ளத்தாக்கு பாதுகாப்பு இயக்கம்



11th Std Political Science Tamil Medium Vol-2_Chapter 9_25_09_2018.indd 55 29-09-2018 12:40:47

### அ. பீஸ்நவ் இயக்கம் (Bisnau Movement):

பதினெட்டாவது நூற்றாண்டில் ராஜஸ்தானில் உருவான வெற்றிகரமான சுற்றுச்சூழல் இயக்கமே பீஸ்நவ் இயக்கமாகும். தார் பாலைவனத்தில் குரு ஜம்பேஸ்வர் என்ற ஞானி பீஸ்நவ் என்ற மதக் குழுவை இடைக்கால வரலாற்றில் உருவாக்கினார். 'பீஸ்நவ்' என்ற இந்தி மொழிச் சொல்லிற்கு '29' என்பது பொருளாகும். இயற்கையுடன் ஒன்றி வாழ வேண்டிய வாழ்க்கையை தனது 29 கோட்பாடுகள் மூலமாக இம்மத உட்குழு விவரிப்பதால் பீஸ்நவ் என்று அழைக்கப்பட்டது.



ஜோத்பூர் மகாராஜா பதினெட்டாவது நூற்றாண்டில் ஒரு புதிய அரண்மனையை கட்டினார். கேஜர்லி கிராமத்தில் அரக்க மரம் நிறைந்த காடு உள்ளது. தனது அரண்மனைக்காக மரங்களை வெட்டி வருமாறு இராணுவத்தை அனுப்பினார். அம்ரிதா தேவி என்ற பெண்மணி மரங்களை வெட்டக்கூடாது என்று போராட்டம் செய்தார். மரத்தை வெட்டுவதற்கு பதிலாக தனது தலையை வெட்டுங்கள் என்று கூறினார். இராணுவம் அவரது தலையை துண்டித்தது. கிராம மக்கள் அனைவரும் வனத்தை காப்பாற்றுவதற்காக தங்களது உயிரைக் கொடுத்தனர். மொத்தம் 363 கிராம உறுப்பினர்கள் உயிர்த் தியாகம் செய்தனர். இச்சம்பவத்தைக் கேள்விப்பட்ட மகாராஜா உடனடியாக தனது இராணுவத்தைத் திரும்ப பெற்றார். அப்பகுதியைப் பாதுகாக்கப்பட்ட வனம் என்று அறிவித்தார். பீஸ்நவ் கேஜர்லி இயக்கம் நவீன இந்தியாவின் முதல் வெற்றிகரமான சுற்றுச்சூழல் இயக்கமாகும்.

**குறிப்பிடத்தக்க மேற்கோள்**

வெட்டப்பட்ட மரத்தைவிட வெட்டுண்ட மனித உயிர் முக்கியமானது அல்ல.

### ஆ. சிப்கோ இயக்கம் (Chipko Movement):

உத்தரகண்ட் மாநிலத்தில் 1973–ஆம் ஆண்டு நடைபெற்ற அமைதியான சுற்றுச்சூழல் பாதுகாப்பு இயக்கமே சிப்கோ இயக்கமாகும். இந்தியில் 'சிப்கோ' என்றால் 'கட்டிப்பிடி' என்று பொருள்படும். விளையாட்டு பொருட்கள் தயாரிக்கும் கம்பெனி, அலக்நந்தா பள்ளத்தாக்கில் மரங்களை வெட்டுவதற்காக அரசு அனுமதி பெற்று வந்தது. மரங்களை வெட்டக்கூடாது என்று அப்பகுதி மக்கள், முக்கயமாக பெண்கள் அமைதியாக போராடினார்கள். 'தஸோலி கிராம ஸ்வராஜ்ய மண்டல்' (DGSM) என்ற அரசு சாரா அமைப்பும் அதன் தலைவர் சந்திபிரசாத் பட் அவர்களும் போராடினார்கள்.

புகழ் பெற்ற சுற்றுச் சூழல் வாதியான சுந்தர்லால் பகுகுணா போராட்டத்தில் குதித்தார். பெரும் அளவில் பெண்கள் போராட்டத்தில் பங்கேற்றனர். தூம்சிங் நெகி, பச்னி தேவி போன்ற பெண் தலைவர்கள் மக்களின் வன உரிமைக்காக போராடினார்கள். 1980–ஆம் ஆண்டு முதல் இமயமலை வனப்பகுதியில் மரங்களை வெட்டுவதற்கு மத்திய அரசு தடைவிதித்து. பெண்ணியம், காந்தியம், சுற்றுச் சூழலியம் ஆகிய மூன்று கொள்கைகளை சிப்கோ இயக்கத்தில் நாம் காணலாம்.





**சுற்றுச்சூழல் தான் நிரந்தர பொருளாதாரம் ஆகும்.**

**– சுந்தர்லால் பகுகுணா**

### இ. அப்பிக்கோ இயக்கம் (Appiko Movement):

மேற்குத் தொடர்ச்சி மலையில், கர்நாடகாவின் உத்திர கன்னட மாவட்டத்தில் நடைபெற்ற இயக்கமே அப்பிக்கோ இயக்கமாகும். அப்பிக்கோ என்றால் கன்னட மொழியில் 'கட்டிக்கோ' என்று பொருளாகும். இம்மாவட்டத்தில் தொழிற்சாலைகள் பெருகியதால் 1950–ஆம் ஆண்டு 81% இருந்த வனப்பரப்பு 1980–ஆம் ஆண்டு 24% ஆக குறைந்தது. சூற்றுச்சூழல் ஆர்வமுள்ள மக்கள் மரங்களை கட்டி அணைத்து போராட்டம் நடத்தினர். எஞ்சிய காடுகளைக் காப்பாற்றுதல், அழிக்கப்பட்ட காடுகளை உருவாக்குதல், நல்ல முறையில் வளங்களைப் பயன்படுத்தும் விழிப்புணர்வை உருவாக்குதல் ஆகிய மூன்று நோக்கங்களை அப்பிக்கோ இயக்கம் ஆதரித்தது. மரங்களை கட்டி அணைத்துக் காப்பாற்றியதால் அப்பிக்கோ இயக்கம் என்று பெயர் வந்தது.

### ஈ. அமைதி பள்ளத்தாக்கு பாதுகாப்பு இயக்கம்

அமைதிப் பள்ளத்தாக்கு என்பது கேரளாவின் பாலக்காடு மாவட்டத்தில் மேற்கு தொடர்ச்சி மலையில் உள்ளது. பசுமை மாறாக் காடுகள் இங்கு உள்ளன. ஆங்கிலத்தில் Silent Valley (அமைதிப் பள்ளத்தாக்கு) என்று அழைக்கப்படுகிறது. மகாபாரதத்தில் பாண்டவர்களின் மனைவியான திரௌபதிக்கு 'சைரந்திரி' என்று மற்றொரு பெயர் உள்ளது. இவ்வனப்பகுதி அவர்களின் நினைவாக சைரந்திரி வனம் என்று அழைக்கப்பட்டது. காலனிய ஆட்சியில் அந்த வனப்பகுதிக்கு ஆங்கிலேயர்கள் சென்றபோது அமைதியான வனமாக அது இருந்தது. வனத்தில் சத்தத்தை தொடர்ச்சியாக உருவாக்கும் சிகாடஸ் பூச்சிகள் அங்கு இல்லாததால் வனம் அமைதியாக இருந்தது என்று ஆங்கிலேயர் அதற்கு அமைதிப் பள்ளத்தாக்கு என்று பெயரிட்டனர்.

அந்தப் பள்ளத்தாக்கில் பல்லுயிர்கள் அதிகம் உள்ளன. சிங்கவால் குரங்குகள் அதிகம் காணப்படுகின்றன. சிங்கவால் குரங்கின் அறிவியல் பெயர் 'மகாகா சைலேனஸ்' என்பதாகும். இதனால் தான் அது 'சைலண்ட் வேலி' என்று அழைக்கப்படுகிறது என்பதும் ஒரு வாதமாகும். கேரள மாநில மின்சாரத்துறை 1970–களில் மின்சாரம் தயாரிப்பதற்காக அவ்வனத்தில் உள்ள குந்திப்புழா என்ற நதியில் அணைகட்டத் தொடங்கியது.

KSSP என்ற 'கேரள சாஸ்திர சாகித்ய பரிசத்' அமைப்புச் சுற்றுச்சூழல் போராட்டத்தை இந்த அணைக்கு எதிராக நடத்தியது. அணைகட்டினால் அமைதிப் பள்ளத்தாக்கு அழிந்துவிடும் என்ற பெரிய போராட்டம் நடைபெற்றது. பல்வேறு தரப்பினரும் போராட்டத்தில் குதித்தனர். ஆகவே 1980–ஆம் ஆண்டு கேரளா மாநில அரசாங்கம் அணைகட்டும் திட்டத்தைக் கைவிட்டது. 1985–ஆம் ஆண்டு மத்திய அரசாங்கம் இப்பகுதியை தேசிய பூங்காவாக அறிவித்தது. பின்னர் இப்பகுதி 'நீலகிரி உயிர்க்கோல இருப்பாக' அறிவிக்கப்பட்டுள்ளது. அமைதிப் பள்ளத்தாக்கு பாதுகாப்புப் போராட்டம் 20–வது நூற்றாண்டின் மிகச்சிறந்த இந்திய சுற்றுச்சூழல் இயக்கமாக கருதப்படுகிறது.


அமைதிப் பள்ளத்தாக்கு


சிங்கவால் குரங்கு

**பாடச்சுருக்கம்**

அமைப்பெதிர்வாதம் கொள்கை அதிகாரத்தை ஒழித்து விட்டு அரசு, தனி சொத்துக்கள் முறை, மதம் ஆகியவைகளின் பிடியிலிருந்து மனிதனை விடுவிக்க முயற்ச்சிக்கின்றது. அரசு ஒரு தேவையற்ற தீமை. ஆகவே உடனடியாக அதனை அழிக்க வேண்டும்.


11th Std Political Science Tamil Medium Vol-2_Chapter 9_25_09_2018.indd 57 29-09-2018 12:40:47

மனிதர்களின் பரஸ்பர ஒத்துழைப்பு உணர்வுடன் புதிய முறையை உருவாக்க வேண்டுமென்று அமைப்பெதிர்வாதம் கூறுகிறது.

ஆண் ஆதிக்கத்திலிருந்து பெண்களை விடுவிப்பதற்காகப் பெண்ணியம் போராடுகின்றது. தாராளவாதப் பெண்ணியம், மார்க்கியப் பெண்ணியம், தீவிரப் பெண்ணியம், சுற்றுசூழல் பெண்ணியம், பின் காலனி ஆதிக்கப் பெண்ணியம் என பல வகைகள் உள்ளன. ஆண் ஆதிக்கம், தனிச்சொத்துரிமை, அதிகாரம் ஆகியவைகளில் இருந்து பெண்களைப் பாதுகாப்பதே இவைகளின் நோக்கமாகும்.

மனிதனின் வாழ்க்கையில் சமுதாயம் தான் முக்கியமானது என்று சமுதாயவாதம் கூறுகின்றது. மனிதன் அணுவைப் போன்று தனியாக இருப்பதில்லை. சமுதாயத்தில் இருந்து முற்றிலும் விடுபட்டு இயங்குவதும் இல்லை. மாறாக, சமுதாயத்தில் அவன் வேரூன்றி இருக்கின்றான். சமுதாயவாதம் பொது நலனையும், நேர்மறை உரிமைகளையும் ஆதரிக்கின்றது.

நவீனத்திற்கு எதிராகத் தோன்றிய கொள்கை பின்நவீனத்துவம் ஆகும். உலகளாவிய முறை, ஒற்றைகாரணி உலக விளக்க முறை ஆகிய நவீன கருத்துக்களைப் பின்நவீனத்துவம் நிராகரிக்கின்றது. உலகில் உண்மை என்று எதுவும் கிடையாது. விளக்கங்கள் மட்டுமே உள்ளன. சமூகத்தில் நலிவடைந்த, குறிப்பிட்ட சமூக குழுக்களின் முன்னேற்றத்தை பின் நவீனத்துவம் ஆதரிக்கின்றது.

இயற்கையை பேணுவதற்காக சுற்றுச்சூழலியம் முயற்சிக்கின்றது. ஆழச் சூழவியல் மற்றும் மேலோட்டமான சூழவியல் என்ற இரண்டு வகைகள் உள்ளன.

மேலோட்டமான சூழலியல் மனித முன்னிறுத்தல் கோட்பாட்டை ஆதரிக்கின்றது. மனித இனம் தான் உலகின் முதன்மை இனம் என்று கூறுகிறது. இதற்கு மாறாக ஆழச் சூழலியல் உயிர் முதன்மை சமத்துவக் கோட்பாட்டை ஆதரிக்கின்றது. மனிதன் உள்ளிட்ட எல்லா உயிரினங்களும் சமம் என்று கூறுகின்றுது. அரசியல் கோட்பாட்டியலில் சமூகச் சூழலியல், நவீனச் சூழலியல், ஆழச் சூழலியல் என்று மூன்று வகைகள் உள்ளன. சுற்றுச்சூழல் – வளர்ச்சி விவாதத்தில் இம்மூன்று சிந்தனைகளும் தங்களின் வாதங்களை முன் வைக்கின்றன.

## அருஞ்சொற்பொருள்

**அமைப்பெதிர்வாதம்** – எவ்வித அதிகாரமும் இல்லாமல் உறுப்பினர்களுக்கு இடையிலான பரஸ்பர ஒத்துழைப்பின் மூலம் இயங்கும் அமைப்பு

**பெண்ணியம்** – பெண்களின் சக்தி ஏற்றத்தையும், பாலின சமத்துவத்தையும் ஆதரிக்கும் கொள்கை.

**ஆணாதிக்க முறை** – குடும்பம், அரசியல், பொருளாதாரம், கலாச்சாரம், மதம், பிற தளங்களில் பெண்கள் மீது ஆண்கள் ஆதிக்கம் செலுத்தும் முறை.

**பின் காலனி ஆதிக்கம்** – காலனி ஆதிக்கத்தில் இருந்து விடுதலை பெற்ற பின் நாடுகள் இருக்கும் நிலை (எடுத்துக்காட்டு 1947க்கு பிறகு இந்தியா)

**காலனி ஆதிக்கம்** – ஐரோப்பிய நாடுகள் ஆசிய ஆப்பிரிக்க நாடுகளை அடிமைப்படுத்தி சுரண்டிய முறை.

**விஷாகா வழிமுறைகள்** – உச்ச நீதிமன்றம் பணி இடங்களில் பாலின தொந்தரவுகளில் இருந்து பெண்களை காப்பாற்றுவதற்காக தனது தீர்ப்பில் வழங்கிய வழிமுறைகள்.

பாலினச் சமத்துவம் – ஆண் பெண் இடையிலான பாலினச் சமத்துவம்

பொது நலம் – மக்களின் பொதுவான நலன் அல்லது விருப்பம்

தனியான நபர் அல்ல – மனிதர்கள் தனியான நபர்கள் அல்ல. மற்ற மனிதர்களுடன் இணைந்து வாழ்கிறார்கள். ஆகவே சமூகத்தில் இருந்து தொடர்பு இல்லாமல் அவர்கள் வாழ்வதில்லை.

அமைந்துள்ள நபர் – மனிதர்கள் சமூகத்தில் வேர் ஊன்றி அமர்ந்து, அமைந்து இருக்கிறார்கள்.

குறைப்பு வாதம் – இந்த உலகத்தில் உள்ள அனைத்தையும் ஒரு குறிப்பிட்ட காரணியாக குறைத்து விளக்கும்வாதம்.

பிரபஞ்ச வாதம் – ஒரு குறிப்பிட்ட காரணி பிரபஞ்சம் முழுவதற்கும் பொருந்தும் என்ற கொள்கை.

தனிப்பட்ட வாதம் – ஒவ்வொரு மதமும், மொழியும், இனமும் தனித்துவமானது, முக்கியமானது என்னும் வாதம்.

தகர்ப்பமைப்பு(கட்டுடைத்தல்) முறை – உட்புற மற்றும் மறைக்கப்பட்ட உண்மைகளை புரிந்து கொள்ளுதல். ஒரு குறிப்பிட்ட எழுத்துப் படைப்பை படிக்கும் போது மேலோட்டமான பொருளை விட்டுவிட்டு உட்புற, மறைந்து இருக்கும் பொருளை புரிந்து கொள்வது.

அடையாள அரசியல் – குறிப்பிட்ட நலிவடைந்த சமூக குழுக்கள் ஆதிக்க முறைக்கு எதிராக தங்களது சாதி, இனம், பாலினம் அடிப்படையில் ஒருங்கிணைந்து மேற்கொள்ளும் அரசியல் நடவடிக்கைகள்.

மனித முன்னிறுத்துதல் – மற்ற உயிரினங்களை விட மனித இனம் முதன்மையான மற்றும் உயர்ந்தது என்ற அணுகுமுறை. மனிதனின் வாழ்விற்கும், இன்பத்திற்கும் தான் மற்ற உயிரினங்கள் இவ்வுலகில் உள்ளன.

உயிர் முதன்மைச் சமத்துவம் – இவ்வுலகில் உள்ள எல்லா உயிரினங்களும் சமம், மற்ற உயிரினங்களை விட மனிதன் எந்த விதத்திலும் உயர்ந்தவன் கிடையாது.

தலைமுறைகள் இடையிலான நீதி – புவியை நாம் வருங்கால சந்ததியிடம் இருந்து கடன் வாங்கி உள்ளோம். இயற்கையை அழிக்காமல் மீண்டும் நாம் வருங்கால சந்ததியிடம் ஒப்படைக்க வேண்டும்.

நிலையான முன்னேற்றம் – இயற்கைச் செல்வங்களை நாம் பயன்படுத்தும் போது வருங்கால தேவைகளையும் நமது நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். நிலைத்த, நீடிய முன்னேற்றத்தை நாம் சாத்தியப்படுத்த வேண்டும்.

ஆழச் சூழலியல் – முன்னேற்றம் என்ற பெயரில் சுற்றுச் சூழலை பாதிக்கும் நமது நடவடிக்கைகளை ஆழமாக உணர்ந்து கேள்வி கேட்க வேண்டும்.

சிப்கோ இயக்கம் – இந்தி மொழியில் சிப்கோ என்றால் கட்டிப்பிடி என்பது பொருளாகும். மக்கள் மரங்களை கட்டிப்பிடித்து அவற்றை வெட்டப்படுவதில் இருந்து காப்பாற்றிய இயக்கம்.

அப்பிக்கோ இயக்கம் – கன்னட மொழியில் அப்பிக்கோ என்றால் கட்டிப்பிடி என்பது பொருள் ஆகும். கர்நாடக மாநிலத்தில் மரங்களை கட்டிப்பிடித்து காப்பாற்றிய இயக்கமே அப்பிக்கோ இயக்கம் ஆகும்.

## மதிப்பிடுதல்

### I. சரியான பதிலை தேர்வு செய்யவும்

1. அமைப்பெதிர்வாதக் கொள்கை கீழ்க்கண்டவற்றில் எதனை ஆதரிக்கவில்லை?

   a) அராஜகத்தை ஆதரிக்க வேண்டும்
   b) இக்கொள்கை ஒழுங்கை ஆதரிக்கின்றது
   c) மனிதர்கள் பரஸ்பர ஒத்துழைப்புடன் நன்றாக வாழ்வார்கள்
   d) அரசை எதிர்க்கின்றது

PN74D4

2. கீழ்க்கண்டவற்றில் அதிகாரமில்லாக் கொள்கையை ஆதரித்தவர் யார்?

   a) காரல் மார்க்ஸ்
   b) ஜோசப் பிரௌதான்
   c) ஆதம் ஸ்மித்
   d) ஜான் லாக்

3. அமைப்பெதிர்வாதக் கொள்கை எந்த அமைப்பை சுரண்டல் தன்மை உள்ளது என எதிர்த்தது?

   a) அரசு
   b) தனிச் சொத்துக்கள்
   c) மதம்
   d) மேற்கண்ட அனைத்தும்

4. பெண்ணியம் யாருடைய திறன், சக்தி ஏற்றத்தை ஆதரிக்கின்றது?

   a) பெண்கள்
   b) குழந்தைகள்
   c) சிறுபான்மையினர்
   d) பழங்குடி மக்கள்

5. தனிப்பட்ட வாழ்விலும் அரசியல் என்பதன் பொருள்

   a) நாம் அரசியலில் தலைவர்களின் தனிப்பட்ட வாழ்க்கையை விவாதிக்க வேண்டும்
   b) நாம் அரசியலில் நேர்மையை எதிர்ப்பார்க்க வேண்டும்
   c) நாம் குடும்பத்திலும், அரசியலிலும் பெண்களுக்கான அரசியல் உரிமைகளைப் பற்றி பேச வேண்டும்
   d) நாம் அரசியல் வாதிகளின் தனிப்பட்ட வாழ்க்கையைப் புறக்கணிக்க வேண்டும்

6. பின்நவீனத்துவத்தின் தந்தை யார்?

   a) ஜாக் டெரிடா (Jacques Derrida)
   b) மிசல் பூக்கோ (Michel Foucault)
   c) பிரீட்ரிக் நீட்சே(Friedrich Nietzsche)
   d) காரல் மார்க்ஸ்(Karl Marks)

7. ஆழச் சூழலியல் என்ற கருத்தை உருவாக்கியவர் யார்?

   a) மிசல் பூக்கோ (Michel Foucault)
   b) இராபர்ட் டி புட்நம் (Robert D Putnam)
   c) ஆட்ரி லார்ட் (Audre Lorde)
   d) ஆர்னே நியேஸ் (Arne Naess)

8. பின்நவீனத்துவம் பற்றிய தவறான கருத்து எது?

   a) நவீனத்தை நிராகரிக்கின்றது
   b) உண்மை என்று ஒன்று இல்லை. உண்மைகள் என்பது தான் சரி
   c) சர்வதேச வாதத்தை எதிர்க்கின்றது
   d) தனித்துவ வாதத்தை நிராகரிக்கின்றது.

9. பின்நவீனத்துவம் எதனுடன் தொடர்பு உள்ளது?

a) அடையாள அரசியல்
b) தேசிய அரசியல்
c) சர்வதேச அரசியல்
d) வர்க்க அரசியல்

10. சமுதாயவாதம் எதனை நம்புகிறது?

a) மதம்
b) சமுதாயம்
c) வர்க்கம்
d) மொழி

11. சமுதாயவாதத்தின் படி மனிதன்

a) அணுவைப் போன்று தனிமையானவன்
b) சுயநலமானவன்
c) மதவாதி
d) நேர்மறை உரிமைகள் உள்ளவன்

12. சமுதாயவாதம் ஆதரிப்பது

a) இயற்கை உரிமைகள்
b) தார்மீக உரிமைகள்
c) நேர்மறை உரிமைகள்
d) பொருளாதார உரிமைகள்

13. பொருத்துக

| | |
|---|---|
| 1. நவீனச் சூழலியல் | a) உயிர் முதன்மை சமத்துவம் |
| 2. ஆழச் சூழலியல் | b) மறுசூழற்சி |
| 3. மேலோட்டமான சூழலியல் | c) மரத்தை கட்டிப்பிடி இயக்கம் |
| 4. சிப்கோ இயக்கம் | d) நீடிய முன்னேற்றம் |

14. அப்பிக்கோ இயக்கம் என்பது

a) காப்பாற்றுவதற்காக மரங்களைக் கட்டிப்பிடிங்கள்
b) ஏழை மக்களுக்கு உணவு கொடுங்கள்
c) எளியோருக்குக் கல்வியை கற்றுத் தாருங்கள்
d) மக்களின் நோய்களைச் சரியாக்குங்கள்

15. இந்தியா, நமிபியா போன்ற நாடுகளுக்கு பொருத்தமான பெண்ணியம் எது?

a) பின்காலனியப் பெண்ணியம்
b) தாராளவாதப் பெண்ணியம்
c) தீவிரப் பெண்ணியம்
d) மார்க்சியப் பெண்ணியம்

## II. கீழ்க்கண்ட கேள்விகளுக்கு மிகவும் சுருக்கமாக பதில் வழங்கவும்

16. ஆந்தரபோ சென்ரிசம் (மனித முன்னிருத்தல்) என்பதை விளக்கவும்

17. அடையாள அரசியல் என்றால் என்ன?

18. 'அமைந்துள்ள சுயம்' (Situated Self) என்பதன் பொருளை காண்க

19. 'விசாகா வழிமுறைகள்' என்றால் என்ன?

20. பெண்ணியம் என்பதன் பொருளைத் தருக.



11th Std Political Science Tamil Medium Vol-2_Chapter 9_25_09_2018.indd 61 29-09-2018 12:40:48

21. 'அரசு ஒரு தேவையற்ற தீமை' என ஏன் அதிகாரமில்லாக் கொள்கை கூறுகிறது?

22. அதிகாரமில்லாக் கொள்கை (Anarchism) என்பதன் சொல் வரலாற்றைத் தருக.

## III. கீழ்க்கண்ட கேள்விகளுக்கு சுருக்கமாக பதில் தருக

23. தீவிரப் பெண்ணியத்தின் முழக்கம் 'தனிப்பட்ட வாழ்விலும் அரசியல்' என்பதைப் பற்றி கருத்து தெரிவிக்கவும்.

24. 'ஆழச் சூழலியல்' கருத்தைப் பற்றி எழுதுக.

25. உண்மை என்பது ஒறுமையில் இல்லை. உண்மைகள் என பன்மையில் தான் உள்ளன என்ற பின் நவீனத்துவ கருத்தை நியாயப்படுத்துக.

26. சமுதாயவாதத்தின் நேர்மறை உரிமைகள் என்ற கருத்தை விரிவாக விளக்கவும்.

27. அரசுக்கு பதிலாக அதிகாரமில்லாக் கொள்கை பரிந்துரைக்கும் அமைப்பு என்ன? அது சாத்தியமானதா என விளக்கவும்.

28. சுற்றுச் சூழல் பெண்ணியம் என்றால் என்ன? பெண்களும் இயற்கையும் ஆணாதிக்கத்தால் பாதிக்கப்பட்ட இரட்டையர்கள் என்ற அதனுடைய கூற்றை நீ ஏற்றுக் கொள்கிறாயா?

29. மேலோட்டமான (ஆழமற்ற) சூழலியல் சுற்றுச் சூழலைக் காப்பதற்குப் பரிந்துரைத்த தீர்வுகளைக் கண்டு எழுதுக.

## IV. கீழ்க்கண்ட கேள்விகளுக்கு விரிவான பதில்களை தருக.

30. அதிகாரமில்லாக் கொள்கையின் முக்கிய தன்மைகளை மதிப்பிடுக.

31. பெண்ணியத்தின் பல்வேறு வகைகளை விவாதிக்கவும்.

32. இந்தியாவின் முக்கிய சுற்றுச் சூழல் இயக்கங்களை விவரிக்கவும்.

33. சுற்றுச்சூழல் அரசியல் கோட்பாட்டின் வகைகளை ஆய்வு செய்யவும்.

34. மனிதன், சமுதாயம், உரிமைகள் மற்றும் நீதி பற்றிய சமுதாயவாதத்தின் நிலைப்பாட்டை விவாதிக்கவும்.

## மேற்கோள் நூல்கள் (Reference books)



1. Gauba, O.P.(2009) An Introduction to Political Theory, New Delhi: Macmillan Publishers India Ltd.
2. Heywood, Andrew (2003) Political Ideologies: An Introduction, London: Macmillan
3. Naess, A. (1973) 'The shallow and the deep, long-range ecology movement: a summary'. Inquiry, vol. 16
4. Rajeev Bhargava & Ashok Acharya (Ed), (2016) Political theory: An Introduction, New Delhi: Thomson press.
5. Ramasamy, Sushila (2009) "Political Theory – Ideas and Concepts, Chennai: Macmillan India Ltd.
6. IGNOU Political Science Study Materials, B.A and M.A




11th Std Political Science Tamil Medium Vol-2_Chapter 9_25_09_2018.indd 62 29-09-2018 12:40:48

அலகு 10

# பொதுக்கருத்து மற்றும் கட்சி முறை



## அறிமுகம்

இந்த அலகு உலகின் பல்வேறு நாடுகளில் பின்பற்றப்படும் கட்சி முறைகளின் பொருள் மற்றும் அதன் பரிணாம வளர்ச்சியினை பற்றி கவனம் செலுத்துகிறது. நவீன மக்களாட்சியில் கட்சி முறைகளின் தோற்றத்தை ஆராய்வதுடன், அரசியல் கட்சிகளின் இயல்பு, பண்புகள், வகைகள் மற்றும் குறிப்பாக மக்களாட்சியில் அதன் செயல்பாடுகளை விளக்க முயல்கிறது. இந்த பொது பின்னணியில் இருந்து குறிப்பாக தமிழ்நாட்டை கவனத்தில் கொண்டு, தேசிய மற்றும் மாநில அளவில் உள்ள கட்சி முறைகளின் பரிணாம வளர்ச்சியை பற்றி கவனம் செலுத்துகிறது. மேலும் இந்த அலகில் பொதுக்கருத்தின் பொருள், அதன் முக்கியத்துவம் மற்றும் ஓர் மக்களாட்சியின் திறன்மிக்க செயல்பாட்டில் அதன் பங்கினை பற்றி விளக்குகிறது.

PN8Q2X



### கற்றலின் நோக்கங்கள்

- கட்சி முறையின் பொருளை வரையறுத்தல்.
- மக்களாட்சியில் கட்சி முறையின் பங்கு, செயல்பாடு மற்றும் அதன் வகைகளை அடையாளம் காணுதல்.
- நவீன காலத்தில் கட்சி முறையின் வரலாற்று பரிணாமத்தை கண்டறிதல்.
- தேசிய மற்றும் மாநில அளவில் இந்தியாவில் உள்ள கட்சி முறையின் கட்டமைப்பை கோடிட்டுக் காட்டுதல்.
- மக்களாட்சி திறம்பட செயல்பட பொது கருத்தின் முக்கியத்துவத்தை மதிப்பீடு செய்தல்.
- கட்சி முறையின் தாக்கம் மற்றும் வரம்புகளை மதிப்பிடுதல்.




## 10.1 பொதுக்கருத்தினை வரையறுத்தல்

பொதுக்கருத்து ஓர் உளவியல் மற்றும் சமூகத்தில் உள்ள அனைவரின் நம்பிக்கைக்கும், இசைவான தனிநபரின் நடத்தை சார்ந்த சமூக செயல்முறையாகும். சுருக்கமாக, இது மக்களின் கூட்டு பார்வை, அவர்களுடைய அணுகுமுறை மற்றும் கருத்துக்கள் ஆகும்.

இது அரசாங்கம், அரசியல் குறித்த முன்னுரிமைகள் சார்ந்த மக்களின் கூட்டு விருப்பமாகும். மக்களாட்சி என்பது அனைவரின் ஒன்றிணைந்த தனிகருத்துகளும், பொதுக்கருத்துகளும், தனி நபர்க் கருத்துகளை விட முக்கியத்துவம் வாய்ந்தது என்ற கூற்றின் அடிப்படையில் அமைந்துள்ளது. ஒன்றிணைந்த குழுக்கள், அரசாங்க தலைவர்கள், ஊடக உயர்குடியினர் ஆகியோர் பொதுக்கருத்தின் மீது தாக்கத்தை ஏற்படுத்தவும், கட்டுப்படுத்தவும் முடியும் என்று வேறு சிலர் கூறுகின்றனர்.



11th Std Political Science Tamil Medium Vol-2_Chapter 10_25_09_2018.indd 63 29-09-2018 12:41:11

பொதுமக்களின் கருத்துகளின் மீது ஊடகங்களின் தாக்கம் உள்ளது. உண்மையில், மக்களாட்சி அதன் அதிகாரத்துவத்தை மக்களிடமிருந்து பெறுகின்றது. பொதுக்கருத்து என்பது ஒரு தனிநபரின் கருத்து அல்ல, அந்நபர் மிகவும் மதிக்கப்படும் நபராகவும் இருக்கலாம். இது ஒரு தனிப்பட்ட கருத்தும் அல்ல. அவர் எத்தகைய நிபுணத்துவத்தைப் பெற்றிருப்பினும், பொதுக்கருத்து என்பது ஒரு பொது விவகாரத்தில் ஒன்றோ அல்லது பல பிரிவு மக்களோ ஒருங்கிணைந்த, ஏற்றுக் கொள்ளக்கூடிய கருத்தாகும். இது உண்மையில் பொதுக்கருத்தாகும்.

### பொதுக்கருத்தின் பங்கு

மக்களாட்சி வெற்றிகரமாக செயல்படுவதற்கு பொதுக்கருத்து என்பது ஓர் அத்தியாவசிய கூறாகும். அங்கே குடிமக்களின்

## செயல்பாடு



### பொதுக்கருத்து

*மூத்த அரசியல் தலைவர்களில் ஒருவரான மது தண்டவதேயின் கட்டுரையை கவனமாக படித்து கேள்விகளுக்கு பதிலளிக்க.*


### தேசத்துடனான காந்தியின் உரையாடல்

மகாத்மா காந்திக்கு தண்டியாத்திரை என்பது வன்முறையற்ற ஒரு போராட்ட ஆயுதம் மட்டும் அல்ல, அது செல்லும் வழியிலுள்ள மக்களுடன் பேசுவதற்கும், தொடர்பு கொள்வதற்குமான ஒரு வழி முறையாக இருந்தது.

லாகூரில் ராவி ஆற்றின் கரையில் 1929 ஆம் ஆண்டு டிசம்பர் 31ல் நடைபெற்ற இந்திய தேசிய காங்கிரசின் 44-வது மாநாட்டில் முழு சுதந்திரத்திற்கான கோரிக்கை விடுக்கப்பட்டு சுதந்திரத்திற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. மாநாட்டிற்கு ஜவஹர்லால் நேரு தலைமை தாங்கினார். மாநாட்டில் மகாத்மா காந்தி தீர்மானத்தை நிறைவேற்றும்பொழுது மறக்க முடியாத ஒரு சொற்பொழிவாற்றினார். காந்தி வெறுமனே அந்த உரையை வழங்குவதுடன் இல்லாமல், மார்ச் 12, 1930 அன்று சபர்மதி ஆசிரமத்திலிருந்து புகழ்பெற்ற தண்டி யாத்திரையை துவக்கினார். ஏப்ரல் 6, 1930 அன்று குஜராத்தின் கடலோர கிராமமான தண்டியில் உப்பு சத்தியாகிரகப் போராட்டம் உச்ச நிலையை அடைந்தது.

காந்திக்கு தண்டி யாத்திரை மீதும், உப்பு சத்தியாகிரகத்தின் மீதும் ஒரு தெளிவான எண்ணமும், செயல்திட்டமும் இருந்தது. அவர் அந்த யாத்திரை கட்டுப்பாட்டிற்குள் இருக்க வேண்டும் என்பதற்காக அதிக எண்ணிக்கையையும் விரும்பவில்லை. அதேசமயம் எந்தவிதமான தாக்கத்தையும் ஏற்படுத்தாத சிறிய எண்ணிக்கையையும் ஆதரிக்கவில்லை. இதனால் வல்லபாய் பட்டேலின் மாபெரும் எண்ணிக்கையிலான பேரணி டில்லியை நோக்கி அணிவகுக்கும் பரிந்துரையை நிராகரித்தார். அதே சமயம் இணை அரசாங்கத்தை அமைக்க வேண்டும் என்ற நேருவின் அன்பான கருத்தையும் அவர் ஏற்கவில்லை. மாறாக 78 அர்பணிப்பு நிறைந்த ஒழுக்கமான சத்தியாகிரகிகளுடன் சபர்மதியிலிருந்து தண்டி கிராமத்திற்கு உப்பு சத்தியாகிரகத்தை நடத்துவதற்கான யாத்திரையை முன்மொழிந்தார்.

காந்தி சத்தியாகிரகத்தின் சின்னமாக உப்பைத் தேர்ந்தெடுத்தார். ஏனென்றால் அது நாட்டின் உணவு நுகர்வில் மிகவும் பொதுவான அளவில் இருந்தது. செல்வந்தர்களுக்கு உப்பு சுவைக்கு தேவைப்பட்டது. பரம ஏழை உப்பைத் தண்ணீரில் கலந்து கொள்வதன் மூலம் அவர்களது உலர்ந்த ரொட்டியை அந்த உப்புநீர் கலவையில் நனைத்து உணவாக்கிக் கொள்ள முடியும். இது செல்வந்தர்களின் சுவையான காரக்குழம்பிற்கு மாற்றாக ஏழைகளுக்கு இருந்தது.



தண்டியாத்திரையின் போது சில உற்சாகமிகு அபிமானிகள் காந்திக்கும் அவரது சக சத்தியாகிரககிகளுக்கும் அதிக எண்ணிக்கையில் பழம், பால் போன்றவைகளை கொண்டு வந்தனர். இருப்பினும் காந்தி தங்கள் யாத்திரையில் ஏழைகளுக்காக போராடுவதற்கான உன்னதமான நோக்கில் ஈடுபட்டுள்ளவர்கள் இத்தகைய ஆடம்பர விருந்தோம்பலில் தங்களைத் தாங்களே ஈடுபடுத்திக்கொள்ளக்கூடாது என்ற அடிப்படையில் அவற்றை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டார். காந்தி தண்டியாத்திரையை அநீதிக்கு எதிரான வன்முறையற்ற ஒரு போராட்ட ஆயுதமாக மட்டுமல்லாமல், அணிவகுப்பு வழியிலான மக்களுடன் உரையாடலுக்கும் தொடர்புக்குமான வழியாகவும் பார்த்தார். தண்டிக்கு செல்லும் வழியில், காந்தி மற்றும் அவருடன் வந்த சத்தியாகிரகிகள் பல்வேறு கிராமங்களில் இரவில் ஓய்வெடுத்தனர். சத்தியாகிரகிகள், கிராமங்களில் வசிப்பவர்கள் உடன் வந்த பத்திரிகையாளர்கள், ஆகியோருடன் சத்தியாகிரகத்தின் பின்னணி மற்றும் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பல பிரச்சனைகள் பற்றி பேசுவதற்கு இந்த இடைப்பட்ட காலத்தை அவர் பயன்படுத்தினார். அவர் இந்த தண்டி யாத்திரையை விழிப்புணர்வு மேற்கொள்ளும் முறையாக பார்த்தார். யாத்திரை நடந்த 25 நாட்களில் மக்களுடன் இந்த வகையான உரையாடலை நிகழ்த்திக் கொண்டிருந்தார். யாத்திரையினால் ஈர்க்கப்பட்ட பத்திரிகையாளர்கள் ஒவ்வொரு நாளும் விரிவான அறிக்கையை அனுப்பினர். இவை பத்திரிகைகள் மற்றும் இதழ்களில் வெளியிடப்பட்டன. இவ்வாறு தண்டி யாத்திரையில் காந்தி பேசியது தேசத்துடனான உரையாடலாக மாறியது.

நன்றி: தி இந்து மது தண்டவதேயின் கட்டுரை – 06.04.2005.

**மேலே உள்ள கட்டுரையின் வாசிப்பு மற்றும் புரிதலின் அடிப்படையில் பின்வரும் கேள்விகளுக்கு சுருக்கமாக பதிலளிப்போம்.**

1. 1929 லாகூர் காங்கிரசு மாநாட்டின் முக்கியத்துவம் என்ன?
2. காந்தி ஏன் சத்தியாகிரகத்தின் சின்னமாக 'உப்பை' தேர்ந்தெடுத்தார்?
3. காந்தியின் கருத்துப்படி, ஆங்கிலேய ஆட்சியின் அடக்குமுறையினுடைய வெளிப்பாடாக தெரிவது என்ன?
4. சட்டமறுப்பு இயக்கம் எதனோடு தொடர்புடையது?
5. மகாத்மா காந்தியின் "உப்பு யாத்திரை" பற்றி சுருக்கமாக விவரிக்கவும்.

கருத்துகளுக்கு மதிப்பளிக்கப்படுகிறது. மக்களின் கருத்துகளைப் புறக்கணித்து எந்த ஒரு அரசாங்கமும் நிலைத்திருக்க முடியாது.

### 10.2 ஓர் உண்மையான பொதுக்கருத்தை உருவாக்குவதற்குத் தடையாக இருப்பவை:

மக்களின் கருத்துக்கள் மற்றும் சிந்தனைகளின் உண்மையான பிரதிபலிப்பாக பொதுக்கருத்து இருக்க வேண்டும். இருப்பினும் உண்மையான பொதுக்கருத்திற்கு சில தடைகள் உள்ளன.

#### சுயநல விருப்பங்கள் (தேசத்தை விட மேலானது எனது நலன்)

மக்கள் தங்களின் சுயநலத்தினை முன்னிறுத்தி தங்கள் நாட்டினுடைய விவகாரங்களைக் காட்டிலும் தனிப்பட்ட விவகாரங்களில் முன்னேற்றத்தை காண்பதற்கு நகரச்செய்கிறது. ஒற்றுமை, அர்ப்பணிப்பு, ஒருமைப்பாடு மற்றும் தேசத்தின் முன்னேற்றம் தொடர்பான முக்கிய பிரச்சனைகளை மக்கள் உணருமாறு செய்ய வேண்டும்.

**எழுத்தறிவின்மை:** கல்வியறிவு உடைய பொறுப்புள்ள பொதுமக்கள், பயமோ அல்லது தயவோ இல்லாமல் தங்கள் உரிமையைக் கையாள்வதன் மூலம் நல்ல குடிமக்களை உருவாக்குகின்றனர் என்று எதிர்பார்க்கப்படுகிறது. கல்வியறிவற்ற மக்கள் பெரும்பாலும் கட்சித் தொண்டர்களால் தவறாக வழிநடத்தப்பட்டு உணர்வுகள், ஆதாயங்கள் மற்றும் வாக்குவன்மை (பேச்சாற்றல்) ஆகியவற்றால் ஏமாற்றப்படுகிறார்கள். ஓர் தரமான பொதுக்கருத்து என்பது அறிவும் கருத்துச் சுதந்திரம் இருக்கும் சூழலில் தான் உருவாக முடியும்.

**அ) வறுமை:** எந்தவொரு நாட்டிலும் ஏழைகள் அரசியல் தலைவர்களின் பொய்யான வாக்குறுதியால் எளிதில் கவரப்பட்டு, தங்களது வாக்குகளை அவர்களுக்கு அளித்துவிடுகின்றனர். வறுமையை ஒழிப்பதன் மூலம் மட்டுமே ஓர் தரமான குறிக்கோளுடைய பொதுக்கருத்து என்பது சாத்தியமாகும்.

**ஆ) இனவாத மற்றும் சாதி அடிப்படையிலான பாகுபாடு:** சாதி, சமயம் மற்றும் மதம் ஆகியவற்றின் அடிப்படையிலான பாகுபாட்டைத் தூண்டும் விவாதங்கள் மக்களிடையே பிளவுகளை உருவாக்குகின்றன. அவை பெரும்பாலும் அரசியல் கட்சிகளால் தங்களின் நன்மைக்காக கையாளப்படுகின்றன. நாட்டில் பயனுள்ள வகையில் செயலாற்றிக் கொண்டிருக்கும் மக்களாட்சியை சமூக நல்லிணக்கமின்மை சீரழிக்கின்றது.

**இ) பேச்சு மற்றும் ஊடக சுதந்திரம்:**



நடுநிலையான, குறிக்கோள்மிக்க மற்றும் சுதந்திரமிக்க ஊடகமும், தனிமனித பேச்சுரிமைக்கு மதிப்பளிக்கின்ற சட்டமன்றமும் ஆரோக்கியமான கருத்துக்களை உருவாக்குவதில் மிகவும் முக்கிய பங்கு வகிக்கின்றன. மக்களின் சுதந்திரத்தை மதித்து செய்தி அறிக்கைகளை பொறுப்புடன் வெளியிடுகின்ற ஊடகங்கள் பொதுமக்களின் கருத்தை முதிர்வுடன் உருவாக்குவதற்கான முக்கியமான அடிப்படை ஆகும்.

## 10.3 அரசியல் கட்சிகளின் வரையறை

அரசியல் கட்சிகள் மக்களாட்சி முறை அமைப்புக்கு இன்றியமையாத கருவியாகும். அவைகள் திட்டவட்டமான லட்சியங்கள் மற்றும் செயல்திட்டத்துடன் உருவாக்கப்படுகின்றன. அவை பொது மக்களிடம், சமுதாயம் மற்றும் அரசுக்கு உள்ள பிரச்சனைகளைப் பற்றி விழிப்பூட்டுவதுடன் மாற்றுத் திட்டங்களையும் பரிந்துரைக்கின்றன. பரப்புரையின் மூலம் மக்கள் அரசியல் பிரச்சினைகளை அறியும்படி செய்வதுடன் தங்களின் கொள்கைகள் மற்றும் செயல்திட்டங்களுக்கான ஆதரவையும் பெறுகின்றன.

சட்டமன்றங்களில் வாக்காளர்களின் பிரதிநிதிகளாக ஒருங்கிணைக்கப்பட்ட கருத்துகளை எடுத்துரைக்கின்றனர். நாடாளுமன்ற மக்களாட்சியில் சட்டமன்றத்தில் பெரும்பான்மை இடங்களை வென்ற கட்சி அல்லது கட்சிகளின் கூட்டணி அமைச்சரவையை உருவாக்குகிறது. (எ.கா) இங்கிலாந்து, இந்தியா. குடியரசுதலைவர் முறை மக்களாட்சி நாடுகளில் தலைமை நிர்வாகிகள் (அதிபர்) கட்சி அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர் (எ.கா. அமெரிக்கா, பிரான்ஸ்). எந்தவொரு முறைமையிலும் அரசியல் கட்சிகள் அரசாங்கத்திற்கும், மக்களுக்கும் இடையில் பாலமாக செயல்படுகின்றனர். மக்களாட்சியில் பொதுக்கருத்துக்கள் அரசியல் கட்சிகளால் கட்டுப்படுத்தப்படுகின்றன.

## செயல்பாடு

மக்களாட்சியில் அரசியல் கட்சிகளின் பல்வேறு செயல்பாடுகளின் பட்டியல் பின்வருமாறு உள்ளன.

- கட்சிகள் தேர்தல்களில் போட்டியிடும்.
- கட்சிகள் வேறுபட்ட கொள்கைகளையும் திட்டங்களையும் முன்வைக்கும்.
- கட்சிகள் நாட்டிற்கான சட்டங்களை உருவாக்குகின்றன.
- கட்சிகள் அரசாங்கத்தை அமைத்து செயல்படுகின்றன.
- எதிர்க்கட்சிகளாகவும் கட்சிகள் பங்கு வகிக்கின்றன.
- கட்சிகள் பொதுக்கருத்துகளை வடிவமைக்கின்றன.
- அரசாங்கத்தின் நலத் திட்டங்களை மக்கள் பெறுவதற்கு கட்சிகள் உதவுகின்றன.

ஒரு மாதத்திற்கு செய்தித்தாள்களைப் படித்து, அரசியல் கட்சிகளின் பல்வேறு செயல்பாடுகள் தொடர்பான செய்திகளை சேகரிக்கவும்.

பல்வேறு அரசியல் கட்சிகளுக்கு இடையே தொடர்ச்சியான போட்டி உள்ளதுடன் இந்த போட்டி மக்களாட்சியினை முதிர்ந்த செயல்பாட்டை உறுதி செய்கிறது.

**குறிப்பிடத்தக்க மேற்கோள்**

ஓர் மக்களாட்சியில் அரசியல் கட்சிகளின் மூலமாகவே பொதுக்கருத்துக்கள் வழிநடத்தப்படுகின்றன.

### 10.4 அரசியல் கட்சிகளின் பணிகள்

ஒரு மக்களாட்சியில் அரசியல் கட்சிகள், அரசாங்கம் மற்றும் பொதுமக்கள் தொடர்பு கொள்ள ஒரு ஒருங்கிணைந்த இணைப்பாக செயல்படுகின்றன.

அரசியல் கட்சிகள் மக்களை அரசியல் முன்முயற்சிகள் மற்றும் பொது அனுபவங்களை நோக்கி நகர்த்தும் அடித்தளமாக செயல்படுகின்றன. அரசியல் கட்சிகள் வாக்குகளை அணிதிரட்டும் நோக்கத்துடன் மக்களின் அரசியல் சிந்தனை மற்றும் கருத்துக்களின் மீது தாக்கத்தை எற்படுத்துகின்றன.

அரசியல் பொருளாதார மற்றும் சமூக செயல்பாட்டிற்கான ஓர் தளத்தை வழங்குவதன் மூலம் எதிர்கால மாநில மற்றும் தேசிய தலைமைகளுக்கு பயிற்சிக் களமாக செயல்படுகின்றன. நீண்ட காலமாக அவர்கள் கட்சிக்குள்ளேயும், எதிர்க்கட்சிகளிலிருந்தும் கடுமையான விவாதம் மற்றும் வினா எழுப்புவதன் மூலம் தங்களின் நடவடிக்கைகளுக்குத் கட்சித்தலைவர்கள் பொறுப்புணர்வுடன் இருக்கிறார்கள். இவ்வாறு மக்களுக்கு பலதரப்பட்ட வேட்பாளர்களையும், கொள்கைகளையும், தேசத்தில் நிலவுகின்ற பல்வேறு பிரச்சனைகளுக்கான அணுகுமுறைகளையும் கட்சிகள் வழங்கியுள்ளன.

மக்களாட்சியில் அவர்களுடைய நம்பிக்கையானது மாற்றம் மற்றும் மாற்றத்தைக் கொண்டுவருவதற்கான அறிவை வலுவூட்டுகின்றது. இதன்மூலம் மக்களில் பெரும்பான்மையினர் அவர்களின் ஆட்சி வழிவகையில் தாங்கள் விரும்பும் ஓர் மாற்றத்தை எற்படுத்துகின்றனர்.

### கட்சி முறை:

கட்சி முறை என்பது அரசாங்கங்களை நடத்துவதற்கும், நிலைநிறுத்துவதற்கும் உதவுகிறது. மேலும் அவை மக்களாட்சியின் திறன் வாய்ந்த செயல்பாட்டிற்கும் தேவையானதாக இருக்கின்றன. கட்சிமுறை என்பது அரசாங்கத்தின் கொள்கைகளுக்கு எதிரான கட்டுப்பாடுகள் மற்றும் அதிகாரச் சமநிலையை வழங்கும் முறையாகும். பொது மக்களிடையே ஆதரவைக் பெறுவதன் மூலம் கட்சிக்குள்ளேயே தலைமைத்துவத்திற்கும்,




11th Std Political Science Tamil Medium Vol-2_Chapter 10_25_09_2018.indd 67 29-09-2018 12:41:12

கலந்துரையாடலுக்கும் ஓர் கட்டமைப்பினை அந்தந்த கட்சிகளின் குறிக்கோள் மற்றும் செயல்திட்டப்படி வழங்குவதன் மூலம் அது நிலையான மற்றும் நல் ஆட்சிக்கு உதவும்.

**உங்களுக்குத் தெரியுமா?**

ஓர் அரசியல் கட்சி என்பது மக்களின் ஒன்றிணைந்த ஒரு குழுவாக தேர்தலில் போட்டியிட்டு அரசாங்கத்தில் அதிகாரத்தைக் கைப்பற்றுகிறது. அவர்கள் சமுதாயத்திற்கான கூட்டு நலனை ஊக்குவிப்பதற்கான சில கொள்கைகளையும், திட்டங்களையும் ஒப்புக்கொள்கிறார்கள். (சின்னங்கள் அல்லது பல்வேறு அரசியல் கட்சிகளின் கொடி) ஓர் அரசியல் கட்சியின் மூன்று கூறுகள் – தலைவர் – செயல் உறுப்பினர்கள் மற்றும் தொண்டர்கள்.

## கட்சி முறைகளின் வகைகள்:




பல்வேறு வகையான கட்சி முறைகள் உலகெங்கிலும் உள்ள பல்வேறு பகுதிகளிலும் நடைமுறையில் உள்ள குறிப்பிட்ட கூறுகளை பொறுத்து பரிணாமவளர்ச்சியில் உருவாகியுள்ளன. ஓர் மக்களாட்சியின் தரமானது எப்படி அரசாங்கம் அதன் மக்களை பிரதிநிதித்துவம் செய்கிறது. எப்படி அரசாங்கம் அதன் மக்களுக்கு பொறுப்புடன் இருக்கிறது, எப்படி மனித உரிமைகள் மற்றும் அனைத்து குடிமக்களுக்கும் சமூக நிலையிலும், வாய்ப்புக்களிலும் சமத்துவத்தை உறுதி செய்வதுடன். அரசியல் பங்கேற்பில் மக்களுக்கு சமமான வாய்ப்புகளையும் ஏற்படுத்துகிறது. பல விதமான கட்சி முறைகள் இந்த சிக்கல்களை பல்வேறு வழிகளில் அணுகுவதன் மூலமாக பின்பற்றபடும் மக்களாட்சியின் தரம் நிர்ணயிக்கப்படுகிறது.

### அ. ஒரு கட்சி முறை:

ஒரு கட்சி முறையில் ஓர் அரசியல் கட்சி அரசாங்கத்தை உருவாக்கும் உரிமையை பெறுகிறது. இது எழுதப்பட்ட அல்லது எழுதப்படாத அரசமைப்பிலிருந்து பெரும்பாலும் பெறப்படுகிறது. ஒரு கட்சி முறையின் கீழ் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் குறைவான பங்கேற்பு மற்றும் பலவீனமான பொறுப்புடைமை உள்ளது. (எ.கா) சிங்கப்பூர், (வடகொரியா), கொரிய தொழிலாளர் கட்சி, வியட்நாம் கம்யூனிஸ்ட் கட்சி (வியட்நாம்), கியூபாவின் கம்யூனிஸ்ட் கட்சி (கியூபா), கம்யூனிஸ்ட் கட்சி (சீனா). ஒரு கட்சி முறையானது மக்களாட்சியிலான வெளிப்பாடுகளுக்கு போதுமான வாய்ப்புகளை வழங்காததுடன் மாற்றத்திற்கான பரவலான வரையெல்லையையும் வழங்கவில்லை. உதாரணத்திற்கு 1920–களில் தேசியவாத இராணுவத்தை ஆதரித்து பாசிச இயக்கங்கள் ஹிட்லரின் தலைமையில் ஜெர்மனியிலும், முசோலினியின் கீழ் இத்தாலியிலும், ஜெனரல் பிராங்கோவின் கீழ் ஸ்பெயினிலும் அதிகாரத்தை கைப்பற்றியதுடன் அரசியல் கட்சிகள் உருவாவதைத் தடைசெய்தன.

### ஆ. இரு கட்சி முறை:

இரு கட்சி முறையில், இரண்டு அரசியல் கட்சிகள் வேறுபட்ட நலன்களுடன், பெரும்பான்மையை பெற்று அரசாங்கத்தை அமைப்பதற்கான சம வாய்ப்பைக் கொண்டுள்ளன. இரு கட்சி முறையில் பெரும்பான்மை பெறும் கட்சி ஆளும் கட்சியாகவும் சிறுபான்மை கட்சி, எதிர்கட்சியாகவும் உருவாக்குகின்றன. இரு கட்சி முறையில் அரசியல் தலைவர்களிடம், மிக அதிக பொறுப்புணர்வும், அதிக அரசியல் பங்கேற்பும் உள்ளது. எதிர் கட்சிகள்


11th Std Political Science Tamil Medium Vol-2_Chapter 10_25_09_2018.indd 68 29-09-2018 12:41:13

நம்பிக்கையில்லா வாக்கெடுப்பின் மூலமாக தங்களை நீக்கும் அச்சுறுத்தல் தலைக்கு மேல் தொங்கும் கத்தியாக இருப்பதனால் ஆட்சியில் இருப்பவர்கள் அதிக அளவிலான பொறுப்பான நடத்தை மற்றும் செயல்பாட்டினை மேற்கொள்கின்றனர்.

அரசியல் சூழ்நிலை பெரிதும் துருவப்படுத்தப்படுவதால், ஓர் கட்சி அதிகாரத்தை இழந்தபின் தேசிய நலன்களுக்கு தீங்கு விளைவிக்கக்கூடிய கடுமையான மாற்றங்கள் எற்படலாம். இருகட்சி முறையின் எடுத்துக்காட்டாக அமெரிக்கா (மக்களாட்சி வாதிகள் / குடியரசுவாதிகள்) மற்றும் இங்கிலாந்து – (பழமைவாதிகள் மற்றும் தாராளவாதிகள்).

எவ்வாறாயினும், எந்தவொரு நாட்டிலும், கட்சிகளின் எண்ணிக்கையில் எந்த அரசமைப்பு சார்ந்த கட்டுப்பாடும் இல்லை. அரசமைப்பு நடைமுறைகள் மற்றும் மக்களின் அரசியல் முதிர்ச்சியே இரு கட்சி முறையின் தோற்றத்திற்கு வழிவகுக்கின்றது.

### இ. பல கட்சி முறை:

பல கட்சி முறையில், பல அரசியல் கட்சிகள் இருப்பதுடன் பெரும்பான்மை பெற்ற கட்சி அல்லது பெரும்பான்மை பெறாத ஒரே நோக்கமுடைய பல கட்சிகளுடனான கூட்டணியின் மூலமாகவும் மக்கள் ஆதரவை வென்றெடுத்து அரசாங்கத்தை உருவாக்குகின்றன. இந்த முறையில் அரசியல் தலைவர்கள் தொடர்ந்து தங்கள் கூட்டணிக் கட்சிகளின் தலைவர்களால் உற்றுநோக்கப்படுவதுடன் அரசியல் சமநிலையையும் நிலை நாட்டுகின்றனர். அவர்கள் மக்களுக்கு அதிக பொறுப்பு உள்ளவர்களாகின்றனர். பல கட்சிமுறை வாக்காளர்களுக்கு அரசியல் பங்கேற்பில் பல்வேறு வழிகளையும், பெரிய அளவிலான தேசிய மேம்பாட்டிற்குரிய அரசியல் மாற்றங்களைக் கொண்டு வரும் திறமையையும் வழங்குகிறது.

பிரான்ஸ் மற்றும் இத்தாலியில் உள்ள விகிதாச்சார பிரதிநிதித்துவ முறை பல கட்சி முறையிலும் கூட்டணி அமைச்சரவைகளிலும் முடிவடைகிறது. கனடா, பிரான்ஸ், ஜெர்மனி, இந்தியா, சுவீடன் ஆகிய நாடுகள் பல கட்சி முறையிலான நாடுகளின் எடுத்துக்காட்டுகள் ஆகும்.

**செயல்பாடு**

தலைப்பு (இணை-1): ஒரு கட்சி முறை ஏன் ஓர் நல்ல வாய்ப்பு என்று கருதவில்லை?

தலைப்பு (இணை-2): ஓர் மக்களாட்சி அமைப்பில் நமக்கு குறைந்தது இரு கட்சிகள் ஏன் தேவைப்படுகின்றன?

தலைப்பு (இணை-3): ஓர் அரசியல் கட்சியின் அனைத்து முடிவுகளும் ஒரே குடும்பத்தினரால் செய்யப்பட்டுவிட்டால், மற்ற அனைத்து உறுப்பினர்களும் புறக்கணிக்கப்படுவதுடன், அந்த கட்சி எவ்வகையான சவாலை எதிர்கொள்கிறது?

தலைப்பு (இணை-4): குடும்ப அரசியலானது சில மாநிலங்கள் அல்லது சில கட்சிகள் என்ற எல்லைக்குள் நின்று விடுவதாக நீங்கள் நினைக்கிறீர்களா?

## 10.5 மக்களாட்சியில் அரசியல் கட்சிகளின் பங்கு

மக்களாட்சியின் தரம் மற்றும் செயல்திறனை உறுதி செய்கின்ற விதமாக அரசியல் கட்சிகளின் இருப்பு இருக்கின்றன. அமெரிக்கா மற்றும் இந்தியா போன்ற கூட்டாட்சிகளில் உள்ள பன்முக பண்பாடு மற்றும் பன்மை சமூகங்களில் அமைதி ஒற்றுமை மற்றும் சமூக நல்லிணக்கம் ஆகியவற்றை சமூக-பொருளாதார மேம்பாட்டிற்காக பராமரிப்பது அவசியம் ஆகின்றது. ஒரு கட்சி முறையில் விரைந்து முடிவெடுக்கவும், ஒத்திசைவு நடவடிக்கைகளுக்கு அதிக நெழிழ்வுத் தன்மையைக் கொண்டிருக்கும்போது இந்த முடிவுகள் பரந்துபட்ட மக்களின் கருத்துக்களை பிரதிநிதித்துவப்படுத்தாது. இதனால்



11th Std Political Science Tamil Medium Vol-2_Chapter 10_25_09_2018.indd 69 29-09-2018 12:41:13

அரசாங்கத்திற்கு எதிரான அதிக எதிர்ப்பையும் பேதங்களையும் அது உருவாக்கும்.

கட்சியின் கட்டமைப்பு மற்றும் தலைமையின் இயல்பு காரணமாக இரு கட்சி முறைமையில், பொதுவாக பொது கொள்கைகளிலும், முடிவுகளிலும், ஒத்துழைப்புக்கு மாறாக அரசியல் துருவப்படுத்தப்படுகிறது. பலகட்சி முறையில் கூட்டணி கட்சிகளிடையே கவனமாக கருத்தில் கொண்ட பேச்சுவார்த்தையின் அடிப்படையில் அதன் செயல்திறன் உள்ளது. மேலும் விவாதங்களினால் பரஸ்பர அடிப்படையிலான ஒருமித்த கருத்தை அடைவதன் மூலமும் பெரும்பாலும் பிரச்சனைகள் தீர்க்கப்படுகின்றன. எனவே அரசியல் கட்சிகள் மக்களுடைய உரிமைகளையும், சுதந்திரங்களையும் காப்பாற்ற வேண்டியது முக்கியமான ஒரு மக்களாட்சியின் உந்து சக்திகள் ஆகும். பயனுள்ள குடியுரிமை பயிற்சி மற்றும் அதிக குடிமக்கள் பங்கேற்பு மூலம் மக்களாட்சி நாடுகளில் உள்ள இளைஞர்கள் அரசியல் கட்சிகளின் பெரிய பங்கினை வகிக்க முடியும். இதனால் உலக நாடுகளில் முதிர்ச்சியடைந்த மற்றும் பரந்த மக்களாட்சிமயமாக்கலை வளர்க்க முடியும்.


**மக்களாட்சியில் அரசியல் கட்சிகளின் பங்கு**

- அரசியல் கட்சிகள் என்றால் என்ன?
- அரசியல்கட்சியின்பொதுப்பதவிகளுக்காக வேட்பாளர்களை தேர்ந்தெடுத்து தேர்தலில் நிறுத்துகின்றன.
- அவை கட்சியின் பெயரில் அரசாங்க அதிகாரிகளின் நடவடிக்கைகளை ஒருங்கிணைத்து, ஒருதரப்படுத்த முயற்சி செய்கின்றன.
- பல அரசியல் அறிஞர்கள் கட்சிகள் மக்களாட்சிக்கு அவசியம் என்று நம்புகிறார்கள்.
- அரசியல் கட்சி என்பது மக்களது இறையாண்மை மற்றும் பெரும்பான்மை ஆட்சியின் பிரதான கருவியாக ஒரு சிலரால் கருதப்படுகிறது.
- அரசியல் கட்சிகள் ஒழுங்காக வேலை செய்யும் பொழுது, மக்களின் இறையாண்மைக்கான அவசியமான கருவிகளாக அவை இருக்கலாம்.

**குறிப்பிடத்தக்க மேற்கோள்**

அரசியல் கட்சிகளே மக்களாட்சியின் உந்து சக்திகள் ஆகும்.

பொதுக்கருத்தினை உருவாக்குவதற்கு அரசியல்வாதிகள் தங்களது பேச்சாற்றல் மற்றும் தலைமைத் திறன்களைப் பயன்படுத்துகின்றனர்.




## 10.6 நவீன கட்சி முறை

### அ. இங்கிலாந்தில் கட்சி முறை

இங்கிலாந்தில் முடியாட்சியின் நிலை மற்றும் அதன் பங்கினை பற்றிய பிரச்சனைகள், கருத்துக்கள் துருவப்படுத்தப்படுவது இரண்டு கட்சிகளின் தோற்றத்திற்கு வழிவகுத்தது.



11th Std Political Science Tamil Medium Vol-2_Chapter 10_25_09_2018.indd 70 29-09-2018 12:41:13

அவையாவன:

1. டோரீஸ் அல்லது பழமைவாதிகள்
2. விக்ஸ் அல்லது தாராளவாதிகள்

20 ஆம் நூற்றாண்டில் தொழிலாளர் கட்சி தாராளவாதிகளை விட பெரிய சக்தியாக மாறியது.

### ஆ. ஐக்கிய அமெரிக்க நாடுகளின் கட்சி முறை



ஐக்கிய அமெரிக்க நாடுகளின் நிறுவனத் தலைவர், அரசியல் கட்சிகள் மற்றும் அவற்றுக்கு இடையேயான பிரிவினைவாத

#### இரு கட்சி முறை

- உலகம் முழுவதும் அரிதானது அகும்.
- தேசிய மற்றும் உள்ளாட்சி அளவில் சமமான நிலையில் உள்ளது.
- தேர்தல் அமைப்பு (முறைமை).
- வெற்றி பெற்றவர் அனைத்தையும் எடுத்துக் கொள்வர்.
- வீணாக்கப்பட்ட வாக்கு.
- முன்னுரிமை அடிப்படையிலான அமைப்பு.
- தேர்தலுக்கு முன் பரந்த கூட்டணிகள் அமைக்கப்படுகின்றன.
- வாக்காளர்களின் கருத்து.
- மூன்றாவது கட்சியினருக்கு வாக்குச் சீட்டில் இடம்பெறுவது கடினமாக உள்ளது.






11th Std Political Science Tamil Medium Vol-2_Chapter 10_25_09_2018.indd 71 29-09-2018 12:41:13

மோதல்களைத் துடைத்தெறிய விரும்பினர். இருப்பினும் அமெரிக்க சுதந்திரத்திற்குப் பின்னர், ஜார்ஜ் வாஷிங்டனின் பதவிக்காலத்தில் புதிதாக உருவாக்கப்பட்ட அமெரிக்க தேசத்தில் முதலில் உருவான கட்சிகளில் வலுவான தேசிய அரசாங்கத்தை ஆதரிக்கும் கூட்டாட்சிக் கட்சியும், மாநில தன்னாட்சி உரிமையை ஆதரிக்கும் கட்சியாக குடியரசுக் கட்சியும் இருந்தன. 1828-ல் மக்களாட்சியிலான குடியரசுக் கட்சி என்ற பெயர் மக்களாட்சிக் கட்சியாக மாற்றப்பட்டது. இது அரசின் உரிமைகளை வென்றது. 1854-ல் குடியரசுக் கட்சி கொத்தடிமை முறைக்கு எதிராக தனது போராட்டக் களத்தை அமைத்துக் கொண்டதுடன் அமெரிக்க குடியரசுத் தலைவராக ஆபிரகாம் லிங்கன் பதவிவகித்ததால் அதிக முன்னுரிமையைப் பெற்றது. அமெரிக்காவில் இரு கட்சி முறை என தீர்வு காணப்பட்டதிலிருந்து, குடியரசு கட்சி மற்றும் மக்களாட்சிக் கட்சிகள் அமெரிக்க அரசியல் களத்தில் ஆதிக்கம் செலுத்தியுள்ளன. இருப்பினும் மூன்றாவது கட்சி வேட்பாளர்கள் அவ்வப்போது வெளிப்பட்டு மறைந்தனர்.


## இ. ஐரோப்பாவில் கட்சி முறை




பிரெஞ்சு புரட்சிக்குப் பின்னர் (1789), ஐரோப்பிய நாடுகளில் மக்களாட்சி சக்திகள் பலம் பெற்று அரசியல் கட்சிகள் தோன்றின. ஐரோப்பிய கண்டத்தில் அரசியல் கட்சிகள், பழமைவாதிகள், தாராளவாதிகள் மற்றும் கிறிஸ்துவ மக்களாட்சிவாதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளனர். 19ஆம் நூற்றாண்டில் சமதர்ம இயக்கங்கள் பிரபலமடைந்து சமூக மக்களாட்சி அல்லது தொழிலாளர் கட்சிகள் உருவாயின. அவை பிரபலமடைந்து தொழிற்சங்க ஆதரவைப் பெற்றன. சோவியத் ரஷ்யாவில், போல்ஷிவிக் கட்சி 1917-ல் நடந்த பொதுவுடைமைப் புரட்சியினை நடத்தி சோவியத் யூனியன் என்ற பிரபலமான சோவியத் சோசலிச குடியரசுகளை உருவாக்கியது. COMINTERN (கம்யூனிஸ்ட் இன்டர்நேஷனல்) அமைப்பு பிற நாடுகளில் பொதுவுடைமைப் கட்சிகளை ஆதரிப்பதன் மூலம் உலக பொது உடமைப் புரட்சியை ஊக்குவிக்கும் பணியைக் மேற்கொள்ள நிறுவப்பட்டது. பனிப்போர் முடிவுக்கு பின் பொதுவுடைமைப் கட்சி ரஷ்யாவில் அதன் புகழை இழந்தது. இருப்பினும், சில பொது உடமைக் கட்சிகள் இன்னும் மக்களாட்சி அரசுகளுக்குள் அரசாங்கக் கொள்கைகளில் செல்வாக்கு செலுத்துகின்றன. பொதுவுடைமைப் கட்சிகள் இன்றும் தொடர்ந்து சீனா மற்றும் வட கொரியாவில் எதேச்சதிகார அரசாங்கங்களை கட்டுப்படுத்துகின்றன.

மக்களாட்சி அரசியல் முறைமைகள் தங்கள் குடிமக்களின் அடிப்படையன சமூக – பொருளாதார விழுமியங்களை பிரதிபலிப்பதாகவும், பெரும்பாலும் பரிவும் எதிர்செயலுமாக இருக்கின்றன. எப்போதும் மதிப்புகளில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் நிகழ்வதுடன் அவை அரசியல் கட்சிகளின் மாறுபட்ட நோக்கங்கள் மூலம் மக்களின் அரசியல் கருத்துக்களில் பிரதிபலிக்கின்றன. 20 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஐரோப்பாவில் தாக்கத்தை எற்படுத்திய பாதிக்கும் சமூக பொருளாதார காரணிகள் தேசியவாத மற்றும் குறுகிய மனப்பான்மை கொண்ட கட்சிகளின் எழுச்சி மூலம் பிரதிபலிக்கப்பட்டன. அவை புலம்பெயர்ந்தோருக்கு எதிராக அவர்களின் உணர்வுகளுக்காக குரல் கொடுத்தல் மற்றும் அகதிகளின் வருகை என்பதனை ஐரோப்பிய கலாச்சாரம், பாதுகாப்பு மற்றும் பொருளாதாரத்திற்கு அச்சுறுத்தலாக பார்த்தனர்.

### ஈ. தென்னாப்பிரிக்காவின் கட்சி முறை





ஆப்பிரிக்க நாடுகளில், அரசியல் கட்சிகள் முதலில் காலனித்துவத்துக்கு எதிராக போராடுவதற்காக உருவாக்கப்பட்டது. காலனித்துவத்திலிருந்து விடுதலை அடைந்த ஆப்பிரிக்க நாடுகளில், அரசியல் கட்சிகள் இராணுவவாதத்திற்கு எதிராக கடுமையாக போராடுகின்றன.

**தென்னாப்பிரிக்காவின் அரசமைப்பு**

- 18 வயதில் அனைவருக்கும் வாக்குரிமை
- பொதுவான வாக்களர் பட்டியல்
- வழக்கமான தேர்தல்
- பொறுப்புணர்வு, பதிலுரைத்தல் மற்றும் வெளிப்படையான அரசாங்கத்தை உறுதிப்படுத்த பல கட்சி முறை மக்களாட்சி அவசியம்.

### இந்தியாவில் கட்சி முறை

ஆங்கிலேய ஆட்சிக்கு எதிரான சுதந்திர போராட்டத்தினாலும், தேசியவாதத்தின் எழுச்சியினாலும் இந்தியாவில் கட்சி முறைகள் வெளிப்பட்டன. இந்திய அரசியல் இன்று பல கட்சி முறையை கொண்டதாக இருப்பினும் இந்திய வரலாற்றில் நீண்ட காலமாக, ஒரே கட்சி அரசியல் அரங்கில் ஆதிக்கம் செலுத்தியுள்ளது. இந்திய தேசிய காங்கிரசு (INC) 1885 ஆம் ஆண்டில் ஆலன் ஆக்டேவியன் ஹியூம் (A.O.Hume) என்பவரால் நிறுவப்பட்டது.



இது சட்டமன்ற மற்றும் அரசியல் பிரிவுகளில் இந்தியர்களின் அரசியல் பங்கேற்பிற்கான அடித்தளமாக இருந்தது. இது படிப்படியாக பல்வேறு நிலைகளில் அரசியல் சீர்திருத்தங்களைக் கோரியது. ஒத்துழையாமை இயக்கத்திற்கு (1921–23) பின்னர், இந்திய தேசிய காங்கிரசு (INC) முழுமையான அரசியல் சுதந்திரத்தை கோரியது.

20–ஆம் நூற்றாண்டில், வகுப்புவாதத்தை செயல்திட்டமாக கொண்ட கட்சிகள், அதாவது 1906 ஆம் ஆண்டு இந்தியாவில் முஸ்லிம் லீக் மற்றும் 1916–இல் இந்து மகாசபை போன்ற கட்சிகள் உருவாகின. சென்னை மாகாணத்தில், தென்னிந்திய சுதந்திரவாதச் கூட்டமைப்பு (நீதிக்கட்சி) பிராமணரல்லாதோரின் (திராவிடர்கள்) நலன்களை பிரதிபலிக்க உருவாக்கப்பட்டது. எனினும் இந்திய தேசிய காங்கிரசில் நகர்ப்புற, உயர்குடி சாதியினர்,

**செயல்பாடு**

**குழுவாகக் கலந்துரையாடுதல்**

நமது நாட்டில் அரசியல் கட்சிகள் எதிர்கொள்ளும் சவால்கள் பின்வருமாறு.

- உட்கட்சியில் மக்களாட்சி அம்சங்கள் இல்லாமை.
- வம்சம் / பரம்பரையின் தொடர்ச்சியான ஆட்சி.
- பணம் மற்றும் ஆள் பலம் ஆகியவற்றின் அதிகரிக்கும் தாக்கம்.
- பல கட்சிகள் வாக்காளர்களுக்கு அர்த்தமுள்ள (சரியான) வாய்ப்பை வழங்குவதாக தெரியவில்லை.



11th Std Political Science Tamil Medium Vol-2_Chapter 10_25_09_2018.indd 73
29-09-2018 12:41:14

பெரும்பாலும் மேற்கத்திய கல்வி கற்றவர்களையேபிரதிநிதித்துவப்படுத்தியதுடன். ஆங்கிலேய அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தைகளுக்கான ஒரு தளத்தை வழங்கியது. படிப்படியாக இந்திய தேசிய காங்கிரசு இந்தியாவின் அரசியல் கட்சியின் முறையின் வளர்ச்சியில் ஒரு முக்கிய பங்கினை வகித்தது. 1905–இல் வங்கப் பிரிவினைக்குப் பிறகு, இந்திய தேசிய காங்கிரசில் மிதவாதிகள் (மனுக்களின் கொள்கை) மற்றும் தீவிரவாதிகள் (ஆக்கிரமிப்பு உத்தி) என பிரிவினை எற்பட்டது.

### செயல்பாடு




- இந்தியாவில் பல கட்சி அமைப்பு ஏன் நமக்கு உள்ளது?
- பல கட்சி அமைப்புகளின் நன்மைகள் மற்றும் தீமைகள் என்ன?
- வகுப்பை மூன்று அல்லது நான்கு குழுக்களாக பிரிக்கவும், குழு கலந்துரையாடலை நடத்தவும். ஏதேனும் ஓர் அணியை தேர்ந்தெடுத்து அவர்களின் கருத்துக்களை மற்றவர்களுக்கு தெரிவிக்கவும்.

**(நன்றி: இந்து நகைச்சுவை சித்திரம் (அ) கேலிச்சித்திரம்)**

1906–ஆம் ஆண்டில் முஸ்லிம் லீக்கின் உருவாக்கம் முரண்பாடான அரசியல் பேரம் பேசும் வெளிப்படையான காலமாக உருவானதோடு, இந்திய கட்சி முறையின் உண்மையான தொடக்கத்தை பிரதிபலித்தது.

அரசியல் அரங்கில் மகாத்மா காந்தியின் வருகையை தொடர்ந்து, அவரின் அகிம்சையின் மீதான தார்மீக – நெறிமுறைக் கவனமுடன் கூடிய, அரசியல் லட்சியங்கள் மற்றும் வழி முறைகளில் இந்திய தேசிய காங்கிரசு (INC) என்பது அனைத்து பிரிவுகளையும் சேர்ந்த ஏழை விவசாயிகள் மற்றும் பின்தங்கிய பிரிவினர்களையும்,பீரதிநிதித்துவப்படுத்தியது



சித்தரஞ்சன் தாஸ் 1922–இல் தொடங்கிய சுயராஜ்ய கட்சி, 1934–இல் ஆச்சார்யா நரேந்திர தேவ் தொடங்கிய காங்கிரசு சோசலிஸ்ட் கட்சி மற்றும் 1920–இல் எம்.என். ராயின் (M.N. Roy) முயற்சியால் தொடங்கப்பட்ட கம்யூனிஸ்ட் கட்சி ஆகியவைகள் இதர முக்கிய அரசியல் கட்சிகள் ஆகும். அரசியல் பரப்புரைகளில் ஈடுபடும் பல அரசியல் கட்சிகள் தேர்தல்களில் போட்டியிடாமல் இருந்தன. இத்தகையவை அழுத்த குழுக்களாகச் செயல்பட்டன.



11th Std Political Science Tamil Medium Vol-2_Chapter 10_25_09_2018.indd 74 29-09-2018 12:41:16

*1977*–ஆம் ஆண்டு வரை பொதுவுடமை கட்சி, சோசலிஸ்ட் கட்சிகள் மற்றும் வலதுசாரி ஜனசங்கம் ஆகியவை தேசிய அளவில் குறிப்பிடத்தக்க எதிர்கட்சிகளாக இருந்தன. *1977* வரை, எந்த ஒரு கட்சியும் தேசிய அளவில் இந்திய தேசிய காங்கிரசுக்கு மாற்றாக வர இயலவில்லை. எனவே, ஜெயப்பிரகாஷ் நாராயணனின் தலைமையின் கீழ் பல தேசிய கட்சிகள், ஓர் பெரிய தேசிய அளவிலான மாற்றுக் கட்சியை உருவாக்க இணைந்தன. *1977*–ஆம் ஆண்டில் ஜனதா கட்சி மத்தியில் ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றியது. *1980*–க்குப் பிறகு, இந்த கட்சிகள் ஒன்றியிருக்கும் திறனையும், ஒற்றுமையையும் இழந்து விட்டன. பாரதீய ஜனதா கட்சி என்ற புதிய பெயருடன் ஜனசங்கம் புத்துயிர் பெற்றது. இதற்கிடையில் கன்ஷிராமின் பகுஜன் சமாஜ் கட்சி சமூக நீதியை பிரதான திட்டமாக கொண்ட ஒரு தேசியக் கட்சியாக உருவாகியது. கேரளா, மேற்கு வங்காளம் மற்றும் திரிபுரா போன்ற சில மாநிலங்களில் பொதுவுடமை கட்சி (மார்க்சிஸ்ட்) மிகவும் சக்திவாய்ந்ததாக ஆனது.

*1990*–களில் இந்திய அரசியல் கூட்டணி அரசாங்கங்களுக்கான காலமாக இருந்தது. இந்திய அரசியல் முறைமை என்பது சமகால இந்தியாவில் காணப்பட்ட பலதரப்பட்ட பண்பாட்டு சமூக உறவு, பன்முகத்தன்மை, அதிக போட்டித்திறனோடு அதிக அளவில் மக்களாட்சி மயமாக்கப்பட்ட பிரதிநிதித்துவம் பெற்றது. பழைய கட்சிகள் வழக்கற்று செயலற்றதாகவும் மாறிவிட்டன. மேலும் புதிய கட்சிகள் மாறிவரும் சவால்களை எதிர்கொள்ள முயற்சித்தன.

*1990*–களில் இருந்து கூட்டாட்சி அரசியல் முறையை நாம் காண்பதுடன் பிராந்தியக் கட்சிகள் பெரிய செல்வாக்கைப் பெற்றுள்ளதையும் மத்திய அரசின் ஆதிக்கத்திற்கு எதிராக பிரதேச உணர்வுகளை பிரதிநிதிப்படுத்துவதையும் நாம் காண்கிறோம். தற்போதைய காலத்தில், பிராந்திய அளவிலான கூட்டணிகள் கூட்டாட்சி அரசியலுக்கு ஆதரவாகப் குரல் கொடுக்கும் போக்கு இருப்பதைக் காணலாம். இதற்கு காரணமாக அரசியலில் பிரதேசமயமாக்கலும், குறிப்பிட்ட பகுதிகளில் அதிக ஆதரவைக் கொண்டிருக்கும் கட்சிகளும் உள்ளன.






## மண்டலக் கட்சிகள்

பஞ்சாப்பில் சிரோமணி அகாலி தளம், உத்தரப்பிரதேசத்தில் சமாஜ்வாதிக் கட்சி, ஆந்திர பிரதேசத்தில் தெலுங்கு தேசம் கட்சி, பீகாரில் ராஷ்டிரிய ஜனதா தளம், மேற்கு வங்காளத்தில் அகில இந்திய திரிணாமுல் காங்கிரசு, தெலுங்கானாவில் தெலுங்கானா ராஷ்டிரிய சமிதி, அசாமில் அசாம் கண பரிசத்,

மகாராஷ்டிராவில் சிவசேனா, ஜம்மு காஷ்மீரில் தேசிய மாநாட்டுக்கட்சி, மக்கள் ஜனநாயக கட்சி, தமிழகத்தில் திராவிட முன்னேற்ற கழகம் மற்றும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆகியவை முக்கிய பிராந்தியக் கட்சிகளாக உள்ளன.

வாக்காளர்களிடையே அரசியல் விழிப்புணர்வு அதிகரிக்கையில், பிரதேச, சமூக மற்றும் மத அடையாளங்களுடன் அதிக அணி திரட்டலும் உள்ளது. அரசியல்குழுக்களின் அமைப்பில் பார்க்கும்போது ஒரு பிராந்தியத்திற்கும் இன்னொன்றிற்கும் இடையில் உள்ள அரசியல் மற்றும் சமூக குழுக்களின் பண்புகள் போன்றவற்றில் பரந்த வேறுபாடு உள்ளது.

| 2009 தேர்தலில் நாடாளுமன்றத்தில் இடங்களை பெற்ற கட்சிகள் | 2014 தேர்தலில் நாடாளுமன்றத்தில் இடங்களை பெற்ற கட்சிகள் |
|---|---|
| இந்திய தேசிய காங்கிரசு | பாரதிய ஜனதா கட்சி |
| பாரதிய ஜனதா கட்சி | இந்திய தேசிய காங்கிரசு |
| இந்திய பொதுவுடைமை கட்சி (மார்க்சிஸ்ட்) | அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் |
| சமாஜ்வாதி கட்சி | அகில இந்திய திரிணாமுல் காங்கிரசு |
| பகுஜன் சமாஜ் கட்சி | பிஜூ ஜனதா தளம் |
| திராவிட முன்னேற்றக் கழகம் | சிவசேனா |
| சிவசேனா | தெலுங்கு தேசம் கட்சி |
| ராஷ்டிரிய ஜனதாதளம் | தெலுங்கானா ராஷ்டிரிய சமிதி |
| அகில இந்திய திரிணாமுல் காங்கிரசு | யுவஜன ஸ்ரமிக ருது காங்கிரசு கட்சி |
| அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் | தேசியவாத காங்கிரசு கட்சி |


### தமிழ்நாட்டில் கட்சி முறை

தமிழ்நாட்டில், பெரும்பாலான இந்திய மாநிலங்களைப் போலவே தொடக்கத்தில் சுதந்திர போரட்ட காலத்தில் காங்கிரசு கட்சி ஆதிக்கம் செலுத்தியது. இருப்பினும் சாதி அடுக்குமுறையில் சிக்கல்கள் மற்றும் அதிகரிக்கும் வடக்கு, தெற்கு பிரிவினையின் எழுச்சி ஆகியவை மாநிலத்தில் காங்கிரசினுடைய புகழைக் குலைத்தன. திராவிட இயக்கம் பெரியார், ஈ.வே.ராமசாமியின் கீழ் தமிழ்நாட்டில் புத்துயிர் பெற்று திராவிட உரிமைகள், சுயமரியாதை, கண்ணியம் ஆகியவற்றின்



11th Std Political Science Tamil Medium Vol-2_Chapter 10_25_09_2018.indd 76 29-09-2018 12:41:17

வலியுறுத்தல் மற்றும் வடக்கு எதிர்ப்பு, இந்தி எதிர்ப்பு, பிராமணர் ஆதிக்கத்திறன் எதிரான சமூக கொண்டு ஆகியவற்றினால் பிரபலமடைந்தது.






தமிழ்நாட்டில் கட்சி அமைப்பு முறையானது சுதந்திர இந்தியாவின் அரசியலில் மாநில கட்சிகளின் ஒப்புயர்வற்ற நிலைக்கு முன் மாதிரியாக உள்ளது. இந்த மேம்பாட்டிற்கு மிகவும் தெளிவான சமூக-பொருளாதார, பண்பாடு மற்றும் வரலாற்று காரணங்கள் உள்ளன. காலனித்துவ காலம்முதல் பகுத்தறிவு மற்றும் சமூக நீதி இயக்கங்களின் நீண்ட வரலாறு மற்றும் 20-ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இருந்து திராவிட சிந்தனையை அணி திரட்டுதல் போன்றவை தமிழக அரசியலின் தன்மையையும், மாநில அரசியலில் அரசியல் கட்சி முறையின் எதிர்காலத்தையும் தீர்மானித்தது எனலாம்.

**செயல்பாடு**

அன்பு, குமரன், ராஜ்குமார் மற்றும் அமுதன் ஆகியோர் நண்பர்கள். அவர்கள் ஒரு நாள் திரைப்படம் பார்க்க சென்றனர். அத்திரைப்படத்தில் கதாநாயகன் ஒரு நாள் மட்டும் முதலமைச்சர் ஆகிறார். பெரிய மாற்றத்தை மாநிலத்தில் செய்கிறார். இதுதான் நாட்டிற்கு தேவை என்று அன்பு சொன்னான். இது குறித்து குமரன் கூறுகையில், இந்த வகையான தனிப்பட்ட அரசியல் நிறுவனமற்ற ஆட்சி ஆபத்தானது என்றான். ராஜ்குமார், "இது ஒரு கற்பனையானது, எந்த ஒரு அமைச்சரும் ஒரு நாளில் எதுவும் செய்ய முடியாது" என்றான்.

அத்தகைய ஓர் படத்தினை பற்றிய உங்கள் கருத்து என்னவென்று நான்காவது நபராக நீங்கள் கற்பனை செய்து பாருங்கள்?

## 10.7 மக்களாட்சியில் அரசியல் கட்சிகளின் பங்கு

ஓர் மக்களாட்சியின் திறன்மிக்க செயல்பாட்டிற்கு, முரண்பாடான விருப்பங்களைப் பிரதிபலிப்பு செய்யும் அரசியல் கட்சிகளின் இருப்பது கட்டாயமாகும். பல்வேறு விருப்பங்களையும், கொள்கைகளையும் பரிந்துரைக்கையில் பெரும்பாலான அரசியல் கட்சிகள், வலதுசாரி (பழமைவாதம், பாரம்பரியம் மற்றும் முதலாளித்துவம்) அல்லது இடதுசாரி சிந்தனையை (சமத்துவ-சார்பு, தாராளவாதம் மற்றும் தொழிலாளர் நலனை) பின்பற்றுகின்றன. மக்களாட்சிக்கான லட்சியத்தை அடைவதற்கு அரசியல் கட்சிகள் அவசியமானவை என்பது உண்மையே என்றாலும், மக்களாட்சி கோட்பாடற்ற, தனிப்பட்ட கட்சிகளின் வளர்ச்சி மற்றும் சர்வாதிகார தலைமையின் கீழ் தனிப்பட்ட

கட்சிகளின் எழுச்சி என்பது மக்களாட்சிக்கு ஒரு முக்கியமான சவால் ஆகும். இந்தியா போன்ற பல பன்முக பண்பாடு, மொழி, மத மற்றும் பொருளாதார வேற்றுமை கொண்ட நாடுகளில், நாட்டின் ஒவ்வொரு மூலையிலிருந்தும் மக்களின் பல்வேறுபட்ட நலன்களை அரசியல் கட்சிகள் மட்டுமே பிரதிபலிக்கின்றன. இத்தகைய முதிர்ச்சியடைந்த,மதச்சார்பற்ற நிலைப்பாட்டை மேற்கொள்வது இந்தியா போன்ற மக்களாட்சி நாடுகளுக்குப் பொருத்தமானது. இல்லையெனில், இந்தியாவின் மதிப்புயர்வான ஒற்றுமை மற்றும் நிலைத்தன்மையை பாதுக்காக்க முடியாது. நாட்டின் நலனிற்காக பொறுப்புணர்வு மற்றும் கொள்கை ரீதியான கட்சிகள், மக்களாட்சி அமைப்புகளின் நிலைதன்மைக்காக தங்கள் கடமையையும், செயல்பாட்டையும் கையாளுவதில் முதிர்ச்சி மற்றும் பொறுப்புணர்வை காட்டுகின்றன.

**செயல்பாடு**



நன்றி: தி ஹிந்து, 5.5.2004.

தேர்தலுக்கு பிந்தைய கருத்துக்கணிப்புகள் அனைத்துமே தவறு என நிருபணமாகும் என்று ஓர் ஜோதிடர் என்னிடம் கூறினார்.

மேற்குறிப்பிட்டுள்ள கேலிச் சித்திரத்தைப் பற்றிய கருத்துக்கள் மற்றும் விளக்கங்கள் வரவேற்கப்படுவதுடன் இதில் உனது கருத்து என்ன என்பதனை வகுப்பறையில் பிற மாணவர்களிடம் பகிரவும்.

### மக்களாட்சியில் எதிர்கட்சிகளின் பங்கு

கட்சி முறை மற்றும் மக்களாட்சி ஆகியவற்றிக்கு இடையிலான உறவு, மக்களாட்சியில் எதிர்கட்சிகளின் பங்கு பற்றிய விவாதம் இல்லாமல் முழுமையடையாது. நாட்டில் ஓர் சக்தி வாய்ந்த எதிர்கட்சி அல்லது கட்சிகள் இல்லாமல் மக்களாட்சிக்கு எந்த அர்த்தமும் இல்லை. மக்களாட்சியின் தன்மை ஆளும் கட்சியின் வலிமையினால் மட்டுமே நிர்ணயிக்கப்படுவது அல்ல, எதிர்க்கட்சியின் பங்கு மற்றும் அதன் செயல்பாட்டிலும் உள்ளது.

உண்மையில் எதிர்க்கட்சித் தலைவர் என்பவர் அமைச்சர் பதவிக்கான தகுதியையும், சலுகைகளையும் பெறுகிறார். ஓர் பலவீனமான எதிர்க்கட்சி பொறுப்புணர்வற்ற அரசாங்கத்திற்கு அல்லது பெரும்பான்மையின் கொடுங்கோண்மைக்கு வழிவிடுகிறது.

அழுத்தக்குழுக்கள் அல்லது தன்னலக்குழுக்கள் ஆகியவை முக்கியப் பிரச்சனைகள் மற்றும் நிகழ்வுகளில் ஓர் முக்கியப் பங்கு வகிக்கின்றன. இவை பொதுவான அரசியல் மற்றும் சமூக நலன்களைக் கொண்ட குழுக்களாக ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன. அவை வெளியிலிருந்து வரும் முடிவுகளின் மீது செல்வாக்கு செலுத்துகின்றன. அழுத்தக் குழுக்கள் குறிப்பிட்ட நலன்களுக்காக தன்னார்வ உறுப்பினர்கள் மூலம் ஆதரவு திரட்டுகின்றன. அரசியல் கட்சிகள் போலன்றி, அழுத்தக்குழுக்கள் தேர்தலில் போட்டியிடுவதில்லை.

அழுத்தக்குழுக்கள் பல பொதுக் கொள்கை சிக்கல்களால் பல்வேறு வழிமுறைகளை பின்பற்றி அரசாங்கத்தின் மீது தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. எனவே அவை அழுத்தக் குழுக்கள் என்று அழைக்கப்படுகின்றன. தொழில் சார்ந்த அழுத்தக் குழுக்கள் என்பவை வணிக நலன்களை, தொழிற் சங்கங்கள், விவசாயிகள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள்,



11th Std Political Science Tamil Medium Vol-2_Chapter 10_25_09_2018.indd 78 29-09-2018 12:41:18

மருத்துவர்கள், பண்பாட்டு குழுக்கள் மற்றும் நிறுவன குழுக்கள் ஆகியவற்றை உள்ளடக்கியிருக்கலாம். மக்களுக்கும் அரசியல் கட்சிகளுக்கிடையிலான தொடர்பு மற்றும் தொடர்புக்கான ஆதாரமாக செயல்படுவதன் மூலம் இந்திய அரசியல் முறைமையில் அழுத்தக் குழுக்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. அவர்கள் பொதுமக்களின் சமூக, பொருளாதார சிக்கல்களுக்கு முக்கியத்துவம் அளிப்பதோடு, அரசாங்கத்தின் நிர்வாகக் கொள்கைகள் மீது செல்வாக்கு செலுத்துகிறார்கள்.



தலைமைப் பண்பும், கற்றலும்
ஒன்றோடு ஒன்று
இன்றியமையாதவை

-ஜான். எஃப். கென்னடி

### தேர்தலியல்

தேர்தல் பற்றிய ஆய்வு மற்றும் புள்ளிவிவர பகுப்பாய்வே தேர்தலியல் ஆகும். பொது கருத்துக் கணிப்புகள், தேர்தலியலில் ஓர் முக்கியப் பங்கினை வகிக்கின்றன. தேர்தலுக்கு முந்தைய கருத்து கணிப்புகள், தேர்தலுக்கு பிந்தைய கருத்து கணிப்புகள் மற்றும் தேர்தல் முடிவுகள் ஆகியவை இதில் பகுப்பாய்வு செய்யப்படுகின்றன. கருத்துக்கணிப்புகள் மற்றும் தேர்தலுக்குப் பிந்தைய கருத்துக் கணிப்புகள் ஆகியவை தேர்தல்களில் வாக்காளர் விருப்பத்தின் முக்கிய குறியீடாக இருக்கின்றன.





இரண்டுக்கும் இடையேயான பிரதான வேறுபாடு, வாக்காளர் வாக்களிக்கும் முன் நடத்தப்படும் கருத்துக்கணிப்பு மற்றும் வாக்குப்பதிவு நடைபெறுகையில் வாக்காளர் வாக்களித்த பின் வாக்குச்சாவடிக்கு வெளியே நடத்தப்படும் கருத்துக்கணிப்பு என்பதாகும். தேர்தலுக்குப் பின் வெளிவரும் கருத்துக்கணிப்பு முடிவுகள் தேர்தலுக்கு முந்தைய கருத்துக்கணிப்புகளை விட நம்பகமானதாகக் கருதப்படுகிறது. கருத்துக்கணிப்புகளின் முடிவு உண்மையில் தேர்தல் முடிவுகளை ஒத்திருக்கலாம் அல்லது தவறாகலாம். இருப்பினும், அவை உறுதியற்ற யாருக்கு வாக்களிப்பது என்பதனை தீர்மானிக்காத வாக்காளர்களுக்கு மிகவும் முக்கியமானதாக இருப்பதுடன் அனைத்து கட்சிகளுக்கும் வாக்களிப்பு நடைமுறைகளின் சமநிலையை உருவாக்குவதற்கு முக்கியமானதாக இருக்கிறது.

### அருஞ்சொற் பொருள்

அரசியல் கட்சி : தன் உறுப்பினர்களை, பொது அலுவலகத்திற்கு தேர்ந்தெடுப்பதன் மூலம் அரசியல் அதிகாரத்தை பெறும் ஓர் அமைப்பு.

ஒரு கட்சி முறை : அரசமைப்பை அடிப்படையாக கொண்டு அரசாங்கம் அமைக்கும் உரிமையை பெற்ற ஓர் அரசியல் கட்சி அல்லது அரசியல் அதிகாரத்தின் மீது தனிப்பட்ட கட்டுப்பாடைக் கொண்டிருக்கும் ஒரே ஒரு அரசியல் கட்சி.

இரு கட்சி முறை : இந்த அமைப்பில் இரண்டு கட்சிகள் மட்டுமே அரசியலில் இருக்கும்.

இவற்றுள் ஒன்று ஆளும் கட்சியாகவும் மற்றொன்று எதிர்க்கட்சியாகவும் இருக்கும். இந்த முறையில் பெறும்பான்மையை பெறுவதற்கு மிகுந்த வாய்ப்பு உள்ளது. மற்ற கட்சிகள் மிக சிறிய கட்சிகளாகவோ அல்லது நாட்டின் ஒரு பகுதியில் மட்டும் இயங்கும் கட்சிகளாகவோ இருக்கும்.

*பல கட்சி முறை* : பல அரசியல் கட்சிகள் அரசாங்க பதவிகளை தனித்தனியாகவோ அல்லது கூட்டணியிலோ கட்டுப்படுத்தும் திறனைக் கொண்டுள்ள ஒரு அமைப்பு.

*வாக்குச்சீட்டு* : வேட்பாளின் பெயர், சின்னம், போன்ற விவரங்களைக் கொண்ட துண்டுச் சீட்டு.

*இடைத்தேர்தல்* : இரண்டு சட்டமன்ற பொதுத்தேர்தல்களுக்கிடையே ஒரு சட்டமன்ற தொகுதி காலியானாலோ அந்த சட்டமன்ற உறுப்பினர் ராஜினாமா செய்தாலோ, வேறு கட்சிக்கு மாறுவதினால் பதவி நீக்கம் செய்யப்பட்டாலோஅல்லதுஇறந்துவிட்டாலோ அந்த தொகுதியில் நடைபெறும் தேர்தல் இடைத்தேர்தல் எனப்படும். 2010-ம் ஆண்டிலிருந்து இதுவரை 21 இடைத்தேர்தல்கள் நடந்துள்ளன.

*தேர்தல்* : தகுதி வாய்ந்த நபர்களை ஆட்சி அதிகாரத்திற்கு வாக்கெடுப்பின் மூலம் மக்கள் தேர்ந்தெடுக்கும் முறை.

*வாக்காளர்* : வாக்காளர் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ள ஒருவர்.

*தேர்தல் ஆணையம்* : தேர்தல் ஆணையம் தன்னாட்சி பெற்ற ஒரு அமைப்பு. மாநில சட்டப்பேரவைகள், மற்றும் நாடாளுமன்றத் தேர்தல்களை நடத்தவும், மேற்பார்வையிடவும் உருவாக்கப்பட்டுள்ள அமைப்பு.

*வாக்குச் சீட்டு பெட்டி* : வாக்குச் சாவடியில் உள்ள வாக்குப் பெட்டியில் அல்லது வாக்களிப்புத் தாள் வாக்காளரால் குறியிட்டு முடிக்கப்பட்ட பிறகு செருகப்படும், வாக்குப்பதிவு துவங்குவதற்கு முன் வாக்குப் பெட்டகம் முத்திரையிடப்பட்டு, எண்ணிக்கை துவங்கும் வரை திறக்கப்படாது.

*கூட்டணி அரசாங்கம்*: தேர்தல் முடிவுகளில் எந்த ஒரு கட்சிக்கும் அறுதிபெரும்பான்மை கிடைக்கவில்லையெனில் ஒன்றிக்கும் மேற்பட்ட கட்சிகள் ஒன்றினைந்து அமைக்கும் அரசாகும்.

*தேர்தலியல்* : தேர்தல் அதன் முடிவுகள், அது தொடர்பான புள்ளி விவரங்கள் பற்றிய படிப்பு..

*தேர்தல் முறைமை* : தேர்தல்களைப் பற்றிய அனைத்து விதிகளுக்கான பொது பெயர், அதாவது வாக்களிப்பு முறை, எல்லைகள், வாக்காளர்களின் பதிவு, வேட்பாளர், பிரச்சார செலவு, ஒளிபரப்பு முதலியன.

*பெரும்பான்மை அரசாங்கம்* : சட்டமன்றம் அல்லது நாடாளுமன்றத்தில் ஐம்பது சதவிகித இடங்களுக்கு மேல் கொண்டு அமைக்கும் அரசாங்கம்..

*மக்களாட்சி* : மக்களால் மக்களுக்காக மக்களே நடத்தும் ஆட்சி மக்களாட்சியாகும்

## மதிப்பிடுதல்

### I. சரியான பதிலை தேர்வு செய்யவும்

1. அரசியல் அதிகாரத்தை அடைவதே பொது நோக்கமாக கொண்ட மக்கள் குழு என்பது

அ. அரசியல் கட்சி ஆ. தன்னலக் குழு
இ. பிரிவினைக் குழு ஈ. அரசியல் தலைமைத்துவம்

2. கீழ்க்கண்டவற்றில் அரசியல் கட்சியின் முக்கிய அங்கம் எது?

அ. தலைவர்கள் ஆ. தொண்டர்கள்
இ. செயல் உறுப்பினர்கள் ஈ. இவை அனைத்தும்

3. கீழ்க்கண்டவற்றில் அரசியல் கட்சியின் செயல்பாடு எது?

அ. தேர்தலில் போட்டியிடுவது
ஆ. அரசாங்கத்தை அமைப்பதும், இயக்குவதும்
இ. பொதுக் கருத்துக்களை உருவாக்குதல்
ஈ. இவை அனைத்தும்

4. அரசாங்கத்தை இயக்கும் அரசியல் கட்சி என்பது

அ. ஆளும் கட்சி ஆ. தன்னலக் குழு
இ. எதிர்க்கட்சி ஈ. பிரிவினைக் குழு

5. அரசியல் கட்சிகளின் எழுச்சியுடன் நேரடியாக இணைக்கப்பட்டுள்ளது........

அ. பிரதிநிதித்துவ மக்களாட்சிகளின் தோற்றம்
ஆ. பெரிய அளவிலான சமுதாயங்கள்
இ. அரசாங்கத்தை தடுத்து நிறுத்தவதற்கும், ஆதரவு தருவதற்குமான வழிமுறை
ஈ. இவை அனைத்தும்

6. ஒரு கட்சி கொண்ட அமைப்பு முறை கொண்ட நாடு.

அ. சீனா ஆ. இங்கிலாந்து
இ. அமெரிக்கா ஈ. பிரான்சு

7. இரு கட்சி முறை கொண்ட நாடு

அ. பாகிஸ்தான் ஆ. இந்தியா
இ. இங்கிலாந்து ஈ. இவை எதுவும் இல்லை

8. கீழ்க்கண்டவற்றில் ஒரு கட்சி முறையைக் கொண்ட நாடு எது?

அ. சீனா ஆ. வடகொரியா
இ. கியூபா ஈ. இவை அனைத்தும்

9. கீழ்க்கண்டவற்றில் பல கட்சி முறையைக் கொண்ட நாடு எது?

அ. இந்தியா ஆ. பாகிஸ்தான்
இ. பிரான்ஸ் ஈ. இவை அனைத்தும்



11th Std Political Science Tamil Medium Vol-2_Chapter 10_25_09_2018.indd 81 29-09-2018 12:41:18

10. காங்கிரசு கட்சியின் தேர்தல் சின்னம் என்ன?

அ. தாமரை சின்னம் ஆ. கை சின்னம்
இ. யானை சின்னம் ஈ. கடிகார சின்னம்

12. "தாமரை" எந்த கட்சியின் அரசியல் சின்னமாக உள்ளது?

அ. இந்திய தேசிய காங்கிரசு ஆ. பகுஜன் சமாஜ் கட்சி
இ. பாரதிய ஜனதா கட்சி ஈ. சி.பி.ஐ (எம்)

13. பொதுக்கருத்து என்பது முக்கிய பங்கு வகிப்பது........

அ. மக்களாட்சி முறையில்
ஆ. சர்வாதிகார முறையில்
இ. மக்களாட்சி மற்றும் சர்வாதிகார முறை ஆகிய இரண்டிலும்
ஈ. சுமூகமாக செயல்படும் அனைத்து வகையான அரசியல் முறைமைகளிலும்

14. ஐக்கிய அமெரிக்க நாடுகளின் முக்கிய அரசியல் கட்சிகள் எவை?

அ. சுதந்திர மற்றும் மக்களாட்சிவாதிகள்
ஆ. குடியரசு மற்றும் மக்களாட்சிவாதிகள்
இ. மக்களாட்சி மற்றும் சமதர்மவாதிகள்
ஈ. குடியரசு மற்றும் பொதுவுடைமைவாதிகள்

15. தேர்தலியல் எதை பற்றி கையாள்கிறது?

அ. தேர்தல் மற்றும் தேர்தல் குறித்த புள்ளிவிவர பகுப்பாய்வு
ஆ. கருத்து கணிப்புகள் மற்றும் தேர்தலுக்கு பிந்தைய வாக்கெடுப்புகள்
இ. பொதுக் கருத்து
ஈ. மேலே உள்ள அனைத்தும்

16. **கூற்று(A):** அரசியல் கட்சிகள் பொதுக்கருத்தினை ஒன்றிணைக்கின்றன
**காரணம் (R):** பொதுக்கருத்து தேர்தல் முடிவுகளில் தாக்கத்தை ஏற்படுத்கிறது.

மேற்கூறிய இரண்டு வாக்கியங்களுள் ஒன்று கூற்றாகவும் (கூ) மற்றொன்று காரணமாகவும் (கா) உள்ளது. இந்த சூழலில் கீழ்க் கண்டவைகளுள் எது சரியானது என்று கூறுக.

அ) கூற்று (கூ) காரணம் (கா) இரண்டுமே சரி, கூற்றுக்கான சரியான விளக்கமான காரணம் உள்ளது.

ஆ) கூற்று மற்றும் காரணம் இரண்டுமே சரி ஆனால் கூற்றுக்கான சரியான விளக்கமான காரணம் இல்லை.

இ) கூற்று சரி ஆனால் காரணம் தவறு

ஈ) கூற்று தவறு ஆனால் காரணம் சரி.

## II. பின்வரும் கேள்விகளுக்கு மிக சுருக்கமாக பதிலளிக்கவும்

17. அரசியல் கட்சியை வரையறுக்கவும்
18. ஒரு கட்சி முறையை விளக்குக.
19. பல கட்சி முறை பற்றி சிறு குறிப்பு எழுதுக
20. பிராந்திய அரசியல் கட்சியை பற்றி சிறு குறிப்பு எழுதுக
21. இந்தியாவிலுள்ள முக்கிய அரசியல் கட்சிகளைப் பட்டியலிடுக



11th Std Political Science Tamil Medium Vol-2_Chapter 10_25_09_2018.indd 82 29-09-2018 12:41:18

22. பொது கருத்துத்தினை வரையறுக்கவும்
23. இந்தியாவில் எதிர்க்கட்சிகளின் பங்கினை விளக்குக.

## III. பின்வரும் கேள்விகளுக்கு சுருக்கமாக பதிலளிக்கவும்

24. மக்களாட்சியில் அரசியல் கட்சிகளின் பங்கினை விளக்குக.
25. அரசியல் கட்சிகளின் பணிகளைப் பட்டியலிடுக.
26. கட்சி முறையின் வகைகளை பற்றி எழுதுக.
27. பல கட்சி முறையின் நிறைகள் மற்றும் குறைகளைப் பற்றி விவாதிக்கவும்
28. இங்கிலாந்தின் கட்சி முறையைப் பற்றி விவரிக்கவும்

## IV. பின்வரும் கேள்விகளுக்கு விரிவாக பதிலளிக்கவும்

29. பல்வேறு வகையான அரசியல் கட்சி முறைகளைப் பகுப்பாய்ந்து, எவ்வகை மக்களாட்சிக்குப் பொருத்தமானது என்பதை குறிப்பிடுக.
30. இரு கட்சி முறையின் நிறைகள் மற்றும் குறைகளை தெளிவுபடுத்துக.
31. இந்தியாவில் உள்ள அரசியல் கட்சிகளைப் பற்றி விளக்குக.
32. தென் ஆப்பிரிக்காவில் உள்ள கட்சி முறையை மதிப்பீடு செய்க.
33. இந்தியாவில் உள்ள பொதுக் கருத்து பற்றி ஓர் கட்டுரையை எழுதுக.

## மேற்கோள் நூல்கள் (Reference books)


1. Boix, C. Emergence of Parties and Party systems.Oxford handbook of comparative politics. July 2009.
2. Kothari,R. Politics in India. New Delhi. Orient Longman.2003
3. Mehta, A.K. Political parties and party systems. New Delhi. Sage Publications. 2003
4. Palmobara, J.L & Weiner,M. Eds. Origin and development of political parties. Princeton, 1972
5. Pandian, M.S.S., Brahmin and Non-Brahmin: Genealogies of the Tamil Political Present. Manohar: New Delhi, 2007.




11th Std Political Science Tamil Medium Vol-2_Chapter 10_25_09_2018.indd 83 29-09-2018 12:41:18

## ICT CORNER

### அலகு10 பொதுக்கருத்து மற்றும் கட்சி முறை

இந்த செயல்பாட்டின் மூலமாகமாநில அளவில் கட்சி முறைகளின் கட்டமைப்பு பற்றி அறிந்து கொள்ளலாம்.




### மாநில அளவில் கட்சி முறைகளின் கட்டமைப்பு

**படிகள்**

*படி 1:* கீழ்க்காணும் உரலி / விரைவுக் குறியீட்டைப் பயன்படுத்தி மாநில அரசு எவ்வாறு செயல்படுகிறது என அறிக.

*படி 2:* செயல்பாட்டின் சாளரத்தில் வலப்பக்கம் கீழே உள்ள பொத்தானை சொடுக்கவும்,

*படி 3:* சிறிய கதைக்கு பின், மாநில அரசு பற்றி விளக்கப்படும்.

*படி 4:* மேலும் மாநில அரசு பற்றி விவரம் அறிய முன்னோக்கு பொத்தானை சொடுக்குக..

படி 1




படி 2




படி 3




படி 4



**உரலி :**

*படங்கள் அடையாளத்திற்கு மட்டும்.

இப்பக்கத்திற்கு தேவைப்பட்டால் Flash Player or Java Script ஐ அனுமதிக்கவும்

mocomi.com/how-does-state-government-work/

B146_11_PSCI_TM



11th Std Political Science Tamil Medium Vol-2_Chapter 10_25_09_2018.indd 84 29-09-2018 12:41:21

அலகு 11

# தேர்தல் மற்றும் பிரதிநிதித்துவம்

## 11.1. வாக்குரிமை மற்றும் பிரதிநிதித்துவத்தின் பொருள் மற்றும் தன்மை

PNHL4K

### வாக்குரிமை மற்றும் தேர்தல் என்றால் என்ன?

இது பொதுத் தேர்தல்களில் வாக்களிப்பதற்கான ஒரு உரிமையாகும். 'வாக்குரிமை' எனும் சொல், 'சுதந்திரம்' என்று பொருள் படக்கூடிய 'பிராங்க்' என்ற ஆங்கிலோ-பிரெஞ்சு கலவைச் சொல்லிலிருந்து பெறப்பட்டதாகும்.

உங்களுக்குத் தெரியுமா?

**இந்திய அரசமைப்பின் பகுதி XV, உறுப்புகள் 324–329 தேர்தலைப் பற்றியதாகும்.**

தேர்தல் என்பது தங்களின் சார்பாக யாரேனும் ஒருவரை அரசியல் தலைவராகவோ அல்லது பிரதிநிதியாகவோ அரசாங்கத்தில் பங்குபெற தெர்ந்தெடுப்பதற்காக வாக்களிக்கும் நடைமுறையாகும்.

### பிரதிநிதித்துவம் என்றால் என்ன?

பிரதிநிதித்துவம் என்பது பிறருக்காக பேசும் நடவடிக்கை அல்லது பிறருக்காக செயல்படுதல் அல்லது பிரதிநிதித்துவம் பெறும் நிலையாகும்.

உங்களுக்குத் தெரியுமா?

மக்களவைக்கும், மாநில சட்டப்பேரவைகளுக்கும் வயது வந்தோர் வாக்குரிமையின் அடிப்படையில் தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும் என இந்திய அரசமைப்பின் உறுப்பு 326 விளக்குகிறது.

### கற்றலின் நோக்கங்கள்

- தேர்தல் மற்றும் பிரதிநிதித்துவம் பற்றி மாணவர்கள் புரிந்து கொள்ளுமாறு செய்தல்
- 'தேர்தலியல்' என்னும் சொல்லை விளக்குதல்.
- தேர்தலின் பல்வேறு முறைகளை மாணவர்கள் புரிந்து கொள்ளுமாறு செய்தல்.
- இந்திய தேர்தல் ஆணையத்தைப் பற்றி விழிப்புணர்வு பெறுதல்.
- கட்சித்தாவல் தடைச் சட்டத்தின் முக்கியத்துவத்தினை அறிதல்.
- சுதந்திரமான மற்றும் நேர்மையான தேர்தல்களின் தேவையை பற்றி அறிவுறுத்துதல்.
- அரசியலில் இளைஞர்களின் பங்கை வெளிக்கொணர்தல்.

இந்திய அரசமைப்பில் 'தேர்தல்கள்' என்னும் தலைப்பிலான பகுதி XV மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். நமது அரசமைப்பினை உருவாக்கியவர்கள் இதில் உள்ள அரசியல் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக இதை அரசமைப்பின் ஓர் பகுதியாக இணைத்தனர். இம்முக்கிய காரணத்தினால் தான் 'தேர்தல்' என்னும் கருப்பொருளுக்கு நமது நாட்டில் அரசமைப்பிலான அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

முன்னரே 'தேர்தல்கள்' என்பவை பண்டைய ஏதென்ஸ், ரோமாபுரி ஆகியவற்றிலும் போப் ஆண்டவர் மற்றும் ரோமானியப் பேரரசர்கள் தேர்வு ஆகியவற்றிலும் பயன்படுத்தப்பட்டுள்ளது.



11th Std Political Science Tamil Medium Vol-2_Chapter 11_22-09-18.indd 85 29-09-2018 12:41:42

தற்கால தேர்தல்களின் தோற்றம் என்பது 17-ம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் படிப்படியாக எழுச்சி கண்ட பிரதிநிதித்துவ அரசாங்கங்கள் மூலமாகவும் பின்னர் வட அமெரிக்காவிலும் தோன்றியது. பிரதிநிதித்துவ மக்களாட்சியில் தேர்தல்கள் மிகவும் முக்கியமானவையாகும். உங்களது குரல் ஒங்கி ஒலிப்பதற்கு தேர்தலில் வாக்களிப்பதே சிறந்த வழியாகும். சட்டங்களின் மூலமாக அரசியல் கட்சிகள் மக்களை வாக்களிக்க விடாமல் செய்யும் போது தேர்தல்கள் மிகுந்த முக்கியத்துவம் பெறுகின்றன என்பது உண்மையாகும். தேர்தல்கள் மற்றும் பிரதிநிதித்துவம் ஆகியவை அரசாங்கத்தை உருவாக்குவதன் அடிப்படையாகும்.

### மக்களாட்சியின் வாக்காளர் முறைமை

ஓர் மக்களாட்சியின் வாக்காளர் முறைமையின் மிகவும் அடிப்படையான இயல்புகளைப் பற்றி நாம் கற்றுக்கொள்வோம். ஓர் மக்களாட்சியின் வாக்காளர் முறைமை என்பது பின்வருமாறு உள்ளதாகும்.




**மக்களாட்சியின் வாக்காளர் முறைமையின் இயல்புகள்**

## தேர்தல்கள் ஏன் நமக்கு தேவைப்படுகின்றன?

தேர்தல்கள் இல்லாத ஓர் மக்களாட்சியை நாம் கற்பனை செய்து பார்ப்போம். தேர்தல்களே இல்லாத மக்களாட்சி என்பது ஒருவேளை சாத்தியமாவதற்கு மக்கள் அனைவரும் ஒவ்வொரு நாளும் ஒன்று கூடி அனைத்து முடிவுகளையும் எடுக்க வேண்டும். ஓர் மிகப்பெரிய சமூகத்தில் இது சாத்தியமாகாது. மேலும் அனைத்து விவகாரங்களிலும் முடிவெடுப்பதற்கான நேரமும், அறிவுத்திறனும் அனைவருக்கும் இருப்பது சாத்தியமில்லை. இப்பிரச்சனைகளை மக்கள் தீர்ப்பதாக நாம் கருதுவோம் எனில் அங்கு தேர்தல்கள் தேவைப்படாது. அதனை நாம் மக்களாட்சி என அழைக்கலாமா?

மக்கள் தங்களின் பிரதிநிதிகளை விரும்புகின்றனரா? இல்லையா? என நாம் எவ்வாறு அறிந்து கொள்ளலாம்? மக்களின் விருப்பங்களுக்குத் தகுந்தவாறு பிரதிநிதிகள் ஆட்சி செய்கிறார்களா என்பதனை நாம் எவ்வாறு உறுதிப்படுத்தலாம்? மக்கள் விரும்பாத பிரதிநிதிகள் பதவியில் இருக்கிறார்களா என்பதனை நாம் எவ்வாறு உறுதிப்படுத்தலாம்? இதற்காக குறிப்பிட்ட இடைவெளிகளில் மக்கள் தங்களின் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பதற்கும், விருப்பப்படி அவர்களை மாற்றுவதற்கும் தகுந்த வழிமுறைகள் தேவைப்படுகின்றன. அதுவே தேர்தலாகும் ஆகவே தற்காலத்தில் எவ்வகையான பிரதிநிதித்துவ அரசாங்கத்திற்கும் தேர்தல் அடிப்படையானதாகும். ஆகையால் பெரும்பாலான மக்களாட்சிகளில் மக்கள் தங்களின் பிரதிநிதிகள் மூலமாகவே ஆட்சி செய்கின்றனர்.

## ஓர் தேர்தலில் வாக்காளர் பல்வேறு தேர்வுகளை மேற்கொள்கிறார். அவையாவன

- தங்களுக்கான சட்டங்களை உருவாக்குபவரை தேர்வு செய்வர்.

- அரசாங்கத்தை அமைத்து பெரும்பான்மை முடிவுகளை எடுப்போரைத் தேர்வு செய்வர்.
- அரசாங்கம் மற்றும் சட்டமியற்றுதலில் வழிகாட்டக் கூடிய கொள்கைகளைக் கொண்ட கட்சியைத் தேர்வு செய்வர்.

**செயல்பாடு**




**நன்றி: இந்து நாளிதழ், 27.12.2012**

மாணவர்கள் மூன்று அல்லது நான்கு நிமிடங்களுக்குத் தனித்து சிந்திக்கவும். பின்னர் தனது நண்பருடன் விவாதித்து, பதில்களை ஒப்பீடு செய்வதுடன் பின்னர் வகுப்பறையில் கருத்துக்களை பகிரவும்.

**செயல்பாடு**

**சிந்தனை – இணைக்கவும் – சேர்த்தல் – விவாதிக்கவும்**

குற்றப்பின்னணி உள்ள வேட்பாளர்களை கட்சிகள் முன்நிறுத்தும் போது அதன் விளைவாக பெரும்பாலான மக்கள் அரசியல் வர்க்கத்திலிருந்தும், ஏன் அரசியலில் இருந்துமே அந்நியப்படுகின்றனர்.

### எது தேர்தலை மக்களாட்சியிலானதாக ஆக்குகிறது?

- அனைவருக்கும் தேர்வு செய்யும் வாய்ப்பு இருக்க வேண்டும். ஒருவருக்கு ஒரு வாக்கு மற்றும் ஒவ்வொரு வாக்கிற்கும் சமமமான மதிப்பு என்பது இதன் பொருளாகும்.
- அரசியல்கட்சிகளால்தேர்ந்தெடுக்கப்படும் வேட்பாளர்கள் சுதந்திரமாகத் தேர்தலில் போட்டியிடுவதுடன் வாக்காளர்களுக்குத் தகுந்தவாறு உண்மையான தேர்வுகளுக்கான வாய்ப்புகள் வழங்கப்பட வேண்டும்.
- அத்தேர்வுகள் தகுந்த இடைவெளிகளில் வழங்கப்பட வேண்டும். ஒருசில ஆண்டுகளுக்கு ஒருமுறை தகுந்த இடைவெளியில் தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும்.
- மக்களால் விரும்பப்படும் வேட்பாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்.
- மக்கள் தங்களின் விருப்பங்களுக்குத் தகுந்தவாறு தேர்ந்தெடுக்கும் வகையில் சுதந்திரமான மற்றும் நேர்மையான தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும்.

தேர்தல் என்பது ஓர் முறையான முடிவாக்க நடைமுறையாகும். அதில் மக்கள் பொதுப்பதவி வகிப்பவர்களைத் தேர்ந்தெடுக்கின்றனர். தேர்தலின் மூலமாக சட்டமன்றங்களில் உள்ள பதவிகள் மட்டுமல்லாமல் ஆட்சித்துறை, நீதித்துறை மற்றும் வட்டார, உள்ளாட்சி அரசாங்கங்களில் உள்ள பதவிகளும் நிரப்பப்படுகின்றன.

**உங்களுக்குத் தெரியுமா?**

தேர்தல்கள் தொடர்பான புள்ளி விபரங்கள் மற்றும் முடிவுகளை கற்றறியும் கல்வியே தேர்தலியல் ஆகும்.

## 11.2 பிரதிநிதித்துவத்தின் வகைகள் / தொகுதிகளுக்கான இடஒதுக்கீடு

### தேர்தல் முறைமை– பன்மைத்துவம் / பெரும்பான்மை முறைமைகள்

பன்மைத்துவம் / பெரும்பான்மை முறைமைகளின் கொள்கைகள் மிகவும் எளிமையானவையாகும். மக்கள் வாக்களித்தபிறகு வாக்குகள் எண்ணப்பட்டு அதிக வாக்குகளைப் பெற்ற வெட்பாளர் அல்லது கட்சிகள் வெற்றி பெற்றவையாக அறிவிக்கப்படுகின்றன. இருப்பினும் இதன் நடைமுறைகள் மாறுபடுகின்றனது. ஆகையால்

ஐந்து வகையான பன்மைத்துவ / பெரும்பான்மை முறைமைகளை அடையாளப்படுத்தலாம்.

**செயல்பாடு**

உனது மாநிலத்தில் கடந்த சட்டமன்றத் தேர்தல் எப்பொழுது நடைபெற்றது என உனக்குத் தெரியுமா? கடந்த ஐந்து ஆண்டுகளில் உனது பகுதியில் வேறு ஏதேனும் தேர்தல்கள் நடைபெற்றனவா? அத்தேர்தல்களைப் பற்றி எழுதுக. (தேசிய, மாநில, உள்ளாட்சி மற்றும் பிற). அவை எப்பொழுது நடைபெற்றன? உனது பகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற / நாடாளுமன்ற உறுப்பினரின் விவரங்களைக் கண்டறிக.

அ) முதலில் நிலையைக் கடந்து செல்லுதல் (FPTP)

ஆ) தொகுதி வாக்கு (BV)

இ) கட்சித் தொகுதி வாக்கு (PBV)

ஈ) மாற்று வாக்கு (AV)

உ) இரு சுற்று முறை (TRS)

**செயல்பாடு**

நிலையை முதலில் கடந்தவரே வென்றவர் என்ற முறையை இந்திய தேர்தல்களில் பின்பற்றபடுகிறது. இன்றைய இந்திய சூழலில் இந்த முறையின் நன்மை மற்றும் தீமைகளை கூறு.

### அ. முதலில் நிலையைக் கடந்து செல்லுதல் (FPTP)

முதலில் நிலையைக் கடந்து செல்லுதல் என்பது பன்மைத்துவம் / பெரும்பான்மை முறையின் எளிமையான வடிவமாகும். இது ஓர் உறுப்பினர் தொகுதிகள் மற்றும் வேட்பாளரை மையப்படுத்ததுவதுடன் வாக்களித்தலும் பயன்படுத்தப்படுகிறது. எப்.பி.டி.பி. முறைகள் அடிப்படையில் இங்கிலாந்தில் காணப்பட்டன. அது தவிர இங்கிலாந்தின் வரலாற்று அடிப்படையிலான ஆதிக்கத்தில் இருந்த நாடுகளிலும் காணப்படுகின்றன. இங்கிலாந்து தவிர அமெரிக்கா, கரீபிய நாடுகள், வங்கதேசம், மியான்மர், இந்தியா, மலேசியா, நேபாளம் மற்றும் தெற்கு பசிபிக் பகுதியில் உள்ள சில நாடுகளிலும் இம்முறை காணப்படுகிறது.

**உங்களுக்குத் தெரியுமா?**

FPTP (எப்.பி.டி.பி) என்பது பன்மைவாத/பெரும்பான்மைவாத வாக்காளர் முறையில் எளிமையான வடிவமாகும். இதில் ஒரு வேட்பாளர் செல்லத் தகுந்த வாக்குகளில் பிற வேட்பாளர்களை விட அதிக வாக்குகளை பெற்றிருந்தாலே வெற்றி பெற்றவர் ஆவார். அறுதிப் பெரும்பான்மை பெற வேண்டிய அவசியமில்லை. இந்த முறை ஒரு உறுப்பின் தொகுதிகளில் பயன்படுத்தப்படுகிறது. இதில் வாக்காளர்கள் கட்சிக்காக அல்லாமல் வேட்பாளருக்காகவேவாக்களிக்கின்றோம்.

### ஆ. தொகுதி வாக்கு (BV)

தொகுதி வாக்கு என்பது அரசியல் கட்சிகளே இல்லாத அல்லது பலவீனமாக உள்ள நாடுகளில் காணப்படுவதாகும். கேமன் தீவுகள், பாக்லாந்து தீவுகள், கர்ன்சே, குவைத், லாவோஸ், லெபனான், மாலத்தீவுகள், பாலஸ்தீனம், சிரிய அரபுக் குடியரசு ஆகியவை தொகுதிவாக்கு முறையிலான வாக்காளர் முறைமைகளைப் பின்பற்றுகின்றன.

தனிப்பட்ட வேட்பாளர்களுக்கு வாக்களிக்கும் திறனை வாக்காளர்கள் தக்கவைத்துக் கொள்வதால் தொகுதிவாக்கு முறை பாராட்டப்படுகிறது. அத்துடன் தகுந்த முறையில் நில அமைப்பின் அமைக்கப்பட்ட மாவட்டங்களும் அனுமதிக்கப்படுகின்றன. அதே நேரத்தில் எப்.பி.டி.பியுடன் ஒப்பிடுகையில் அரசியல் கட்சிகளின் பங்கு அதிகரிப்பதுடன்



11th Std Political Science Tamil Medium Vol-2_Chapter 11_22-09-18.indd 88 29-09-2018 12:41:44

அதிக இணக்கம் மற்றும் அமைப்பு ரீதியான கட்சிகளை வலுப்படுத்துவதாக உள்ளது.

உங்களுக்குத் தெரியுமா?

தொகுதி வாக்கு என்பது ஓர் பன்மைத்துவ/பெரும்பான்மை முறைமையில் பல்உறுப்பினர் மாவட்டங்களில் பயன்படுத்தப்படுவதாகும். இதில் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய வேட்பாளர்களுக்குத் தகுந்த வாக்குகள் வாக்காளர்களுக்கு இருக்கும். அதிகபட்ச எண்ணிக்கையிலான வாக்குகளைப் பெற்ற வேட்பாளர் வெற்றி பெறுகிறார். பொதுவாக கட்சிகளைக் காட்டிலும் வேட்பாளருக்காக மக்கள் வாக்களித்தாலும் பெரும்பாலான முறைமைகளில் மக்கள் தங்களின் விருப்பத்திற்குத் தக்கவாறு வாக்களிக்கின்றனர்.

### இ. கட்சித் தொகுதி வாக்கு (PBV)

பி.பி.வி என்பது பயன்படுத்துவதற்கு எளிதானதாகும். இது வலுவான கட்சி வேட்பாளர்களில் சிறுபான்மையினர் பிரதிநிதித்துவம் பெரும் வகையில் கலவையாக அமைந்துள்ளது. இது சமநிலையிலான இன அடிப்படை பிரதிநிதித்துவத்திற்கும் உதவுகிறது. டிஜிபௌடி, சிங்கப்பூர், செனகல், துனீசியா போன்ற நாடுகள் பி.பி.வி. முறையைப் பயன்படுத்துகின்றன.

### ஈ. மாற்று வாக்கு (AV)

இம்முறையில் வாக்காளர்கள் தங்களின் முதல் விருப்பத்தேர்வை விட வேட்பாளர்களுக்கு இடையே முன்னுரிமை அளிக்கின்றனர். இதனால் இது 'முன்னுரிமை வாக்கு' எனவும் அழைக்கப்படுகிறது. மாற்றுவாக்கு முறை ஆஸ்திரேலியா, பிஜி, பாப்புவா கினியா ஆகிய நாடுகளில் பின்பற்றப்படுகிறது. பல வேட்பாளர்கள் மொத்தமாகப் பெற்ற வாக்குகளை மாற்றுவதன் மூலம் ஒட்டுமொத்த விருப்பமும் இணைக்கப்பட்டு பிரதிநிதித்துவப் படுத்தப்படுகிறது.

**செயல்பாடு**


மாற்று வாக்கு என்பது முன்னுரிமையான பன்மை முறையாகும். இது வாக்காளர்களின் ஓர் உறுப்பினர் மாவட்டங்களைக் கொண்டதாகும். வாக்காளர்கள் தமது வாக்குச் சீட்டில் உள்ள எண்ணைப் பயன்படுத்தி தமது முன்னுரிமையைக் குறிக்கின்றனர்.

உங்களுக்குத் தெரியுமா?

இருசுற்று முறை என்பது ஓர் பன்மைத்துவ / பெரும்பான்மை முறையாகும். இதில் முதல் சுற்றில் எக்கட்சி அல்லது வேட்பாளருக்கும் அறுதிப்பெரும்பான்மை (50 சதவீதத்திற்கு மேல் ஒரு சதவீதமேனும் பெற்றிருத்தல்) பெறாத நிலையில் இரண்டாவது சுற்று தேர்தல் நடைபெறும். இரு சுற்று முறை எப்போது பெரும்பான்மை, பன்மைத்துவ வடிவம் எடுக்குமெனில், ஒருவேளை இரண்டாம் சுற்றில் இரண்டு வேட்பாளர்களுக்கு மேல் போட்டியிடும் நிலையில் அதிக வாக்குகள் பெற்று வெற்றிபெறுபவர் தேர்ந்தெடுக்கப்படுவார். இதில் அவர்கள் அறுதிப்பெரும்பான்மை பெற்றிருந்தாலும் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுவதில்லை.

### உ. இரு சுற்று முறை (டி.ஆர்.எஸ்).

இரு சுற்று முறையின் முக்கிய இயல்பே அதன் பெயரில் குறிப்பிடப்பட்டுள்ளது. அது ஒரே தேர்தலாக அல்லாமல் ஒரு வாரம் அல்லது பதினைந்து நாட்கள் இடைவெளியில் இரு சுற்றுகளாக நடைபெறுகிறது. இது தேசிய சட்டமன்ற உறுப்பினர் தேர்விற்கும், குடியரசுத் தலைவருக்கான நேரடி தேர்தலுக்கும் உலகம் முழுவதும் பயன்படுத்தப்படுகிறது. இம்முறை மத்திய ஆப்பிரிக்கக் குடியரசு, காங்கோ, கபோன், மாலி மௌரிடானியா, ஹைதி, ஈரான், வியட்நாம், தஜிகிஸ்தான், உஸ்பெகிஸ்தான் போன்ற நாடுகளில் பின்பற்றப்படுகிறது.




### சிறுபான்மையினர் பிரதிநிதித்துவத்தின் பல்வேறு முறைகள்

### அரசியலில் போட்டி இருப்பது நன்மையானதா?

தேர்தல்கள் என்பவை அரசியல் போட்டி தொடர்பானவையாகும். இப்போட்டி பல்வேறு வடிவங்களை எடுக்கிறது. இதில் அரசியல் கட்சிகளுக்கு இடையேயான போட்டி மிகவும் வெளிப்படையான வடிவமாகும். தொகுதி அளவில் பல்வேறு வேட்பாளர்களுக்கு இடையேயான போட்டி எனும் அளவில் உள்ளது. போட்டிகள் இல்லையெனில் தேர்தல்கள் அர்த்தமற்றவையாகின்றன. தேர்தலில் ஏற்படும் போட்டியால் ஒவ்வொரு பகுதியிலும் ஒற்றுமையின்மை மற்றும் பிரிவினைவாத உணர்வுகள் தோன்றினாலும், சீரான தேர்தல் போட்டிகள் அரசியல் கட்சிகள் மற்றும் தலைவர்களுக்கு ஊக்கத்தை அளிக்கிறது. மக்கள் எழுப்ப விரும்பும் பிரச்சனைகளைத் தாங்கள் எழுப்பினால், தாங்கள் பிரபலமடைவதுடன் வரக்கூடிய தேர்தலில் தங்களின் வெற்றி வாய்ப்பு பிரகாசமாகும் என்பதை அரசியல் தலைவர்கள் அறிவர். இருப்பினும் தங்களது பணியின் மூலமாக வாக்காளர்களை திருப்திபடுத்தவில்லையெனில் மீண்டும் அவர்களால் வெற்றிபெற இயலாது.

### நமது தேர்தல் முறை என்ன?

இந்திய தேர்தல்கள் மக்களாட்சி முறையிலானது என நாம் கூறலாமா? இக்கேள்விக்கு பதில் கூறுவதற்கு நாம் ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை தேர்தல்கள் எவ்வாறு நடைபெறுகின்றன என்பதைப் பார்க்க வேண்டும். ஐந்து ஆண்டுகளுக்குப் பின்னர் அனைத்து தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளின் பதவிக்காலமும் முடிவுக்கு வருகிறது. பின்னர் மக்களவை மற்றும் மாநில சட்டப்பேரவை கலைக்கப்படுகிறது. அனைத்து தொகுதிகளுக்கும் ஒரே நேரத்திலோ, அதாவது ஒரே நாளிலோ அல்லது ஒருசில நாட்களிலோ தேர்தல் நடைபெறுகிறது. இதுவே பொதுத் தேர்தல் எனப்படுகிறது. சில நேரங்களில் ஒரு தொகுதியில் உள்ள உறுப்பினரின் மரணம் அல்லது பதவி விலகலால் ஏற்படும் காலியிடத்தை நிரப்ப தேர்தல் நடைபெறுகிறது. இது இடைத்தேர்தல் என அழைக்கப்படுகிறது.

**உங்களுக்குத் தெரியுமா?**

ஆகா! தேர்தல்கள் என்பவை தேர்வைப் போலவா? அரசியல்வாதிகளுக்கும், அரசியல் கட்சிகளுக்கும் தாங்கள் வெற்றியடையவோமா? அல்லது தோல்வியுறுவோமா? என்பது தெரிந்திருக்கிறதே! இருப்பினும் தேர்வை நடத்துபவர் யார்? !!!

### தேர்தலுக்கான தொகுதிகள்

நீங்கள் தமிழக மக்கள் 39 நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதைப் பற்றி கேள்விப்பட்டிருப்பீர்கள். இதனை எவ்வாறு செய்கிறார்கள் என நீங்கள் வியந்திருக்கலாம். தமிழகத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்படும் 39 நாடாளுமன்ற உறுப்பினர்களையும் மக்கள் ஒவ்வொருவரும் வாக்களித்து தேர்ந்தெடுக்கிறார்களா? நமது நாட்டில் இடம் சார்ந்த பிரதிநிதித்துவ முறையை நாம் பின்பற்றுகிறோம் . தேர்தலுக்காக நம் நாடு பல பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இப்பகுதிகளை நாம் தேர்தலுக்கான தொகுதிகள் என அழைக்கிறோம். ஓர் பகுதியில் வசிக்கும் மக்கள் வாக்களித்து தங்களுக்காக ஓர் பிரதிநிதியைத் தேர்ந்தெடுக்கின்றனர்.

மக்களவைத் தேர்தலுக்காக நமது நாடு 543 தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு தொகுதியிலிருந்தும்



11th Std Political Science Tamil Medium Vol-2_Chapter 11_22-09-18.indd 90 29-09-2018 12:41:45

தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதி நாடாளுமன்ற உறுப்பினர் என அழைக்கப்படுகிறார். ஒவ்வொரு வாக்கிற்கும் சமதிப்பு என்பது மக்களாட்சியிலான தேர்தலின் இயல்புகளில் ஒன்றாகும். இதனால் தான் ஒவ்வொரு தொகுதியும் கிட்டத்தட்ட சமமான மக்கள் தொகை உள்ளதாக இருக்க வேண்டும் என அரசமைப்பு கூறுகிறது. அதேபோல ஒவ்வொரு மாநிலமும் குறிப்பிட்ட எண்ணிக்கையிலான தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அந்நிலையில், மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதி சட்டப்பேரவை உறுப்பினர் அல்லது எம்.எல்.ஏ (M.L.A) என அழைக்கப்படுகின்றார். அதே கொள்கை பஞ்சாயத்து மற்றும் நகர்புற உள்ளாட்சி தேர்தல்களில் பின்பற்றப்படுகிறது. ஒவ்வொரு கிராமம் அல்லது நகரமும் தொகுதிகளைப் போன்று வார்டுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு வார்டும் கிராமம் அல்லது நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பிற்கு ஓர் உறுப்பினரைத் தேர்ந்தெடுக்கிறது. சில சமயங்களில் இத்தொகுதிகள் ஓர் இடமாகக் கருதப்பட்டு, ஒவ்வொரு தொகுதியும் அவையில் ஓர் இடத்தின் மூலம் பிரதிநிதித்துவப்படுத்தப்படுகிறது.

### தனித்தொகுதி

ஓர் குடிமகனுக்கு தனது பிரதிநிதியைத் தேர்ந்தெடுப்பதற்கும், தான் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கும் உள்ள உரிமையை அரசமைப்பு வழங்குகிறது. வெளிப்படையான தேர்தல் போட்டியில் சில நலிந்த பிரிவினருக்கு மக்களவை மற்றும் மாநில சட்டப்பேரவைகளுக்கு வாய்ப்புகள் சிறப்பாக அமைவதில்லை. அவர்களுக்கு பிறருக்கு எதிராகத் தேர்தலில் போட்டியிடுவதற்கான வளங்கள், கல்வியறிவு மற்றும் போட்டியிடுவதற்குத் தேவையான தொடர்புகள் இருப்பதில்லை. இவ்வாறு இருப்பின் நமது மக்கள் தொகையில் குறிப்பிடத்தகுந்த பிரிவினருக்கு நமது நாடாளுமன்றம் மற்றும் சட்டப்பேரவைகளில் அனைவருக்கும் இடமில்லாத நிலை ஏற்படுகிறது. இது நமது மக்களாட்சியை பிரதிநிதித்துவம் வழங்காததாகவும், குறைந்த மக்களாட்சித் தன்மையுடையதாகவும் மாற்றுகிறது.

**செயல்பாடு**

இந்திய நாடாளுமன்றத்தில் உள்ள பெண்கள் இட ஒதுக்கீட்டு மசோதாவின் நிலை என்ன?

மேற்கூறியவற்றால் நமது அரசமைப்பினை உருவாக்கியவர்கள் நலிந்த பிரிவினருக்கு சிறப்பு அமைப்பாக தனித்தொகுதிகளைப் பற்றி சிந்தித்தனர். சில தொகுதிகள் பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினருக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இவ்வகை இடஒதுக்கீடு முறை பின்னர் பிற நலிந்த பிரிவினருக்கும் மாவட்ட மற்றும் உள்ளாட்சி அமைப்புகளில் நீட்டிக்கப்பட்டுள்ளது.

### வரையறை

மக்கள் தொகைக் கணக்கெடுப்பின் அடிப்படையிலேயே மக்களவை மற்றும் மாநில சட்டப்பேரவைக்கான தொகுதிகள் வரையறுக்கப்படுகின்றன. தொகுதிகளை வரையறை செய்யும் போது அதன் புவியமைப்பு, இயற்கையான இயல்புகள், நிர்வாக அமைப்புகளின் எல்லைகள், தகவல் தொடர்பு மற்றும் பொதுமக்களின் வசதி ஆகியவை கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

### தொகுதி வரையறை சட்டங்கள்

முதல் வரையறை ஆணையச் சட்டம், 1952.
இரண்டாவது வரையறை ஆணையச் சட்டம், 1963.
மூன்றாவது வரையறை சட்டம், 1973.
நான்காவது வரையறை சட்டம், 2002.

### வாக்காளர் பட்டியல்

தொகுதிகள் முடிவு செய்யப்பட்ட பின்னர்,அடுத்த கட்ட நடவடிக்கையாக யார் வாக்களிக்கலாம், யாரெல்லாம் வாக்களிக்க



11th Std Political Science Tamil Medium Vol-2_Chapter 11_22-09-18.indd 91 29-09-2018 12:41:45

முடியாது என்பதனை முடிவு செய்ய வேண்டும். இம்முடிவினை யாரேனும் எடுப்பதற்கு கடைசி நாள் வரை காத்திருக்க இயலாது. ஆகவே மக்களாட்சி தேர்தலில் தகுதிவாய்ந்த வாக்காளர்களின் பட்டியல் தேர்தலுக்கு நெடுநாள் முன்னரே தயாரிக்கப்பட்டு அனைவருக்கும் வழங்கப்படுகிறது. இதுவே அதிகாரப்பூர்வமாக 'வாக்காளர் பட்டியல்' என அழைக்கப்படுகிறது.

**உங்களுக்குத் தெரியுமா?**

பஞ்சாயத்துகளைப் போன்று மூன்றில் ஒரு பங்கு இட ஒதுக்கீடு பெண்களுக்கு நாடாளுமன்றத்திலும் இருக்க வேண்டாமா?

எவ்வகையான வேறுபாடுகளையும் தாண்டி தங்களின் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பதற்கான சமவாய்ப்பு அனைவருக்கும் வழங்கப்பட வேண்டும் என்பதே மக்களாட்சியிலான தேர்தலின் முதல் நிபந்தனையாகும். நமது நாட்டில் பதினெட்டு வயது நிரம்பிய குடிமக்கள் அனைவரும் தேர்தலில் வாக்களிக்கலாம். ஒருவரின் சாதி, மதம் மற்றும் பாலின பாகுபாடின்றி அனைத்து குடிமக்களுக்கும் வாக்களிக்கும் உரிமை உள்ளது.

அனைத்து குடிமக்களின் பெயர்களையும் கேட்டுப் பெறுவது, அவர்களை வாக்காளர் பட்டியலில் சேர்ப்பது ஓர் அரசாங்கத்தின் பொறுப்பாகும். இடம் பெயர்ந்தோர் மற்றும் இறந்த வாக்காளர்களின் பெயர்கள் நீக்கப்படுகின்றன. ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை வாக்காளர் பட்டியல் திருத்தியமைக்கப்படுகிறது. கடந்த சில ஆண்டுகளாக வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை (EPIC) அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. வாக்காளர்கள் இதனை தாங்கள் வாக்களிக்கச் செல்லும்போது எடுத்துச் செல்ல வேண்டும். இருப்பினும் வாக்காளர் அடையாள அட்டை என்பது கட்டாய ஆவணமல்ல. இதனைத் தவிர ஆதார் அட்டை, குடிமை வழங்கல் அட்டை மற்றும் ஓட்டுநர் உரிமம் ஆகியவற்றின் அசல் சான்று ஆகியவற்றினை வாக்களிப்பதற்கான ஆவணமாக காட்டலாம்.

## செயல்பாடு

**காலவரிசை முறை**

**இக் கால வரிசை முறையின் இடது புறம் தரப்பட்டுள்ள தேர்தல் தொடர்பான செயல்பாடுகளை, முதல் செயல்பாட்டிலிருந்து கடைசி செயல்பாடு வரை வரிசைப்படுத்தவும். அவை பின்வருமாறு**

| ஒழுங்கற்ற வரிசை | ஒழுங்கான வரிசை |
|---|---|
| தேர்தல் அறிக்கை வெளியீடுதல் | |
| வாக்காளர் பட்டியல் தயாரித்தல். | |
| வாக்கு எண்ணிக்கை. | |
| தேர்தல் பரப்புரை. | |
| தேர்தல் முடிவுகள் வெளியீடு . | |
| வேட்புமனு தாக்கல் . | |
| மறுதேர்தலுக்கு உத்தரவிடுதல். | |
| வாக்களித்தல். | |
| தேர்தல் அட்டவணை வெளியீடு. | |



11th Std Political Science Tamil Medium Vol-2_Chapter 11_22-09-18.indd 92 29-09-2018 12:41:45

### இந்தியாவில் தேர்தல் நடைமுறை

- தொகுதிகளை மறுவரையறை செய்தல்.
- தேர்தல் அறிவிப்பு.
- வேட்பு மனுவினை தாக்கல் செய்தல் மற்றும் திரும்பப் பெறுதலைப் பற்றிய தேர்தல். ஆணையத்தின் அறிவிப்பு.
- போட்டியிட விரும்பும் வேட்பாளர்கள் வேட்புமனு தாக்கல் செய்தல்.
- வேட்பு மனுக்களை சரிபார்த்து ஏற்றல் அல்லது நிராகரித்தல்.
- தேர்தல் பரப்புரை.
- வாக்களித்தல் நடைமுறை.
- வாக்கு எண்ணிக்கை மற்றும் தேர்தல் முடிவுகளை அறிவித்தல்.

### இந்தியாவில் நடக்கும் தேர்தல்கள் பற்றிய அம்சங்கள்.

இந்திய தேர்தலின் அடிப்படை கொள்கைகள்

தொகுதிக்கு ஓர் வாக்காளர் பட்டியல் இருக்கும். ஓர் தொகுதிக்கு மேல் யாரும் வாக்காளராகத் தங்களை பதிவு செய்ய இயலாது.

தேர்தல் என்பது வயது வந்தோர் வாக்குரிமையின் அடிப்படையில் இருக்க வேண்டும்.

பதினெட்டு வயது நிரம்பிய இந்திய குடிமக்கள் அனைவருக்கும் வாக்களிக்கும் உரிமை வழங்கப்பட்டுள்ளது.

பட்டியல் இனத்தவர்/பழங்குடியினர் ஆகியோருக்கான இடஒதுக்கீட்டினை மக்களவை அல்லது மாநில சட்டப்பேரவைகளில் அரசுகள் ஏற்படுத்த வேண்டும்.

வகுப்புவாரி, தனி அல்லது சிறப்பு பிரதிநிதித்துவத்திற்கான அம்சங்கள் கிடையாது.

**உங்களுக்குத் தெரியுமா?**

எந்த அரசமைப்புச் சட்டதிருத்தத்தின் மூலமாக இந்திய குடிமக்களின் வாக்களிக்கும் வயது இருபத்தி ஒன்றிலிருந்து பதினெட்டாகக் குறைக்கப்பட்டது?

**செயல்பாடு**

**கீழ்க்கண்டவற்றின் முக்கியத்துவத்தினை கண்டறிக**

*மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம், 1950 மற்றும் 1951.*

*மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம், 1966.*

*வரையறை ஆணையச் சட்டங்கள், 1962 மற்றும் 1972.*

### வேட்பாளர்கள் நியமனம்

ஓர் மக்களாட்சி அடிப்படையிலான தேர்தலில் உண்மையான விருப்பத் தேர்வை மேற்கொள்ள மக்களுக்கு வாய்ப்பளிக்க வேண்டும். எவரும் தேர்தலில் போட்டியிடுவதற்கு எவ்விதத் தடையும் இல்லாத சூழலில் இது நிகழும். இதனையே நமது அமைப்பும் வழங்குகிறது. வாக்காளராக இருப்பதற்காக தகுதியுடைய எவரும் தேர்தலில் வேட்பாளராகலாம். தேர்தலில் வாக்களிப்பதற்கான குறைந்தபட்ச வயது பதினெட்டு எனில், வேட்பாளராவதற்கான குறைந்தபட்ச வயது இருபத்து ஐந்து என்பதே இதிலுள்ள ஒரே வித்தியாசமாகும். அரசியல் கட்சிகள் வேட்பாளரை நியமிக்கும் போது அவர் கட்சியின் சின்னம் மற்றும் ஆதரவினைப் பெறுகிறார். கட்சியின் வேட்பாளர் நியமனத்தினை 'கட்சியின் நியமனச்சீட்டு' என அழைக்கின்றனர்.

## செயல்பாடு

**நம்முடைய பிரதிநிதிகள் அவர்களின் பொறுப்புகள்:**

மும்பையைச் சேர்ந்த ஓர் அரசு சாரா அமைப்பு, வரக்கூடிய தேர்தலில் வேட்பாளர்களிடம் வாக்காளர்கள் கீழ்க்கண்ட கேள்விகளைக் கேட்குமாறு கூறியுள்ளது.




வம்பு வேண்டாம்... நாம் ஏக மனதாக ஓர் தீர்மானத்தினை நிறைவேற்றி நாடாளுமன்ற உறுப்பினர்களின் கட்சி மேம்பாட்டு நிதியினை நிறுவலாம். இதன் மூலமாக நாடாளுமன்ற உறுப்பினர்களின் தொகுதி மேம்பாட்டு நிதி தவறாகப் பயன்படுத்தப்படுவதைப் தடுக்கலாம்.

- உங்களது தகுதிகள் யாவை?
- உங்களது தொழில் என்ன?
- உங்களது வருவாய் ஆதாரங்கள் யாவை?
- உங்களது வருமான வரியை நேர்மையாகச் செலுத்துகிறீர்களா?
- நீங்கள் கடந்த ஐந்து ஆண்டுகளில் எத்தனை முறை கட்சி மாறிச் சென்றீர்கள்? ஏன் அவ்வாறு சென்றீர்கள்?
- உங்களின் மூன்று சிறந்த தகுதிகளை குறிப்பிட முடியுமா?
- அரசியலில் உங்களது தனிப்பட்ட சாதனை என்ன?
- ஏதேனும் குற்றவியல் வழக்கில் உங்கள் மீது குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளதா? உங்களுக்கு எதிராக ஏதேனும் வழக்கு நிலுவையில் உள்ளதா? அவற்றின் விபரங்கள் என்ன?
- உங்களது பெயர் காவல் துறையினரின் போக்கிரிகள் பட்டியலில் இடம் பெற்றுள்ளதா?
- குற்றப் பின்னணி உள்ளவர்கள் தேர்தலில் போட்டியிடக் கூடாது எனும் வாதத்தினைப் பற்றிய உங்களின் கருத்து என்ன?
- தேர்தல் ஆணையத்தினால் வரையறுக்கப்பட்ட செலவினத்திற்குள் உங்களது செலவுகள் இருக்குமா?

**இந்த வினாப்பட்டியல் பற்றிய உனது கருத்து என்ன? வகுப்பில் பகிர்ந்து கொள்.**

வேட்பு மனு தாக்கல் செய்ய விரும்பும் ஒவ்வொருவரும் பிணைத்தொகையாகக் குறிப்பிட்ட தொகையினை செலுத்த வேண்டும். உச்சநீதிமன்றத்தின் வழிகாட்டுதல்படி கீழ்க்கண்ட முழு விபரங்களைக் கொண்ட சட்டப்பூர்வ பிரகடனத்தினை ஒவ்வொரு வேட்பாளரும் மேற்கொள்ள வேண்டும்.

- வேட்பாளருக்கு எதிராக நிலுவையில் உள்ள கடுமையான குற்றவியல் வழக்குகள் ஏதேனும் இருந்தால் அவற்றின் விபரங்களைத் தருதல்.
- வேட்பாளர்கள் தங்களுடைய அல்லது தங்களது குடும்பத்தாருடைய சொத்துக்கள் மற்றும் கடன்கள் பற்றிய விளக்கங்கள் தருதல்.
- வேட்பாளரின் கல்வித் தகுதிகள்.

இத்தகவல்கள் மக்களுக்கு வெளிப்படையாக அறிவிக்கப்பட வேண்டும். இவ்வாறு வேட்பாளர்களால் தரப்படும் தகவல்களின் அடிப்படையில் வாக்காளர்கள் தங்களின் முடிவுகளை எடுப்பதற்கு வாய்ப்பு ஏற்படுகிறது.

### தேர்தல் பரப்புரை

தேர்தலின் முக்கிய நோக்கமே மக்கள் தங்களுக்கு விருப்பமான பிரதிநிதிகள், அரசாங்கம் மற்றும் கொள்கைகளை தேர்ந்தெடுப்பதற்கான வாய்ப்பளிப்பதாகும். ஆகவே யார் சிறந்த பிரதிநிதியாக இருப்பர், எக்கட்சி சிறந்த அரசாங்கத்தை அமைக்கும் அல்லது எது சிறந்த கொள்கை

ஆகியவற்றினைப் பற்றிய சுதந்திரமான மற்றும் வெளிப்படையான விவாதம் அவசியமாகும். இதுவே தேர்தல் பரப்புரையின் போது நிகழ்கிறது.

நமது நாட்டில் இத்தகைய பரப்புரைகள் இறுதி வேட்பாளர் பட்டியல் அறிவிக்கப்பட்ட நாளிலிருந்து தேர்தல் நடக்கும் நாள் வரை இரு வாரகாலத்திற்கு நடைபெறுகிறது. இக்கால கட்டத்தில் வேட்பாளர்கள் வாக்காளர்களிடம் சென்று வாக்கு சேகரித்தல், அரசியல் தலைவர்கள் தேர்தல் பொதுக்கூட்டங்களில் உரையாற்றுதல் மற்றும் அரசியல் கட்சிகள் தங்களின் ஆதரவாளர்களைத் திரட்டுதல் ஆகியவை நிகழும். இக்காலகட்டத்தில் தான் நாளேடுகள், சமூக ஊடகங்கள் மற்றும் தொலைக்காட்சிகளில் தேர்தல் தொடர்பான செய்திகள் மற்றும் விவாதங்கள் இடம் பெறுகின்றன. தேர்தல் பரப்புரை என்பது இந்த இரு வாரங்களுடன் நிறைவு பெறுவதில்லை. அரசியல் கட்சிகள் தேர்தல்கள் நடைபெறுவதற்கு பல மாதங்களுக்கு முன்பிருந்தே தங்களை தயார் செய்கின்றன.

**செயல்பாடு**

உங்களது தொகுதியில் கடந்த தேர்தல் பரப்புரையின் போது அரசியல் கட்சிகள் மற்றும் வேட்பாளர்கள் உறுதியளித்தவை மற்றும் செய்தவற்றினை ஓர் பட்டியலாக தயார் செய்யவும்.

தேர்தல் பரப்புரையின் போது அரசியல் கட்சிகள் முக்கியப் பிரச்சனைகளின் மீது பொது மக்களின் கவனத்தைத் திருப்புகின்றன. அவர்கள் மக்களிடம் அப்பிரச்சனைகளைப் பற்றி பேசுவதன் மூலம் அவர்களை ஈர்த்து அதனடிப்படையில் தங்கள் கட்சிக்கு வாக்களிக்குமாறு செய்வர். ஓர் மக்களாட்சியில் அரசியல் கட்சிகள் மற்றும் வேட்பாளர்கள் விரும்பும் வகையில் தேர்தல் பரப்புரையை சுதந்திரமாக மேற்கொள்ள அனுமதிக்க வேண்டும். இருப்பினும் சில நேரங்களில் ஒவ்வொரு அரசியல் கட்சியும், வேட்பாளரும் போட்டியிடுவதற்கு ஏற்ற நியாயமான மற்றும் சமமான வாய்ப்பினை உறுதி செய்யும் வகையில் பரப்புரைகளை ஒழுங்குமுறைப்படுத்த வேண்டும்.

நமது தேர்தல் சட்டங்களின் படி ஓர் கட்சி அல்லது வேட்பாளர் கீழ்க்கண்டவற்றினை செய்ய முடியாது

- வாக்காளர்களுக்கு கையூட்டு அளித்தல் அல்லது அச்சுறுத்துதல்.
- சாதி மற்றும் மதத்தின் பெயரால் வாக்களிக்கும்படி வேண்டுதல்.
- தேர்தல் பரப்புரைகளுக்கு அரசாங்கத்தின் வளங்களை பயன்படுத்துதல்.

இவ்வாறு ஒருவேளை அவர்கள் செய்யும்போது, அவர்கள் தேர்தெடுக்கப்பட்டு அறிவிக்கப்பட்ட பின்னரும் நீதிமன்றம் அத்தேர்தலை நிராகரித்து உத்தரவிடலாம். சட்டங்களுடன் மேலும் கூடுதலாக, நமது நாட்டிலுள்ள அரசியல் கட்சிகள் தேர்தல் பரப்புரைகளுக்கான நன்னடத்தை விதிமுறைகளை ஏற்றுக் கொண்டுள்ளன.

அதன்படி கீழ்க்கண்டவற்றினை ஓர் கட்சி அல்லது வேட்பாளர் செய்ய முடியாது.

- தேர்தல் பரப்புரைக்காக மதவழிபாட்டுத் தலங்களைப் பயன்படுத்துதல்.
- தேர்தலுக்காக அரசு வாகனங்கள், விமானங்கள் மற்றும் அரசு அலுவலர்களைப் பயன்படுத்துதல்.
- தேர்தல் தேதி அறிவிக்கப்பட்ட பின்னர் அமைச்சர்கள் எவ்வகைத் திட்டங்களுக்கும் அடிக்கல் நாட்டுதல், முக்கிய கொள்கை முடிவுகளை எடுத்தல், பொது சேவை வசதிகளுக்கான வாக்குறுதி அறிவித்தல் போன்றவற்றினை செய்ய கூடாது.

## 11.3 சுதந்திரமான மற்றும் நேர்மையான தேர்தல்கள்

சுதந்திரமான மற்றும் நேர்மையான தேர்தல் நடைமுறையை உறுதிப்படுத்துவதே ஓர் அரசியல் முறைமையின் உண்மையான சோதனையாகும். நாம் மக்களாட்சியை நடைமுறைப்படுத்த விரும்பினால் அதற்கு தேர்தல் முறையானது நடுநிலையாகவும், வெளிப்படையானதாகவும் இருத்தல் முக்கியமானதாகும். வாக்காளர்களின் விருப்பங்கள் தேர்தல் முடிவுகளின் மூலம் சட்டபூர்வமாக வெளிப்படுவதற்குத் தேர்தல் முறை அனுமதிக்க வேண்டும். இந்தியாவில் நடைபெறும் தேர்தல்கள் அடிப்படையில் சுதந்திரமாகவும், நியாயமாகவும் நடைபெறுகின்றன. தேர்தலில் வெற்றிபெறும் கட்சி ஆட்சி அமைக்கிறது. இதற்கு எதிர்க் கட்சிகளை விட இக்கட்சியினை மக்கள் தேர்ந்தெடுத்ததே அதற்குக் காரணமாகும். ஒவ்வொரு தொகுதியிலும் இது உண்மையாக இருக்காது. ஒரு சில வேட்பாளர்கள் பண பலம் மற்றும் நியாயமற்ற வழிமுறைகளின் மூலமாக வெற்றி பெறுகின்றனர். இருப்பினும் பொதுமக்களின் விருப்பத்தை பிரதிபலிப்பதாகவே ஒட்டுமொத்த பொதுத்தேர்தல் முடிவுகள் இதுவரை இருந்துள்ளன. இருப்பினும் மேலும் ஆழமான வினாக்கள் எழுப்பப்படின், அக்காட்சி வேறு மாதிரியாக உள்ளது. உண்மையான அறிவுத்திறன் அடிப்படையில் மக்களின் முன்னுரிமைகள் உள்ளனவா? வாக்காளர்கள் உண்மையாகவே தேர்ந்தெடுக்கும் வாய்ப்புகளைப் பெறுகின்றனரா? தேர்தல் என்பது உண்மையில் அனைவருக்கும் சமமான களமாக உள்ளதா? ஓர் சாதாரண குடிமகன் தேர்தலில் தான் வெற்றி பெறுவோம் என நம்பலாமா?

**செயல்பாடு**

சுதந்திரமான அமைப்பு என்றால் என்ன?

அரசமைப்பில் உள்ள பிற சுதந்திரமான அமைப்புக்களை கண்டுபிடிக்கவும்.

**இவ்வகையான வினாக்கள் இந்திய தேர்தல்களில் உள்ள குறைபாடுகளையும், சவால்களையும் நமது கவனத்திற்கு கொண்டு வருகின்றன. அவையாவன:**

- அதிக பணபலமுள்ள வேட்பாளர்கள் மற்றும் கட்சிகள் தங்களின் வெற்றியைப் பற்றி உறுதியற்ற நிலையில் இருப்பினும் சிறிய கட்சிகள் மற்றும் சுயேட்சைகளை விட மிகப்பெரிய மற்றும் நியாயமற்ற சாதகமான நிலையில் இருப்பர்.
- குற்றப்பின்னணி கொண்ட வேட்பாளர்கள் தேர்தல் போட்டியில் பிறரைப் பின்னுக்குத் தள்ளிவிட்டு பெரிய கட்சிகளின் சார்பாகப் போட்டியிடும் வாய்ப்பினைப் பெறுகின்றனர்.
- சில குடும்பங்கள் அரசில் கட்சிகளில் ஆதிக்கம் செலுத்துகின்றன. இதனால் அக்கட்சியின் சார்பாகப் போட்டியிடும் வாய்ப்புகள் அவர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கும், உறவினர்களுக்கும் வழங்கப்படுகின்றன.

**உங்களுக்குத் தெரியுமா?**

இந்தியாவின் முதலாவது பொதுத் தேர்தல்கள் பற்றி நீங்கள் அறிந்துகொள்ள வேண்டியவை.

இந்தியா சுதந்திரமடைந்த பின்னர் 1951–52ம் ஆண்டில் பொதுத்தேர்தல்கள் நடைபெற்று முதலாவது மக்களவை தேர்ந்தெடுக்கப்பட்டது. மொத்தமுள்ள 489 மக்களவை இடங்களில் காங்கிரஸ் கட்சி 364 இடங்களில் வெற்றி பெற்றது. இது மொத்த வாக்குப்பதிவில் 45 சதவீதமாகும். இந்திய கம்யூனிஸ்ட் கட்சி 16 இடங்களில் வெற்றி பெற்று இரண்டாமிடம் பெற்றது. சுதந்திர இந்தியாவின் முதல் பிரதமராக ஜவஹர்லால் நேரு பதவியேற்றார். இத்தேர்தலில் 67.6 சதவீத வாக்குப்பதிவு நடைபெற்றது. 54 கட்சிகள் தேர்தலில் போட்டியிட்டன. ஏறத்தாழ நான்கு மாதங்கள் தேர்தல் நடைபெற்றது. அக்டோபர் 25, 1951, முதல் பிப்ரவரி 21, 1952 வரை இத்தேர்தல்கள் நடந்தன. 26 இந்திய மாநிலங்கள் மற்றும் 401 தொகுதிகளில் தேர்தல் நடைபெற்றது குறிப்பிடத்தக்கதாகும்.



11th Std Political Science Tamil Medium Vol-2_Chapter 11_22-09-18.indd 96 29-09-2018 12:41:48

- சாதாரண குடிமக்களுக்குத் தேர்தல்கள் குறைவான வாய்ப்புகளையே வழங்குகிறது. ஏனெனில் பெரும்பான்மையான கட்சிகள் ஏறத்தாழ ஒரேமாதிரியான கொள்கைகள் மற்றும் நடைமுறைகளைக் கொண்டுள்ளன.
- பெரிய கட்சிகளை ஒப்பிடுகையில் சிறிய கட்சிகளும், சுயேட்சை வேட்பாளர்களும் பெரும் பின்னடைவைச் சந்திக்கின்றனர்.

இத்தகைய சவால்கள் இந்தியாவில் மட்டுமல்லாமல் பல வலுவான மக்காளட்சிகளிலும் காணப்படுகின்றன. இவ்வாறான ஆழமான பிரச்சனைகள் பற்றி மக்களாட்சியின் மீது நம்பிக்கையுள்ளவர்கள் கவனம் செலுத்துகின்றனர். இதனால் தான் குடிமக்கள், சமூக செயற்பாட்டாளர்கள் மற்றும் பல்வேறு அமைப்புக்கள் நமது தேர்தல் முறைமையில் சீர்த்திருத்தங்கள் மேற்கொள்ள கோரிக்கை வைக்கின்றன. ஓர் மக்களாட்சியில், தேர்தல் நடைமுறை என்பது யுக்தி அடிப்படையில் பங்காற்றுகிறது. ஓர் சாதாரண மனிதனுக்கு தனது பிரதிநிதியாக நாடாளுமன்றத்திற்குச் சென்று தனது சுதந்திரம் மற்றும் சொத்துக்களை கட்டுப்படுத்தக்கூடிய வகையிலான சட்டங்களை இயற்றுபவரைப் பற்றிய முழுமையான தகவல்களை அறிந்து கொள்ளும் அடிப்படையான உரிமை உள்ளது.

மக்களாட்சியில் தகவல்களைப் பெறும் உரிமை என்பது முழுவதுமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளதுடன் அது மக்களாட்சி எனும் கருத்தாக்கத்திலிருந்து வெளிப்படகூடிய இயற்கை உரிமையாகும்.

இந்திய அரசமைப்பின் உறுப்பு 19(1) (அ) பேச்சு மற்றும் கருத்தை வெளிப்படுத்தும் சுதந்திரத்திற்கான உரிமையினை வழங்குகிறது. வாக்காளர்களின் பேச்சு மற்றும் கருத்தை வெளிப்படுத்தும் சுதத்திரமானது வாக்களித்தலின் மூலமாக வெளிப்படுகிறது. அதாவது வாக்காளர்கள் தங்கள் வாக்கினை செலுத்துவதன் மூலமாக தங்களின் எண்ணங்களை வெளிப்படுத்துகின்றனர். இதற்காக தேர்ந்தெடுக்கப்படும் வேட்பாளரைப் பற்றிய தகவல்கள் அவசியமாகும். பொதுமக்கள் தங்களின் பிரதிநிதியாக சட்டத்தினை மீறுபவர்களை சட்டத்தினை உருவாக்குபவர்களாக தேர்ந்தெடுப்பதற்கு முன் சிந்தித்து செயல்பட வேண்டும்.

## விவாதம்



### சமூக ஊடகங்கள்–ஓர் சிறந்த தேர்தல் கருவியா ?




சமூக ஊடகங்கள் மக்களின் சிந்தனை, எழுத்து மற்றும் செயல்படும் வழிமுறைகளை மாற்றியிருக்கிறது. இருப்பினும் இது மக்களின் வாக்களிக்கும் முறையிலும் தாக்கத்தை எற்படுத்தியிருப்பதாக அரசியல்வாதிகள் நம்புகின்றனர். பெரும்பாலான தேசிய மற்றும் மாநில கட்சிகள் தேர்தலில் சமூக ஊடகங்களின் தாக்கத்தினை அறிந்திருக்கின்றன. தேர்தலில் பரப்புரை மேற்கொள்பவர்கள் மின்னணு தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தி வியூகங்களை வகுப்பதன் மூலமாக வாக்காளர்கள், தங்களின் இலக்கான குறிப்பிட்ட மக்கள், மக்கள் தொகையியல் அடிப்படையில் ஆதரவு திரட்டுதல், மக்கள் பங்கேற்பு மற்றும் தங்களுக்கு ஆதரவளிக்குமாறு கோருதல் ஆகியவை நிகழ்கின்றன. மேலும் போன்மி(Memes), பண்பலை வானொலி, தொலைக்காட்சி, கைபேசிகள் மற்றும் சமூக ஊடகங்கள் ஆகியவை வாக்காளர்களிடம் அரசியல் பரப்புரை மேற்கொள்வதற்கு முக்கியமான கருவிகள் ஆகும்.

தேர்தல் பரப்புரையில் சமூக ஊடகங்களின் நேர்மறை மற்றும் எதிர்மறை அம்சங்களைப் பற்றி ஓர் விவாதத்தினை வகுப்பறையில் ஆசிரியர் நடத்தலாம்.



11th Std Political Science Tamil Medium Vol-2_Chapter 11_22-09-18.indd 97 29-09-2018 12:41:48

## 11.4 இந்திய தேர்தல் ஆணையம்

இந்திய அரசமைப்பின் உறுப்பு 324 ஓர் தேர்தல் ஆணையத்தினை அமைப்பதை பற்றி விளக்குகிறது. இது சுதந்திரமாகவும், நடுநிலையாகவும், ஒழுங்கான முறையிலும் தேர்தல்களை நடத்துகிறது. இவ்வாணையமானது நாடாளுமன்றம், சட்டமன்றம், குடியரசுத் தலைவர், துணைக் குடியரசுத் தலைவர் தேர்தல்களை மேற்பார்வையிட்டு, வழிகாட்டுவதுடன் தேர்தலையும் நடத்துகிறது.

### தேர்தல் ஆணையம்–ஓர் சுதந்திரமான அமைப்பு

இந்திய தேர்தல் ஆணையம் அமைக்கப்பட்டதன் நோக்கமே ஓர் நிரந்தரமான மற்றும் சுதந்திரமான தேர்தல் அமைப்பு அவசியம் என்பதுடன் ஆட்சியாளர்கள் மற்றும் ஆளுங்கட்சியின் அரசியல் அழுத்தத்திலிருந்து விடுபட்டு சுதந்திரமாகத் தேர்தலை நடத்துவதற்காகும். அத்துடன் நாடாளுமன்றம், சட்டமன்றம், குடியரசுத்தலைவர் மற்றும் துணைக்குடியரசுத் தலைவர் தேர்தல்களை நடத்தும் பொறுப்பும் தேர்தல் ஆணையத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

### இந்திய தேர்தல் ஆணையத்தின் அமைப்பு

**செயல்பாடு**

தலைமைத் தேர்தல் ஆணையாளரின் நியமனம், அதிகாரங்கள் மற்றும் பணிகளைப் பற்றிய அரசமைப்பு உறுப்பு யாது ?

**உங்களுக்குத் தெரியுமா?**

2014 ஆம் ஆண்டு நடைபெற்ற 16வது மக்களவைத் தேர்தலில் 9,30,000 வாக்குச் சாவடிகளில் 553 மில்லியன் வாக்காளர்களுக்கு மேல் வாக்களித்தனர். இந்தியாவிலுள்ள மொத்த வாக்காளர்களின் எண்ணிக்கையானது அமெரிக்க ஐக்கிய நாடுகள் மற்றும் மேற்கு ஐரோப்பாவின் கூட்டு மக்கள் தொகையினை விட அதிகமாகும். இந்தியாவில் 30 வருடங்களுக்குப் பின்னர் முதன் முறையாக ஒரு கட்சி பெரும்பான்மையைப் பெற்றுள்ளது.

**விவாதம்**

இந்திய தேர்தல் ஆணையத்திற்கு மேலும் கூடுதலாக தண்டனை அதிகாரங்கள் வழங்குவதற்கான சாத்தியக்கூறுகள் மற்றும் விளைவுகளைப் பற்றி விவாதிக்கவும்.




**பல உறுப்பினர்களைக் கொண்ட அமைப்பு.**

- ❖ தலைமைத் தேர்தல் ஆணையாளர்.
- ❖ இரண்டு தேர்தல் ஆணையாளர்கள்.

**நியமனம் மற்றும் பதவிக்காலம்.**

- ❖ குடியரசுத் தலைவரால் நியமனம்.
- ❖ ஆறுவருடங்கள் அல்லது 65 வயது(இதில் முந்தையது).

**பதவி நீக்கம்**

- ❖ தலைமைத் தேர்தல் ஆணையாளர்கள்– பதவி நீக்க நடைமுறை.
- ❖ பிற தேர்தல் ஆணையாளர்கள்– தலைமைத் தேர்தல் ஆணையாளரின் பரிந்துரை.

உங்களுக்குத் தெரியுமா?

| தமிழகத்தில் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தல் விவரங்கள் | | |
|---|---|---|
| தேர்தலின் எண்ணிக்கை | சபையின் பதவிக்காலம் | தேர்தல் தேதிகள் |
| 1 | 1952-1957 | 1952 ஜனவரி 2, 5, 8, 9, 11, 12, 16, 21 மற்றும் 25 (9 நாட்கள்) |
| 2 | 1957-1962 | 1957 மார்ச் 1, 4, 6, 8 மற்றும் 11 (5 நாட்கள்) |
| 3 | 1962-1967 | 1962 பிப்ரவரி 17, 19, 21 மற்றும் 24 (4 நாட்கள்) |
| 4 | 1967-1971 | 1967 பிப்ரவரி 5, 16 மற்றும் 21 (3 நாட்கள்) |
| 5 | 1971-1976 | 1971 மார்ச் 1, 4 மற்றும் 7 (3 நாட்கள்) |
| 6 | 1977-1980 | 1977 ஜூன் 12 மற்றும் 14 (2 நாட்கள்) |
| 7 | 1980-1984 | 1980 மே 20 மற்றும் 31 (2 நாட்கள்) |
| 8 | 1985-1986 | 1984 டிசம்பர் 24 (1 நாள் மட்டும்) |
| 9 | 1989-1991 | 1969 ஜனவரி 21 (1 நாள் மட்டும்) |
| 10 | 1991-1996 | 1991 ஜூன் 16 (1 நாள் மட்டும்) |
| 11 | 1996-2001 | 1996 ஏப்ரல் 27 மற்றும் மே 2 (2 நாட்கள்) |
| 12 | 2001-2006 | 2001 மே 10 (1 நாள் மட்டும்) |
| 13 | 2006-2011 | 2006 மே 8 (1 நாள் மட்டும்) |
| 14 | 2011-2016 | 2011 ஏப்ரல் 13 (1 நாள் மட்டும்) |
| 15 | 2016 - தற்போதுவரை | 2016 மே 16 (1 நாள் மட்டும்) |


### இந்திய தேர்தல் ஆணையத்தின் அதிகாரங்கள் மற்றும் பணிகள்

- வாக்காளர் பட்டியல் தயாரித்தல்.
- வாக்காளர் பட்டியலை திருத்துதல்.
- தொகுதிக்கான இடங்களை ஒதுக்கீடு செய்தல்.
- தேர்தல் நடத்துதல்.
- தேர்தலை மேற்பார்வையிட்டு வழிகாட்டுவதுடன் அது தொடர்பான அனைத்து விவகாரங்களையும் கட்டுப்படுத்துதல்.
- அரசியல் கட்சிகளுக்கு அங்கீகாரம் அளித்தல்.
- கட்சிகளுக்கான சின்னங்களை ஒதுக்கீடு செய்தல்
- சுதந்திரமான மற்றும் நேர்மையான தேர்தலை உறுதி செய்தல்.
- தேர்தல் விவகாரங்கள் தொடர்பான அனைத்து கேள்விகளுக்கும் குடியரசுத்தலைவர் மற்றும் சம்பந்தப்பட்ட மாநில ஆளுநர்களுக்குத் தேர்தல் ஆணையம் அறிவுரை வழங்குதல்.
- நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்களின் தகுதியிழப்பினை முடிவு செய்தல்.
- இந்திய குடியரசுத் தலைவர் அல்லது மாநில ஆளுநரால் பரிசீலனைக்கு அனுப்பப்படும் மனுக்கள் மற்றும் பிரச்சனைகளைத் தீர்த்தல்.
- ஓர் அரசியல் கட்சியில் பிளவு ஏற்பட்டால் எழும் தேர்தல் சின்னம் தொடர்பான சச்சரவுகளில் முடிவெடுத்தல் .

- தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் தேர்தல் செலவினங்களின் உச்சவரம்பினை இறுதி செய்யும் அதிகாரம்.
- தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் சொத்துக்கள் தொடர்பான ஆவணப் பத்திரங்களை கேட்டுப் பெறும் பணி.

**உங்களுக்குத் தெரியுமா?**

*அரசியலைத் தூய்மைப்படுத்துவதற்கான உச்சநீதிமன்றத்தின் வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பு*




*ஜூலை 11, 2013 ல் உச்சநீதிமன்றம் வெளியிட்ட ஓர் வரலாற்றுச் சிறப்பு மிக்க தீர்ப்பில் சிறை அல்லது காவல் துறையினரின் விசாரணையில் இருக்கும் ஒருவர் சட்டமன்றம் அல்லது நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட முடியாது என தீர்ப்பளித்துள்ளது. ஒரு நாள் முன்னதாக, ஜூலை 10, 2013-ல் அதே அமர்வு வழங்கிய தீர்ப்பில் தங்களின் மீது குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டிருப்பின், நாடாளுமன்ற, சட்டப்பேரவை அல்லது சட்டமன்ற மேலவை உறுப்பினர்கள் குற்றங்களுக்கான தண்டனை பற்றிய தீர்ப்பு வழங்கப்பட்டவுடன் அப்பொதுப் பதவிகளை வகிப்பதிலிருந்து தகுதி நீக்கம் செய்யப்படுவர்.*

*இப்பிரிவு நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் தம்மீது குற்றம் நிரூபிக்கப்பட்டு தண்டனைக்கான தீர்ப்பு வழங்கப்பட்டால் உயர்நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்வதற்கு மூன்று மாத கால அவகாசம் வழங்கும். மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் பிரிவு 8(4) ஐ இந்த அமர்வு நிராகரிப்பு.*

*நன்றி : தி இந்து நாளிதழ், பெட்டிச் செய்தி 3.5.2004*

- தேர்தல் செலவினக் கணக்கினை ஓர் வேட்பாளர் தேர்தல் ஆணையத்திடம் சமர்ப்பிக்கவில்லையெனில் அவரை தகுதியிழப்பு செய்யும் அதிகாரமும், கடமையும்.
- தேர்தல் முடிந்த பின்னர் முறைப்படி அவை அமைக்கப்பட்டதற்கான அறிவிப்பினை வெளியிடுதல்

### தலைமைத் தேர்தல் அதிகாரி (CEO)

ஓர் மாநிலம்/ஒன்றிய பிரதேசத்தின் தலைமைத் தேர்தல் அதிகாரி அம்மாநில / ஒன்றியப் பிரதேசத்தின் தேர்தல் பணிகளை மேற்பார்வையிடும் அதிகாரத்துடன் தேர்தல் ஆணையத்தின் மேற்பார்வை, வழிகாட்டுதல் மற்றும் கட்டுப்பாட்டில் செயல்படுகிறார். இந்தியத் தேர்தல் ஆணையமே ஓர் மாநிலம்/ ஒன்றியப் பிரதேசத்தின் தலைமைத் தேர்தல் அதிகாரியை நியமிக்கிறது. அந்நியமனத்தின் போது மாநில/ஒன்றியப் பிரதேச அரசாங்கத்துடன் கலந்தாலோசித்த பின்னரே தேர்தல் ஆணையம் இறுதி முடிவெடுத்து செயல்படுத்துகிறது.

### மாவட்ட தேர்தல் அதிகாரி (DEO)

தலைமைத் தேர்தல் அதிகாரியின் மேற்பார்வை, வழிகாட்டுதல் மற்றும் கட்டுப்பாட்டின் கீழ் மாவட்ட தேர்தல் அதிகாரி செயல்படுவதுடன் மாவட்டத்தின் தேர்தல் பணிகளை மேற்பார்வையிடுகிறார். மாநில அரசாங்கத்துடன் கலந்தாலோசித்த பின்னர் ஓர் மாநில அரசு அதிகாரியை மாவட்ட தேர்தல் அதிகாரியாக நியமிக்கவோ அல்லது பதவியளிக்கவோ தேர்தல் ஆணையத்திற்கு அதிகாரம் உண்டு.

### தேர்தல் நடத்தும் அலுவலர் (RO)

ஓர் நாடாளுமன்ற அல்லது சட்டமன்ற தொகுதியின் தேர்தல் நடத்தும் அலுவலருக்கு அக்குறிப்பிட்ட நாடாளுமன்ற அல்லது சட்டமன்ற தொகுதியில் தேர்தலை நடத்தும் பொறுப்பு உள்ளது. இந்தியத் தேர்தல் ஆணையம் சம்பந்தப்பட்ட மாநில/ஒன்றிய பிரதேச அரசாங்கங்களுடன் கலந்தாலோசித்து ஒவ்வொரு நாடாளுமன்ற/சட்டமன்றத் தொகுதியின் தேர்தல் நடத்தும் அலுவலரை நியமிக்கிறது.அவர்அரசாங்கஅதிகாரியாகவோ அல்லது உள்ளாட்சி அதிகாரியாகவோ இருக்கலாம். மேலும் கூடுதலாக அவருக்கு தேர்தல் பணிகளில் உதவுவதற்கு ஒன்று



11th Std Political Science Tamil Medium Vol-2_Chapter 11_22-09-18.indd 100 29-09-2018 12:41:49

அல்லது இரண்டு உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்கள் தேர்தல் ஆணையத்தால் நியமிக்கப்படுகின்றனர். இவர்கள் ஒவ்வொரு நாடாளுமன்ற மற்றும் சட்டமன்றத் தொகுதிகளிலும் நியமிக்கப்படுவதுடன் தேர்தல் நடத்தும் அலுவலரின் பணிகளை செயல்படுத்துவதில் பேருதவியாக இருப்பர்.

**வாக்காளர் பதிவு அலுவலர் (ERO)**

ஓர் நாடாளுமன்ற/சட்டமன்ற தொகுதியின் வாக்காளர் பட்டியலைத் தயாரிக்கும் பணி வாக்காளர் பதிவு அலுவலருடையதாகும். இந்திய தேர்தல் ஆணையம் மாநில/ஒன்றியப் பிரதேச அரசாங்கங்களுடன் கலந்தாலோசித்த பின்னர் வாக்காளர் பதிவு அலுவலரை நியமிக்கிறது. இவர் அரசாங்க அல்லது உள்ளாட்சி அதிகாரியாக இருக்கலாம். ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட உதவி வாக்காளர் பதிவு அலுவலர்கள் இவருக்கு உதவி செய்வதற்காக இந்திய தேர்தல் ஆணையத்தால் நியமிக்கப்படுகின்றனர்.


**வாக்குச் சாவடி தலைமை அலுவலர் (PO)**

வாக்குச் சாவடி தலைமை அலுவலர் பிற வாக்குப்பதிவு அலுவலர்களின் உதவியுடன் வாக்குச் சாவடியில் தேர்தலை நடத்துகிறார். மாவட்ட தேர்தல் அதிகாரியே வாக்குச்சாவடி தலைமை அலுவலர் மற்றும் வாக்குப்பதிவு அலுவலர்களை நியமிக்கிறார். ஒன்றியப் பிரதேசங்களைப் பொறுத்தவரை அந்தியமனங்களை தேர்தல் நடத்தும் அலுவலர் (RO) மேற்கொள்கிறார்.

**தேர்தல் பார்வையாளர்கள் (EO)**

இந்திய தேர்தல் ஆணையம் அரசாங்க அதிகாரிகளைத் தேர்தல் பார்வையாளர்களாக நியமிக்கிறது. (பொதுப்பார்வையாளர்கள் மற்றும் தேர்தல் செலவினைப் பார்வையாளர்கள்). இவர்கள் நாடாளுமன்ற மற்றும் சட்டமன்றத் தொகுதிகளுக்குத் தேர்தல் பார்வையாளர்களாக நியமிக்கப்படுகின்றனர். இவர்கள் தேர்தல் ஆணையத்தால் தங்களுக்கு தரப்பட்ட பணிகளை நிறைவேற்றுகின்றனர். இவர்கள் ஆணையத்திற்கு நேரடி பொறுப்பாகின்றனர்.

## 11.5 தேர்தல் சீர்திருத்தங்கள், கட்சித்தாவல் தடைச் சட்டம்




**தேர்தல் சீர்திருத்தங்கள் தொடர்பான குழுக்கள்**

**மேற்கண்ட குழுக்கள் மற்றும் ஆணையங்கள் அளித்த பரிந்துரையின் அடிப்படையில் நமது தேர்தல் முறைமையில் அவ்வப்போது பல்வேறு சீர்திருத்தங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. அவற்றினைப் பார்க்கலாமா ?**

- 61 வது அரசமைப்புச் சட்டத்திருத்தம், 1988-ன் மூலமாக வாக்களிக்கும் வயது இருபத்தி ஒன்றிலிருந்து பதினெட்டு ஆக குறைக்கப்பட்டது.
- வாக்காளர் பட்டியல் தயாரித்தல், திருத்தியமைத்தல் போன்ற தேர்தல் தொடர்பான பணிகளை மேற்கொள்ளும் அதிகாரிகள் மற்றும் பணியாளர்கள் அயற்பணியில் சென்று தேர்தல் ஆணையத்தின் கீழ் பணிபுரிதல்.
- ஓர் தொகுதியில் வேட்பாளர்களை முன்மொழியும் நபர்களின் எண்ணிக்கையை உயர்த்தும் வகையில் பத்து சதவீதம் அல்லது பத்து வாக்காளர்கள் இதில் எது குறைவானதோ அதனை அதிகரித்தல்.
- 1989-ம் ஆண்டு மின்னணு வாக்குப்பதிவு எந்திரம் தேர்தலில் பயன்படுத்தப்படும் வகையில் அம்சங்கள் ஏற்படுத்தப்பட்டன.
- 1989-ம் ஆண்டு வாக்குச்சாவடியைக் கைப்பற்றுவதனைத் தடுப்பதற்கு தேர்தலை ஒத்திவைக்கும் நடைமுறை



11th Std Political Science Tamil Medium Vol-2_Chapter 11_22-09-18.indd 101
29-09-2018 12:41:50

கொண்டு வரப்பட்டது.

- அங்கீகரிக்கப்பட்ட கட்சிகள், பதிவு செய்யப்பட்ட மற்றும் அங்கீகரிக்கப்படாத கட்சிகளின் வேட்பாளர்கள் மற்றும் சுயேட்சை என வகைப்படுத்தி வேட்பாளர்களை பட்டியலிடுதல்
- வாக்குப்பதிவு நடைபெறுவதற்கு 48 மணிநேரம் முன்பிருந்து அப்பகுதியில் மதுபான விற்பனையினைத் தடைசெய்தல்
- தேர்தலில் போட்டியிடும் ஓர் வேட்பாளர் எதிர்பாராமல் மரணமடைந்தால் சம்பந்தப்பட்ட கட்சிக்கு மாற்று வேட்பாளரை பரிந்துரைப்பதற்கான வாய்ப்புடன் ஏழு நாட்கள் அவகாசம்.
- தேர்தல் தினத்தன்று பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களுக்கு ஊதியத்துடனான விடுமுறை.
- ஆயுதங்கள் தடை.
- 1998-இல் ஓர் அம்சம் ஏற்படுத்தப்பட்டு அதன் மூலமாக உள்ளாட்சி அதிகாரிகள், தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளின் பணியாளர்கள், பல்கலைக்கழக ஊழியர்கள், இந்திய ஆயுள் காப்பீட்டு நிறுவன ஊழியர்கள், அரசு நிறுவனங்களின் பணியாளர்கள் மற்றும் அரசு உதவி பெறும் நிறுவனங்களின் ஊழியர்கள் ஆகியோர் தேர்தல் தினத்தன்று பணியில் ஈடுபடுத்தப்பட பணிக்கப்பட்டனர்.
- 1999-இல் வாக்காளர்களில் ஓர் பிரிவினர் தபால் வாக்கினைப் (Postal Ballot) பயன்படுத்தி வாக்களிக்க வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டது.
- 2003-இல் இராணுவத்தில் பணிபுரிபவர்கள் தங்களின் சார்பாக பதிலி வாக்கு(Proxy vote) அளிக்கும் முறை கொண்டு வரப்பட்டு இராணுவச் சட்டத்திற்கு இசைவான வகையில் செயல்படுத்தப்பட்டுள்ளது.
- 2003-இல் தேர்தல் ஆணையம் வேட்பாளர்களின் முந்தைய குற்ற சம்பவங்கள் மற்றும் சொத்துக்கள் பற்றிய விபரங்களை பிரகடனப்படுத்துமாறு உத்தரவிட்டுள்ளது.
- 2003-இல் மாநிலங்களவைத் தேர்தல் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு வேட்பாளரின் வசிப்பிடம் தொடர்பான கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டன. மேலும் வெளிப்படையான வாக்கெடுப்பு முறை அறிமுகப்படுத்தப்பட்டது.
- 2003-இல் வேட்பாளரின் தேர்தல் செலவுக் கணக்கில் பயணச்செலவினங்களுக்கு விதிவிலக்கு அளிக்கப்பட்டது.
- அரசாங்கமே இலவசமாக வாக்காளர் பட்டியலை வழங்குதல்
- 2009-இல் தேர்தலுக்குப் பிந்தைய கருத்துக்கணிப்புகளை நடத்தி முடிவுகளை அறிவிப்பதற்குக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன.
- 2009-இல் தேர்தலின் போது தவறான நடவடிக்கைகளில் ஈடுபடும் நபர்களை தகுதியிழப்பு செய்வதுடன் மூன்று மாத காலத்திற்குள் குற்றம் சாட்டப்பட்டவரின் மீதான விபரங்களை குறிப்பிட்ட அதிகாரி சமர்ப்பிக்க வேண்டும்.
- தவறான நடவடிக்கைகளில் ஈடுபடும் அனைத்து அதிகாரிகள் மீதும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.
- பிணைத்தொகை அதிகரிக்கப்பட்டது.
- மாவட்டத்தினுள் மேல் முறையிட்டு அதிகாரிகளை நியமித்தல்.
- 2010-இல் வெளிநாடு வாழ் இந்தியக் குடிமக்களுக்கும் வாக்குரிமை வழங்கப்பட்டது.
- 2011-இல் தேர்தல் செலவினங்களுக்குக்கான உச்சவரம்பு அதிகாரிக்கப்பட்டது.



11th Std Political Science Tamil Medium Vol-2_Chapter 11_22-09-18.indd 102 29-09-2018 12:41:50

## கட்சித் தாவல் தடைச் சட்டம்

52வது அரசமைப்புச் சட்டதிருத்தம், 1985-ன் மூலமாக ஒரு கட்சியிலிருந்து மற்றொரு கட்சிக்கு மாறும் நாடாளுமன்ற அல்லது சட்டமன்ற உறுப்பினரைத் தகுதியிழப்பு செய்யும் நடைமுறை கொண்டு வரப்பட்டது. இதற்காக இந்திய அரசமைப்பில் பத்தாவது அட்டவணை இணைக்கப்பட்டது. இச்சட்டமே 'கட்சித் தாவல் தடைச் சட்டம்' என அழைக்கப்படுகிறது. பின்னர் 91வது அரசமைப்புச் சட்டதிருத்தம், 2003ன் மூலமாக ஓர் சிறுதிருத்தம் செய்யப்பட்டது. அதாவது கட்சி பிளவுறும் சூழலில் கட்சித் தாவலின் அடிப்படைகள் பொருந்தாது என்பதாகும்.

### இச்சட்டத்தின் அம்சங்கள்

### அ. தகுதியிழப்பு

எக்கட்சியினைச் சார்ந்தவராக இருப்பினும் அவையின் ஓர் உறுப்பினர் தனது விருப்பத்தின் அடிப்படையில் உறுப்பினர் பதவியை விட்டு விலகுதல் அல்லது தான் சார்ந்த கட்சியின் வழிகாட்டுதலுக்கு எதிராக வாக்களித்தல் அல்லது வாக்களிப்பிலிருந்து கட்சியின் முன் அனுமதியின்றி விலகியிருத்தல் ஆகியவற்றால் தகுதியிழப்பு செய்யப்படலாம்.

ஓர் சுயேட்சை வேட்பாளர் தான் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னர் மற்றொரு அரசியல் கட்சியில் சேர்ந்தால் அவையிலிருந்து அவர் தகுதியிழப்பு செய்யப்படுவார்.

ஓர் நியமன உறுப்பினர் தான் பதவியேற்ற நாளிலிருந்து ஆறு மாத காலத்திற்குள் ஏதேனும் அரசியல் கட்சியில் சேர்ந்தால் அவையின் உறுப்பினர் பதவியிலிருந்து நீக்கப்படுவார்.

### ஆ. விதிவிலக்குகள்

ஓர் கட்சி மற்றொரு கட்சியுடன் இணைக்கப்படும் போது கட்சித்தாவலின் அடிப்படையில் ஓர் உறுப்பினரின் மீது நடவடிக்கை எடுப்பதிலிருந்து விதிவிலக்கு அளிக்கப்படுகிறது. சபையை வழிநடத்தும் பொறுப்பிற்கு ஓர் உறுப்பினர் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னர் தனது கட்சி உறுப்பினர் பொறுப்பிலிருந்து சுயவிருப்பத்தின் அடிப்படையில் வெளியேறினாலும் அப் பதவியிலிருந்து விடுபட்ட நிலையில் மீண்டும் கட்சியில் சேரலாம் என்பது மற்றொரு விதிவிலக்காகும்.

### இ. தீர்மானிக்கும் அதிகாரம்

அவையை நடத்தும் பொறுப்பில் உள்ளவரே கட்சித் தாவல் தொடர்பான தகுதியிழப்பு பிரச்சனைகளை இறுதி செய்வார்.

### ஈ. விதியை உருவாக்கும் அதிகாரம்

இந்திய அரசமைப்பின் பத்தாவது அட்டவணையில் உள்ள அம்சங்களை செயல்பாட்டிற்கு கொண்டு வரும் விதிமுறைகளை உருவாக்கும் அதிகாரம் அவையை நடத்துபவருக்கே உள்ளது. அத்தகைய விதிகள் 30 நாட்களுக்குள் அவையில் தாக்கல் செய்யப்பட வேண்டும். அவற்றினை குறிப்பிட்ட அவை ஏற்றுக்கொள்ளவோ அல்லது நிராகரிக்கவோ செய்யலாம். மேலும் ஓர் உறுப்பினர் தனது விருப்பத்தின் அடிப்படையில் அவ்விதிகளை மீறுவது என்பதனை அவையின் மரபுகளை மீறிய செயலாகக் கருதி நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் அவையை நடத்துபவருக்கு உள்ளது.

## சட்டத்தினைத் திறனாய்வு செய்தல்

அ) பதவிகள் அல்லது பொருள் சார்ந்த ஆதாயங்களுக்காகஅரசியலில்கட்சித்தாவலை மேற்கொள்ளும் செயல்களைத் தடுக்கும் வகையில் அரசமைப்பின் பத்தாவது அட்டவணை வடிவமைக்கப்பட்டுள்ளது.

ஆ) கொள்கையற்ற மற்றும் அறநெறிக்குப் புறம்பான வகையில் மேற்கொள்ளும் கட்சித்தாவல்களைக் கட்டுப்படுத்துவதன் மூலமாக இந்திய நாடாளுமன்ற மக்களாட்சியின் மாண்பினை இது வலுப்படுத்துகிறது.

இ) சட்டமன்ற உறுப்பினர்களின் கட்சிமாறும் மனப்பாங்கினைக் கட்டுப்படுத்தும் வகையில் அரசியல் கட்டமைப்பினை உறுதியாக வலுப்படுத்துகிறது

ஈ) கட்சிகளை இணைப்பதன் மூலம் சட்டமன்றத்தில் உள்ள கட்சிகளை மறுசீரமைப்பு செய்ய வாய்ப்பு ஏற்படுத்துகிறது.

உ) தற்போதுள்ள அரசியல் கட்சிகளுக்கு அரசமைப்பு அடிப்படையில் தெளிவாக அங்கீகாரம் வழங்குகிறது.



**விவாதம்**

நமது நாடாளுமன்றம் / சட்டமன்றங்களில் உள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளின் சுதந்திரம் கட்சித்தாவல் தடைச்சட்டத்தினால் குறைக்கப்பட்டுள்ளது என சிலர் கூறுகிறார்கள்? அதைப் பற்றி உங்களது வகுப்பறையில் விவாதிக்கவும்

### மாநிலங்களவைத் தேர்தலைப் பற்றி நாம் அறிந்து கொள்வோமா?

நமது மாநிலங்களவைத் தேர்தலில் மாற்றித்தரக்கூடிய வாக்கு முறை பின்பற்றப்படுகிறது. மாநிலங்களவையில் ஒவ்வொரு மாநிலத்திற்கும் குறிப்பிட்ட ஒதுக்கீடு உள்ளது. மாநிலங்களவையின் உறுப்பினர்கள் மாநில சட்டப்பேரவையின் உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். சம்பந்தப்பட்ட மாநிலத்தின் சட்டப்பேரவை உறுப்பினர்களே வாக்காளர்களாவர். ஒவ்வொரு வாக்காளரும் தங்களுக்கு விருப்பமான வேட்பாளரை வரிசைப்படுத்த வேண்டும். வெற்றி பெறுவதற்கு ஒவ்வொரு வேட்பாளரும் குறிப்பிட்ட அளவிலான வாக்குகளைப் பெற வேண்டும். **இதற்கென வகுக்கப்பட்ட விதிமுறை பின்வருமாறு:-**

$$\left\{ \frac{\text{பதிவான மொத்த வாக்குள்}}{\text{தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய மொத்த வேட்பாளர்கள் } +1} \right\} +1$$

உதாரணமாக தமிழகத்தின் 200 சட்டப்பேரவை உறுப்பினர்களால் 4 மாநிலங்களவை உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படவேண்டுமெனில் அவர்கள் (200 / 4+1=40+1) 41 வாக்குகளைப் பெற வேண்டும். வாக்கு எண்ணிக்கையின் போது ஒவ்வொரு வேட்பாளரும் பெற்ற முதல் முன்னுரிமை வாக்குகள் (First Preference votes) எண்ணப்படுகின்றன. இவ்வாறு முதல் முன்னுரிமை வாக்குகள் எண்ணப்பட்ட பின்னரும் சில வேட்பாளர்கள் குறிப்பிட்ட அளவிலான வாக்குகளைப் பெறவில்லையெனில் குறைவான முதல் முன்னுரிமை வாக்குகளைப் பெற்ற வேட்பாளர் நீக்கம் செய்யப்பட்டு அவர்கள் பெற்ற வாக்குகளில், அதாவது வாக்குச் சீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள இரண்டாவது முன்னுரிமை வேட்பாளருக்கு அந்த வாக்குகள் மாற்றப்படுகின்றன. இந்நடைமுறை ஓர் வேட்பாளர் வெற்றி பெற்றவராக அறிவிக்கப்படும் வரை தொடர்கிறது.

### தேர்தலில் முதலில் நிலையை கடந்தவரே வெற்றி பெற்றவர் என்ற முறையை இந்தியா பின்பற்றியது?

இதற்கான பதிலை சிந்திப்பது மிகவும் கடினமாகும். மாநிலங்களவை உறுப்பினர் தேர்தல் முறையை நீங்கள் படிக்கும் போது அம்முறை எவ்வளவு கடினமானது என்றும், அது சிறிய நாடுகளில் சாத்தியமாகுமே தவிர இந்தியாவைப் போன்ற துணைக்கண்ட நாடுகளில் செயல்படுத்துவது மிகவும் கடினமான பணியாகும். ஆனால் முதலில் நிலையைக் கடத்தல் முறை (FPTP) என்பது மிகவும் பிரபலமாகவும், வெற்றிகரமாகவும் இருப்பதற்கு அதன் எளிமையே காரணமாகும். இத்தேர்தல் முறை முழுவதையும் புரிந்து கொள்வதற்கு மிகவும் எளிமையாகவும், தேர்தல் மற்றும் அரசியலைப் பற்றி தெரியாத பொதுவான வாக்காளர்களும் எளிதில் புரிந்து கொள்ளும் வகையிலும் அமைந்துள்ளது. தேர்தலின் போது வாக்காளர்களுக்கு தெளிவான வாய்ப்புகள் வழங்கப்படுகின்றன தேர்தலின் போது வாக்காளர்கள் ஓர் வேட்பாளர் அல்லது கட்சியை அங்கீகரிக்க வேண்டும் அப்போதைய அரசியலின் தன்மைக்குத் தக்கவாறு வாக்காளர்கள் கட்சி அல்லது வேட்பாளருக்கோ அல்லது இரண்டிற்கும் சமமாகவோ முக்கியத்துவம் தரலாம்.

முதலில் நிலையைக் கடந்து செல்லுதல் என்னும் முறையானது கட்சிகளுக்கிடையே தேர்வு செய்யும் முறையாக இல்லாமல் குறிப்பிட்ட வேட்பாளர்களைத் தேர்வு செய்யும் முறையாகும். ஆனால் பிற தேர்தல் முறைகளில் குறிப்பாக விகிதாச்சார பிரதிநிதித்துவ முறையில்



11th Std Political Science Tamil Medium Vol-2_Chapter 11_22-09-18.indd 104 29-09-2018 12:41:50

வாக்காளர்கள் ஓர் ஆட்சியைத் தேர்ந்தெடுக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுவதுடன் பிரதிநிதிகளும் கட்சியின் பட்டியலில் இருந்தே தேர்ந்தேடுக்கப்படுகின்றனர். இதன் விளைவாக, ஓர் குறிப்பிட்ட பகுதியைப் பிரதிநிதித்துவப் படுத்தக்கூடிய மற்றும் பொறுப்பான ஓர் பிரதிநிதி இல்லாத நிலை ஏற்படுகிறது. ஆனால் முதலில் நிலையைக் கடந்து செல்லுதல் முறையைப் போன்றே தொகுதி அடிப்படையிலான முறையிலும் வாக்காளர்களுக்குத் தங்களின் பிரதிநிதி யார் என தெரிவதுடன் அவர்கள் வாக்காளர்களுக்குப் பதில் சொல்ல கடமையும், பொறுப்பும் கொண்டுள்ளனர். முதலில் நிலையைக் கடந்து செல்லுதல் முறையில் பொதுவாக தனிப்பெரும் கட்சிக்கு அல்லது கூட்டணிக்கு சில இடங்கள் அதிகமாகக் கிடைக்கின்றன. இது அவர்களின் பங்கான வாக்குகளை விட அதிகமாக இருக்கும்.

இங்ஙனம் இம்முறையானது நிலையான அரசாங்கத்தை உருவாக்க வகை செய்வதுடன் நாடாளுமன்ற அரசாங்கம் அமைதியாகவும், திறம்பட செயலாற்றவும் வாய்ப்பளிக்கிறது. முதலில் நிலையை கடந்து செல்லுதல் (FPTP) முறையானது ஓர் பகுதியில் உள்ள சமூகக் குழுக்களைச் சேர்ந்த வாக்காளர்களை ஒன்றிணைத்து வெற்றி பெற வைக்கிறது. ஆகவே முதலில் நிலையைக் கடந்து செல்லுதல் (FPTP) முறையானது எளியதாகவும், சாதாரண வாக்காளர்களுக்கு அறிமுகமானதாகவும் நிரூபிக்கப்பட்டுள்ளது.

### 11.6 அரசின் நிதியுதவியுடனான தேர்தல்கள்.

#### அரசின் நிதியுதவி என்றால் என்ன?

- அரசின் நிதியுதவியுடனான தேர்தல்கள் என்னும் கருத்தாக்கமே ஊழலைக் குறைப்பதற்காக வடிவமைக்கப்பட்டதாகும். இதில் தனிநபர் நிதியளிப்புகளுக்கு மாற்றாக அரசாங்கமே தேர்தல்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்கிறது.
- அரசியல் கட்சிகளின் நிதியில் வெளிப்படைத் தன்மையை எட்டுவதற்குச் சிறந்த வழியாக அரசின் நிதியுதவியுடனான தேர்தல்கள் பரிந்துரைக்கப்படுகின்றன. அரசின் நிதியுதவி என்பது இயற்கையானதாகவும், மக்களாட்சிக்காக செய்யும் செலவினமாகவும் நம்பப்படுகிறது.

**உங்களுக்குத் தெரியுமா?**

வெளிப்படையாக வாக்களிக்கும் முறை என்பது கைகளை உயர்த்துவதன் மூலம் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கும் முறையாகும்.

ரகசிய வாக்கெடுப்பு முறையில் ஓர் வாக்காளர் தனது வாக்கினைப் பிறர் அறியாதவாறு வாக்குப்பெட்டி அல்லது மின்னணு வாக்குப்பதிவு எந்திரத்தில் அளிக்கிறார்.

இதன் மூலமாக புதிய மற்றும் வளரும் கட்சிகளுக்கு ஆதரவளிக்கப்படுவதுடன் தேர்தல்களும் நேர்மையான முறையில் நடக்கின்றன.

- கட்சிகள் மற்றும் வேட்பாளர்களுக்கு தனியார் நிதியுதவி இருக்குமெனில் சமுதாயத்தில் உள்ள பொருளாதார சமத்துவமின்மை என்பது அரசாங்கத்தில் அரசியல் சமத்துவமின்மையாக உருமாறுகிறது.

#### அரசின் நிதியுதவியுடனான தேர்தல்கள் குறித்த இந்திரஜித் குப்தா குழு, 1998

அரசின் நிதியுதவியுடனான தேர்தல்கள் பற்றி ஆராய்வதற்காக இந்திரஜித் குப்தா தலைமையிலான குழு 1998-ல் நியமிக்கப்பட்டது. அக்குழுவானது அரசியல் கட்சிகளுக்கு அரசின் நிதியுதவியுடனான தேர்தல்களை நடத்துவதற்கான அரசமைப்பு அம்சங்கள், சட்டக் கூறுகள், பொது விருப்பம் போன்றவற்றினை கொள்கை அடிப்படையில் ஆராயும் அதிகார வரம்பினைக் கொண்டிருந்தது. இதன் மூலம் குறைவான நிதி ஆதாரங்களைக் கொண்ட கட்சிகளும் மிகுதியான நிதி ஆதாரங்களைக் கொண்ட கட்சியுடன் தேர்தலில் போட்டியிடும் சூழலை நிறுவுவதாகும்.

#### இரண்டு கூடுதல் வரையறைகள்

அ) அரசின் தேர்தல் நிதி சுயேட்சை வேட்பாளர்களுக்கு வழங்கப்படமாட்டது. வாக்காளர்கள் மத்தியில் பிரபலமாக இருப்பதுடன் தங்களுக்கென

தேர்தல் ஆணையத்தால் சின்னம் ஒதுக்கப்பட்டுள்ள தேசிய அல்லது மாநிலக் கட்சிகளின் வேட்பாளர்களுக்கு மட்டுமே அரசின் தேர்தல் நிதியுதவி வழங்கப்படும்.

ஆ) அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் மற்றும் அவற்றின் வேட்பாளர்களுக்கு சில வகையினங்களில் மட்டுமே குறுகிய காலத்திற்கு நிதியுதவி வழங்கப்படும்.

மேலும் இக்குழு தனியாக தேர்தல் நிதியை உருவாக்க பரிந்துரைத்தது. இதற்கு மத்திய அரசின் சார்பாக வருடத்திற்கு 600 கோடி ரூபாயும், அனைத்து மாநில அரசுகளும் அதற்கு நிகரான பங்களிப்பினை ஒட்டு மொத்தமாக மேற்கொள்ளவேண்டும் எனவும் பரிந்துரைக்கப்பட்டது. மேலும் இக்குழுவின் பரிந்துரையில் அரசியல் கட்சிகள் மற்றும் வேட்பாளர்கள் அரசிடமிருந்து தேர்தல் நிதியைப் பெறும் தகுதியுள்ளவர்களாவதற்கு கடந்த நிதியாண்டில் வருமான வரி செலுத்தியிருக்க வேண்டியது அவசியமாகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.


## 11.7 அரசியலில் இளைஞர்களின் பங்கு

தேர்தலில் வெற்றி பெற நினைக்கும் அனைத்து அரசியல் தலைவர்களும் சிந்திக்கக் கூடியதாக இத்தலைப்பு உள்ளது. ஒவ்வொரு ஆண்டிலும் வாக்காளர் பட்டியலில் பன்மடங்கிலான முதல் தலைமுறை வாக்காளர்கள் சேர்க்கப்படுகின்றனர். இந்த இளைய சமுதாயத்தினரின் வாக்கு என்பது தேர்தல் முடிவுகளை பெருமளவில் மாற்றியமைக்கிறது.

இன்றைய இளைய தலைமுறையினருக்கு நமது தேசத்தினை மாற்றும் வலிமை உள்ளதுடன் அது நிகழும் என்பதும் நிதர்சனமாகும். ஆகவே மாற்றம் முன்னேற்றம் மற்றும் புதுமையைப் புகுத்தல் ஆகியவை

### செயல்பாடு

*அரசின் நிதியுதவியுடனான தேர்தல்கள் தொடர்பாக அண்மைக்காலத்தில் அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை?*



*எவனொருவன் இளைஞர்களைத் தன்பக்கம் ஈர்க்கிறானோ, எதிர்காலம் அவன் வசமாகிறது.–*
*அடால்ஃப் ஹிட்லர்*

### செயல்பாடு

*கட்டுரை எழுதுக*
*தலைப்பு:–* நீங்கள் ஒருவேளை நம்நாட்டின் பிரதமரானால், *2035*–ல் இந்தியா வல்லரசாக உருவாவதற்கு என்ன செய்வீர்கள்?

இளைஞர்கள் தங்களின் தோளில் சுமக்கும் பொறுப்பாகும்.

**இளைஞர்கள் ஏன் வாக்களிக்க வேண்டும்?**

- பிரதிநிதித்துவ மக்களாட்சி முறையில் தேர்தல்கள் முக்கியப் பங்காற்றுகின்றன. இத்தேர்தல் நடைமுறையில் பங்குபெறும் இளைஞர்கள் அவர்கள் ஆதரவினை வழங்குவதன் மூலம் அரசியல் மற்றும் கொள்கைகளில் தாக்கத்தை ஏற்படுத்தி பாராட்டுக்குரியவர்கள் ஆகின்றனர்.
- 'ஒரு நபர் ஒரு வாக்கு' என்ற அடைப்படையில் வாக்களிப்பதன் மூலமாக ஒவ்வொரு குடிமகனும் சமவாய்ப்புடன் தேர்தலில் பங்கேற்கின்றனர். வாக்களிப்பதன் மூலமாக இளைஞர்களும் பிறரைப் போன்றே அரசியல் செல்வாக்கு மற்றும் அழுத்தத்தைத் தரும் திறனைப் பெறுகின்றனர்.
- தேர்தல்களில் அனைவரும் பங்கேற்பதன் மூலமாக 'மக்கள் விருப்பம்' பிரதிநிதித்துவப்படுத்தப்படுவது உறுதி செய்யப்படுகிறது.
- இளைஞர்கள் ஆரம்பத்திலிருந்தே தேர்தலில் வாக்களிக்கும் பழக்கத்தை கடைபிடிப்பதன் மூலம் அதிக வாக்குப்பதிவினை உறுதிசெய்யலாம்.



11th Std Political Science Tamil Medium Vol-2_Chapter 11_22-09-18.indd 106 29-09-2018 12:41:50